ஆய்வுச் சிந்தனைகள்



ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்
மதுரை
1996

ஆய்வுச் சிந்தனைகள் 2

பாகம்-2

பதிப்பாளர்கள்

அ. நடராசன்

மா. கருணாகரன்

வீரா. அழகிரிசாமி

எல். மணிவண்ணன்

சு. கண்ணன்

ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்

மதுரை

1996

ஆய்வுச் சிந்தனைகள் 2

பாகம்-2

இரண்டாம் கருத்தரங்க ஆய்வுக்கட்டுரைத்தொகுதி
சனவரி 1996

விலை : பாகம் - 1 ரூ 60
பாகம் - 2 ரூ. 35

அச்சகம் : ரெயின்போ அச்சகம் மதுரை-1

பதிப்பு : ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்
80 செண்பகம் இல்லம்
மேலப்பொன்னகரம் 7-வது தெரு
மதுரை-10

55/4

உள்ளே...

காலத்திற்கேற்ற மாற்றத்தில் பாவேந்தனின் கண்ணகி புரட்சிக் காவியம் - ஓர் ஆய்வு

பி. கரிகாலன்

தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

காப்பியக்கவிஞன் வெறும் கதை சொல்ல வந்தவன் அல்லன், கதையின் ஊடே தான் நினைக்கும் கருத்துக்களைத் தருவது கவிஞனது இயல்பு. சுவைஞர் மேம்போக்காக உள்ள கதையை மட்டும் நோக்கி விடாமல் கதையின் ஊடே கண்ணுக்குத் தெரியாத வேர்களாக உள்ள கருத்துக்களைக் கண்டறிதல் வேண்டும். இவ்வாறு காணும் நிலை குறைந்து விட்டதனைப் பாரதி

"அணி செய்காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்"[1]

என்று உரைக்கின்றார். கி. பி இரண்டாம் நூற்றாண்டில் சேர இளவல் இவளங்கோவடிகள் தந்த முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரம் காலத்திற்கேற்ற மாற்றத்தில் புரட்சிக்கவி பாரதிதாசன் சிந்தனையில் முகிழ்ந்து கண்ணகி புரட்சிக் காவியத்தில் காணும் காலத்திற்கேற்ற மாற்றத்தைக் கண்டு சுருக்கமாக ஆராய்கிறது.

பாவேந்தர் படைப்பு

தமிழகப் பெண்கள் பழமையினும், முட நம்பிக்கையிலும் மிகுதியாக மூழ்கிக் கிடந்த நிலையில் சமூகச் சீர்திருத்தத்தை வாழ்வியல் புரட்சியாக உருவாக்கவேண்டும் என்ற இலக்கைக் கொண்டவர் ஆசிரியர். இந்த எண்ணத்தின் படைப்புப் பரிணாமமே கண்ணகிப் புரட்சிக் காப்பியம் எனலாம்.

தமிழ்ப்பணி

"மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்ற பாரதியாரின் வாக்கிற்கு இணங்க பிற மொழித் தாக்கங்களாலும், அன்னிய மொழி ஏர்ப்பினாலும் தமிழ் மொழியின் வளர்ச்சி இயல்பாக குன்றத் தொடங்கியது மக்கள் மனதில் படர்ந்த இந்த மாயை

விலக ஆசிரியர் கவி காப்பியத்தில் தகுந்த இடங்களிலெல்லாம் தமிழை உயர்த்திப் போற்றுகின்றார்.

குன்றக் குறவர்கள் கண்ணகியின் உடலைப் புதைத்தலாகிய அறத்தைச் செய்கின்றனர். அப்போது அங்கு வந்த மன்னன் செங்குட்டுவனிடம் இதுபற்றி உரைப்பட்டுத் தணிந்த குன்றவாணர்கள்

"கோமான்நின் திறல் வாழ்க செங்கோல் வாழ்க
என்றைக்கும் தமிழ் வாழ்க என்று வாழ்த்தும்"

என்று தமிழை வாழ்த்துகின்றனர்.

சுவைதரும் தமிழ்ப் பெயர்கள்

நாகரிக மயக்கத்தால் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதில்கூட மக்கள் மயக்கம் கொண்டுள்ளனர். இம் மயக்கம் தெளிய ஆசிரியர் காப்பியத்தில் கண்ணகி, கோவலன் திருமணத்திற்கு வரும் அனைவரின் பெயர்களையும் தமிழ்ப் பெயராகப் படைக்கிறார்.

"அன்பரசி ஆணழகு கன்னல் பொன்னன்
ஆடுமயில் அறிவழகன் அன்னம் நல்லாள்
தென்னழகு தமிழப்பன் முத்து முல்லை
தேன்மொழியாள் மறவர்மணி திங்கள்செல்வன்"[3]

தமிழர் திருமணம்

சமுதாய விடுதலைக்குப் பெரிதும் பாடுபட்டவர் பாவேந்தர். பொருந்தா மணம், கட்டாய மணம் கைம்மை பலி, குழந்தை மணம் போன்றவற்றை தன் படைப்புகளின் வழியே எதிர்த்து விழிப்புணர்ச்சி அடையச்சங்கநாதம் முழங்கியவர் கவிஞர். இக்காப்பியத்தில் கட்டாய மணத்தை எதிர்க்கின்றார்.

கோவலன், கண்ணகியின் திருமணம் பேசப்படுகிறது. கோவலனின் தந்தை மாசாத்துவன், என் மகன் கோவலனுக்கு மாநாய்க்கர் தன் மகள் கண்ணகியைக் கொடுக்க இசைகின்றார் என்று கூறுகின்றார். இவ்விடத்தில் கவிஞரே சேந்தனார் என்ற பாத்திரமேற்று

"செந்தமிழ் நான்மறை முறையும் செத்ததேயோ?
செம்மலுளம் மங்கையுளம் ஒன்றுபட்டால்
அந்நிலைதான் மணமென்பார் அதனை விட்டே
அப்பன்மார் ஒப்புவதால் ஆவதென்ன?
தந்தை தரப்படும் பொருளா மங்கை நல்லாள்?"[4]
என்று கேட்கிறார்.

மேலும் முடப் பழக்கங்களையும், சடங்குகளையும் ஆரிய ஆதிக்கத்தையும் கடுமையாகச் சாடுகின்றார் ஆசிரியர். கண்ணகி, கோவலன் திருமணச் சடங்கை நிகழ்த்த ஆரியன் வருகின்றான். அப்போது வேந்தனார் என்பவர் சடங்குகளும் வாழ்த்தும் எப்படி இருக்கவேண்டும் என்பதை

"அத்தனையும் ஆரியமாய் இருக்கவேண்டாம்
தீயவினை வுண்டாகும் ஆதலாலே
செந்தமிழால் அவயத்தார் வாழ்த்தலன்றி
நம்மைப் போல் குரைப்பதெல்லாம் நம்பால் வேண்டாம்
நரியைப் போல் ஊளையிடல் நம்பால் வேண்டாம்"[5]
என்கிறார்.

இல்லறப் பண்புகள்

திருமணம் ஆன பெண்கள் மணமானவுடன் கணவன் வீடு செல்கின்றனர். அங்கு சென்றவுடன் அவளின் குடும்ப வாழ்க்கை செம்மையாக இருக்கவேண்டும் எனில் மனைவி கணவனின் அன்புக்கு உரியவளாய் இருப்பதுடன் முதற்கண் மாமியின் அன்புக்குரியவளாய் இருந்து மாமியின் மனதில் நல்லதொரு இடத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும். தற்காலக் கூட்டுக் குடும்பவாழ்க்கை பெரும்பான்மை இடங்களில் வெற்றியடையாமல் போவதை அறிந்த ஆசிரியர் இதற்கானத் தீர்வை கூற முயல்கின்றார். கண்ணகியின் மாமியின் அன்பிற்குரியவளாகப் படைக்கின்றார். விருந்துண்டு மகிழ்ந்த மாமி தன் கால்கள் நோவதாய் அழைக்கின்றாள். கண்ணகி தன் பல்வேறு வேளைகளுக்கு இடையிலும் முதியவளின் கால் பிடித்துவிடுகிறாள். இதை

"கால்பிடித்த கண்ணகியின் கைப்பிடித்தே
கண்ணகிக்கு மாமியளை கோவலன், தாய்
தோல்பிடித்தும் விதைமுதிராப் பயற்றங்காயைத்
துவட்டுமுறை என் கற்றாய்? தாயூட்டமட்ட
பால்பிடித்த சுளைமாறா இதழினாள
பாங்கடி நின் மனையறந்தாஸ் மகிழ்ச்சி"
என்கிறார் ஆசிரியர்.

சிலம்பின் களவு

பாண்டியமாதேவி மன்னனுடன் ஈடுபடும் புணர்ச்சிக் காலத்தில் உடம்பில் பட்டு உறுத்துப் என்று தன் காற் சிலம்புகளைக் கழற்றித் திருப்பள்ளி அறையின் பெட்டகத்தின் மேல் வைக்கின்றாள். அரண்மனையில் வேலைசெய்யும் பொற்கொல்லனான கருங்கையனின் காதலி பாண்டிமாதேவி கழற்றிவைத்த காற்சிலம்பைக் கவர்ந்து கருங்கையவிடம் கொடுக்கிறாள் என்று பாண்டியமாதேவியின் சிலம்பைப் பொற்கொல்லன் திருடியதற்கான காரணத்தையும் சூழ்நிலையையும் ஆசிரியர் தக்கவகையிற் கூறுகின்றார்.

கண்ணகியின் துணிவு

பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு அமைதியாய் இருத்தல் கூடாது, பொங்கி எழவெண்டும் என்ற எண்ணத்தில் கண்ணகியைப் புதுமைப்பெண்ணாக மாற்றும் ஆசிரியர் காப்பிய இறுதியில் கண்ணகியை கதைத் தேவைக்கேற்பப் புரட்சிக்காரியாகவும் சிறந்த வழக்கறிஞரா கவும், நீதிபதியாகவும் மாற்றுகின்றார்.

குற்றவாளி என்று பழி சுமத்தப்பட்டுக் கோவலன் இறந்ததும், அரண்மனை சென்று வாதம் புரிகின்றாள் கண்ணகி. அரசன் சட்டத்திற்கு உட்பட்டவன் என்றும் முழங்குகின்றாள், அப்போது, அவையோருக்கு உண்மையைத் தெளிவுடன் விளக்க மூன்று சிலம்புகளை உடைகின்றாள் கண்ணகி

கோவலன் கையில் இருந்து கைப்பற்றிய சிலம்பை முதலில் உடைத்து அதன் உள்ளிருந்தது மாணிக்கம் என்பதை உணர்த்துகின்றாள். பின் பாண்டியமாதேயின் காற்சிலம்பை

வரவழைத்து உடைக்கின்றாள். முத்துக்கள் சிதறுகின்றன. பின்பு தான் கையில் ஏந்திவந்த மற்றொரு சிலம்பை உடைக்கின்றாள் மாணிக்கம் தோற்றம் தருகின்றது. இங்ஙனம் தன்னுடைய சிலம்பு இரண்டு, பாண்டிமா தேவியின் சிலம்பு ஒன்றையும் உடைத்து அவையோரின் ஐயத்தை ஐயம்திரிபற நீக்குகிறாள்.

"உம் சிலம்பென் றீர் இதனைஎன் சிலம்பே
என்றுரைதந்த அதை எடுத்தாள் உடைத்தாள் போட்டே
செஞ்சிலம்பின் மாணிக்கம் சிதறி மன்னன்
விழிக்கெதிரில் உருக்காட்டிச் சென்று விழ
நும் சிலம்பைக் கொணர்க எனக் கொண்டுடைக்க
நுணுங்காத வெண் முத்தும் சிதறப் பின்னும்
கொஞ்சுகிளி கைச்சிலம்பு போட்டுடைத்துக்
குண்டு மாணிக்கங்கள் கண்டீர் என்றாள்"[7]

குடியாட்சியில் பதவியின் உள்ளோர் தவறுசெய்தால் அவர்களின் தவறைச் சுட்டிக்காட்டும் உரிமை குடிமக்களுக்கு வேண்டும் என்பதை உணர்ந்தவர் கவிஞர்.

பாண்டியன், கோவலனைக் கள்வன் என்று கொன்று தவறிழைத்து விடுகிறான். மதுரை மாநகரத்து மக்கள் பாண்டியனைப் பழித்துரைக்கின்றனர். மன்னன் நடுவுநிலைமை கோணுதற்கு நாணாதவன் ஆகவும், தொன்று தொட்டு வந்த ஆளும் திறம் இழந்துவிட்டான் என்றும் பலவாறாக உரைக்கின்றார்.

"வல்லான் வகுத்ததெல்லாம் வாய்க்கால் போலும்
வாய்மையினைக் கொன்றிடவும் வல்லான்
நல்லான் தான் என்றிருந்தோம் வேந்தன் தன்னை
நாணாதான் நடுவுநிலை கோணுதற்கே"[8]
என்கின்றார் கவிஞர்.

அடிக்குறிப்புகள்

1. பாரதியார், பாரதியார் கவிதைகள் பக்க எண். 222
2. பாரதிதாசன், கண்ணகி புரட்சிக் காப்பியம், பக்க எண். 6
3. மேற்படி நூல், பக்க எண். 17
4. மேற்படி நூல், பக்க எண். 11
5. மேற்படி நூல், பக்க எண். 13
6. மேற்படி நூல், பக்க எண். 25
7. மேற்படி நூல், பக்க எண். 114
8. மேற்படி நூல், பக்க எண். 89

மூவறைவென்றான் மலைக்கொழுந்தீசர் குடைவரைக்கோயில்

ச. ஜெயஸ்ரீ

எ.கா.த த பெண்கள் கல்லூரி, இராஜபாளையம்

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய பல்லவருள், பாண்டியரும் பல்லவரும் சமகாலத்தவர்கள். களப்பிரர்களின் ஆட்சி முடிவுற்ற போது தொண்டை நாட்டை பல்லவர்களும் பாண்டிய நாட்டைப் பாண்டியர்களும் சிறப்புற ஆட்சி செய்தனர். இவர்களுடைய காலத்தில் தான் தமிழகத்தில் பக்தி இயக்கம் வளர்ச்சியடைந்தது. சமணமும், பௌத்தமும் புறக்கணிக்கப்பட்டு சைவமும் வைணவமும் போட்டியிட்டுக் கொண்டு வளர ஆரம்பித்தன. இவைகள் வளர்ந்தன எனும் போதே பாண்டியரும், பல்லவரும் அச்சமயங்களை ஆதரித்தனர் என்பது வெளிப்படை. இவர்களுடைய காலத்தில தான் செங்கல், சுண்ணாம்பு, மரம முதலியனவற்றால் கோயில் கட்டப்படும் மரபு மாற்றம் அடைந்து குடைவரைக் கோயில் அமைக்கும் மரபு ஏற்றம் பெற்றது. தமிழகத்தில் மண்டகப்பட்டு எனும் இடத்தில் தான் முதல் முதலாக மகேந்திரப் பல்லவனால் மும்மூர்த்திகளுக்கும் குடைவரைக் கோயில் அமைக்கப்பட்டது என்பர். பல்லவர்களுடைய மரபைப் பின்பற்றியே பாண்டியர்களும் குடைவரைக் கோயில்களை அமைத்துள்ளனர். பாண்டிய நாட்டில் உள்ள பாண்டியர் குடைவரைகளை வைத்துப் பார்க்கின்றபோது, வைணவத்தையும், சைவத்தையும் இவர்கள் ஆதரித்தனர் என்பது தெரிய வருகிறது. எனினும் இவர்களில் குடைவரைகளில் பெரும்பாலனவை சிவனுக்காக அமைக்கப்பட்டதால் பாண்டியர்கள் வைணவத்தை விட சைவ சமயத்திற்கே பெரிதும் ஆதரவு அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

இட அமைவு

திருநெல்வேலி மாவட்டத்தில் மலையடிக்குறிச்சி என்னும் இடத்தில் மாறன்சடையனால் குடைவிக்கப்பட்ட குடைவரையே பாண்டியரின் குடைவரைகளில் காலத்தால் முற்பட்டது என கே.ஆர். ஸ்ரீநிவாசம் கருதுவார்[2] அதன் பின்னர்

தோன்றிய குடைவரைகளில் முவரைவென்றான் குடைவரையும் ஒன்று. இக்குடைவரை இன்றைய காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரை செல்லும் வழியில் மூவரை வென்றான் பிரிவினின்றும் சுமார் 3கி மீட்டர் தொலைவில் உள்ள மலையில் அமைந்துள்ளது இம்மலையின் மேலே சுனை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலே சுனையிலிருந்து மகாமண்டபம் வரைக்கும் சுனை நீர் வந்து சேருவதற்காக வரிபோன்ற பள்ளம் அமைக்கப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில் வெட்டதாக இருககலாம். இக்குடைவரைக் கோயில் கிழக்குமுகமாக அமைந்துள்ளது.

இன்றைய கோயில்கள் கிழக்குமுகமாகவே கட்டப்படுகின்றன. ஆனால், குடைவரை தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் மலை எத்திசையை நோக்கி அமைந்துள்ளதோ அதைப் பொருத்தே குடைவரையின் திசையும் அமையும். உதாரணமாக, யானைமலை நரசிங்கப்பெருமாள் கோயில், லாடன் கோயில் மேற்குமுகமாகவும், திருப்பரங்குன்றம் முருகன் கோயில் வடக்கு நோக்கியும் தென்பரங்குன்றம் உடையாண்டார் கோயில் தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. அதே சமயத்தில் திருப்பரங்குன்றம் தென்பரங்குன்றக் கோயில்களில் கருவறை மட்டும் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. முவரைவென்றான் மலை தெற்கு வடக்காக அமைத்துள்ளதால் இக்குடைவரை கிழக்குமுகமாக அமைந்துள்ளது.

குடைவரையின் அமைப்பு

முவரைவென்றான் குடைவரை, கருவறை மற்றும் முகமண்டபத்துடன் கூடியதாகும். கருவரை சதுரமாகவும் முகமண்டபம் நீள் சதுரமாகவும் அமைந்துள்ளது இத்தகைய அமைப்பு குடைவரை அமைப்பில் பெரும்பாலும் பின்பற்றப்பட்ட அமைப்பாகும். இதுதவிர கருவறையானது செவ்வக அமைப்பையுடைய குடைவரைகளையும் காணலாம். உதாரணமாக, திருமயம் பள்ளிகொண்டபெருமாள் கோயிலைக் கூறலாம்.

கருவறை 9அடி நீளமும் 8.3அடி அகலமும் 6.4அடி உயரமும் கொண்டதாக விளங்குகிறது. கருவறையின் வாசல் 5அடி உயரமும் 2½அடி. அகலமும் கொண்டதாக அமைந்

துள்ளது. கருவறையின் அதிஸ்ட்டானம் ஜகதி, முப்படைக் குமுதம், சிறிய கண்டர், பட்டிகை ஆகிய உறுப்புகளைக் கொண்டதாக காணப்படுகிறது. கருவறையை அடுத்த அர்த்த மண்டபம் 6.8அடி அகலமும், 17 6 அடி நீளமும், 8.1அடி உயரமும் உடையதாகக் காணப்படுகிறது. இம்மண்டபத்தில் இடம்பெறும் தூண்களின் அமைப்பு மகேந்திரப்பல்லவனின் பாணியில் குட்டையாகவும் தடித்தும் அமைந்துள்ளது. அரைத்தூண்கள் இரண்டும், முழுத்தூண்கள் இரண்டும் காணப்படுகின்றன. தூண்களின் அமைப்பு மேலும் கீழும் சதுரமாகவும் நடுவின் எண்பட்டை அமைப்பிலும் காணப் படுகிறது. இத்தூண்களில் மேற்பகுயில் அமைந்துள்ள போதிகையின் அமைப்பு சாதாரண நிலையில் காணப்படுகிறது. தூண்களின் சதுரப்பகுதிகளில் தாமரை இதழ்களைக் கொண்ட வட்ட வடிவங்களும், அவ்வடிவத்திறகுள் சிங்கமும், அன்னப் பறவையும் இடம்பெற்றுள்ளன. இத்தூண்கள் ஒவ்வொன்றும் இரண்டு அடி சதுர அமைப்பினைக் கொண்டு விளங்குகிறது. கருவறை அர்த்த மண்டபத்தை விட 2½ அடி உயரத்திலும், மூன்று முடிவுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. பிற்காலத்தில் அர்த்த மண்டபத்தை ஒட்டி மகாமண்டபம் கட்டப்பட்டுள்ளது. இம் மகாமண்டபத்தில் நந்தியும் கல் வெட்டும் காணப்படுகிறது. மேலும், மலை மீது அமைந்துள்ள சுனைநீர் கோயிலுக்கு வருமாறு அமைக்கப்பட்டுள்ள புருவவரி போன்ற அமைப்பு குறிப்பிடத்தக்கது. இக்குடை வரையின் வடக்கே மரகதாம்பிகை சந்நிதியும் கிழக்கே நவகிரகங்களுடன் கூடிய மண்டபமும் பிற்காலத்தில் அமைக்கப் பட்டுள்ளன. இக்குடைவரையின் சுவர்களிலோ விதானத் திலோ சித்திர வேலைப்பாடுகள் இல்லை.

சிற்ப அமைதி

குடைவரையின் கருவறையில் அமைந்துள்ள லிங்கத் திருவுரு 3½ அடி உயரத்துடன் காணப்படுகிறது. இவ்விறைவன் முந்தீஸ்வரர் என அழைக்கப்படுகிறார். கருவறை வாயிலின் இருபுறமும் அமைந்துள்ள இருபுறைகள் துவாரபாலகர்களுக் கென்றே அமைக்கப்பட்டதாகக் கருதலாம். ஆனால் இப்புறைகளில் துவாரபாலகர் சிற்பங்கள் இடம் பெறவில்லை.

அர்த்த மண்டபத்தின் வலப்புறத்தில் நான்கு கைகளைக் கொண்ட விநாயகர் புடைச்சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளார். விநாயகரின் முகம் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. மேலிருகைகளில் இருப்பது என்ன என்பது சரியாகத் தெரியவில்லை. முன் இருகைகளில் வலது கை உடைந்துள்ளது. தலையில் மகுடம் சிறியதாக அமைந்துள்ளது. விநாயகர் அருகில் அவரது மூசிக வாகனம் காணப்படவில்லை. இப்பாணி குடைவரைகளில் பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அர்த்த மண்டபத்தின் இடப்புறம் அமைந்த முருகனது சிற்பம் நான்கு கைகளுடன், முன் வலக்கை அபயமுத்திரையிலும் முன் இடக்கை வரத முத்திரையிலும் பின் இருகைகளில் வலக்கையில் வஜ்ஜிரமும் இடக்கையில் சக்தியும் தலையின் கரண்டதகுடமும் காணப்படுகின்றன. முருகனுக்குப் பின்னால் அவனது வாகனமான மயில் நின்ற நிலையில் பாம்பை வாயில் வைத்த வண்ணம் அமைந்துள்ளது. இங்கு முருகனது சிற்பம் வல்லியுடனோ, தெய்வயானையுடனோ இன்றி தனியாக பாலமுருகனாக அமைக்கப்பட்டுள்ளது. வினாயகர் மற்றும் முருகனது வடிவங்களுக்கு மேற்புறத்தே வானவர் இருவர் பறந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளனர்.

அர்த்த மண்டபத்தின் தெற்கு நோக்கிய பகுதியில் நடராஜரின் சிற்பம் சிவகாமியுடன் காணப்படுகிறது. அவரது நான்கு கைகளில் முன் வலக்கை அபயமுத்திரையிலும், முன் இடக்கை காலைச் சுட்டிக்காட்டிய நிலையிலும், பின் வலக்கை உடுக்கையுடனும், இடக்கை தீயுடனும் காணப்படுகின்றன. தலையில் சடாமகுடம் அமைந்துள்ளது. அவரது சடைமுடி இருபுறமும் விரிந்தநிலையில் காணப்படுவது, நடனநிலையைக் குறிப்பாகச் சித்திரிக்கிறது. நடராஜன் இடது காலைத்தூக்கியும். வலது காலை முயலகன் மீது

ஊன்றியும் உள்ளார் இவரது அருகே உமையம்மை இருகைகளுடன் திரிபங்க நிலையில், நின்றகோலத்தில் அமைந்துள்ளமை, நடராஜரது நடனத்தைக்கண்டு களிப்பது போல் உள்ளது. உமையின் தலையில் காந்த மகுடமும், வலக்கையில் தாமரை மலரும். இடக்கை கத்தி") வலம்த முத்திரையுயுடனும் காணப்படுகின்றன. நடராஜர் காலில் வீரக்கழல் அணிந்துள்ளார். கழுத்தில் பாம்பும், விரிந்த சடையில் வலப்புறம் கங்கையும், இடப்புறம் நாய்போன்ற உருவம் இடம்பெற்றுள்ளன.

இக்குடைவரையில் கல்வெட்டுகள் காணப்பெறாமையால் இதன் காலத்தைக்கணக்கிட இயலவில்லை. மேலும் இக்குடைவரையின் அர்த்த மண்டபத்தில் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள் குடைவரையின் காலத்திற்கும் பிற்பட்டது. என்ற கருத்திற்கு இடம் உண்டு. பாண்டிய நாட்டில் காணப்படும் குடைவரைகளில் பெரும்பாலானவை கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருப்பதால் இக்குடைவரையும் அதே நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

குறிப்புக்கள்

1. வெங்கட்ராமன் ஆர்.
இந்திய கோயில் கட்டிடக் கலை வரலாறு
பக். 35.

Srinivasan K.R.
Temples of South India - PK.52.

வானொலியின் - சின்ன விஷயம்

முத்து இலக்குமி

மீனாட்சிக் கல்லூரி, மதுரை.

'மூர்த்தி சிறிது கீர்த்திப் பெரிது' என்றும் 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்றும் குறிப்பிடுவதுண்டு. வானொலியின் 'சின்ன விஷயம்' இத்தகு வரிசையில் வருவதாகும். மக்கட் தொடர்புச் சாதனங்களில் வானொலியின் வருகையும், வரவேற்பும், வாழ்வும் இன்று தனக்கென ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுத் தக்க வைத்துக் கொண்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

காலை 5.55க்கு 'வந்தே மாதரத்தில்' தொடங்கி இரவு 11.00க்கு 'முத்தாய்ப்பாகச் சில முத்துக்கள்' கூறி அன்றாட நிகழ்வுகளை ஒலிபரப்புச் செய்யும் வானொலியில், குறிப்பாக மதுரை வானொலியே இவண் இடம் பெறுகிறது. இதில் 'சின்ன விஷயம்' என்ற நிகழ்ச்சியானது காலை 7 00க்கு, 'நிகழ்ச்சியும் நேரமும்' முடிந்த பின்பு இடம் பெறுவதாகும்.

மிகக் குறுகிய கால அளவில் —
மிகக் குறிப்பாக —
குறிப்பிட்ட ஒரு செய்தியை மட்டும் —
ஒருவர் மட்டுமே —

எடுத்துரைக்கும் நிகழ்வாக விளங்குவதே இச் 'சின்ன விஷயம்'.

தகவல் தொடர்புச் சாதனங்கள் மக்கட்கு

அறிவித்தல் —
அறிவுறுத்தல் —
மகிழ்வித்தல் —

என்ற முப்பெரும் பணிகளைச் செய்பவை. மின் சக்தியின் வலிமையினால் கண்டறியப்பட்டப் பல புதிய தகவல் தொடர்புச் சாதனங்களில் ஒன்றாகிய வானொலி முதன் முதலில் இந்தியாவில் 1921-ல் தனது ஒலிபரப்புச் சேவையைப் பம்பாயில் தொடங்கியது. நாளடைவில் கல்கத்தா, டில்லி சென்னை என்று விரிவாக்க நிலையைப் பெற்றது இன்றைய

நிலையில் 'தகவல் வெடிப்பினால்' தகவல் சாதனங்களின் பெருக்கத்தால் நாளும் பல புதியபுதிய நுண்மையான விரைவுத் தன்மை மிக்க கருவிகள் கண்டறியப்பட்டு வருகின்றன.

மின்னணுச் சாதனங்களில் வானொலிக்கும், தொலைக் காட்சிக்கும் மிகச் சிறந்த பங்குண்டு. கேட்டும், கண்டும் மகிழ்வினை வழங்கும் திறமிக்க இவையிரண்டுமே தொடக்க நிலையில் மக்களிடம் உள்ள அறியாமையை நீக்குதல் வேண்டும் என்பதற்காகக் கல்வி ஒலி, ஒளிபரப்புக்களைத் தொடங்கின. இவ்வாறு மக்கட்கு அறிவுறுத்தல் என்றபணியில் தங்களது அடிப்படை கட்டுமானத்தை அமைத்துக்கொண்டன. ஆனால் நாளடையில் மானுடத்தின் எண்ண வீச்சின் அலைகள் உலகளாவிய திறத்தில் அகற்சி உடையதாகப் பலவற்றை கேட்கக், காணத் துடித்தன.

மார்ஷல் மாக்லுகன் கூறுவதைப்போன்று 'உலகக்கிராமம்' (Global Village) தோன்றுவதால் அறிவுறுத்தல் என்பதோடு அறிவித்தல், மகிழ்வித்தல் என்றும் ஏனையவற்றையும் செய்ய வேண்டிய கட்டாயச் சூழல் உருவாகி விட்டது. ஆனால் இன்றையக் காலத்தில் முன்னிரண்டு கூறுகளும் பின்னடைவுப் பெற்றுவிட, பின்னையது மட்டுமே முன்னணியில் நின்று பெரும் செல்வாக்கினைப் பெற்று விளங்குகிறது. எந்நேரமும் திரைப்படப் பாட்டும், ஆட்டமும் தான் என்று அலுத்துக் கொள்ளும் அளவுக்கு ஏறுத்தாழ 75 விழுக்காடுகள் வரைப் 'பொழுது போக்கே' மிகுந்து விளங்குகின்றன.

வானொலி நிகழ்ச்சிகளில் 'அறிவுறுத்தல்' என்ற அடிப்படையில்'

1. பண்ணை இல்ல ஒலிபரப்பு 2 நல வாழ்வு. 3 தாய்வீடு 4. தொழிலாளர் நிகழ்ச்சி 5 கல்வி ஒலி பரப்பு 6. சிறுவர் நிகழ்ச்சி 7 மகளிர் நிகழ்ச்சி 8. இளைஞர் நிகழ்ச்சி.

என்பன உள்ளன. அறிவித்தல்' நோக்கில் விளம்பரங்கள் இடம்பெறுகின்றன. 'மகிழ்வித்தல்' என்பதற்காகத் திரைப்படப் பாடல்கள், வசனங்கள் ஒலி பரப்பாகின்றன. பொழுதைப் பொருள் உள்ளதாக்கும் சிந்தனையில் கருத்தியல் கோட்டு பாட்டு நிகழ்ச்சிகளும் உண்டு. இதில் ஏற்றத்தாழ 'இரண்டு'

மணித்துளியளவில் ஒளிபரப்பாகும் 'சின்ன விஷயம்' - 'துணுக்குச் செய்தி' (டிட் - பிட் நியூஸ்) என்பதாகும். வானொலி ஒளிபரப்பு ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட நேயர்களுக்காகச் (Target Audience) சேவை புரிவதாகும்.

'சின்ன விஷயம்' கால அளவில், குறுகிய நேரக் கட்டுப்பாட்டிற்குள் அமைந்தது. கருத்தளவில் பல வளமான சிந்தனைகளுக்குத் தளமிடுவது இதைப் 'பெரிது' பண்ணத் தேவையில்லை என்று ஒதுக்கக் கூடியவை அல்ல. உணர்ந்து உள்ளத்தில் ஏற்க வேண்டியவை. சற்று, நின்று, நிதானித்துக் கேட்டு மனதில் பதிவு செய்யத் தக்கவை.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுமாயின் மனிதப் பிறவிக்கு நல்ல பல எண்ணங்கள், கோட்பாடுகள், செயல்கள் வேண்டப்படுகின்றன. நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான கருத்துக்கள் யார், யார் வாய்க் கேட்பினும் சில சமயங்களில் அவை அன்றன்று புதுமையாய் தான் தோன்றுகின்றன இலக்கியக் களங்கள் வாழ்வியற் நெறிகளை உணர்த்துகின்றன. இன்றைய அறிவியல் அதிரடி நிறைந்த கணினி உலகில் வானொலியும் தொலைக் காட்சியும் இக்கால இலக்கியக் களமாக விளங்கிக் கருத்துக்களை வழங்கவேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றன.

வாசிக்க மட்டுமல்ல, வாழ்க்கைக்கும்' என்று எடுத்துச் சொல்லிப் பத்திரிக்கைகள் மக்கட்குத் தேவையானவற்றை வழங்குகின்றன. அதேபோன்று ஒலி ஒளிச் சாதனங்களும் கேட்கப் பார்க்க மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் என்று சிலவற்றைக் குறிப்பிட்டு ஒலி, ஒளிபரப்புச் செய்கின்றன. சின்ன விஷயத்தில் இடம் பெறும் தகவல்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. பொது இடம் - தொடர்பானவை.
2. வீடு - தொடர்பானவை.

நமது செயல்பாடுகள் அமைத்துமே செம்மை செய்யப்பட்டவை என்று உறுதியாக அறுதியிட்டுக் கூறுதல் முடியாது. அவற்றில் ஆங்காங்கு சில குறைபாடுகள் காணப்படலாம். அவை குறைபாடுகள் என்று நமக்குத் தெரியாமலும்

இருக்கலாம். அவ்வமயம் நம்மையே ஒரு முகம் தெரியாத மனிதர் விமர்சிக்கும் பாணியில் நமது நடவடிக்கைகள் பற்றிய விமர்சனங்கள் இச் சின்ன விஷயத்தில் பங்கு பெறுகின்றன. ''பஸ்ஸில் பயணம் செய்யும் போது நமது நெருக்கத்தைப் பஸ்ஸில் பயணம் செய்பவரிடம் காட்ட வீட்டு விஷயங்களைக் கூறுவது தேவையில்லாதது' என்பதே !. 5. 95 அன்று வழங்கப்பட்டச் சின்ன விஷயம்! உண்மை தான்; பஸ்ஸில் பயணம், நாம் செல்லும் இடத்தைப் பொறுத்துச் சில மணி நேரங்களாக இருக்க, உடன் பயணம் செய்பவர்களுக்கு நம் கதையோ, நம் வீட்டுப் பிரச்சனையோ, சூழலோ முழுமையாகச் சொல்ல வேண்டும் என்ற கட்டாய மில்லையே! அப்புறம் ஏன் இந்த தேவையில்லாத கதையளப்பு - இச்செய்தியைக் கேட்கும் போது நம்மில் பலர் தினந்தோறும் செய்து வருவது என்று புரிகிறது. நம் நடவடிக்கையினைச் சீர்படுத்த இச் சின்ன விஷயம்' இப்படித்தான் உதவுகிறது.

பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் மீது, இறந்தவர்கள் மேல் இருக்கும் மலர்களைத் தூவும் அநாகரிகம், பொது விழாக்களுக்குச் செல்லும்போது குழந்தைகட்கு நகையினைப் போட்டுச் செல்வது, தவறிவிடும் போது தவிப்பது, பிறரைக் குறை கூறியே ஆதாயம் பெறுவது, பழக் கூடையைத் தூக்கிச் செல்ல முடியாத போது வாங்கி உதவுவது, முன்பின் தெரியாதவரை அழைத்துவரப்புகைவண்டி நிலையத்திற்குச் செல்லும்போது அடையாளத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாமல் உதவ முடியாமல் குழம்புவது, நேரடிப் பேட்டிக்குச் செல்லும் போது உதவியாக இருப்பதற்கு மாற்று உடையையும் கொண்டு போவது, 'பாராட்டும்படி இருந்தால் அடுத்தவர் முன் சொல்லுங்கள், குறையிருந்தால் தனியாக அழைத்துச் சென்று கூறுங்கள். என 'நல்லது கெட்டதை அறியும் - உய்த்தறியும் அறிவு தேவை எனபன போன்ற அன்றாட நடைமுறை வாழ்வில் செய்யத்தக்கவை, தகாதவைகளை இந்நிகழ்வில் கேட்க முடிகிறது.

வீட்டைப் பொறுத்த வரையில், குழந்தைகள் விளையாடும் போது 'காசு' கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும், ப்ளக்பாயிண்ட்' சுவரின் தரை ஓரத்தில் இல்லாது இருப்பது நல்லது, பெற்றோர்கள் தங்கள் வாழ்வில் தாங்கள் இழந்த

தையும், தாங்கள் விரும்புவதையும் குழந்தைகள் மீது திணித்தல் கூடாது, ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசையுண்டு, ஆசைகள் பலவிதம், நிறைவேறச் செயல் படுதல் வேண்டும் நண்பர்கள் வீட்டிற்குத் திட்டமிட்டுத் தெரிவித்து விட்டுச் செல்வது நல்லது, இனிப்பு வியாதியுள்ள நண்பர் நாவடக்கமின்றி இனிப்பு சாப்பிடுவது துன்பம், நாணயத்தோடு நாநயமிக்கோர் தம் சாதுர்யப் பேச்சால் பொருளைக் கேட்கக் கொடுத்து விட்டுத் தவிர்த்தல் கூடாது, எப்பொருளைக் கொடுத்தாலும் குறித்து வைத்துக் கொண்டு கொடுத்தாலும் குறித்து வைத்துக் கொண்டு கொடுத்தல் நல்லது, வாரம் 'ஒரு குறள்' என்று ஏழு எட்டு தடவை சொல்லவைத்தால் குழந்தைகள் நாளடைவில் நிறைய குறட் பாக்களைக் கற்க வாய்ப்புண்டு, மனைவியைப் போக வர வேலை வாங்கும் ஆணாதிக்கப் போக்கு இருட்டில் மகனிடமே சிகரெட்டிற்குத் தீப்பெட்டி சேட்கும் தந்தை, மருண்ட மகன் இருவருமே உயிர்க்குப் பகையான புகையை விட்டுவிடுதல் என்று பல கருத்துக்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

மனிதன் எப்படியும் வாழலாம் என்று வாழ முடியாதபடி இப்படித் தான் வாழ வேண்டும் என்று வகைமை செய்வதற்கு இத்தகு கருத்தாக்கங்கள் உதவுகின்றன. செயல்பாடுகளில்,

தெளிவு --
திட்டமிடுதல் —
உதவுதல் —
திருத்திக் கொள்ளுதல் —
பொறுப்புணர்ந்து நடத்தல் —
அநாகரிகப் பழக்க வழக்கங்களைத் தவிர்த்தல் —
சுயலாபம் கருதியே வாழ்வது களைப்படுதல் —

என்பன போன்ற பல்வேறு நல்ல பல கருத்துக்கள் நாளும் நம் காதில் வீழ்ந்த வண்ணமிருப்பதால் 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' என்பதைப்போல இறுகிய மனதும் நாளடைவில் இளக்கமாகி விடும்.

பாவைப் பாடல்கள் – ஒப்பீடு

சு. முருகன்

மதுரை காமராசர் பல்கலைகழகம

இந்து சமயத்தின் இருகண்களெனப் போற்றப்படுபவை சைவம், வைணவம். சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கருதும் சமயம் சைவம் திருமாலைத் தெய்வமாக வணங்கும் சமயம் வைணவம் இவ்விரு சமய நூல்களாகக் கருதப்படுபவை திருப்பாவையும் திருவெம்பாவையும். இவ்விரு இலக்கியங்களும் பாவை நோன்பைப் பாடு பொருளாகக் கொண்டு பாடப்பட்டவை.

தோற்றம்

தொல்காப்பியத்தில் பாவைப்பாடல்கள் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால் தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், ''சிறுபான்மை பாவைப்பாட்டும், அம்மானைப் பாட்டும் முதலாயின நான்கு அடியினகன்று வருவனவாயின'' (தொல், பொருள். செய்யு. 149 உரை) என்று கூறியுள்ளார் மேலும், ''சிற்றெல்லையாகிய பத்தடி அளவும் பாவைப் பாடலும் அம்மானைப் பாடலும் போலும் தரவுகொச்சகம் வரும்.'' (தொல்பொருள், செய்யு: 155) என்று வரையறை செய்துள்ளார்.

பெண்பாற் பாட்டு

பாவைப்பாடல்கள் பெண்பாற்பாட்டு வகையைச் சார்ந்தவையாகும். இதன் இலக்கணத்தை,

''பேணுஞ் சிறப்பிற் பெண்மகவு ஆயின்
மூன்றாம் ஆண்டிற் குடிமண மொழிதலும்
ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்
ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு தோற்றலும்
பனிநீர் தோய்தலும் பாவை ஆடலும்''

என்று(பிற்கல 1369) நிகண்டு குறிப்பிடுகிறது. ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையான சிறுமியரே தைந்நீராடலுக்குரியர். இதனால் காமக்குறிப்பில்லாத கன்னியர் மேற்கொள்ளும் நோன்பாகவே கருதப்பட்டது.

திருப்பாவை

பாவைப்பாடல்களுள் முதலில் தோன்றியது ஆண்டாள் பாடிய திருப்பாவை. பெண்ணடியாரால் பாடப் பட்ட பாடல்களாதலால்பெண்மை அனுபவத்தை நேரடியாகக் காணலாம். இலக்கிய உணர்வும் பக்தியும் ஆண்டாள் பாடல் களில் சமநிலை அடைந்துள்ளன. மேலும் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும், 'எம்பாவாய்' என்னும் தொடர் காணப் படுகிறது. ஈர மணலினால் தேவியின் உருவத்தைச் செய்து மகளிர் வழிபட்டனர்.

இதனை,

"நம் பாவைக்குச் செய்யும் கிரிகைகள் கேளீரோ(திருப்-2)
'நம் பாவைக்குச் சாற்றி நீராடினால் (திருப்-2)
"பிள்ளைகள் எல்லாரும்பாவைக் களம்புக்கார்" (திருப்13)

என்ற தொடர்கள் புலப்படுத்துகின்றன. கண்ணபிரான் மீது காதல் கொண்ட ஆண்டாள் நாச்சியார், அவனை அடைவ தற்காகத் தேவியையும் வழிபடுகின்றார். மேலும் உன்னையும் தம்பியையும் தொழுதேன் எனக் கண்ணனையும், அவன் தம்பியாகிய சாமனையும் தொழுத ஆண்டாள், தேவியையும் வணங்கிக் கண்ணபிரானைப் பெற முயன்றுள்ளார்.

திருவெம்பாவை

திருவெம்பாவையைப் பாடியவர் மாணிக்கவாசகர். திரு வண்ணாமலையில் தங்கி, சிவபெருமானை வணங்கினார். மார்கழி மாதம் திருவாதிரைக்கு முற்பட்ட பத்து நாட்கள் மகளிர் வைகறையில் துயிலெழுந்து வீடுகள் தோறும் சென்று தோழியர்களை எழுப்புவர், எல்லோரும் ஒன்று சேர்ந்து நீர் நிலைக்குச் சென்று நீராடி, இறையை வணங்குவர். இந்நிகழ்ச் சிகளை மாணிக்கவாசகர், திருவெம்பாவையாகப் பாடினார். ஒவ்வொரு பாடலின் இறுதியும், 'எம்பாவாய்' என்று முடிந் திருக்கும் அதோடு, நாம் மார்கழி நீராடேவோர் எம்பாவாய்' என்று மார்கழி நீராடலைப் பற்றியும் திருவெம்பாவை புலப் படுத்துகிறது. மகளிர் வைகறையில் துயிலெழுந்து, மற்ற மகளிரையும் துயிலெழுப்பி நீராடிச் சிவனுடைய அடியாரைத் தம் நாயகராக அடைய வேண்டும் என்று வேண்டுகின்றனர்.

பாவை நோன்பு

மார்கழி மாதம். எல்லாநாட்களிலும் வீடியற்காலையில் நீராடித் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களை ஆடவரும் ஓதுகின்றனர் மார்கழிமாதம் முழுவதும் நீராடலுக்கு ஏற்ற நாட்களாகும். ஆயினும் திருவாதிரையே சிறந்த நாளாகக் கருதப்படுகிறது. இதனை,

''மாயிருந் ங்கள் மறுநிறை யாதிரை
விரிநூல் அந்தனர் விழவு தொடங்க'' (பரி.11) என்று

பரிபாடலும் எடுத்துரைக்கிறது. இவ்வாறே,

'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்'' (திருப். 1)
''போற்றியாம் மாகழி நீராடேனோர் எம்பாவாய்''
(திருவெம்.2)

என்று பாவைப் பாடல்களும் கூறுகின்றன.

பாவை நோன்பின் நோக்கம்

நல்ல கணவரைப் பெறவேண்டும் என்ற சிறப்புப் பயனும், நாடும் வீடும் வாழ மழை வேண்டும் என்ற பொதுப்பயனும் கருதிப் பாவைப் பாடல்கள் பாடப்பட்டன. ஆனால் திருப்பாவையில்,

''தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெறும் செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்''
(திருப்,3) என்று

நோன்பின் பயன்கள் சுட்டப்பட்டுள்ளன. சிவத்தொண்டும் சிவனடியார் மீது அன்பும் வேண்டும் என்பது திருவெம்பாவையின் வேண்டுகோள்.

திருப்பாவையின்
''கோவிந்தா,
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு

உற்றோமே யாவோம் உமக்கே நாமாட் செய்வோம்''
(திருப். 29)

என்பதே ஆண்டாளின் வேண்டுகோள்.

பாவையர் நீராடல்

மார்கழி நோன்பு நோற்கும்பொழுது மகளிர் வைகறையில் நீராடுவர் என்பதை,

''மார்கழி நீராட மகிழ்ந்தேலோர்' (திருப்.4)
'நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்' (திருப் 3)
'நாட்காலே நீராடி' (திருப் 21)
''நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்'' (திருப் 1)

என்று நாச்சியார் குறிப்பிடுகின்றார். ஆனால் மகளிர்நீராடும் காட்சியைச் சுட்டவில்லை. மாணிக்கவாசகர் மகளிர்நீராடும் காட்சியை,

''காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதைகுழலாட வண்டின் குழாமாடச் சீதப் புனலாடி''
''சங்கம் சிலம்புச் சிலம்பு கலந்தார்ப்பக் கொங்கைகள்
பொங்கக் குடையும் புனர்பொங்கப் பங்கயப் பூம்புனல்
பாய்த்தாட'' என்று அழகுக் காட்சியாக வருணிக்கின்றார்.

நோன்புக் கால நெறிகள்

பாவை நோன்பின்போது சில நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை நாச்சியார்,

''நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்'' (திருப்-2)

என்று வலியுறுத்துகின்றார். உடல் அலங்காரங்களை நீக்கி, அறம்பல செய்தால்இறைவன் திருவடியை அடையலாம் என்பது நாச்சியாரின் நோக்கம். மேலும் நோன்பின்போது இறைவனின் திருநாமங்களை,

''மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்'' (திருப்.9)

என்று கூறுவர். அவ்வாறே,

''சிவனே சிவனே என்றோலமிடினும் உணராய்
இருஞ்சீரான் சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்'' என்று மணிவாசகரும் கூறுகின்றார்

துயில் எழுப்பல்

மகளிர் தங்கள் தோழியரைத் துயில் எழுப்புவதாகப் திருப்பாவையில் பதினான்கு பாடல்கள் (திருப்-6.15, 17, 19, 20,21) காணப்படுகின்றன. தோழியர் மட்டுமின்றி, வாயிற் காப்போன், கோயிற்காப்போன், யாசோதை, நந்தகோபன், பலராமன், நப்பினை ஆகியோரையும் துயில் எழுப்புகின்றனர். ஆனால் திருவெம்பாவையில தோழியரை மட்டும் துயில் எழுப்புவதாக ஒன்றுமுதல் எட்டுப் பாடல்கள் காணப்படுகின்றன.

இறைவன் பெருமைகள்

இறைவன் பெருமையைப் பாடுபொருளாகக் கொண்டு பாவைப் பாடல்கள் பாடப்பட்டன, திருப்பாவையில் திருமாலின் அவதாரச் சிறப்புக்கள்,

''புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைத்தானை கீர்த்திமை பாடி'' (திருப்.13)
''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி''(திருப் 3)
'கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
என்று பாடப் பட்டிருப்பதை அறிகிறோம். (திருப் 1)

திருவெம்பாவையில் புராணக் கதைகள் மூலம் இறைவனின் பெருமைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன திருமாலும நான் முகனும் சிவனுடைய அடியும் முடியும் காண இயலாத கதை இடம் பெற்றுள்ளது திருப்பாவையில் படிப்படியாக வளர்ந்து வரும் ஆன்ம வளர்ச்சியைக் காணலாம். திருவெம் பாவையில் இறையனுபவத்திற்கு ஆற்றுப்படுத்தும் வளர்ச்சி பெற்ற ஆன்மாவைக் காணலாம்.

உருவக மயக்கம்

ஆ. கணேஸ்வரி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

விடுகதை என்னும் நாட்டுப்புற இலக்கிய வகை கேட்போரிடம் தெளிவின்மையை ஏற்படுத்தி அவனது சிந்தனையைக் குழப்புவதையே தனது முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கேட்போரின் சிந்தனையில் மயக்கத்தை ஏற்படுத்த விடுகதை நிகழ்த்துபவர்கள் பல்வேறுபட்ட உத்தி முறைகளைக் கையாள்கின்றனர் அவற்றுள் உருவகத்தைப் பயன்படுத்துவதும் ஒரு உத்திமுறையாகக் கையாளப்படுகின்றது. உருவகம் என்பது உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்றே என்று தோன்றும் வகையில் உவமானத்தின் (உவமிக்கப்பயன்படும் பொருள்) தன்மையை உவமேயத்தின் மேல் (உவமிக்கப்படும் பொருள்) ஏற்றிக் கூறுவதாகும். விடுகதையின் வினாப் பகுதியில் அமைந்திருப்பது உவமானம்; விடையாக வெளிப்படுவது உவமேயம் சான்றாக,

'சிவப்புப் பைக்குள்ள சில்லரைக்காசு'

என்ற விடுகதையை எடுத்துக் கொள்வோம். இவ்விடுகதையில் இடம்பெறும் 'சிவப்புப்பை, சில்லரைக்காசு' என்பவை உவமானப் பொருள், இவ்விடுகதையின் விடையில் வெளிப்படும் 'பட்ட மிளகாய்' என்பது உவமேயப் பொருள். இங்கு உவமிக்கப்பயன்படும் பொருளின் (சிவப்புப்பை, சில்லரைக் காசு) தன்மை உவமிக்கப்படும் பொருளின் (படடமிளகாய்) மேல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு உவமானமாகப் பயன்படும் பொருளின் பண்புகள், செயல்கள் ஆகியவை விடுகதையில் அடுக்கிச் சொல்லப்படுகின்றன. அவை விடையைக் கண்டுபிடிக்கப் பயன்படும் குறிப்புகளாகவும் (Clues) செயல்படுகின்றன. "விடுகதை போடும்போது, ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தும் கருவிகளாக உவமையும் உருவகமும் அமைகின்றன. விடுகதையின் வினாப்பகுதியில், உவமையின் மூலமாகவோ உருவகத்தின் மூலமாகவோ பொருட்கள் விவரிக்கப்பட்டு அவை விடைகளாக வெளிப்படும் போது அவற்றிலுள்ள ஒற்றுமைப் பண்பைக் (resemlbances) கண்டு ஆச்சரியமும் உற்சாகமும் ஏற்படுகின்றது.

உவமையும் உருவகமும் இல்லையெனில்விடுகதையே இல்லை எனலாம் (இ.பாத்திமா மேரி - 1987-53). உருவசப்பண்பு இருப்பதாலேயே விடுகதைகள், நாட்டார் இலக்கிய வகைகள் எல்லாவற்றிலும் முதன்மை பெறுகின்றன மனிதனுடைய சிந்திக்கும் திறன், அவன் காணும் பொருட்களிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் புரிந்து கொள்ளும் அறிவுத்திறன் ஆகியவற்றின் விளைவே இந்த உருவகங்கள் (இ பாத்திமாமேரி 1987 : 53)"எனலாம். உருவகம் எங்கு செயல்படுகின்றதோ அங்கு மயக்கம் ஏற்படுகின்றது அதிகப்படியாகப் பொருள் கொள்வதற்கும் தெளிவின்மைக்கும் உருவகம் காரணமாகின்றது. எனவே விடுகதையைக் கேட்போன் பொருண்மை நிலையில் மயங்குகிறான் அவ்வாறு மயக்கத்தை ஏற்படுத்தும் அளவிற்கு உவமானப்பொருளும் உவமேயப் பொருளும் விடுகதைப் பனுவலில் எவ்வாறு தொடர்புப்படுத்தப்பட்டுள்ளன என இனிக்காண்போம்.

விடுகதைகளில் உருவகம் எடுத்தாளப்படும் முறையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை

1. இயல்பான உருவகம் 2. எதிர்மறை உருவகம்
என இரண்டு பிரிவாகப் பிரித்து ஆராயலாம்.

இயல்பு உருவகம்

விடுகதையின் வினாப்பகுதியில் உவமானப் பொருளின் தன்மை செயல்களின் மேல் வினாப் பகுதியில் வெளிப்படும் உவமேயப் பொருளின் தன்மைகளும் செயல்களும் உள்ளவாறே ஏற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இயல்பாகத் தொடர்புப்படுத்தப்பட்டிருக்கும் உருவக அமைப்பை இயல்பு உருவகம் எனலாம் சான்றாக

"கொளம் வட்டக் கொளம்
கொக்கு நெட்டிக் கொக்கு
கொளம் வத்திப் போனால்
கொக்கு செத்துப் போகும்."

என்ற விடுகதையை எடுத்துக்கொள்வோம். இதில் விளக்கு குளமாகவும், திரி கொக்காகவும் விளக்கில் எண்ணெய் தீர்ந்து போதல் குளம் வற்றுதலாகவும்) இவ்விடுகதையில்

குளம், கொக்கு என்ற உவமேயப் பொருளின் தன்மையின் மேல் விளக்கு திரி என்ற உவமானப் பொருளின் தன்மைகள் ஏற்றுச் சொல்லப்பட்டிருக்கின்றன. குளம் வற்றிப்போதல் கொக்கு செத்துப்போதல் என்பதான உவமானப் பொருளின் செயல்களின் மேல் உவமேயப் பொருளின் எண்ணெய் தீர்தல், திரி அணைதல் என்ற செயல்கள் ஏற்றிச் சொல்லப் பட்டிருக்கின்றன இந்த உவமிக்கப்பயன்படும் பொருளின் தன்மை செயல்களின் மேல் உவமிக்கப்படும் பொருளின் தன்மையும் செயல்களும் இயல்பாக உருவகப்படுத்தப் பட்டுள்ளன. அதனால் ஏற்படும் மயக்கம் விடுவிக்கப்படும் பொழுது அதாவது உவமான உவமேயப் பொருட்கள் தொடர்புப்படுத்திக்காட்டப்படும் பொழுது தெளிவாகின்றது. எதிர் உருவகம் (Negative Metaph r).

விடுகதையின் வினாப்பகுதியில் அமைந்திருக்கும் பொருளின் தன்மை செயல் ஆகியவற்றின் மேல் விடையில் வெளிப்படும் உவமேயப்பொருளின் தன்மையும் செயலும் எதிர்மறைத் தன்மையில் ஏற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறு எதிர்மறைப் பொருளில் உருவகிக்கும் பொழுது கேட்போரிடம் மயக்கம் அதிகரிக்கின்றது. விடுவிக்கப்படும் பொழுது பொருளின் தன்மையும் செயலும் முரணாகத் தொடர்புப்படுத் தப்படுகின்றன. அப்பொழுதே எதிர்மறை உருவகம் தெளிவாக்கப்பட்டு மயக்கம் தெளிவாகின்றது. சான்றாக,

"ஆசை விசுவாசம் அரளிப்பூ வாசம்
அப்/ப/டி வார அத்தானுக்கு
எப்/ப/டி நின்னு சோறு போடுறது." (பாம்பு)
ஆசை விசுவாசம் அரளிப்பூ வாசம்
அப்/ப/டி வார மச்சானுக்கு
எப்/ப/டி நின்னு சோறு போடுறது (பாம்பு)

என்ற இவ்விடுகதைகளுக்கு 'பாம்பு' என்பது விடையாக அமைகின்றது இவ்விடுகதைகளில் இடம்பெறும் 'அத்தான், மச்சான்' என்ற சொற்கள் பாம்பையும் 'ஆசை, விசுவாசம்' போன்ற சொற்கள் பாம்பின் தீண்டும் தன்மையையும் 'சோறு போடுதல்' என்பது பாம்பை அடிப்பதையும் எதிர்மறைத் தன்மையில் குறிக்கும் முகமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. 'அத்தான், மச்சான்' என்ற சொற்கள் திருமண உறவுடைய

ஆண்களை விளித்துக்கூறும் உறவுமுறைச் சொற்களாகும். இச்சொற்கள் கொடிய பாம்பைக் குறிக்க விடுகதையில் எடுத்தாளப்பட்டுள்ளது மேலும் ஆசை, விசுவாசம் போன்ற சொற்கள் உறவின் அடிப்படையில் மகிழ்ச்சியைத் தரக்கூடியவை. ஆனால் இச்சொற்கள் பாம்பின் நச்சுத்தன்மையைக் குறிக்கும் விதத்தில் விடுகதையில் உருவகப்படுத்தப் பட்டுள்ளன. சோறு போடுதல் என்பது இன்முகத்தோடு விருந்துபடைத்தல் என்பதைக்குறிக்கின்றது கிராமப் புறங்களில் கேலி உறவுடையவர்கள் (மச்சான், கொழுந்கன் உறவுடையோர்) கேலிக்குரிய பெண்களிடம் "ஒரு நாளைக்கு எங்களுக்கு சோறு போடக் கூடாதா?' எனக்குறிப்பாக வினவுவார்கள். இந்த 'சோறு போடுதல்' என்பது ஆண்பெண் உறவைக் குறித்து நிற்கிறது இவ்வாறு சோறுபோடுதல் என்பது மரபுரீதியாக உடனடிப் பொருண்மை நிலையிலும், குறிப்பாகப் பொருண்மையை உணர்த்தும் நிலையிலும் விருந்து படைத்தல் என்ற பொருண்மையையே தருகின்றது. ஆனால் அப்பொருண்மையின்மேல் 'பாம்பை அடித்தல்' என்ற செயல் ஏற்றிச் சொல்லப்பட்டு எதிர்மறையாக உருவகிக்கப் பட்டுள்ளது இதே போல்

'ஏழு மலைக்கு அங்கிட்டு இருந்து
எருமை செத்து நாறுது.'

என்ற இவ்விடுகதைக்குத் தாழம்பூ என்பது விடை இவ்விடுகதையில் தாழம்பூ மலர்வதால் வீசும் நறுமணம் எருமை செத்து அழுகிய துர்நாற்றத்தின் மேல் எதிர்மறையாக ஏற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது இவ்வாறு எதிர்மறையாக உருவகத்தைப் பயன்படுத்தும் பொழுது மயக்கம் அதிகரிக்கின்றது. விடையின் மூலமாகப் உருவகப்படுத்தப்பட பொருளின் தன்மையும் செயலும் முரணாகத் தொடர்புப்படுத்திக் காட்டப் படுகின்றன. அப்பொழுதே கேட்பவர் உருவகம் எதிர்மறைத் தன்மையில் செயல்படுவதை உணர்ந்து தெளிவடைகின்றார்.

பாத்திமாமேரி, இ., 'விடுகதையின் அமைப்பும் வகைகளும்'
1987 நாட்டார் வழக்காற்றியல், பக் 47 - 70
நாட்டார் வழக்காற்றியல்
ஆய்வுக்கழகம்
பெருமாள்புரம், திருநெல்வேலி – 7

வரலாற்று நாவல்களில் வரலாற்றுப் பாத்திரங்கள்

சி. காந்தி

பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி

நாவலுக்கு முக்கியமான பல்வேறு கூறுகளில் பாத்திரப் படைப்பும் ஒன்றாகும். சிறப்பான பாத்திரப் படைப்பின் காரண மாகவே ஒரு நாவல் சிறந்த நாவலாக விளக்குவதைப் பார்க்க முடிகிறது. கதைக்குத் தகுந்த பாத்திரத்தை உருவாக்குவது போலவே பாத்திரத்திற்குத் தகுந்த கதையை வரலாற்று நாவல் களில் உருவாக்குவதையும் காண முடிகிறது.

வரலாற்று நாவல்களில் பாத்திரங்கள்

வரலாற்று நாவல்களில் இருவகையான பாத்திரப் படைப்புகள் இடம் பெறுகின்றன. வரலாற்றுப் பாத்திரங்கள், கற்பனைப் பாத்திரங்கள் என அவை அமையும். வரலாற்றுப் பாத்திரமானது நாவல்களில் தலைமைப் பாத்திரமாகவோ அல்லது துணைப் பாத்திரமாகவோ அமைதல் உண்டு. நாவலுக்கு எடுத்துக் கொள்ளும் வரலாற்றுப் பின்னணிக்கேற்ப வரலாற்றுப் பாத்திரங்கள் தலைமைப் பாத்திரமாகவோ அல்லது துணைப் பாத்திரமாகவோ அமையும். மேலும், நாவலில் இடம் பெறும் பாத்திரங்கள் அனைத்தும் கற்பனைப் பாத்திரங்களாக அமையும். பழங் காலத்தைப் பற்றிய நாவல்கள் வரலாற்று நாவல்கள் ஆகாது. ''வரலாற்று நாவல் என வழங்கப்பட வேண்டுமாயின் நாவல் மாந்தரில் குறைந்த அளவு ஒருவராவது வரலாற்று மாந்தராக இருக்க வேண்டும்''[1] என்று ஆவ்ரம் பெலிஷ்மென் கூறுகிறார். இதிலிருந்து வரலாற்று நாவலுக்கான வரலாற்றுப் பாத்திரத்தின் முக்கியத்துவத்தை உணரலாம்.

பாத்திரத் தேர்வு

சமூக நாவலுக்கான பாத்திரங்கள் நடப்பு வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்றால் வரலாற்று நாவலுக்கு இறந்த கால வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் எனக் கொள்ளலாம். இவ்விரு வகையான பாத்திரங்களுக்கு வேறு

1. (பூவண்ணன், கல்கியின் வரலாற்று நாவல், ப. 6)

பாடு ஒன்றைச் சுட்டலாம். சமூக நாவலாசிரியருக்குத் தான் தேர்ந்தெடுக்கின்ற பாத்திரத்தின் பெயரை விட பண்பே முக்கியமானது. வரலாற்று நாவலாசிரியருக்கோ தான் தேர்ந்தெடுக்கின்ற வரலாற்றுப் பாத்திரத்தின் பெயரோ முக்கியம்.

பாத்திரத்திப் படைப்பின் உத்திகள்

நாவலாசிரியர்கள் பாத்திரப் படைப்புகளைச் செம்மையாக உருவாக்குவதற்கு சில உத்திமுறைகளைக் கையாள்வதாக திறனாய்வாளர்கள் குறிப்பர். அவற்றில்.

1. புறத்தோற்றம்.
2. அசைவுகள், ஜாடைகள், நடந்தை முறை, பழக்கம்
3. மற்றவர்களோடு நடந்து கொள்ளும் முறை.
4. பேச்சு
5, தனக்குத்தானே நடந்து கொள்ளும் விதம்
6. ஏனைய பாத்திரங்கள் அதனோடு நடப்து கொள்ளும் விதம்
7, சுற்றுப்புறச் சூழ்நிலை
8. பாத்திரத்தின் கடந்த கால வாழ்வு
9. பாத்திரத்தின் பெயரமைதி

என்ற வகைப்பாடும் ஒன்றாகும்.

மேற்கண்டவரையறைகளை வரலாற்றுப் பாத்திரங்களுக்கும் எடுத்துக் கொள்ளலாம். இவ்விதத் தன்மைகளோடு படைக்கப் பட்டிருக்கும் சில வரலாற்றுப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு வரலாற்றிலிருந்து அவை எப்படி நாவலுக்கான பாத்திரங்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று இங்கு நோக்கப்படுகிறது.

பாத்திரங்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாவல்கள்

1. கல்கியின் சிவகாமியின் சபதம்
2. கோவி மணிசேகரனின் காஞ்சிக் கதிரவன்
3. ஜெகசிற்பியனின் பத்தினிக் கோட்டம்
4. சாண்டில்யனின் ராஜதிலகம்
5. நா. பார்த்தசாரதியின் இராணிமங்கம்மாள்

இந்நாவல்களில் ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் பாத்திரங்களில் பெயரை வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

சிவகாமியின் சபதத்தில் மகேத்திரவர்மன்
காஞ்சிக் கதிரவனில் மகேந்திரவர்வன்
பத்தினிக் கோட்டத்தில் பரமேசுவர்மன்,
விக்கிரமாதித்தன்
ராஜ திலகத்தில் பரமேசுவரவர்மன், விக்கிரமாதித்நன்.
இராணிமங்கம்மாளில் இராணிமங்கம்மாள்.

மேற்கண்ட பாத்திர வகைபாடுகள் ஒவ்வொரு நாவலாகிரியரும் வரலாற்றுப் பாத்திரத்தை எப்படி படைத்திருக்கிறார்கள் என்ற வகையிலும் ஒரே பாத்திரத்தை வெவ்வெறு ஆசிரியர்கள் எந்கதந்த விதத்தில் படைத்திருக்கிறார்கள் என்று பார்க்கும் வகையிலும் அமைந்திருக்கின்றன.

பாத்திரப் பண்புகள், சிவகாமியின் சபதம்

மேற்கண்ட ஐந்து நாவல்களில் நான்கு வரலாற்றுப் பாத்திரங்களும் பலவிதத் தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. சிவகாமியின் சபதத்தில் ஒரு வலுவான வரலாற்று அடிப்படை இருக்கிறது. மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், பரஞ்சோதி, புலிகேசி போன்ற முக்கியமான வரலாற்றுப் பாத்திரங்கள் நாவலில் இடம் பெற்றிருக்கின்றனர். இவர்களுக்கிடையிலான உறவுகளும் தொடர்புகளும் வரலாற்றில் இடம்பெற்றிருந்தபடியே நாவலிலும் கல்கி படைத்திருக்கிறார் புலிகேசியின், காஞ்சி மீதான படையெடுப்பு. நரசிம்மவர்மனின் வாதாபியைத் தீக்கிறையாக்குதல், மகேந்திரவர்மனின் கலை ஈடுபாடு போன்றவை வரலாற்றில் இருப்பது போலவே நாவலிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. ''போத்தரசர் அவனிசிம்உறன், லளிதாங்குரன் பகாப்பிடுகு, சத்துருமல்லன், குணபரன், விசித்திரசிந்தன், சேந்ததகாரி, சித்திரகாரப்புலி, மந்தவிலாஸன், ஸங்கீர்ண ஜாதிஅவனிபாஜன்' என்று வரலாறு மகேந்திரவர்மருக்கு சிறப்புப் பெயர்களைத் தருகிறது. இதனால் மகேந்திரனை அனைத்துக் கலைகளிலும் வல்லவனாக, குணநலன்கள் மிக்கவனாக நாவலில் கல்கி படைத்திருப்பது மிகையாகத் தோன்றவில்லை. அதேவேளையில் குணங்கள் பல பெற்ற மகேந்திரனிடத்தில் படைகளைப் பெருக்கத்

தவறியதும் புலிகேசியிடம் தற்பெருமை பேசி அவனைச் சினமுறச் செய்தலும் ஆகிய செயல்களைக் குறைபாடுகளாகக் காட்டுகிறார் கல்கி. குணமும் குறையும் பெற்ற மகேந்திரவர்மன் கல்கியால் ஒரு முழுமையான வரலாற்றுப் பாத்திரமாக உருவாக்கப்பட்டிருக் கிறான் என்று கூறலாம்.

காஞ்சிக் கதிரவன்

கோவி. மணிசேகரனின் காஞ்சிக் கதிரவன் மகேந்திரவர் மனின் இளமைக்காலத்தை மையமாகக் கொண்டிருக்கிறது. தந்தை சிம்மவிஷ்ணு ஆசிரியர் ருத்ராச்சாரியார் புலிகேசி போன்ற வரலாற்றுப் பாத்திரங்கள் இடம் பெற்றிருப்பினும் அவர் சம்பந்தப்படுகின்ற நிகழ்ச்சிகள் கற்பனை நிகழ்ச்சியாகவே அமைந்திருக்கின்றன. சித்திரகாரப்புலி, ஸங்கீர்ணஜாதி, போன்ற சிறப்புப் பெயர்கள் மூலமும் அவனது பண்புகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. தமிழ்ப்பற்று, சான்றோரை மதித்தல் போன்ற குணங்கள் அவன் மேல் புனையப்பட்டிருக்கின்றன. ஆன போதிலும் அவனுடைய தோற்ற விவரிப்போ அவனது குணங் களை வெளிப்படுத்துகின்ற எண்ணங்களோ, பிறர் அவன்மீது காரணத்தோடு கூறுகின்ற செய்திகளோ, ஆசிரியரால் காட்டப் படவில்லையாதலால் அவனைப் பற்றி ஒரு முழு குணச்சித்திரம் கிடைக்காமல் போய்விடுகிறது.

பந்திவிக் கோட்டம், பரமேசுவரவர்மன்

இந்நாவலில் பரமேசுவரவர்மன் மன்னனாக இருந்த போதிலும் திருமணம் செய்து கொள்ளப்படாதனாகக் காட்டப் பட்டிருக்கிறான். கற்பனைப் பாத்திரமாக உத்தமசீலி, என்பவளை அவன் காதலிக்க அது நிறைவேறாமல் போய்விடுகிறது. சிவ பக்தனாகவும், சித்திரக்கலை தெரிந்தவனாகவும், வரலாற்றில் உள்ளபடியே படைக்கப்பட்டிருக்கிறான். விக்கிரமாதித்தன் காஞ் சியைக் கைப்பற்றி பரமேசுரவர்மன் மறைந்து வாழ்கிறான். படைதிரட்டி பெருவளநல்லூரில் அவன் நடத்திய போரில் விக்கிரமாதித்தனை வென்றுவிடுகிறான். நாவலில் இவனை மையமாகக் கொண்டு நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருப்பினும் நிகழ்ச் சிகளுக்குப் பின்னிருந்தே இயங்குகிறான். ஆட்சிப் பொறுப்பைவிட சைவப்பற்று அவனுக்கு அதிகம் இருக்கிறது. தமிழகத்தின்

முதற்கற்கோயிலை அவனது முயற்சியால் கட்டிமுடிக்கப்பட கற்பனைப் பாத்திரமான உத்தமசீலி சமணமதத்தைப் பரப்பும் பொருட்டுப் பல்லவ நாட்டிற்கு வந்து பரமேசுவரவர்மனைக் காதலித்து காதலுக்கு மதம் தடையாய் நிற்க அந்தக் கற்கோயிலுக் குள்நுழைந்து உண்ணா நோன்பிருந்து பரமேசுவரனுக்கு மாலை யிட்டுமடிகிறாள். அதனால் அக்கோயில் பத்தினிக் கோட்டமாகச் சித்தரிக்கப்படுகிறது.

விக்கிரமாதித்தன்

காஞ்சியைக் கைப்பற்றி தனது ஆட்சி நிலைக்க சமணத்தைப் பரப்ப முயல்கிறான் விக்கிரமாதித்தன். வரிவிதிப்புக் கொடுமையாக இருக்க பல்லவ நாட்டு மக்கள் பலவகையிலும் துன்புறுகின்றனர். ஆனால் விக்கிரமாதித்தனின் செயல்கள் கூறப்படுகிறதே தவிர செயல்படுவோனாக நாவலில் காட்டப்படவில்லை.

ராஜதிலகம், பரமேசுவரவர்மன்

வயது முதிர்ந்தவனாகவும், இராசசிம்மன் இளவரசனாகவும் இருக்கின்றனர். கலைகளைப் பேணுவதிலும் சைவப்பற்றிலும் சிறந்துவிளங்குவதோடு பகைவனை மதிக்கும் பெருந்தன்மையையும் கொண்டிருக்கிறான். பரமேசுவரன் காஞ்சி கைலாசநாதர் கோயிலை ராசசிம்மனைக் கொண்டு நிர்மாணிக்கின்றான்.

விக்கிரமாதித்தன்

நாவலில் காட்டப்படுகின்ற போரில் பகைவன் போர்-நெறி மீறியவனாகவும், பிறநாட்டுத் தூதுவனுக்கு தீங்கு செய்பவனாகவும் காட்டப்படுவது வழக்கம். மேலும் புண்பட்ட வீரர்களைத் தர்க்காதிருத்தல் போன்ற நியதிகளை மீறிவிடுவான். ஆனால், இந்நாவலில் ஒரு தர்மயுத்தத்தைச் சித்தரிக்கிறார் சாண்டில்யன். சாளுக்கிய விக்கிரமாதித்தனோ காஞ்சிப் பரமேசுரவர்மனோ நேரிடையான எதிரிகள் அல்லர். இருவருக்கும் அவர்களின் முன்னோர்களால் பகைமை உணர்வு ஊட்டப்பட்டிருக்கிறது. இங்கே போர் என்பதற்கு மாற்றான் மேல் கொண்ட வெறுப்போ, பேரரசு அதிகரிப்பு ஆசையோ, அடுத்தவன் திறமையில் மேல் கொண்ட காழ்போ அல்லது வேறு எந்தவித மான பகைமை உணர்வோ காரணமாக இல்லை.

அகிம்சை - ஒரு மீள்பார்வை

சி. அயோத்தி

ஆயிரவைசியர் கல்லூரி, மதுரை.

அகிம்சை - சொற்பொருள் விளக்கம்

எந்த உயிர்க்கும் எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் தீங்கு செய்யாதிருப்பதே அகிம்சை. இதனைத்தான் சமணசமயம் தம் அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டுள்ளது. அகிம்சை என்பது எதிரியிடம் பணிந்து நடத்தல் மட்டுமன்று 1. நீண்ட காலப் போராட்டத்துக்குத் தன்னை தயார் செய்து கொள்வது. 2. சமுதாயத்தில் பற்று 3. முன்கூட்டியே தன் திட்டங்களை எதிரிக்குத் தெரிவித்தல். 4. ஆடை, உடல் ஆகியவற்றின் தூய்மையில் காட்டும் அக்கறை 5. ஒற்றுமையுணர்வு 6. ஆர்வம் ஏற்படுதல் 7. கோபம், பயம் வெறுப்பு ஆகிய மூன்றையும் நீக்கிட முயல்தல் 8. மிகுந்த தன்னடக்கமும் அதற்குரிய பயிற்சிகளும் கொள்ளுதல். மேற்கண்ட கொள்கைகளைக் கொண்ட அகிம்சை நெறிக்கு உரிய விளக்கத்தினை அ. அப்துல்ரசாக் என்னும் சிந்தனையாளரிடமிருந்து பெற முடிகின்றது.

அகிம்சை நெறியினைத் தம் வாழ்வில் கடைப்பிடித்து வெற்றி கண்டவர் யார் என்று கேட்டால் நமக்கெல்லாம் உடனே ஒருமித்த விடை ஒன்றுதான் புலப்படும். அவர்தாம் அண்ணல் காந்தியடிகள். அம்மகானின் வாழ்க்கைச் சரிதம் உணர்த்தும் பல நூல்களை நாம் படித்திருக்கின்றோம். அவற்றுள் கவிதை நடையில் காப்பிய வடிவில் அளவில் பெரியதாக அண்ணலின் வாழ்வியல் முழுவதும் தெரிவிக்கக் கூடிய வகையில் 'மனித தெய்வம் காந்திகாதை' என்னும் பெயரில் ஒரு நூல் இற்றை இலக்கிய உலகில் வலம் வந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். நூலாசிரியர் அருட்கவி

அரங்க. சீனிவாசன் காந்தியடிகள் மேற்கொண்ட அகிம்சை நெறியின் விதைகளைத் தம் நூலில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் விதைத்துச் சென்றுள்ளார். அவ்விதை முளை விட்டுக் காட்சியளிக்கும் ஒருசில செய்திகளை மட்டும் இக்கட்டுரை வாயிலாக மீள்பார்வை செய்வோம்.

தந்தையிடம் கற்ற அகிம்சைப் பாடம்

அண்ணல் படிக்கும் பருவத்தில் நண்பர்களோடு சேர்ந்து ஊன் உண்ணுதல், பொய் கூறுதல், புகை பிடித்தல், திருடுதல், பரத்தையரிடம் தொடர்பு வைத்தல் போன்ற பல தவறுகளைச் செய்கின்றார். ஆனால் அண்ணலின் மனச்சாட்சி அத்தவறுகளை உணரச் செய்கின்றது. தந்தையிடம் தெரிவித்து மன்னிப்புக் கோரலாம் என்றால் நேரிடையாகத் தெரிவித்தலுக்கு அண்ணலுக்குத் துணிவு வரவில்லை. இறுதியில் தாம் செய்த தவறுகளை ஒரு கடிதம் வாயிலாகத் தந்தைக்குத் தெரிவிக்கின்றார். ஆனால் தந்தையிடமிருந்து எந்தவித எதிர் விளைவும் இல்லை. தொடர்ந்து தம்மேல் கொண்ட அன்பில் எந்தவிதக் குறைவும் ஏற்படவில்லை. அதுகண்டு மருண்ட அண்ணல் அகிம்சையின் செயல்வடிவை முதன்முதல் உணரத் தொடங்குகின்றார்.

''சென்று தொட்டவை அனைத்தையும்
தூய்துறச் செய்து தன்வயம் ஆக்கும்
குன்று போல்வதோர் அகிம்சை என்று
அறிந்து தம் வாழ்வில் மேற்கொண்டாரே''

என்ற நூலசிரியரின் கூற்று இதனை மெய்ப்பிக்க வைக்கின்றது.

அகிம்சை அடித்தலமிட்டுக் காந்தியடிகள் கையாண்ட போராட்டங்கள்

தென்னாப்பிரிக்காவில் நண்பர் அப்துல்லா துணையுடன் நீதிமன்ற நடைமுறைகளைக் காணச் செல்கின்றார், காந்தியடிகள். தலைப்பாகை அணிந்து சென்ற அண்ணலைப் பார்த்து நீதிமன்ற நடுவர் அத்தலைப்பாகையினைத் தலையிலிருந்து எடுத்துவிடச் சொல்கின்றார். அன்றுதான் காந்தியடிகளுக்குப் போராட்ட எண்ணமே அரும்பத் தொடங்கியது. இந்நிலைமையை மாற்றிட

யார் எதிர்த்திடினும் எத்துன்பம் வரினும் என் உள்ள உறுதியில் இருந்து தளரவே மாட்டேன். மாற்றியே தீருவேன் என்று உறுதி பூணுகின்றார் காந்தியடிகள்.

நேட்டாலின் தலைநகரில் அண்ணல் புகைவண்டியில் பயணம் செய்கின்றார். முதல்வகுப்பில் பயணம் செய்ய அனுமதிச் சீட்டு வாங்கியிருந்தும் காவலரால் அனுமதி மறுக்கப் படுகின்றது. இச்செயலை எண்ணி வேதனைப்பட்ட அடிகள் இந்நிலைமையைப் பொறுமையுடன் செயல்பட்டு மாற்ற வேண்டும் என்றும் முடிவு செய்கின்றார்.

சார்லக நகரில் குதிரை வண்டியின் உட்புறம் அமர்வதற்கு வண்டிக்காரன் அனுமதிக்கவில்லை. வண்டியோட்டியின் அருகில்தான் அமர வேண்டும் என்கின்றான். காந்தியடிகள் மறுக்க உடனே கன்னத்தில் அறைந்து விடுகின்றான். இந்நிலையிலும் அடிகள் எதிர்த்துத் தாக்காமல் தாம் மேற் கொண்டுள்ள அகிம்சை நெறியின் வழியிலே ஒரு நீண்ட காலப் போராட்டத்துக்குத் தன்னைத்தயார் செய்து கொள்கின்றார்.

தென்னாப்பிரிக்கா நகரில் நண்பர் கோட்சுவுடன் சேர்ந்து மாலை நேரத்தில் சிறிது நேரம் வெளியே உலவி விட்டு வரும் வழக்கத்தினைக் கொண்டிருந்தார். ஒரு நாள் தம் இருப்பிடத்திற்குச் சிறிது நேரம் கழித்துத் திரும்புகின்றார். அதற்கு முந்தைய நாட்களில் காந்தியடிகளைப் பற்றித் தெரிந்திருந்த வாயிற்காவலன் காலந்தாழ்த்தி வந்த இந்நாளில் அண்ணலை உள்ளே அனுமதிக்க மறுத்ததோடு கீழே தள்ளி எட்டி உதைத்து விடுகின்றான். நீதிமன்றத்தில் முறையிட்டுக் காவலனுக்குரிய தண்டனையைப் பெற்றுத் தரமுடியும் என்ற நிலையிலும் நம் அண்ணல் 'எய்தவனிருக்க அம்பை நோவானேன்' என்ற பார்வையில் அக்காவலனை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுகின்றார். அதுகண்ட காவலன் மனந்திருந்தி அண்ணலிடம் மன்னிப்புக் கேட்கின்றான்.

இவ்வாறு காந்தியடிகள் தம் போராட்ட வாழ்வின் ஆரம்ப காலத்தில் மூர்க்கமாக எதிர்த்துப் போராட வேண்டிய பல நிகழ்வுகளை அகிம்சை நெறிவழிச் சென்று வெற்றியும் கண்டுள்ளார்.

அகிம்சையின் முதல் வெற்றி

போயர்களுடன் போரிட்டு இந்திய வீரர்கள் வெற்றி கொள்கின்றனர். அதற்குப் பரிசாக இந்தியர்களுக்கு எந்தவித உதவிகளும் சலுகைகளும் ஆங்கிலேயர்களால் தரப்படவில்லை. இதுகண்ட மற்ற தலைவர்கள் காந்தியடிகளிடம் வன்முறைகள் வாயிலாகத்தான் நமக்குரிய சலுகைகளைப் பெறமுடியும் என்று வாதிடுகின்றனர். அத்தலைவர்களைப் பார்த்து அண்ணல்,

''வன்முறைக் கேளதிர் வன்முறை .காட்டினால்
நன்முறை வெற்றியை நாம்பெற இயலுமோ?
புன்முறைக் கொடுமையைப் பொறுமையோடு அகிம்சையாம்
இன்முறைக் கருவியால் எதிர்ப்பது புலமையே''

என்றுரைத்து அகிம்சையின் வெற்றியை உணரவைக்கின்றார். அதன்படி அவர்கள் வன்முறைகள் எதுவும் செய்யாமலேயே அமைதியாகப் போராடுகின்றனர். அதுகண்ட காவலர்கள் அனைவரும் இவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்று மயங்குகின்றனர். காந்தியடிகளுக்குக் கிடைத்த இம்முதல் வெற்றி மேன்மேலும் தொடர்ந்து அகிம்சைப் பாதையிலேயே போராடத் தூண்டுகின்றது.

ஜாலியன் வாலாபாக்கில் அகிம்சை நெறி :

பஞ்சாப் அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய தலைவர்களின் பேச்சினை மக்களனைவரும் காந்தியடிகள் ஊட்டிய அகிம்சை நெறி நின்று அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அக்கூட்டம் நடந்த மைதானமானது உள்ளே செல்வதற்கும் வெளியே வருவதற்கும் ஒருவழிப் பாதையினை மட்டும் உடையதாக இருந்தது. ஜெனரல் டயர் என்னும் ஆங்கிலேயனின் ஆணைக்குட்பட்ட வீரர்கள் அந்த ஒருவழிப் பாதையின்முன் இராணுவத்தை நிறுத்தி அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த மக்களைக் குருவிகளைச் சுட்டுத் தள்ளுவதைப் போலச் சுட்டுத் தள்ளினர். எங்கு பார்த்தாலும் பிணக்குவியல். மைதானச்சுவர் முழுவதும் இரத்தக்கறை. இப்படியொரு வன்முறைச் சம்பவம் இற்றைநாளில் நடைபெற்றிருந்தால் நம்நாடு இந்நேரம் அழிந்து சாப்பலாகியிருக்கும். ஆனால் அற்றை நாளில் மகாத்மா

காட்டிய அகிம்சை நெறி, மக்களை மேன்மேலும் பக்குவப் படுத்தித் தொடர்ந்து அமைதி வழியிலேயே போராடத் தூண்டியது.

''கொடிய வன்கொலை புரிந்த வன்பரிசில்
கொண்ட இக்கொடிய செய்தியால்
கடிய வன்முறை விளைந்திடாத வகை
காத்தல் தம்கடமை என்னவே
அடிகள் பாஞ்சையில் விரைந்தடைந்தனர்
அகிம்சையின் தகைமை கூறியே
நெடிய வெஞ்சினம் அடங்கவே அமைதி
நிலைநிறுத்தினர் தம் வாய்மையால்''

என்ற இப்பாடல் மேற்கண்ட நிகழ்வுக்குச் சான்றாகின்றது.

அண்ணல் இதற்குப் பிறகு ஒத்துழையாமை இயக்கம், அந்நியத்துணி எரித்தல், சட்டமறுப்பு இயக்கம், உண்ணா நோன்பு போன்ற பல போராட்டங்களை அந்நியர்களுக்கு எதிராக நடத்துகின்றார். அனைத்தையும் அகிம்சை நெறி நின்றே செயல் படுத்துகின்றார். இப்போராட்டங்களினால் இந்தியமக்கள் சொல்லொனாத் துயரத்திற்கு ஆளாகின்றனர். ஆங்கிலேயரின் எதிர்ப்புக்குப் பரிகாரமாக எந்தவித எதிர்த் தாக்குதலும் செய்யவில்லை. பல்லோர் சிறையிலடைக்கப்பட்டுப் பலவிதமான சித்திரவதைக்கு உள்ளாகின்றனர். அப்படியிருந்தும் மக்கள் அனைவரும் அண்ணலின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அகிம்சை நெறி காத்து இந்திய நாட்டின் சுதந்திரத்தினைப் பெற்றுத் தந்துள்ளனர்.

முடிவுரை

''சுருங்கக் கூறின் திரும்பத் திரும்பச் செயல்படுத்தப்படும் மென்மைத் தூண்டுதல் எதிரியினிடம் நல் குணங்களை வளர்க் கின்றது. அகிம்சாவாதியினிடம் உள்ள குறைகளையும் நீக்குகின்றது. அறிவுடன் கூடிய அன்பும் இணக்கமும் வெறுப்பைக் குறைக்கின்றது. சத்தியத்தில் பற்றுக் கொள்வதாவ் நம்பிக்கையும் தூண்டுதலும் தூண்டுதலால் மனமாற்றமும் மனமாற்றத்தால் வெற்றியும் கிடைக்கின்றது''. இச்சிந்தனை காந்தியடிகள் கையாண்ட அறவழிப் போராட்டத்தால் பெற்ற வெற்றியின் விளைவை எதிரொலிக்கும் கருத்தாக அமைந்துள்துள்ளது எனலாம்.

அண்ணாவின் புதினங்களில் திருமணம் குறித்த சிந்தனைகள்

சி. வாசுகி

புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

அறிஞர் அண்ணா என்று தமிழ்நாட்டு மக்களால் அழைக்கப் பட்ட சி. என். அண்ணாதுரை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பல புதிய சிந்தனைகளுக்குக் களம் அமைத்துள்ளார். புதினம், சிறுகதை, நாடகம், மடல்கள், கட்டுரை போன்றவற்றில் தம் எழுத்தாற்றலைக் கொண்டுப் புதிய வீச்சினை உருவாக்கியுள்ளார். வாழ்க்கைக்கு உதவாத வரலாறுகளையும் மனிதகுல வளர்ச்சிக்குப் பயன்படாத இதிகாச, புராணக் கதைகளையும் மேன்மேலும் சிந்திக்க வொட்டாமல் தமிழ்ச் சமுதாயம் புத்துயிர் பெறுவதற்கான சிந்தனைகளைத் தம் படைப்புகளில் கையாண்டுள்ளார். அவரது படைப்புகளுள் ஒன்றான புதினங்களின் வழி தமிழர் வாழ்வில் காலங்காலமாக நிகழ்ந்து வந்த திருமண முறைகளை மாற்றி அமைக்கின்றார். தமிழர்களிடையே ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கக் கூடியதாகவும் சாதிப் பிரிவினைக்கு உரமூட்டக் கூடியதாகவும் திருமண நிகழ்வுகளைக் கண்டித்துப் பல சீர்த்திருத்த முறைகளை அறிமுகப் படுத்துகின்றார்.

தந்தை பெரியாரின் பாசறையில் பயின்ற அண்ணா பெரியாரின் எண்ணங்களை இலக்கியங்களின் வழி வெளிக்கொணர் கின்றார். அக்காலத் திருமண முறைகள் தமிழர்களை இழிந்த நிலைக்கு ஆளாக்குவதை உணர்ந்த அண்ணா அதற்கு மாற்றுக் கருத்தாகக் கலப்புத் திருமணங்களையும் சீர்த்திருத்தத் திருமணங் களையும் தம் கதை மாந்தர்கள் மேற்கொள்வதாகக் காட்சியமைக் கின்றார். பொருந்தாமணம் என்பது பெண்ணடிமை நிலைமை யினையும் விதவைக் கொடுமையினையும் உருவாக்குவதற்குத் துணை நிற்கின்றது என்கின்றார். ஆகவே இம்மூவகைத் திருமண முறைகளையும் அண்ணாவின் பார்வையில் இக்கட்டுரை விளக்க முயல்கின்றது.

சாதியொழிப்பும் சாதிமறுப்புமணமும்

சாதிவேறுபாடு தமிழின மக்களை இழிந்த நிலைக்கு ஆளாக்குகின்றது. மனிதப் பிறவியில் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று வேறுபாடு காண்பதால் பல கொடுமைகள் நிகழ்கின்றன. அதனை மறந்து 'மனிதர்கள் அனைவரும் ஒரே இனம்' என்றுணர வேண்டும் என்பதற்காக அண்ணா தனது புதினங்களில் சாதியொழிப்புக் கருத்துக்களைக் கூறுகின்றார். சாதியொழிய வேண்டுமெனில் தமிழர்களிடையே கலப்புத்திருமணங்கள் நடைபெறுதல் வேண்டும். இங்கொன்றும் அங்குகொன்றும் என்றில்லாமல் பரவலாக நடைபெறுதல் வேண்டும் என்பதற்காகத் தம் புதினங்களில் கலப்பு மணம் குறித்த காட்சிகளை அமைக்கின்றார்.

சாதிக்கட்டுப்பாடும் சாதிப்பிரிவினையும் ஒழிய வேண்டும் எனில் கலப்புத்திருமணமே அதற்குச் சரியான மாற்றுத்திட்டமாகும் என்பதே அண்ணாவின் அறிவுரை. பொருளாதார ஏற்றத்தாழ்வும் சாதிவெறியும் சமூகத்தின் வெறித்தனமும் கலப்பு மணத்திற்கு இடையூறாக இருக்க முடியாதென்பதைப் பார்வதி — குமார் திருமணத்தின் மூலமாகப் 'பார்வதி பி.ஏ' என்ற புதின வழிக் காட்டுகின்றார். மேலும் 'இரங்கோன் ராதை' என்ற புதினத்தில் நாகலிங்கம் - இராதாவின் திருமணம் கலப்புத் திருமணமாகவே காட்டப்படுகின்றது. இத்தகைய திருமணங்கள் போன்ற சீர்த் திருத்தங்கள் நிகழும் பொழுது அதற்குப் பல்வேறு எதிர்ப்புகளும் தோன்றத்தான் செய்யும். இதையெல்லாம் முறியடித்துத் தமிழ் இனம் முன்னேறவேண்டும். இத்தகைய எதிர்ப்பினைக் 'குமரிக் கோட்டம்' என்ற புதினத்தில் காட்டுகின்றார். செட்டியார் - குமரி திருமணத்தின் போது,

> ''மறையூர் வைதீகர்கள் பதைபதைத்தனர். வைசியகுலத் திலகர், பக்திமான், செட்டியார், உப்பிரஜாதிப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதா? அடுக்குமா இந்த அனாச்சாரம்? அது நமது திவ்ய ஷேத்திரத்தில் நடப்பதா? என்று கூக்குரலிடுகின்றனர். செட்டியாரை சபித்தனர். ஊரிலே இந்தக் கல்யாணம் நடைபெற்றால் பெரிய கலகம் நடக்கும்.''

என்று கூறி எதிர்த்து நிற்கும் செயலைக் காட்டுகின்றார். முடிவில் இதையெல்லாம் எதிர்த்துத்தான் இத்திருமணம் நிகழ்ந்து முடிந்தது என்கின்றார்.

தமிழினம் முன்னேற வேண்டுமெனில் கலப்புத் திருமணம் நிகழ்ந்து தான் ஆக வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு புதினத்திலும் கலப்புத் திருமணங்களை வலியுறுத்தும் வண்ணம் பாத்திர உரையாடலை அமைக்கின்றார்.

சீர்திருத்தத் திருமணம்

ஒருவருக்கொருவர் மனம் ஒத்த நிலையில் களவொழுக்கம் மேற்கொண்டு பிறகு பெற்றோர்களின் அனுமதியுடனோ, அனுமதி யின்றியோ திருமணங்கள் நடைபெற்றன என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. மனம் ஒன்றுபட்ட பிறகே மணம் என்ற சடங்கு ஏற்பட்டது. சங்க காலத்தில் பெரியோர்களின் முன்னிலையிலேயே திருமணம் நடைபெற்றது. ஆனால் பிறகு ஏற்பட்ட அந்நியக் கலாச்சார விளைவினால் ஆரியர்களின் வரவால் பின்னாளில் புரோகிதரை உயர்ந்தோராக வைத்து அவர் முன்னிலையில் வேற்று மொழியில் மந்திரம் சொல்லித் திருமணம் நிகழ்த்தும் வழக்கம் உண்டாயிற்று. இம்முறைமையின் பின் விளைவை உணர்த்த வேண்டும் என்பதற்காகக் ''கபோதி புரக் காதல்'' என்ற புதினத்தில் ''வாத்தியங்கள் மறுபடி கோஷித்தன. புரோகிதர் கதறலானார்'' என்று கூறிப் புரோகிதர் களின் தலைமையில் நடைபெறும் திருமணத்தைக் கேலி செய்கின்றார். அதற்கு மாற்றாகக், குமரிக்கோட்டம் என்ற புதினத்தில் 'பழனி - நாகவல்லி' திருமணத்தைச் சீர்திருத்த முறையில் நடத்துகின்றார். இவர்களது திருமணத்தை 'வாழ்க்கை ஒப்பந்தம்' என்றுரைத்து அதற்கான செலவு பத்தே ரூபாய் என்றும் கூறுகின்றார். அந்த நாட்டு மாவட்ட நீதிபதி இல் வாழ்க்கை ஒப்பந்தத்திற்குத் தலைமை தாங்குவதாகக் கூறி இப்புதினத்தில் எளிய முறையில் நடைபெறும் திருமணத்தை தமிழின மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார். இத் திருமணம் எளிமையானது, செலவு குறைவானது, இன இழிவற்றது என்பதனைக் குறிப்பிடுகின்றார்.

பொருந்தா மணம்

பொருந்தா மணத்தினால் பெண்கள் இளம் வயதிலேயே விதவையாகி விடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. அதுவே பின்னர் ஒழுக்கக் கேட்டிற்கும் காரணமாக அமைகின்றது என்கின்றார்.

கபோதிபுரக் காதல் என்ற புதினத்தில் அறுபது வயது நிறைந்த மாரியப்பப் பிள்ளை பதினாறு வயது நிறைந்த சாரதாவை மணந்து கொள்கின்றார். 'குமாஸ்தாவின் பெண்' என்ற புதினத்தில் பதினாறு வயதே நிரம்பிய காந்தா ஐம்பது வயதைத் தாண்டிய கணபதி அய்யரை மணந்து கொள்கின்றாள். குமரிக் கோட்டத்தில் வயதான குழந்தைவேலுச் செட்டியாருக்கும் இளவயதுக் குமரிக்கும் திருமணம் நடைபெறுகின்றது. இரங்கோன் ராதாவில் மந்திரவாதியின் மனைவி துளசிக்கு இளவயது என்று கூறப்பட்டுள்ளது.

தொகுப்புரை

அண்ணா புதினங்கள் எழுதத் தொடங்கிய காலத்தில் தமிழர்களிடையே நிலவியிருந்த திருமண முறைகளை மாற்றி அமைக்க முயல்கின்றார். இம்மூவகைத் திருமணங்கள் தொடர்பான கருத்துக்களை எப்படியாவது தம் படைப்பில் புகுத்தி விடுகின்றார். மானுடத்தில் சரிபாதியாக அமையும் பெண்ணினத்தை அடிமை கொள்ளும் பாங்கில் செல்வந்தர்கள் மத்தியில் நிலவியிருந்த பொருந்தா மணக் கொடுமையினை அறவே ஒழிக்கவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். இத்திருமணத்தால் அன்றைய காலத்தில் பெரும்பான்மையான பெண்கள் இளவயதிலேயே கணவனை இழந்து நாட்டில் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உரிய ஒரு சடப்பொருள்களாகி விடுகின்ற கொடுமைகள் உருவாவதைக் காட்டுகின்றார். ஒட்டு மொத்தமாக இத்திருமணம் ஒழுக்கக் கேட்டினை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு சதிச் செயல்களாகக் கூட இருக்கலாம் என்ற ஐயமும் நமக்கு ஏற்படுகின்றது.

கலப்புத் திருமணம் என்பது சாதியொழிப்புக்குத் தரப்பட்ட சரியான ஒரு மாற்று மருந்தாகும். இத்திருமணத்தால் நம் சமுதாயம் ஒரு முற்போக்குச் சிந்தனையுடையதாக உருவாக

வாய்ப்புண்டு என்ற நிலையில்தான் அண்ணா அதிகமாகக் கலப்பு மணத்தை வலியுறுத்திச் சொல்கின்றார். இனப் பகையை மறப்பதற்குக் கலப்பு மணம் உதவி செய்வது போல இன இழிவினை மாற்றுவதற்குச் சீர்திருத்தத் திருமணம் உதவும் என்று நம்புகின்றார். நம்மில் ஒருவரையொருவர் உயர்வு தாழ்வு பாராட்டிச் சண்டையிட்டு மண்டையுடைந்து கொண்டிருக்கும் வேளையில் நம் அனைவருக்கும் உயர்ந்தோனாக நம்மில் எதிலும் சேராத ஒருவனை வைத்துத் திருமணத்தை நிகழ்த்துதல் மிகப் பெரிய கொடுமை என்றும் சாடுகின்றார். அதன் விளைவாகத் தான் முதலமைச்சராக அவர் இருந்த காலத்தில் புரோகிதரற்ற சீர்திருத்தத் திருமணத்தைப் பதிவுத்திருமணமாக மாற்றியமைத்து அதற்கொரு சட்டப் பாதுகாப்பும் செய்து கொடுத்து விட்டுச் சென்றுள்ளார். இலக்கியப்பணியோடு நின்றுவிடாமல் தான் சொன்னதைச் செயல் வடிவம் கொடுக்கும் சிந்தனைத் திறமும் கொண்ட அண்ணாவின் தொண்டு அளவிடற்கரியதாகி அமைந்து விட்டதில் வியப்பேதுமில்லை.

புறத் தகவல் தொடர்பும் சமுதாயமும்

பெ. சிவசுப்ரமணியன்

தேசிய மாலை கல்லூரி, திருச்சிராப்பள்ளி

மனிதனிடத்தில் ஏற்படுகின்ற உள்மனத்தொடர்பு அல்லது அகத் தொடர்பு, அதன் விளைவால் பெறப்படும் செயல், ஆகிய வற்றுக்கு அடிப்படையாக அமைவது அடிக்கருவாகும். செய்தி களின் பரிமாற்றம் காலநிலைக் கேற்பவும், பொருளமைவுக் கேற் பவும், சூழலுக்கேற்பவும் வேறுபட்டு நடைபெறுகின்றது. சில செய்திகளை, பலர் முன்னிலையில் மறைமுகமாக தெரிவிக்க வேண்டுமெனில், கையசைவு மற்றும் கண்ணசைகளின் வழி சொல்லில்லா முறையில் (Non-Verbal Communication)

கையி னாற்சொலக் கண்களிற் கேட்டிடும்
மெய் கொள் சிநதையின் மூங்கையு மாயினேன்.

என்ற வரிகள் மூலமாகச் சைகையால் செய்திப் பரவலை அறிய முடிகின்றது. பல நேரங்களில் தகவலைச் சைகை மூலம் தெரி வித்தால் தகவல் சென்றடையாது. எனவே, இக்குறைபாட்டை நீக்க சொல்முறைத் (Verbal Communication) தகவல் தொடர்புப் பயன்படுத்தப்படுகின்றது. இத்தொடர்பு முறையின் பங்கு, புறத்தகவல் தொடர்பில் மிகுதியாக இடம் பெறுகின்றது. எனவே, இக்கட்டுரை புறத்தகவல் தொடர்பைச் சமுதாயம் எப்படி பயன்படுத்திக் கொள்கின்றது என்பதை ஆராய்கின்றது.

மனிதன் புறத்தகவல் தொடர்பைத் தேவையான நேரங் களில் மட்டுமே மேற்கொள்கின்றான். இத்தொடர்பு நிகழாவிடில் அவனுடைய இயல்பு வாழ்க்கைப் பாதிக்கப்படும். இத்தொடர்பு நிகழாவிடில் அவனுடைய இயல்பு வாழ்க்கைப் பாதிக்கப்படும். இவ்வாறு நேரிடையாகப் புறத்தகவல் தொடர்பு நிகழ்ந்தால் தகவல் எவ்விதத் தடைகளுமின்றி (Barriers) நேரடியாகச் சென்று அடையும். இம்முறைத் தகவல் தொடர்பு நேரிடைத் தகவல் தொடர்பு (Face to-Face Communication) எனலாம். இம்முறையே சமுதாயத்தில் அதிகமாக நடைபெறுவதை அறிய லாம். இந்நிலையையே இருவரிடைத் தகவல் தொடர்பு

(Interpersonal Communiaction) என்றும் கூறலாம். மேற்கூறிய நிலைகள் சாதன மின்றித் தகவல் தொடர்புக் கொள்ளும் (With out Media Communication) முறை எனக் கொள்ளப் படுகின்றது.

மனிதனின் புறத் தகவலுக்கேற்றபடி சாதனத்தகவல் தொடர்பு (Meida Communication) முறை மாறுபாடு அடைகின்றது. இம்முறையில் செய்தித் தொடர்பாளர் (Communicator) ஒருவராகவும், சென்றடையும் நிலையாகப் பெறுபவர் (Receiver) ஒருவராகவும் அமைய வாய்ப்பு ஏற்படுகின்றது. சில நேரங்களில் தொடர்பாளர் ஒருவராகவும் தகவலைப் பெறுபவர் பலராகவும் இருந்தால் மக்கள் தகவல் தொடர்பு (Mass Communication) என்ற முறை பயன்படுத்தப்படுவதை அறிய முடிகின்றது. இம்முறையே சமுதாயத்தில் பல்வேறு கோணங்களில் கையாளப்பட்டு வருகின்றது.

புறத்தகவல் தொடர்பில் பயன்படும் சாதனங்கள்

மக்கள் புறத்தகவல் தொடர்பை அவரவர் பொருளாதார நிலைக்கேற்பவும், தகவலின் தன்மைக்கேற்பவும் சாதனங்களின் பயன்பாடு (Media usage) மாறுபாடு அடைகின்றன. சாதனங்களின் பயன்பாடு என்பது, தகவலை அனுப்பலும், பரப்பலும், பெறுதலும் என்ற நிலைகளைக் குறிப்பதாகும். சாதனங்கள் சமுதாயத்திற்கு அறிவித்தல், அறிவுறுத்தல் மகிழ்ச்சிவட்டல் என்ற வெவ்வேறு கோணங்களில் பயன்பட்டு வருகின்றன.

தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ளும் நிலை அனைத்துத் தரப்பு மக்களிடத்திலும் நிகழ்ந்து வருகின்றது. இது பொதுப் பயன்பாட்டில் உள்ளதால் அனைவரும் பயன்படுத்த முடிகின்றது. இம்முறை ஒருவருக்கு ஒருவர் என்ற அடிபடைப்யில் செயல்படுகின்றது.

அறிவித்தல் என்ற நிலையில் தொடக்கத்தில் நவீனத் தொடர்புச் சாதனங்கள் தகவலைத் தெரிவிக்கக் குறிப்பிட்ட கால அளவை எடுத்துக் கொண்டது. காட்டாக, தொலைத் தொடர்புக் கருவி (Electric Telegraph Machine) அறிமுகப்படுத்தப்பட்டது. அதை தொடர்ந்து தொலை பேசியும், வானொலியும் தொடர்புச் சாதனங்களாகச் சமுதாயத்திற்கு உதவி வந்தன.

அறிவியல் வளர வளர அரசுத் துறைகள் எளிமையாக தகவல்களைத் தெரிவித்துக் கொள்ள இயங்கு நிலைத் தொடர்பியலைப் (Mobile Communication) பயன்படுத்தியது. இம்முறை, பயணத்தின் போது தகவல்களை அறிந்து கொள்ளப் பயன்பட்டு வருகின்றது. பொதுச் சேவை அமைப்புகள், காவல் துறை நிலையங்கள், முதலானவை சமுதாயப் பயன்பாட்டின் அடிப்படையில் இயங்குநிலை வானொலித் தொலைத் தொடர்பு (Mobile Redio Telegraphy) என்ற முறைக் கையாண்டு இம்முறை, சமுதாயத்தில் ஏற்படும் கலவரம், போக்குவரத்துப் பாதிப்பு. தீ விபத்து, முதலானது பேராபத்துக்களிலிருந்து பாது காக்கப் பயன்பட்டு வருகின்றது.

கையடக்கத் தொர்டபுக் கருவி (paging) தொலை அச்சு (Teleprinter) நகலியச் சாதனம் (Facsimile Telegraphy / fax) என்ற தொடர்புக் கருவிகள் சமுதாயத்துக்குப் பெரிதும், உதவி வருகின்றது. இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டே சென்றாலும், சமுதாய நிலையில் அவரவர்களின் பொருாதார நிலையைப் பொறுத்தும் தகவலின் அவசரத் தேவையைப் பொறுத்தும், சாதனங்களின் பயன்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமுதாயத்தினர் புறத்தகவல் தொடர்புக்குச் செலவழிக்கும் நிலை

சமுதாயத்திற்குப் பெரிதும் பயன்பட்டு வரும் தொடர்புச் சாதனங்களுள் இதழ், வானொலி, தொலைக்காட்சி போன்றவை குறிப்பிடதகுந்தனவாகும். மக்கள் தொடர்புச் சாதனங்களுக்குக் குறிப்பிட்ட பொருளாதாரத்தை ஒதுக்க வேண்டியுள்ளது. பொருளரதார ஒதுக்கீட்டில் அப்போதைக்கப் போது செலவிடுவது நிரந்தரமாகச் செலவிடுவது என்ற இரு நிலைகளைக் கொண்டு அணுக வேண்டியுள்ளது.

அவ்வப்போது செலவிடுவது என்பது இதழ்களை வாங்கி வாசித்தல் தொடர்பானதாகும். பொருாதார ஏற்றத் தாழ்வு உள்ள இச்சமுதாயத்தில் இவ்வணுகுமுறை ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு மட்டும் ஏற்புறு வகையில் அமைந்துள்ளது.

நிரந்தரமாகச் செலவிடுவது என்பது வானொலி, தொலைக் காட்சிபோன்ற மக்கள் தகவல் தொடர்புச் சாதணங்களை வாங்குவது

பற்றியதாகும், இந்நிலையில் நிரந்தரமான முதலீட்டால், பக்கள் தினமும் பல்வேறு துறைச் செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. வானொலியானது கற்றவர், கல்லாதவர் உள்ளிட்ட அனைவரும் பயன்படுததக் கூடிய எளிமையான சாதனமாகும். தொலைக்காட்சி பொருளாதாரத்தில் நடுத்தர மற்றும் உயர்தர நிலையில் உள்ளவர் மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. சமுதாயத்தில் தொடர்புச் சாதனங்களின் பயன்பாட்டு நிலையை அறிய அல்லது சமுதாயத்தினர் பயன்படுத்துகின்ற தொடர்புச் சாதனங்களின் எண்ணிக்கைப் பற்றி நிலையை உணர ஒரே ஒரு கிராமமும், நகரப் பகுதியும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டடு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கிராமம் : மயிலரங்கம் என்ற ஊர்

நகரம் : அகிலாண்டேஸ்வரி நகர் (இலால்குடி)

	மொத்தப் குடும்பம்	இதழ்கள் வாங்குவோர்	வானொலி	தொ. காட்சி	ொத.சாதனம் இல்லதவர்
கிராமம்	95	9	46	15	32
நகரம்	103	21	25	26	4

ஆய்வில் பெறப்பட்டக் கருத்துக்கள்

1. கிராமத்தில் பெரும்பாலானோர் ஒரே வகையான இதழ்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலை அந்தந்த கடைகளைப் பொருத்தது.

2. பெரும்பாலான வீடுகளில் வானொலியே பயன்பாட்டில் உள்ளது.

3. தொலைக்காட்சி பெரும்பாலும் மாலை நேரத்தில் பயன் படுத்தி வருகின்றனர்.

4. வேளாண் கூலித் தொழிலாளர்களிடத்தில் தொடர்புச் சாதனங்கள் இல்லாத நிலை அறிய முடிகின்றது.

II. நகரம்;

5. இதழ் வாங்குவோரின் நிலை பொருளாதார நிலையைப் பொறுத்து (இதழ், செய்தித்தாள்) அமைகின்றது (தமிழ், ஆங்கிலம்)

6. வானொலியின் பயன்பாடு மிகவும் குறைவான எண்ணிக்கையில் செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக வேளாண் பெருமக்களிடம் மட்டுமே வானொலி செயல்படுவதை உணர முடிகின்றது.

7. சில இல்லங்களில் வானொலி செயலற்றுக் கிடப்பதை பார்க்க முடிந்தது.

8. நகரத்தில் பெரும்பான்மையாகத் தொலைக்காட்சியே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே 'மக்கள் புறத்தகவல் தொடர்பிற்குப் பயன்படுத்தப் படும் சாதனங்களும், தகவலும் அவரவர் நிலைக்கும் பொருளாதார நிலைக்கும் ஏற்றவாறு அமைகின்றன என்ற உண்மை கண்டறியப்பட்டது.

பாரதியின் ஆளுமைப்பண்புகள்

இராம. குணசேகரன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களுள் தனித்திறனும் சிறப்பும் வாய்ந்தவர் சுப்பிரமணிய பாரதி ஆவார். பாரதி தமிழ்க் கவிதையுலகில் பல புதுமைகளையும் புரட்சிகளையும் செய்து ''பாரதி யுகம்'' என்னும் ஒரு புது யுகத்தினைத் தோற்று வித்துள்ளார். பாரதியின் இத்தகுச் சிறப்பிற்கு அவரது ஆளுமைப் பண்புகளே அடிப்படைக் காரணமாய் அமைந்துள்ளன. எனவே பாரதியின் ஆளுமைப் பண்புகளைக் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஆளுமைப் பண்புகள் - விளக்கம்

ஒரு மனிதனிடம் காணப்படும் 'நிலையான நடத்தைக் கூறுகளே' ஆளுமைப் பண்புக்கூறுகள் எனப்படும். ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே சில சிறப்புப் பண்புகளைப் பெற்றிருப்பர். இப்பண்புகள் ஆளுமையுடன் பெரிதும் தொடர்புடையனவாகும். மேலும் இப்பண்புகளே ஆளுமையினைப் பிரதிபலித்துப்பொலிவுறச் செய்கின்றன. ஆளுமைப் பண்புகளாக உளவியலறிஞர்கள் பின் வருவனவற்றைக் குறிப்பிடுகின்றனர். அவை, 'பிறரிடமிருந்து ஒருவரை வேறுபடுத்திக் காட்டக்கூடிய தனிச்சிறப்புப் பண்புகள், எதிர்ப்பாற்றல், அழகுணர்ஆற்றல், தோழமை, நம்பிக்கையுணர்வு, முழுச்முசுடன் செயற்படல், மனவெழுச்சி முதிர்ச்சி'' போன்றவை ஆகும். (சந்தானம், எஸ். கல்வி உளவியலின் அடிப்படைகள், ப.446) ஏ.ஜெ.ஜோன் என்பவர், ஒருவர் பார்க்கும் முறை, உடை உடுக்கும் முறை, நடக்கும் முறை போன்றவற்றினை பேசும்முறை பண்புகளாகச் சுட்டுகின்றார். (இராஜமாணிக்கம், மு.. ஆளுமை உளவியல் துறைகள், ப.151).

பாரதியின் ஆளுமைப்பண்புகள்

உளவியலார் குறிப்பிடும் ஆளுமைப்பண்புகள் பாரதியினிடம் பொருந்தி காணப்படுகின்றன, அவை பின்வருமாறு விளக்கப் படுகின்றன.

நிலையான நடத்தைக் கூறுகள்

பாரதியினிடம் விடுதலை வேட்கை, நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல், அஞ்சாமல் எதனையும் சொல்லுதல், சொன்னதைச் செய்யும் செயல்திறன், கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் போன்றவைகள் நிலையான நடத்தைக் கூறுகளாக அமைந்துள்ளன.

தனித்திறன்

பாரதி பிரரிடமிருந்து வேறுபட்டுத் தனிச்சிறப்புடன் விளங்கியவர். பாரதியின் தோற்றம், நடை, உடை, பாவனை, சிந்தனைகள் மற்றும் செயல்கள் ஆகியவை பாரதியைப் பிறரிட மிருந்து வேறுபடுத்திக் காட்டுவனவாகும். மேலும் பாரதியின் சுதேசச் சிந்தனைத்திறன், மேதாவித்தனம், தீர்க்கதரிசனம், ஆத்மஞானம் போன்றவை பாரதியின் தனிச்சிறப்புப் பண்புகளாகும்.

எதிர்ப்பாற்றல்

பாரதி அநீதிகளையும், கொடுமைகளையும் எதிர்த்துள்ளார். சமூதாயத்தில் காணப்பட்ட சாதிக்கொடுமைகள், சமயப் பூசல்கள், பெண்ணடிமைத்தனம், இளமைமணம் போன்றவைகளைப் பாரதி எதிர்த்துள்ளார். மேலும் நடிப்புச் சுதேசிகளையும், தமிழைப் புறக்கணித்து ஆங்கில மோகங் கொண்டு அலைபவர்களையும் பாரதி எதிர்த்துள்ளார். இவை பாரதியின் எதிர்ப்பாற்றலை வெளிப்படுத்துவனவாகும்.

அழகுணர் ஆற்றல்

பாரதி தெய்விக மணங்கமழ இயற்கையினைப் பாடியுள்ளார். சிட்டுக்குருவியைப் பற்றி பாரதி தீட்டும் சித்திரம் அவரது அழகுணர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. "சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக் கண்கள், சின்னத்தலை, வெள்ளைக் கழுத்து, அழகிய மங்கல் நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு,

கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தலாகிய பட்டுப் போர்த்த முதுகு, சிறிய தோகை, துளித்துளிக் கால்கள்'' (சுப்பிரமணிய பாரதி, சி., பாரதியின் கட்டுரைகள் (கலைகள்). சிட்டுக்குருவி). சிட்டுக்குருவியின் அழகிய சின்னஞ்சிறிய வடிவம் பாரதியின் உள்ளத்தில் எல்லையற்ற அழகுணர்ச்சியைத் தோற்றவித்துள்ளது எனலாம்.

தோழமை

பாரதி உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற பேதமின்றி அனைவரிடமும் தோழமை கொண்டு வாழ்ந்துள்ளார். பாரதி பாண்டிச்சேரியில் வாழ்ந்தபோது அரிசன இளைஞன் ரா. கனகலிங்கம் என்பவருக்குப் பூணூல் அணிவித்து அவருடன் தோழமை கொண்டுள்ளார். 'தம்பேலா' என்ற தோட்டிகளின் தலைவனின் இல்லத்திற்குச் சென்று அவருடைய இல்லத்திண்ணையில் அமர்ந்து அவருடன் பேசித் தோழமை கொண்டுள்ளார். மேலும் அரவிந்தர், வ.வெ.சு. ஐயர், குவளையூர் கிருஷ்ணமாச்சாரி போன்றவர்களுடனும் தோழமை கொண்டுள்ளார். இதற்கும் மேலாக அஃறிணைப் பொருள்களான காக்கை, குருவி, கடல், மலை போன்றவற்றுடனும் பாரதி தோழமை கொண்டு வாழ்ந்துள்ளார் இதனை,

> ''காக்கை குருவி எங்கள் சாதி - நீள்
> கடலும் மலையும் எங்கள் கூட்டம்''
> (பாரதியார் கவிதைகள், ப. 119)

என்பதன் வழி அறியலாம். பாரதி அஃறிணைப் பொருள்களுடன் கொண்டுள்ள தோழமையே அவரது தனித்துவ ஆளுமைப் பண்பாக வெளிப்படுத்துகின்றது எனலாம்.

நம்பிக்கையுணர்வு

பாரதி நாட்டு மக்களுக்கு நல்லன செய்வதிலும், தான் எண்ணியதை எண்ணியாங்கு எய்துதலிலும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். நாட்டில்,

> ''பொய்க்குங் கலியை நான் கொன்று
> மெய்க்குங் கிருத யுகத்தினையே கொணர்வேன்''
> (பாரதியார் கவிதைகள், ப. 17

என்றும்,

''மண்ணில் யார்க்கும் துயரின்றிச் செய்வேன்
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்''
(பாரதியார் கவிதைகள். ப.73)

என்றும் கூறி நம்பிக்கையுணர்வின் உச்சநிலையை அடைந்தவர் பாரதி. பாரதிக்கு முன் யாரிடமும் இவ்வளவு அழுத்தமான நம்பிக்கையைக் காணமுடியவில்லை என்கிறார் மீனாட்சி முருகரத்தினம். (மீனாட்சி முருகரத்தினம், பாரதியியல், ப. 87)

முழுமூச்சுடன் செயற்படல்

பாரதி தான் ஈடுபடும் செயல்கள் அனைத்திலும் முழுமூச்சுடன் செயல்படும் திறன் கொண்டவர். சுதேசி இயக்கவீரர் வ.உ.சிதம்பரம்பிள்ளை இந்தியக் கப்பல் கம்பெனி ஒன்றை நிறுவ எண்ணி 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன்' கம்பெனியை உருவாக்கினார். அதற்கு நிதிதிரட்டும் பணியில் பாரதி முழுமூச்சுடன் செயற்பட்டுள்ளார், மேலும் சுதேசிப் பொருள்களையே வாங்க வேண்டும். அந்நியப் பொருட்களை ஒதுக்க வேண்டும் என்பதிலும் பாரதி முழுமூச்சுடன் செயல்பட்டுத் தன் ஆளுமைப்பண்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

மனவெழுச்சி முதிர்ச்சி

தன்னை எல்லையற்ற பரம்பொருளாக நினைத்த பாரதி, எங்கெங்கு காணினும் தன்னையே, தன் இனத்தையே, எல்லையற்ற தனது விரிவையும் விளக்கத்தையுமே கண்டார். பாரதியின் புதிய அத்வைதம், ''காக்கையும், குருவியையும், நீள் கடலையும், உயர்மலையையும் மானிடத்தோடு இணைத்த புதிய சகோதரத்துவமாக ஆத்மீகக் குடியரசாக மலர்ந்துள்ளது எனலாம் பாரதியின் பறவைக் காதல் அவரது வேதாந்தத்தின் விளைவு எனலாம். காக்கை - கண்ணனின் காரிய உருவத்தையும், குருவி - ஆத்ம விடுதலையையும், குயில் - ஆத்மாவின் காதலையும் குறிப்பாக உருவகிக்கின்றன. இந்தக் குறியீடுகளின் வழி மானுடர் பறவைச்சங்கமத்தையும், தெய்வத்தின் சாதாரன அவதாரத்தையும் கண்டு தரிசிக்க முடிகின்றது. இவை ஆத்மாவுக்கும் பரம் பொருளுக்கும் இணைச்சங்கிலியாகத் திகழ்கின்றன (செல்லப்பா, சி.சு. பாரதியம், பக். 121. 122)இனங்கம் பாரதியின் மனவெழுச்சி

முதிர்ந்து அவரை ஆத்மஞானியாகத் திகழ வைத்துள்ளது எனலாம்.

பாரதியின் தோற்றம், நடை, உடை, பாவனை

பாரதியின் தோற்றம் கவர்ச்சியும், கம்பீரமும் நிறைந்த தாகும். பாரதி குடுமி களைந்து தலைமுடியைக் குறைத்துக் கொண்டும். வடஇந்தியர் போல் வால்விட்ட தலைப்பாகை அணிந்தும், மீசை வைத்தும், கச்சம் வைத்து வேஷ்டி கட்டியும், கோட் அணிந்தும் வந்தார். பாரதி காசியில் வாழ்ந்தபோது இப் புதிய வேடத்தை ஏற்று, அதனை வாழ்நாள் முழுவதும் கடைபிடித்து வந்தார் (விஸ்வநாதன், சீனி தமிழகம் தந்த மகாகவி, ப 16). பாரதியின் இத்தகையத் தோற்றம் அவரைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய தனித்தன்மை வாய்ந்ததாகும்.

பாரதி நிமிர்ந்த நன்னடையும், யார்க்கும் அஞ்சாத நேர் கொண்ட பார்வையும் மிகச்சாதுரியமாகப் பேசுந்திறனும் கொண்டவர் ஆவார். எனவே, பாரதி தன் தோற்றம், நடை, உடை, பாவனை மற்றும் பேச்சுத்திறன் ஆகியவைகளால் பிறரிடமிருந்து வேறுபட்டுத் தன் தனித்துவ ஆளுமைப்பண்பு களை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

நிறைவு

பாரதியின் அகமும் புறமும் ஒன்றிணைந்து அவரது ஆளுமைப்பண்புகளாக வெளிப்பட்டுள்ளன. பாரதியின் தூய எண்ணம். தெளிந்த சிந்தனை, அஞ்சாமை போன்ற அகப் பண்புகள், நேர்கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, மிகச் சாதுரியமாகப் பேசும் ஞானச் செருக்கு போன்ற புறப்பண்பு களாக வெளிப்பட்டுள்ளன. மேலும் பாரதி தான் எண்ணியதைச் சொல்லியும், சொன்னதைச் செய்தும் வாழ்ந்து காட்டித் தன் தனித்துவ ஆளுமைப்பண்புகளை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

துணை நூல்கள்

1. சுப்பிரமணிய பாரதி, சி., பாரதியார் கவிதைகள் (செம்பதிப்பு) மணிவாசகர் பதிப்பகம். சிதம்பரம், 1987.
2. சந்தானம், எஸ்., கல்வி உளவியலின் அடிப்படைகள் (முதற்பதிப்பு) பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1973.

'புதிய வார்ப்புகள்' - சிறுகதையில் இருத்தலியல் கோட்பாடு

ந. இளஞ்செழியன்

பொன்னையா ராமஜெயம் கல்லூரி, தஞ்சாவூர்

புதிய சிந்தனைகள் காலந்தோறும் முகிழ்க்கக் கூடியன. அவ்வகைச் சிந்தனைகள் பல்வேறு புதிய முடிவுகளையும், சமூக முன்னேற்றத்தையும் கொடுக்கக் கூடியன. அவ்வகையில் மேலை நாடுகளில் ஏற்பட்ட தொழில் புரட்சியினால் புதியன பல புகுந்தன. அவை இலக்கிய உலகையும் விட்டு வைக்கவில்லை. புதிய வடிவங்கள் புத்தம் புது சிந்தனைகள், புதிய திறனாய்வுக் கொள்கைகள் முதலானவை தோன்றின. அவற்றுள் எக்சிஸ்டென்சியலிசம் என்னும் இருத்தலியல் கோட்பாடு 20 ஆம் நூற்றாண்டு மையப் பகுதியில் தோன்றி புகழ்பெற்று விளங்குகிற தத்துவமாகும். இது செருமனியில் தோன்றிப் பிரான்சில் பரவியது. இரண்டு உலகப் போர்களினால் ஏற்பட்ட நாச விளைவுகள், குழப்பம், பாதுகாப்பின்மை, மரண பயம் ஆகியவை இதன் வளர்ச்சிக்குக் காரணங்களாகும். சுருங்கக் கூறின் இருத்தல் கொள்கை (Existentialism) சமுதாயத் தோல்வியின் வெளிப்பாடு ஆகும். சாக்கிரட்டீசு, பவுல், அகசுதீன் . ... போன்றவர்கள் இக் கொள்கையை வளர்த்தவர்கள். பிரான்சு நாட்டுச் சார்த்துரே இதன் தலைமைக் குரு என்று கருதப்படுகிறார். அவர் தம் நாவல்கள், நாடகங்கள் மூலம் இதைப் பரவச் செய்தார். இவரைத் தொடர்ந்துப் பலரும் தத்தம் மொழி இலக்கியங்களில் இக் கொள்கையைப் பரவச் செய்து வருகின்றனர். தமிழில் க.நா. சுப்பிரமணியத்தின் நாவல்களையும் (பசி ; ஏழுபேர் ; பொய்த் தேவு) இந்திரா பார்த்தசாரதியின் நாவல்களையும் (திரைகளுக்கு அப்பால்: 'நிலமன்னும் நல்லாள்') ஜி நாக ராஜனின் (நாளை மற்றுமொரு நாளே) நாவலையும் இந்த இருப்பியல் வாதத்திற்குத் தக்க சான்றுகளாகக் காட்டலாம்.

இவ்வகையில் முனைவர். கு வெ. பாலசுப்ரமணியன் அவர்களால் எழுதப்பட்ட 'புதிய வார்ப்புகள்' என்ற சிறுகதை இக் கொள்கையை விளக்கும் வண்ணம் உருபெற்றதாக விளங்குகிறது. இச்சிறுகதையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இருத்தலியல் - விளக்கம்

Existence என்ற சொல் Ex. sistere என்ற இரண்டு இலத்தீன் மூலச் சொற்களின் சேர்க்கையாகும். முன்னோக்கி அடியிடுதல் வெளிப்படுதல், தோன்றுதல் என்பன இச்சொல்லுக் குரிய பொருள்களாகும். இச்சொல் கால வளர்ச்சியில், உள தாயிருத்தல், வாழ்தல், உளதாம் தன்மை, வாழ்க்கை, வாழ்க்கை நெறி, பிழைப்பு, வாழும் முறை. எனப் பல பொருள்களைத் தழுவிக் கொண்டது. Existentialism என்பது இவ்வடிப்படையில் அகராதி ஆசிரியர்களால், ''புற மெய்மை மறுத்த வாழ்வியல் மெய்மைக் கோட்பாடு ''என விளக்கம் பெற்றது[2].

''மனிதன் தன்னையும், பிறரையும், இவ்வுலகையும் மனத்தினால் உள்ளவாறு உணர நோக்கும் நோக்கே இருத்தலியல் ''என்று கு.வெ. பாலசுப்ரமணியன் கூறுகிறார்[3]. இருத்தல் கொள்கையின் மற்றொரு சிறப்பான கருத்து இறப்பைப் பற்றியது. இறப்பு வாழ்வின் இறுதி எல்லை. மனிதன் தன்னுடைய தவறிழைக்கும் தன்மைகளோடும், தன் வாழ்க்கையின் பயனின்மை தன்னுள் நினைத்த காலத்திலெல்லாம் இருத்தலியல் என்ற தத்துவம் மனித வாழ்வில் இடம் பெற்றிருக்கிறது. வாழ்க்கையில் எல்லோருக்குமே சில நிலைகளில் சலிப்பும், வெறுப்பும் தோன்றும் போது வாழ்க்கை பொருளற்றதாகச் தோன்றுதல் உண்டு; சில நட்பத் தொடர்புகள், சில உறவுகள் பொய்யானவையாகத் தோன்றுதல் உண்டு. ஆனால் ஒட்டு மொத்தமாக வாழ்க்கையே ஒரு பிழையான விளைச்சலாகக் கருதுவதையே இருத்தலியலின் இந்தப் பார்வை காட்டுகின்றது.

கதைச் சுருக்கம்

சிவராஜ் மரணப் படுக்கையில் கிடக்கும் ஒரு நோயாளி, மரணப் பிடியில் கிடக்கும் அவன் தனது மனதுக்குள் தாம் வாழ்ந்த முன்னைய காலங்களை நினைவு கூர்ந்து சிந்தனை செய்து கொண்டிருக்கிறான். சீட்டாட்டத்திலும், ஆடிட்டிங் வேலையிலும், தன்னுடைய செல்வ நிலையையும் நினைத்துப் பார்த்து இவ்வுலகில் தன்னைக் காட்டிலும் திறமையானவர்கள் எவரும் இல்லை என்று தனக்குள்ளாக கருதுகிறான்.

இங்கும் கதையாசிரியர், 'உயிர் பிழைப்போமா' என்ற நினைவை இதயத்தில் ஏந்திக் கொண்டிருக்கும் ஒருவனைக் காட்டி, கடந்த கால வாழ்வின் நிகழ்வுகளைத் திருப்பபார்க்கும் மனிதன் தன் வாழ்வை இறப்பு வந்து மூடப் போவதை உணர்ந்த நிலையில் ஒரு குருட்டு மனிதனின் இரவு முடிவுற்றதாக எண்ண வேண்டும் எனவும் வெறுமை பொதிந்த மனித வாழ்விற்கு அதன் இயல்பு உணர்ந்து, ஓர் அனுபவமாக ஏற்று வாழ வேண்டும் எனவும் கதையாசிரியர் வற்புறுத்துகிறார்.

கதைப்பின்னல்

இச்சிறுகதை எக்சிஸ்டென்சியலிசப் என்னும் சித்தாந்தத்தை விளக்க எழுந்தது என்றாலும் வாழ்க்கையில் உயர் நிலையை அடைந்த ஒருவன் மேலும் வாழவேண்டும் தன் வாழ்வினை நீட்டித்துக் கொண்டே செல்ல வேண்டும் என்று எண்ணுகிறான். அதைபோன்று இல்லாமல் பின்னால் வருகின்ற ஒவ்வொருவரும் தன்னைப் போன்று தகுதியானவர்களே! எனவே அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்குவது சான்றோர் நெறி என்பதை நிலைநாட்ட எழுந்ததே இச்சிறுகதையின் பின்னலாக வெளிப்படுகிறது.

கதைக்கரு

மேனாட்டுச் சித்தாந்தமான இருத்தலியல் கோட்பாட்டை அடியொற்றிக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பெற்றது. 'புதிய வார்ப்புகள்' என்ற சிறுகதையாகும் கதைமாந்தன் தனக்கு இறப்பு நேரும் தருவாயில் என்னென்ன சித்தனைகளை உருவாக்குவான் அவற்றின் முடிவு என்னதாக இருக்கும் என்பதே கதைக் கருவாக வடிவெடுத்துள்ளது.

தன்னால் மட்டுமே எந்த ஒன்றையும் சாதிக்க முடியும் மற்றவர்களால்' முடியாது என்ற கருத்துருவாக்கத்தினைத் தகர்க்கவும்; என்னுடைய வாழ்வில் முடியாது என்ற சொல்லுக்கு இடமில்லை என்று சொல்லிய நெப்போலியனைப் போன்று ஒவ்வொருவரின் வாழ்விலும் அடுத்தவர் சாதித்ததை விடக் கூடுதலாகச் சாதிக்க முடியும் என்பதைக் காட்டுவதே இக்கதையின் கருவாக அமைந்துள்ளது'

கதை மாந்தர்கள்

இச்சிறுகதையில் இடம் பெற்றுள்ள கதை மாந்தர்கள் பலராக இருப்பினும் சிவா என்கிற சிவராஜ் மட்டுமே கதை நிகழ்த்தும் மாந்தனாகப் படைத்துள்ளார் கதையாசிரியார் ஒருவரை மட்டுமே கொண்டு நிகழ்த்தப்பெறும் 'தனி நடிப்பு' போன்று இச்சிறுகதை அமைக்கப்பெற்றுள்ளது. இடையிடையே கதைப் பின்னலை விரிவு செய்யும்பொருட்டு கதை மாந்தனுடன் தொடர்புடைய டாக்டர். கார்டியால்ஜிஸ்ட் சோமசேகர், விமலா வீட்டுக்காரர், சுந்தரி, முத்தையா, மகன் செல்வம், மனைவி மங்களம், பூமா, மலர்விழி, அப்பா திருமலை போன்றோர்களும் கதைப் பாத்திரங்களாகக் கதை நிகழ்த்துவோனே நமக்கு அறிமுகம் செய்கின்றான். ஆகையால் மேற்சுட்டிய பாத்திரங்கள் அனைத்தும் துணை நிலைப் பாத்திரங்களாக நம்முன் நடமாடு கின்றனர்.

சிவராஜ் என்னும் கதை நிகழ்த்துவோனே கதைய்ன் கருப் பொருளினை உருவாக்குபவன். அவனை நோய்வாய்ப்பட்ட காரணத்தால் படுக்கையிலேயே கிடத்தி, மனத்தளவில் பேசு வதாய்ப் படைத்துக் கதையைக் கொண்டு சென்றுள்ளார். கதை யாசிரியர். சிவராஜ் மனவோட்ட எண்ணங்களின் மூலம் பிற பாத்திரங்கள் உயிர்பினைப் பெறுகின்றன. எனினும் கதையில் சிவராஜ் உயிருக்குப் போராடினாலும் உயிரோட்டமான பாத்தி மாகச் செய்யப்பட்டு உள்ளார் என்பது தெளிவு.

கதைத் தொடக்கம்

'புதிய வார்ப்புகள்' என்னும் சிறுகதையானது சிவராஜ் என்னும் மனிதனின் சாவினையும் சாகும் காலத்து மனிதனிடத்து நிகழும் என்ன ஓட்டங்களையும் மையமிட்டு அமைக்கப் பெற்றுள்ளது. ஆகையால் மாலைக் காலத்து நாயின் ஓலத் தையும், குடுகுடுப்பைக் காரனின் செய்நிமினையும் சொல்லி கதையைத் தொடங்குகிறார் கதையாசிரியார். ஆரம்பம் என்னவோ பழமை கலந்ததாக இருந்தாலும் கதையின் கருத்து மிகவும் வலுப்பெற்று இருப்பதோடு புதியதாகவும் உள்ளது. பழமையில் தொடங்கி புதுமையில் கதையை முடித்த ஆசிரியரின் திறம் பாராட்டுக்குரியது.

கதை உத்தி

சிறுகதைகள் பல்வேறு உத்திகளைக் கொண்டு எழுதப் பெறும். அவ்வகையில் இச்சிறுகதையை நனவோடை உத்தி எனப்பெறும், கனவு நிலை உத்தியின் மூலம் ஆசிரியர் நடத்திச் செல்கிறார். இது போன்ற நனவோடை உத்தியின மூலம் கதையினைச் செலுத்தும் பாங்கு நன்கு அமைந்துள்ளது. இச் சிறுகதையில் பிற பாத்திரங்கள் பேசுகின்ற சூழல்கள் அனைத்தும் மிகச் சரியான உரையாடல் இருந்தாலும் அவையும் இந் உத்தியின் அமைப்பாகவேத் தெரிகிறது.

உரையாடல்

இச்சிறுகதை நனவோடை உத்தியின் மூலம் பிணைக்கப் பட்டு இருப்பதால் உரையாடல் என்ற நிலையே இல்லை. எனினும் சிவராஜ் தன் மனதுக்குள் நிகழ்த்தும் போராட்டத்தின் இறுதியில் ''நான் இருக்கிறேன்'' இருப்பேன்; என்னும் தொடர்கள் மிகவும் நிதர்சனமான நிலையில் உள்ளன. ஆனால் அடுத்த வரியில் மானிட்டரின் அலைவு அதிகரித்தது என்று எழுதும் பொழுது தன்னம்பிக்கையின் விளைவினையும், மனோதிடத் தினையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

பல நாட்களுக்கு முன் தன் கிராமத்தில் நிகழ்ந்த நிகழ் விலிருந்து நேற்று நிகழ்ந்து ஈரான் குண்டு வெடிப்பு வரை அனைத்தையும் உட்கொண்டு நினைவில் கொண்டு செலுத்தும் நிலை உரையாடலில் விறுவிறுப்பினைக் காட்டுகின்றது.

மனத் தெளிவாகஇருத்தல் வேண்டும் என்று கார்டியாலிஸ்டு சொல்ல அதற்குப் பதிலுரைக்கும் வகையில் அமையும் சுவராஜின் எண்ண ஓட்டங்கள் 'அவர் இந்தப் படுக்கையில் கிடக்க நான் இதைச் சொன்னால் முட்டாள் டாக்டர் பினாத்துகின்றான் என்று சொல்லியிருப்பார்'' என்பது குறுக்கத்தக்கது, அதைத் தொடர்ந்து சிந்தனையின் உருவாக்கம், அதன் தொடர்பு புதியதாகச் என்ன என்னவெல்லாம் வரும் என்பதைப் பற்றிய சிந்தனை யோட்டங்கள் குறிக்கத்தக்கவை.

காலத்திற்கேற்ற குழந்தைப் பெயர்கள்

கு. கண்ணன்

ந மு. வேங்கடசாமி நாட்டார் கல்லூரி, தஞ்சை.

மனித இனம் தோன்றிய காலத்தே பெயர்களும் தோன்றி பழமை எச்சமாக நின்று நிலவுகின்றன. உலகெங்கும் பெயர் இணைப்பு முறையில் நாட்டுக்கு நாடு இனத்துக்கு இனம் சமயம் சில வேறுபாடுகளைக் காண்கிறோம். அதே நேரத்திம் உலகெங்கும் பெயர் வைப்பதில் சில சில் அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்படுவதையும் காண்கிறோம். பெயர்களின் அமைப்பு முறையை உணர்ந்து நோக்கின் சங்க காலத்திலிருந்து இன்றுவரை ஒரு மரபு பின்பற்றப்படுலதைக் காண்கிறோம். அரசியல் சமூக பண்பாட்டு அடிப்படையில் காலத்துக்கு காலம் பெயர்களில் மாற்றங்கள் இருப்பினும் பெயரமைப்பு முறையில் ஒரு மரபு பின்பற்றப்படுவதை மறுப்பதற்கில்லை. இவ்வாய்வில் தற்போதைய குழந்தைகளின் பெயர்களை எடுத்துக்கொண்டு அப்பெயர்களையும் பெயரமைப்பினையும் பகுத்தாய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

பனையக்கோட்டை என்ற கிராமத்திலுள்ள மழலையர் பள்ளியில் 1989-ஆம் ஆண்டு முதல் 1995-ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டுள்ள குழந்தைகளின் பெயர்களை ஆய்விற்கு எடுததுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்பெயர்களை முனைவர் சு. சக்திவேல் அவர்களின் மக்கட் பெயர் ஆய்வு என்ற நூலில் கண்டுள்ள பன்னிரண்டுவகை வகைப்பாட்டின் அடிப்படையிலேயே வகைப்பாடு செய்து வகுப்பாய்வு செய்யப்படுகிறது.

பெயரமைப்பின் பொதுக்கூறு

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பெயர்கள் அமைப்பின் பின்வரும் சில பொதுக்கூறுகளை காணலாம். பெருந்தெய்வ பெயர்கள், மன்னர், அரசர், அரசி தொடர்புடைய பெயர்கள், வடமொழிப் பெயர்கள், காப்பியம், புராணம் இவற்றில் இடம்

பெற்றுள்ள பாத்திரங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்கள், கவிஞர் பெயர்கள், மாதம் தொடர்புடைய பெயர்கள், கதிரவன் தொடர்புடைய பெயர்கள், ஆய்வுக்குட்பட்ட பெயர்களின் பொதுக் கூறுத்தன்மைகள் அமைந்துள்ள பாங்கினைப் பற்றி இனி விரிவாக காண்போம்.

பெருந்தெய்வ பெயர்கள்

மனிதன் தோன்றிய காலந்தொட்டே தெய்வ வழிபாட்டைக் காணலாம். தெய்வத்தின் மீது ஏற்படுகின்ற பக்தி, அச்சம், நம்பிக்கை, சமயம் இவற்றின் காரணமாக அத்தெய்வங்களின் பெயரை மக்களுக்கு சூட்டுகின்ற மரபு தோன்றியதென கருதலாம்.

மழலையர் பள்ளி பதிவேட்டில் உள்ள பெயர்களை காணும்போது தெய்வப் பெயர்கள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. ஆண் குழந்தைகளுக்கு ஆண்தெய்வப் பெயர்களையும் பெண் தெய்வப் பெயர்களை பெண் குழந்தைகளுக்கும் சூட்டியுள்ளது காணமுடிகிறது. சரவணன், கந்தன், சாமிநாதன், சக்திவேல், முருகன், முருகானந்தம், பழனி, பழனிவேல், பழனிச்சாமி என்ற பெயர்களும் லெட்சுமி, சரஸ்வதி, பார்வதி, உமா மகேஸ்வரி என்ற பெண் தெய்வப் பெயர்களையும் சூட்டியுள்ளனர்.

கலியபெருமாள், வீரன், இராமதாஸ், போன்றவர்களின் குழந்தைப் பெயர் முருகன், பழனி, சக்திவேல் என்று வைத்துள்ளனர். அவர்களை நேர்காணல் மூலம் உரையாடியதில் அத்திருத்தலங்களுக்குச் சென்று வந்ததன் பயனாகப் பிறந்தன மகவும் அத்தெய்வத்தின் மேலுள்ள பக்தியுமே காரனம் என்று கூறினர்.

மன்னர், அரசர், அரசி தொடர்புடைய பெயர்கள்

மன்னரையும், அரசர்களையும் அழைக்கும் ‘இராசா’ என்ற பெயர்களை பெயரின் முன்னொட்டாகவும் இராசா, இராசகோபால், இராசக்குமார், இராசேந்திரன் இராசசேகரன், இராசத்துரை, இராசசெல்வி, இராசகுமாரி என்றும் பின்னொட்டாக சின்னராசா, இளையராசா, ஆனந்தராசா, திலகராசா என்றும் அரசன் என்ற பெயரை பின்னொட்டாக கொண்ட பெயர்களாக இளவரசன் தமிழரசன், கவியரசன் கலையரசன், அரசி, இளவரசி, போன்ற பெயர்களை ஆண், பெண் இருவருக்கும் சூட்டியுள்ளமையை காணமுடிகிறது,

இராசா, அரசன், அரசி என்ற சொற்களை முன்னொட்டாகவும், பின்னொட்டாகவும் கொண்ட பெயர்களைக் குழந்தைகளுக்கு வைத்துள்ள பெற்றோர்களாகிய வீரையன், வெள்ளையப்பன், குப்புசாமி, போன்ற சிலரிடம் உரையாடியதில் இராசா, அரசி, அரசன் என்ற உயர்வு கருதியும், பெருமை கருதியும் இப்பெயர்களைச் சூட்டியுள்ளதாக கூறினர்.

வடமொழிப்பெயர்கள்

குழந்தைகளுக்கு வடமொழிப் பெயர்களை அதிக அளவில் சூட்டியுள்ளதை மழலையர்ப்பள்ளிப் பெயர் பதிவேட்டில் உள்ளவாறு சதீஷ் என்ற பெயரே பல குழந்தைக்கு சூட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. விக்னேஷ், பிரகாஷ், விஜய், ராஜ், பிரதீப், வினோத், பிரவின் போன்ற ஆண் குழந்தைகளின் பெயர்களையும் வினோதினி, சர்மிளா, நதியா, தீபா, தீபிகா, நிஷாந்தி, சுகன்யா, ஷாலினி, ஜீவிதா, அமலா, போன்ற பெயர்களையும் சூட்டியுள்ளனர்.

சதீஷ் என்ற பெயர் வழங்கப்படும் ஒரு குழந்தையின் பெற்றோராகிய சுப்பன் என்பவரை அணுகி கேட்டபோது அவர் கூறியது திரைப்படத்தைப் பார்த்தே வடமொழிப் பெயரைச் சூட்டியுள்ளதாகக் கூறினார். சுகன்யா என்ற பெயருடைய குழந்தைகளின் பெற்றோர்களை அணுகிக் கேட்டபோது திரைப்படத்தில் வரும் நடிகையின் பெயரே வைத்துள்ளதாகக் கூறினார்கள்

தமிழ்ப்பெயர்கள்

தமிழ் என்ற பெயர்ச்சொல்லை முன்னொட்டாகவோ, பின்னொட்டாகவோ அமைத்து பெயர்கள் குழந்தைகளுக்கு சூட்டப்பெற்றுள்ளது. ஆண் குழந்தைகளுக்கு செந்தமிழ்ச் செல்வன், செந்தமிழ், தமிழ்ச்செல்வன், தமிழ்வேந்தன், என்றும் பெண் குழந்தைகளுக்கு தமிழரசி, தமிழ்மணி, செந்தமிழ்ச்செல்வி என்ற பெயர்களையும் சூட்டியுள்ளனர். இப்பெயர்கள் அரிதாக சிலருக்கே சூட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

காப்பியம், புராணம், கதாப்பாத்திரங்களின் பெயர்கள்

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு காப்பியங்களிலும், புராணங்களிலும் இடம் பெறும் கதாப்பாத்திரங்களின் பெயர்களை பெயராகவைத்துள்ளனர் பெண் குழந்தைகளுக்கு கண்ணகி அனுசுயா, மாதவி, மணிமேகலை, சீதா என்ற பெயர்களும் ஆண் குழந்தைகளுக்கு பாத்திபன், லட்சுமணன், பிரிதிவிராஜன், ராமன், சகாதேவன், தருமன் போன்ற பெயர்களும் காணப்படுகின்றன.

மாதம் தொடர்புடைய பெயர்கள்

கார்த்திகை, சித்திரை மாதம் பிறந்த குழந்தைகளுக்கு அம்மாதப் பெயர்களையே பெயராகச் சூட்டியுள்ளனர். கார்த்திகா, கார்த்திகாயினி, கீர்த்திகா, சித்திரா, சித்திராதேவி, எனவும் ஆண் குழந்தைகளுக்கு கார்த்திக், கார்த்திகேயன் என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளன. கீர்த்திகா, கார்த்திகா என்ற பெயர்கள் பலக்குழந்தைகளுக்குச் சூட்டப்பட்டுள்ளதை காணமுடிகிறது. காசிநாதன் என்பவரை கார்த்திகா என்று தங்கள் குழந்தைக்குப் பெயர் வைத்தக் காரணம் கேட்டதற்கு கார்த்திகை மாதம் பிறந்ததால் அப்பெயர் சூட்டியதாகக் கூறினார்.

சூரியன் தொடர்புடைய பெயர்கள்

சூரியன் தொடர்புடையபெயர்கள் ஆண் குழந்தைகளுக்கு மட்டும் பெயராக பெற்றோர்கள் சூட்டியுள்ளனர். பாஸ்கரன், கதிரவன், சூரியா என்ற பெயர்கள் வழங்குவதைக் காணலாம்,

கவிஞர்களின் பெயர்கள்

கவிஞர்களின் பெயர்களையும் தங்கள் குழந்தைகளுக்குப் பெயராக வைத்துள்ளனர். பாரதி, தேவபாரதி, பாரதிதாசன், அரவிந்தன், போன்ற பெயர்கள் ஆண், பெண் குழந்தைகளுக்கு பெயராகச் சூட்டப்பட்டுள்ளன.

பெயர்களின் அமைப்பு முறை

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பெயர்களின் முறையில் பெயர்கள் முன்னொட்டு பின்னொட்டு என்ற அமைப்பு முறையில் அமைந்துள்ளதை அறியமுடிகிறது. இம்முறை சங்ககாலம், பாண்டியர் காலம். இவற்றில் காணப்படுகிறது எனவே, குறுகிய ஒலியமைப்புடைய வடமொழிப் பெயர்களும் உள்ளன ஆண் குழந்தைகளின் பெயர்களில் 'ஷ்' என்ற ஒலியுடன் முடியும் பெயர்களை மிகுதியாக சூட்டப்பட்டுள்ளது தெரிய வருகிறது. பெண் குழந்தைகளின் பெயர்களில் 'யா' என்ற ஒலியுடன் முடியும் பெயர்களையே மிகுதியாக சூட்டப் பட்டுள்ளது.

டாக்டர் சு. சக்திவேல் அவர்களின வகைப்பாட்டிலும் அமைப்பு முறையிலும் பெயர்களை களாய்வு செய்தும் உற்றும் நோக்கியும் காணும்போது வடமொழி பெயர்களும் பெருந்தெய்வ பெயர்களுமே அதிகளவில் பலருக்கும் சூட்டப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. தங்கள் குழந்தைகளுக்கு வடமொழி பெயர்கள் சூட்டுவதற்குக் காரணம் திரைப்படத்தில் வரும் வடநாட்டு நடிகை நடிகர்களின் பெயர்களே. பெருந்தெய்வப் பெயர்கள் வளர்வதற்குக் காரணம் தெய்வத்தின்மீது ஏற்பட்ட பக்தியின் விளைவே என அறியப்படுகிறது. பழங்காலம் தமிழர்கள் பூ, மரம், செடி கொடி, ஆறு போன்ற இயற்கையோடு தொடர்புடைய பெயர்களை குழந்தைகளுக்கு வழங்கினர் என்பது வரலாற்று உண்மை. ஆனால் இப்பகுதி மக்கள் இயற்கையோடு தொடர்புடைய பெயர்களைச் சூட்டாமை ஆராயதக்கது எனினும் அமைப்புமுறையில் பழங்கால பெயரமைப்பு முறையாகிய முன்னொட்டு பின்னொட்டு முறையை அவ்வாறே இக்காலத்திலும் பின்பற்றப்படுவதை அறியமுடிகிறது.

இதே போன்று பல்வேறு பகுதிகளுக்குச் சென்று அங்கு வழங்கப்படுகின்ற பெயர்களில் காணப்படும் பெயரமைப்பின் பொதுக்கூறுகளை மேலும் ஆய்வு செய்வதால் மக்கள் மனதில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் தாக்கங்களையும் காணமுடியும் என்பது உறுதி.

பார்வை நூல்கள்

1. சக்திவேல். சு, மக்கட் பெயர் ஆய்வு
2. அரவிந்தன். மு.வை, மொழியியல் சிந்தனைகள்
3. கண்ணன். கு, தஞ்சை நகர மக்கட் பெயராய்வேடு,

ஈட்டில் ஈசுவரனும் பிற தேவதைகளும்

சோ. கி. கல்யாணி,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

திருவாய்மொழிக்கு உரையாய் அமைந்த 'ஈடு' விஷ்ணுவின் மேலான இறைமைத்தன்மையை, பரத்வத்தை மூன்று பத்துகளில் (1-1, 2-2, 4-10) விளக்குகிறது. பிற தெய்வங்களை விட உயர்ந்த விஷ்ணுவின் தன்மையை அவனது செயல்கள் ; பிற தெய்வங்களின் செயல்கள் ; அவற்றிற்குரிய புராணங்களின் தன்மைகள் என்பவற்றால் ஈடு நிறுவுகிறது. உபதேசங்கள், கேள்வி-பதில், சவால்விடுதல் என்ற மூன்று வகையில் இவற்றை ஈடு அமைத்துக் கொள்கிறது இத்தகு அமைப்பிற்கு அக்காலச் சமய, சமுதாயச் சூழல் காரணமாகிறது.

விஷ்ணுவின் தன்மையும் செயல்களும்

''கண்ணன் கண் அல்லது இல்லையோர் கண்ணே'' என்ற நம்மாழ்வார் வாக்கிற்கு, கண்ணன் கண்அற்ற வேறு கண் என்றால் மயில் தோகையில் உள்ள கண் (பீலிக்கண்) போன்று வேறொன்று இல்லை. திருமாலே காப்பாற்றுகிறவன் என்று (மாலே கண்) இருப்பவர்க்கு, இரவில் பொருள்களைக் காணாத மாலைக் கண் நோய் உடையவர்கள் போன்று மற்றைத் தேவர்களும் காக்கும் தகுதி உடையவர்கள் அல்லர் என்கிறது ஈடு[1]. 'பீலிக்கண்' ணிற்கும் கண் என்று பெயரிருப்பது போல், பிற தேவதைகளும் தெய்வம் என்ற பெயரை உடையனவே அன்றிக் காத்தல் வல்லன அல்ல. அது விஷ்ணுவுக்கே உரியது என்பது கூறப்படுகிறது.

விஷ்ணுவைத் தவிரப் பிற தெய்வங்களுக்குப் பூவும் பூசனையும் தகாது என்பதை, ''சிக்குத் தலையனைக்குப் பூத் தகாது; பிச்சையுண்ணிக்குப் பூசனை தகாது; பூத்தருவது சுகுமாரனுக்கு; பூசனை தருவது முதன்மையானவனுக்கு''[2] எனக் காரணம் காட்டுகிறது. வாமன அவதாரத்தின் போ உலகளந்து தன் மேன்மையை நிலை நாட்டியதைக் காட்டி, ''எல்லார் தலையிலும் காலை வைத்தவனை ஈஸ்வரன் என்னவோ? இவன் காலிலே துகையுண்டவர்களை ஈஸ்வரன் என்னவோ?''[3]

என்கிறது ஈடு. அனைத்தையும் படைக்கிற பிரம்மாவையே படைத்தவன் விஷ்ணு என்பதை, ''தேவ ஜாதியையும் சகல பதார்த்தங்களையும் உண்டாக்குகைக்காக ஒரு பூவிலே நாலு பூப் பூத்தாற் போலே சதுர்முகனை உண்டாக்கினவன்''[4] என்கிறது. ஆபத்துக்காலமான பிரளயத்தில், அப்போதே தோன்றிய ஆலந் தளிரில் கண் வளர்ந்து, எல்லா உலமமும் எல்லாத் தேவதைகளும் உயிரற்ற, உயிருள்ள பொருள்களும் பயமின்றித் தன் வயிற்றில் ஒடுங்குமாறு செய்த செயலைக் காட்டிப் பலவாறு புகழ்கிறது ஈடு[5]

அனைத்துச் சாத்திரங்களையும் கற்றாலும் மேலான பரம்பொருள் விஷ்ணு என்றறியாமல், அனைத்துத் தேவதை களுக்கும் பிறர் தலைவணங்கி நிற்க, இராமனுசரின் தரிசனத்தில் கல்வி அறிவற்ற பெண்கள் கூட விஷ்ணுவைத் தவிரப் பிற பிற தெய்வங்களை அடுப்பில் இடுகின்ற வெறும் கல்லாக நினைத்திருப்பதற்குக் காரணம், 'ஒன்றுந் தேவும்' என்ற பாசுரம் என்று எம்பாரின் வாக்கைப் போற்றுகிறது ஈடு[6].

மிகச் சுலபமாய் உயிருக்குக் கிட்டுகின்ற விஷ்ணுவை விட்டு விட்டுப் பிற தெய்வங்களை ஆராதிப்பதைக் கங்கைக் கரையில் கிணறு தோண்டுவார்க்கும், மூதேவி தன் மடியிலுள்ள செல்வத்தையே பார்த்திருப்பதற்கும் உவமைப்படுத்துகிறது ஈடு[7].

இவ்வாறு அனைத்தையும் படைக்கப் பிரம்மனைப் படைத்து, அவற்றை ஒடுக்கிக் காத்தலாலும் பூவும் பூசனையும் செய்யத் தகுந்தவனாய் இருப்பதாலும் விஷ்ணு ஒருவனே இறைவன்; ஈசுவரன் என்கிறது ஈடு.

பிற தெய்வங்களின் தன்மையும் செயல்களும்

''பல சொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற

சில சொல்லல் தேற்றா தவர்'' என்ற வாக்கிற்கேற்ப இறைவனது பெருமையைச் சில சொல்லால் கூறிய ஈடு, பிற தெய்வங்கள்ஈசுவரனாகாமையைப் பலபட்விரிக்கிறது. பிரம்மனது தலைகளுள் ஒன்றைச் சிவன் கிள்ளிப் பின் பாவத்தோடு அலைந்ததைப் பலவிடங்களில் ஈடு இகழ்கிறது. ''அவர்கள் நிலையை ஆராய்ந்து பார்த்தால், தலையறுப்பார் சிலரும்,

அறுப்புண்டு நிற்பார் சிலருமாகா நின்றார்கள்; அவர்கள் ஆபத்தைப் போக்கி இரட்சியா நின்றான் இவன்; அவர்களோ இவனோ ஈஸ்வரன்? என்கிறார்[8]. என்றும், நீங்கள் ஈஸ்வரர்களாகச் சம்பவித்தவர்களிருவரும் நின்ற நிலை கண்டலே; ஒருவன் தலை கெட்டு நின்றான, ஒருவன் ஓடு கொண்டு பிராயச்சித்தமாய் நின்றான். ஓட்டையோடத்தோடு ஒழுகல் ஓடமாய், உங்கள் குறைத் தீரப் பற்றுகிற நீங்கள் உங்களில் பெருங்குறை வாளரையோ பற்றுவது? ..... ஒருவனுடைய ஈசுவரத்துவம் தலையோடே போயிற்று. மற்றவனுடைய ஈசுவரத்துவம் அவன் கையோடே காட்டிக் கொடுக்கிறார்''[9] என்றும் ''தலையறுப்பாரும் அறுப்புண்பாருமாய், க்ராமணிகளைப் போலே ஒருவரையொருவர் வேரோடே அலம்பிப் போகவேண்டும் படியான விரோதம் செல்லா நிற்கச் செய்தேயும், ஆபத்து எல்லார்க்கும் ஒத்து இருக்கையாலே எல்லாரும் ஒரு மிடராய் ஆஸ்ரயிப்பார்கள்''[10] என்றும் ஈடு கூறுகிறது.

தெய்வங்கள் என்று போற்றும் தகுதியைப் பெற்று இருந்த போதும் இவர்கள் துன்பத்திற்கு உட்படுவர். ஆனால் எளிய ஆயர்குடியில் பிறந்த போதும் விஷ்ணு தன் காத்தல் தொழிலை விடான் என்பதை, ''இவர்கள் எத்தனையேறும் உயர நின்றாலும் அனர்த்தத்தையே சூழ்த்துக் கொள்ளுமித்தனை; அவன் எத்தனையேறும் தன்னைத் தாழ விட்டாலும் இரட்சகனாம்''[11] என்கிறது. பிற தெய்வங்கள் விஷ்ணுவை வணங்குதலையும், அவர்களின் மயக்கத்தையும் கூட ஈடு கூறுகிறது'' நீ இவற்றை மனைகிற போது (படைக்கையில்) எங்களையும் மனைந்து பின்னையன்றோ திர்யக்ஜாதிகளை உண்டாக்கிற்று. இறைவ என்னா நிற்பார்கள்''[12] என்று கூறி 'நீங்கள் ஆஸ்ரயிக்கின்ற தேவதைகள் இவ்வளவும் உங்களைக் கும்பிடு கொண்டு, இத்தனைபோது போய் அங்கே ஆஸ்ரயியா நின்றார்கள். அவர்கள் செய்கின்றவற்றைக் கண்டாகிலும் நீங்களும் அவனை (விஷ்ணுவை) ஆஸ்ரயிக்கப் பாருங்கோள்''[13] என்று நெறிப்படுத்துகிறது.

சிவன் மார்க்கண்டேயினிடம் முக்திபெற விஷ்ணுவைச் சென்று சரணடையக் கூறியதை, ''நீ நெடுநாள் பச்சையிட்டு ஆஸ்ரயித்தாய்; அவ்வாஸ்ரயணம் வெறுமன் போயிற்றதாக ஒண்ணாது' என்று அவனையழைத்து, நானும் உன்னோ பாதி

ஒருவனை ஆஸ்ரயித்துக் காண் இப்பதம் பெற்றது. இனி ஜ்ஞான் கொடுத்தல், உபதேசங் கொடுத்தலிறே' என்று அவனைக் கொண்டுபோய் சர்வேசுவரன் பக்கலிலே காட்டிக் கொடுத்தா னாயிற்று''[14] என்று பிற தெய்வங்களின் கூற்றாகவும் விஷ்ணுவின் பரத்வம் கூறப்படுகிறது.

இயல்பிலே ஓர் உயர்வும் இல்லாதது மட்டுமின்றி பெரியவனான விஷ்ணு இருக்க, மிகச்சிறியர்களான பக்தர்களிடம் ஆடு, கள் முதலானவற்றை ஏற்பதால் கள்ளர்களாகித் தேடிப் பிடிக்க வேண்டிய நிலையில் பிற தெய்வங்கள் உள்ளன. இதனை, ''...... நீங்கள் பொரிபுறந் தடவி வருந்திச் சேமம் சாத்தி வைந்து ஆஸ்ரயிக்கின்ற தேவதைகளையும் கள்ளரைத் தேடிப் பிடிக்குமா போல, தேடிப் பிடிக்க வேண்டியிருக்கிற படி. ஆடு திருடின கள்ளரிறே இவர்கள் தான்; அணங்குக்கு அருமருந்து என்று அங்கே ஆடு கட்டினவர்களாகையாலே தேடிப்பிடிக்க வேணுமே''[15] என்று இகழ்கிறது. பலியிடலை இங்கு ஈடு எதிர்க்கிறது.

இனி புராணங்களில் சிவன் முதலானோரின் தன்மை உயர்த்திக் கூறப்பட்டிருக்கிறதே? என்ற கேள்விக்கு ''இளி கண்ணனைப் புண்டரீகாட்சனாகக் கவிபாடித் தர வேணும் என்றும் எருமையை யானையாகக் கவி பாடித் தர வேணும் என்றும் சொல்ல, அப்படியே கவிபாடுவாரைப் போல இருப்பது ஒன்றிறே''[16] என்று இல்லாத சிறப்புகளைக் கூறுவன இலிங்க புராணம் முதலியன என்கிறது.

ஆறு புறச் சமயங்களும் பிரம்மாணத்திற்குப் பொருத்த மான தர்க்கம் இல்லாதவை என்பதை, ''சிலவற்றைச் சொல்லா நின்றால், தாங்களும் சில தர்க்கங்கள் சொல்லா நிற்கும் அத்தனை போக்கி, பிரமாணாநுகூல தர்க்கமல்லாமையாலே கேவலம் உக்திஸ்ஸாரமேயாயிருக்கிற பாஹ்யசமயங்களாறும்''[17] என்று கூறுகிறது ஈடு. இவ்வாறு அகச் சமயங்களில் சைவத்தை புறச்சமயங்கள் ஆறையும் தாக்குகிறது ஈடு.

பிற மதத்தினரின் கேள்வியும் அதற்குப் பதிலும் :

உங்களது இறைவன் தான் ஈசுவரன் என்றால் எங்களை எல்லாம் வேறு தெய்வங்களிடத்தில் ஈடுபாடு உடையவர்களாக ஏன் செய்தான்? என்று பிறமதத்தினர் கேட்டதிற்குப் பதிலாக,

ஈடு புண்ணியங்களையும் பாவங்களையும் செய்த ஆன்மாக்கள் அவற்றிற்குரிய பலன்களை அனுபவிக்க வேண்டும் என்ற சாஸ்திர மரியாதை அழிந்து விடக் கூடாது என்று இவ்வாறு செய்தான் என்கிறது. இவ்வாறு செய்தது அவனுடைய மாயை. எனவே விஷ்ணுவைச் சரணடைந்து அவனின் மாயத் தன்மை தன்மையிலிருந்து தப்புங்கள் என்று உபதேசிக்கிறது. ஈடு[18]. வைதிகனாயிருந்தாலும் விஷ்ணுவின் பெருமைகளில் பொறாமை கொள்பவன் நாஸ்திகனாவான் என்று மீண்டும் அகச் சமயிகளைத் தாக்குகிறது ஈடு[19].

ஒருவருக்கும் கட்டுப்படாமலும், ஒரு உடம்பையும் தனதுடம்பாகக் கொள்ளாத தெய்வம் விஷ்ணு ஒன்று தான். இத்தன்மையுடைய தெய்வம் வேறிருந்தால் காட்டுங்கள் என்பதை, "நான் அவனுக்கு பிரகாரமாய் அல்லது சுவந்திரமாயிருந்பதொரு தேவதை இல்லை என்றேன். இப்படி அனன்யாதீநமாயிருக்கிற நியாமகத்வத்தை யுடையனாய் இருக்கிற இவனைத் தனக்கு பிரகாரமாகவுடைய ஒரு தெய்வமுண்டு. "என்று சொல்லவல்லார் உண்டாகில் வாய் படைத்தார் என் முன்னே நின்று சொல்லிக் காணுங்கோள்"[20] என்று சவால் விடுகிறது.

அடிக்குறிப்புக்கள்

1. பகவத் விஷயம் - (பதி.ஆ.) கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் 1979 - பக் 93 - 94 (இரண்டாம்பத்து)
2. மேலது - ப 107
3 மேலது - ப. 104
4. மேலது - ப. 107 5. மேலது - பக் 119, 121, 421
6. பகவத் விஷயம் - (நான்காம் பத்து) - 1993 - ப. 365
7 பகவத் விஷயம் - (இரண்டாம் பத்து) - ப. 382
8 மேலது - ப. 97
9. பகவத் விஷயம் - (நான்காம்பத்து) ப - 398
10. மேலது - ப 412
11. பகவத் விஷயம் - இரண்டாம் பத்து - ப. 100
12. மேலது - ப. 130
13: மேலது - ப. 416
14. மேலது - ப. 412
15. மேலது - ப. 384
16 மேலது - ப. 401
17. மேலது - ப 418
18. மேலது - ப. 407
19. பகவத் விஷயம் ப. 391 (நான்காம் பத்து)
20, மேலது - ப. 403

மானாமதுரை வட்டாரத்தில் இன்றைய வழக்குகளும் காரணங்களும்

எஸ். ஜெயராணி.

ம.கா. பல்கலைக்கழகம்.

இன்றைய வழக்குகளும் காரணங்களும். பற்றிய இக் கட்டுரையில் பங்காளிகள் சொத்து விவகாரம். தகப்பனார் சொத்து முழுவதையும் தான் வைத்துக்கொண்டு தன் பிள்ளைகளுடன் பிரச்சினை செய்வது. தாய் தந்தைக்குப் பின் சகோதரனிடம் சகோதரிகள் சொத்து கேட்பது. அடுத்தவன் மனைவியைக் கூட்டிச் செல்வது. இளம் தம்பதிகள் வீட்டைவிட்டும். ஊரை விட்டும் ஓடுவது. மாடுகள் விவசாயத்தில் மேய்ந்ததால் பிரச்சினை. தண்ணீர் பாய்ச்சுவதில் பிரச்சினை. வீட்டில் திருட்டு. சாமி கும்பிடுவதில் பிரச்சினை, கோழியை அடித்ததால் பிரச்சினை, சுடுகாட்டிற்குச் செல்லும் வழியில் பிரச்சினை, விறகு வெட்டியதால் பிரச்சினை, திருமணத்தில் பிரச்சினை, வளைகாப்பில் பிரச்சினை, குழந்தை பிறந்தவுடன் பிரச்சினை, காதுகுத்துவதில் பிரச்சினை, தாய்மாமன் முறையான சீர்கொடுக்காததால் பிரச்சினை, வரதட்சணையால் பிரச்சினை, வாய்க்கால் பிரச்சினை, தம்பி அண்ணனை கொலை செய்ததால் பிரச்சினை, இறந்தவர் வீட்டில் பிரச்சினை, வேலை பார்த்த கூலியை முதலாளி கொடுக்காமல் தகராறு செய்வது. ரோட்டில் செல்லும் மனிதர்கள் மற்றும் ஆடு மாடுகள் மீது வாகனங்களை ஏற்றியதால் பிரச்சினை, பஸ், லாரி, மோட்டார்வண்டி, சைக்கிள் போன்ற வாகனங்களை கடத்திச் செல்லுவது, போன்ற வழக்குகள் பற்றியும், இந்த வழக்குகளுக்கான காரணங்கள் பற்றியும் காணலாம். இடவரையறை கருதி சில வழக்குகள் கூறப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பற்றிய பஞ்சாயத்து

சொத்துக்கள் பற்றிய வழக்கில் பாங்காளிகள் சொத்து விவகாரம், கணவனிடம் மனைவி சொத்து கேட்பது, மனைவியிடம் கணவன் சொத்து கேட்பது, மாமியாரிடம் மருமகள்

கேட்டது, தாய் தந்தைக்குறபின் சகோதரனிடம் சகோதரிகள் சொத்து கேட்பது போன்றவை சொத்துக்கள் பற்றிய பஞ்சாயத்தில் இடம் பெறுகின்றன.

பங்காளிகள் சொத்து விவகாரம்

பெரும்பச்சேரி என்ற ஊரில் 1988ஆம் ஆண்டு நாகேஸ்வரனுக்கும் இராக்கப்பனுக்கும் நடந்த சொத்துப் பிரச்சினையை நாட்டாமையாகிய அழகப்பன் தீர்த்து வைத்தார்.

நாகேஸ்வரன் நாட்டாமையான அழகப்பனிடம் சென்று பத்திரங்கள் மூலம் உள்ள பொதுச சொத்தை இரோக்கப்பனே அனுபவிக்கிறார் என்று சொன்னார். நாட்டாமை 'சரி பஞ்சாயத்து வைப்போம்' என்று கூறி அனுப்பி விட்டார். நாட்டாமை ஊர்க்காவலனைக் கூப்பிட்டு, 'தோட்டியிடம், நாளை பஞ்சாயத்து இருக்கிறது என்று 'தமுக்கு' போடச்சொல் என்று கூறினார். உடனே தோட்டி 'நாளை இரவு 8 மணிக்கு ஊர்ச்சபையில் கூட்டம், நடைபெற உள்ளது. அதனால் அனைவரும் வரவேண்டும். என்று தமுக்கு அடித்தார்.

மறுநாள் கூட்டம் கூடியது. தலைவர், வாதி நாகேஸ்வரனைக் கூப்பிட்டு 'என்னமோ நேற்று வந்து சொன்ன! என்ன பிரச்சினை என்று கேட்க, நாகேஸ்வரன்' பத்திரங்கள் மூலம் உள்ள பொதுச் சொத்தை இராக்கப்பனே அனுபவிக்கிறார், என்று சொன்னார். கிராமத் தலைவர் பத்திரங்களைப் பரிசிலனை செய்தபோது, இராக்கப்பனுடைய முன்னோர்கள் ஒரு ஏக்கர் நிலத்தை அவர்களாவே அனுபவித்து வந்தது தெரிய வந்தது.

கிராமத் தலைவர் பொதுச் சொத்தை ஆளுக்குப்பாதி பிரித்துவைக்க இராக்கப்பன் மறுத்தார். கிராமத் தீர்ப்பை நீ மதிக்காவிட்டால் கிராமத்தில் இருந்து தள்ளி வைத்து விடுவோம், என்று கிராமத் தலைவர் கூறினார். உடனே இராக்கப்பன் கிராமத்தை வணங்கி, கிராமத் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினார். நாகேஸ்வரனுக்குச் சேர வேண்டிய பங்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது.

கிராமத் தலைவர் அழகப்பன் பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர். நாகேஸ்வரனும் இராக்கப்பனும் அகமுடையர் இனத்தைச் சேர்ந்தவர்கள்

பாலியல் தொடர்பான பஞ்சாயத்து

பாலியல் தொடர்பான பஞ்சாயத்தில் மனைவியைக் கணவன் விவாகரத்து செய்தது. இளம் தம்பதிகள் தவறு செய்ததால் பிரச்சினை, காதலர்கள் பிரச்சினை, அடுத்தவன் மனைவியிடம் சேர்க்கையாக இருந்தது. கணவன் வேறொரு பெண்ணுடன் சென்றது, கணவனுக்கும் மனைவிக்கும் ஒத்துப் போகாமை, கணவனை மனைவி விவாகரத்து செய்தல், காதல் திருமணத்தில் விவாகரத்து ஆகியவை அடங்குகின்றன.

மனைவியைக் கணவன் விவாகரத்து செய்தது

மாறநாடு கிராமத்தில் 1987 ஆம் ஆண்டு முத்துக் குமாருக்கும் ராக்குக்கும் ஏற்பட்ட பிரச்சினையைக் கிராமத் தலைவர் மலைராஜ் தீர்த்து வைத்தார்.

முத்துக்குமார் ராக்குவைக் காதல் திருமணம் செய்தார். வேலை காரணமாக முத்துக்குமார் ராக்குவை ஊரில் விட்டு விட்டு வெளியூர் சென்றிருந்தார். திரும்ப அவர் வந்தவுடன் அவருடைய மனைவி ஆறுமுகம் என்பவருடன் கள்ளத் தொடர்பு கொண்டிருப்பதாக ஊர்மக்கள் கூறினார்கள். கணவர் முத்துக்குமார் அவளை அவளுடைய தகப்பன் வீட்டில் விட்டு விட்டு வந்தார். ஆறுமாதங்கள் ஆகியும் கூட்டிவரவில்லை. பெண்ணுடைய தந்தை முத்து கிராமத்தில் முறையிட்டார்.

கிராமத் தலைவர் முத்துக்குமாரைக் கூட்டி விசாரிக்கும் போது தக்க ஆதாரங்களோடு கூறியதால் கிராமத்தலைவர் மலைராஜ், முத்துக்குமார் மனைவியை விவாகரத்து செய்துவிட்டார்.

கிராமத்தலைவர் மலைராஜ் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர். வழக்கோடு சம்பந்தமான முத்துக்குமாரும் ராக்குவும் பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

விவசாயம் தொடர்பான பிரச்சினைகள்

விவசாயம் செய்யும்பொழுது ஏற்படும் பிரச்சினைகளில் மாடு மேய்ந்ததால் ஏற்படும் பிரச்சினை. வாய்க்கால பிரச்சினை போன்றவை அடங்குகின்றன.

தண்ணீர் பாய்ச்சும்போது ஏற்பட்ட பிரச்சினை

வாகுடி கிராமத்தில் 1958 ஆம் ஆண்டு பாலசண்முகம் சேர்வைக்கும் சிவபெருமானுக்கும் ஏற்பட்ட பிரச்சினையைக் கிராமத் தலைவர் ஆறுமுகம் தீர்த்துவைத்தார்.

தண்ணீர் பாய்ச்சும்போது ஏற்பட்ட தகராறில் பாலசண்முகம் சேர்வையை சிவபெருமான் அடித்துவிட்டார். பாலசண்முகம் சேர்வை கிராமத் தலைவரிடம் முறையிட்டார். சிவபெருமான் பாட்டி விட்டுக்கு ஓடிவிட்டார். அதனால் சிவபெருமானின் தம்பி இராமன் பொறுப்பு ஏற்றார். அவர் ரூ.1000 அபராதம் கொடுத்து மன்னிப்புக் கேட்க கிராமத்தார்கள் தீர்ப்பை முடித்துவிட்டனர்.

கிராமத்தலைவர் ஆறுமுகம் அகமுடையர் இனத்தைச் சேர்ந்தவர். வழக்கோடு தொடர்புடைய பாலசண்முகம் சேர்வை அகமுடையர் இனத்தைச் சேர்ந்தவர். சிவபெருமான் பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்.

வீட்டில் திருட்டு

கச்சநத்தம் கிராமத்தில் 1971 ஆம் ஆண்டு மணிக்கும் வடிவேலுக்கும் ஏற்பட்டப் பிரச்சினையைக் கிராமத் தலைவர் சுப்பிரமணியன் தீர்த்து வைத்தார். மணி தன் வீட்டுக்கு முன்னால் கடலைப் புண்ணாக்கு, எள்ளுப்புண்ணாக்கு, குருணைத்தவிடு ஆகியவற்றை ஓர் அண்டாவில் ஊற வைத்திருந்தார். ரோட்டில் சென்ற வடிவேலு புண்ணாக்கு களைக் கீழே கொடிவிட்டு, அண்டாவைத் தூக்கிக் கொண்டு ஓடியிருக்கிறான். மணி அவனைப் பார்த்து விட்டார். கையோடு அவனைப் பிடித்துச் சென்று கிராமத்தலைவரிடம் முறையிட்டார். கிராமத் தலைவர் ஆட்களை விட்டு அவனை அடித்துத்

தண்ணீர்கூடக் கொடுக்காமல் அறையில் பூட்டி வைத்தார். பிறகு அவன் மன்றாடி மன்னிப்புக் கேட்டதால் முகவரியை வாங்கிக் கொண்டு விரட்டி விட்டார்கள்.

கிராமத்தலைவர் சுப்பிரமணியன் அகமுடையர் இனத்தைச் சேர்ந்தவர். வழக்கோடு தொடர்புடைய மணி கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர். வடிவேல் பக்கத்து ஊரில் உள்ள ஆவரங்காட்டில் வாழும் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்.

வரதட்சணையால் பிரச்சினை

பெரும்பச்சேரி கிராமத்தில் 1972 ஆம் ஆண்டு பாரதிக்கும் ராஜாவுக்கும் ஏற்பட்ட பிரச்சினையைக் கிராமத் தலைவர் அழகப்பன் தீர்த்து வைத்தார்.

திருமணத்தின்போது பத்துப்பவுன்நகையும் ஒரு ஏக்கர் நிலமும் எழுதித் தருவதாகப் பாப்புசுந்தரம் மாப்பிள்ளை வீட்டாரிடம் கூறியிருக்கிறார். ஆனால் மூன்று பவுன் நகை குறைவாகப் போட்டார். திருமணம் ஆகி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. ஒரு குழந்தையும் இருக்கிறது. மாப்பிள்ளை வீட்டில் வறுமை தலைவிரித்தாடியது. மூன்று பவுன் நகையைத் தந்தையிடம் வாங்கிவருமாறு பெண்ணை மாப்பிள்ளை வீட்டார் துன்புறுத்தியிருக்கின்றனர். மாமியார் கொடுமை அந்தப் பெண்ணுக்கு அதிகமாக இருந்திருக்கிறது அந்தப் பெண் ஒரு நாள் இரவில் மலம் கழிப்பதற்காகச் சென்ற போது, மாமியார், எவனிடமோ போய் வருகிறாள் என்று கூற, மனம் நொந்த பாரதி, தன் தகப்பனார் வீட்டுக்கு வந்துவிட்டார். தகப்பனார் பாப்புசுந்தரம் கிராமத்தைக் கூட்டினார். கிராமத்தலைவர் மாப்பிள்ளையை வரச்சொல்லி கேட்டபோது மாப்பிள்ளை வீட்டார் பெண்மீது பொய்வழக்குச் சுமத்தினர். மாப்பிள்ளை வீட்டாரின் கொடுமைகள் தாங்கமுடியாத இந்தப்பெண், கிராமத்தலைவரிடம் மாப்பிள்ளை வீட்டார் கூறியது உண்மை என ஒத்துக்கொண்டாள். கிராமத்தலைவர் பெண்ணுக்குச் சேரவேண்டிய சொத்தைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களை விவாகரத்து செய்து, பெண்ணுக்கு வேறொரு திருமணத்தை கிராமமே முடித்து வைத்தது. மாப்பிள்ளை ராஜா வேறொரு திருமணம் முடித்துக் கொண்டார்.

விக்ரமாதித்யனின் படைப்புலகம்

க. நாகநந்தினி

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

நம்பிராஜன் எனப்படும் விக்ரமாதித்யன் ஒரு கவிஞனாக அதிகம் அறியப்பட்டிருந்தாலும் அவரது சிறுகதைகள் அவரை ஒரு சிறுகதையாசிரியராகவும அடையாளங்காட்டுகின்றன, அவருடைய கவிதைகளில் காணப்படும் படைப்புலகத்தை விட மிகவும் தீவிரமாகவும் அணுக்கமாகவும் சிறுகதை படைப்புலகம் காணப்படுகின்றது. படைப்பாளனைப் பாதிக்கும் முதல் பகுதியாக இழந்த வாழ்க்கை, மதிப்புகள், உறவுகள் இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் உறவுகளைத் தேடியலைவதும் உறவுகள் சிதைந்தநிலையில் போதைப் பொருட்களைத் தேடியடைவதுமான சீரழிவு நிலையைத் தான் இவரது கதைகள் காட்டுகின்றன. அதை அவரது சிறுகதை தொகுப்பாகிய 'திரிபு' மூலம் ஆராய்ந்து காணலாம். சுபமங்களா, தாய் இதழ்களில் வந்த சிறுகதையின் தொகுப்பே 'திரிபு' தனித்தனிச் சிறுகதைகளாக இடம் பெற்றிருந்தாலும் அவையனைத்தும் ஒரே கதையைத்தான் மீண்டும் மீண்டும் சுற்றி வருகின்றன. ஒரு படைப்பாளி எழுதியதைத்தான் மீண்டும் எழுதுகிறான் என்றபடி இதை நோக்கினாலும் சிறுகதைகள் என்பதைவிட ஒரு குடும்பத்தின் சீரழிவு பற்றிய நாவல் என்று கூறலாம். அந்த அளவிற்கு அனைத்து கதைகளும் ஒரே குடும்பத்தை சுற்றி வருகின்றன. சிறுகதைகள் புதினமாக வடிவம் பெறுவதை கதைகளின் வரிசமுறையில் மாற்றம் செய்து பார்த்தால் அறியலாம். கடன், பிழை சூரியசந்திரர்கள் 'வெறுஞ்சோற்றுக்கு வந்தான்' 'சாபம்' 'திரிபு' என்ற கதைகளும் மற்றுமுள்ள ஸைக்கிள், எலிஸபெத்ராணி, அஞ்சுதலை நாகம் போன்றவையும் ஒரு முழு நாவலின் பகுதிகளாக இடம்பெறுகின்றன. இதற்கானப் பாங்கினை இக்கட்டுரையில் காணலாம்.

சிறுகதையா? நாவலா ?

அப்பா, அம்மா, அக்கா, இருதம்பிகள், பெரியம்மா, அக்கா, அண்ணன், மதனிமார்கள் மற்றும் உறவுகளைச் சுற்றிச் சுற்றிப் பின்னப்பட்ட இக்கதைகள் முன்பே கூறியபடி ஒரு

நாவலுக்கான அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியபடி இருக்கின்றன. அனைத்துக் கதைகளிலும் ஒரு குடும்பம் மலையாளத்துக்காரியின் வரவால் சிதைகின்றது வறுமையால் உறவுகளைத் தேடிச் செல்லவேண்டியிருக்கிறது. ஒரு வேளைச் சோற்றுக்காக அலையும் வாழ்க்கையில் உறவுகள் சிலநேரம் உதவுகின்றன. சிலவேளைகளில் அவமானப்படுத்துகின்றன. மனித வாழ்க்கை குடும்ப உறவுகளினால் பாதுகாப்பு பெற்றாலும் பாதுகாப்பின்மையும் ஒரு சேர நேரிடும்போது ஏற்படும் மன உணர்வுகள் கதையாகச் சொல்லபோனால் பூரணன் அல்லது சின்னக் கருப்பையாவின் சுயசரிதையாக இடம்பெறுகிறது.

''என்ன, திருப்பித்திருப்பி, கல்லிடைக்குறிச்சியும், கல்லத்தி முருக்குத் தெருவும் காந்திமதி அம்மனும், அழகப்பனும், பாண்டியும் அப்பாவும் மலையாளத்துக்காரியும் வருவது போல இருக்கும். தனித்தனியர்க ஒரு சிறுகதையாகவும் மொத்தமாக ஒரு நவீனத்தின் கூறுகளாகவும் இருக்கிற இத்தொகுப்பின் கதைக்ள்''.

கல்யாண்ஜி முன்னுரை ப,1

என்ற கருத்திற்கேற்ப இக்கதைகள் இடம்பெறுவதைக் காணலாம்.

நாவல்-என்ற முழுமையான கதை வடிவத்தை நோக்கி இச்சிறுகதைகள் போகின்றன. எல்லாக்கதைகளின் கூறுகளையும் இணைத்துப் பார்த்தால் ஒரு முழுக்கதையே உருவாக்கிவிட முடிகிறது. பூரணன் அல்லது கருப்பையா தான் கதை கூறுகிறான் அவனது அப்பா நல்லவேளையில் இருக்கிறார். பிள்ளைமார் சாதிக்குரிய அழகு சிவாஜி போல இருக்கிற அவர் குடும்பத்தின் மீது பாசம் இருந்தாலும் சினிமா மோகத்தாலும், மலையாளத்துக்காரியான கமலா மீது கொண்ட காதலாலும் தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்கிறார், குடும்பத் தலைவியான லட்சுமி அம்மாவின் கதை தொடர்கிறது. அம்மா அப்பளம் செய்தும் ஐயர்வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்த்தும் இட்லிக்கு அரைத்தும் இன்றும் பலவேலைகள் செய்து தன் உறவுகளின் கையை எதிர்பாராது வைராக்கியத்துடன் உழைத்து தன் குழந்தைகளைக் காப்பாற்றுகிறாள். பூரணன் என்ற கருப்பையா, பெரியம்மா மகள் மற்றும் அத்தான் தயவால் விடுதியில் சேர்கின்றான். அக்காவும் படித்து முடிக்கிறாள்.

சேகர் என்ற தம்பி படிப்பில் போதிய நாட்டமின்றித் திரிகிறான் இதற்கிடையில் காந்திமதி, சிதம்பரம் என்ற இரு குழந்தைகள் அம்மை நோய்கண்டு இறக்கின்றனர். தொடர்கின்ற வறுமைப் பிடிக்கு இடையில் உறவினர்களின் கதையும், சேர்கின்றது அப்பாவுடன் சேர்ந்து வாழ்ந்த மலையாளத்துப் பெண் கமலாவின் அக்காவால் மற்றொரு ஆச்சியின் குடும்பம் பாதிக்கப்படுகிறது அந்த ஆச்சி சாபம் இடுகிறாள். இறுதியில் அப்பாவுடன் வாழ்ந்த கமலா வேறு ஒருவருடன் ஓடிவிட அப்பா மீண்டும் தன் சொந்த குடும்பத்துடன் இணைகின்றார். மீண்டும் திருந்தி வந்த அப்பாவை அம்மாவால் முழுதும் ஏற்கமுடியவில்லை. சந்தேகம் அவளை ஹிஸ்டீரியா நோயாளியாக மாற்றுகிறது. குடும்பம் வறுமையிலிருந்துமீண்டாலும் அம்மாவின் நோய்க்கூறால் மீண்டும் துன்பம் அடைகிறது இருப்பினும் அக்காள் திருமணம் முடிகிறது தம்பியை அதிக கவனம் எடுத்து படிப்பை முடிக்கவைத்தாலும் ஊர் சுற்றுகிறான் பூரணம். நிரந்தர வேலையின்றி மனைவி சங்கரியின் வருமானத்தை நம்பி வாழ்கின்றான். பூரணனுக்கு ஏற்பட்ட சிறுவயது அனுபவங்கள் மற்றும் குடும்ப உறவுகளில் ஏற்பட்ட சிதைவுகள். தற்போதைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் அவனை குடிகாரனாக்கி விடுகின்றன குடிப்பதற்கும் மனைவியின் காசை திருடி வருகிறான். தன்னை உணர்ந்த போதும் குடிப்பழகத்திற்கான காரணம், தன் சீரழிவுக்குக் காரணம் ஆச்சி கொடுத்த சாபம் என்றும் பிதற்றுகிறான். மனைவி மற்றும் நண்பர்கள் உதவியால் தன் வாழ்வில் ஏதேனும் இலக்கியம் படைக்கமுடியும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து செல்கின்றான், இக்கதை நாவலுக்குண்டான பெரியதொரு கதையாக எல்லாக் கதைகளிலும் இடம்பெற்றிருக்கிறதால் சிறு கதைத் தொகுப்பு என்பதை விட நாவல் என்றே கூறிவிடலாம் வர்ணனைகள் சிறுகதைகளில் அதிகம் இடம்பெறாத கூறான வர்ணனை இவர்கதைகளில் இடம்பெற்று நாவலாக நினைக்கும் வகையில் செயல்படுகின்றன பாத்திர வர்ணனைகளே மிகவும் அதிகம் எடுத்துக்காட்டாக அம்மாவைப்பற்றி வரும் வர்ணனை

'அம்மா கொஞ்சம் கோபக்காரிதான் ஆனால் சூது வாது இல்லாதவள்; இவர்கள் ஏதாவது பொய்பேசினால் பிரித்து எடுத்து விடுவாள். பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்தவள் என்றே

சொல்ல முடியாது அவ்வளவு நாகரிகம் லட்சுமி என்று எழுத்துக் கூட்டித்தான் கையெழுத்துப் போடுவாள் ஆனால் பார்த்தால் அப்படித் தெரியாது அம்மாவும் அப்பாவும் இருக்கிற போட்டோவில் அம்மாதான் அழகு அருமையாகச் சமைப்பாள் ரொம்ப கட்டும் செட்டுமாக குடும்பம் நடத்துவாள்'' (திரிபு பக் 87)

அப்பாவைப் பற்றி வருணனை

''அப்பா யாரையும் வளைத்துப் போடக்கூடியவர்களாக இருக்கலாம். ஆனால் அம்மா மதினியைப் பேசுவது பாவம் அப்பாவுக்கு ஜமீன் செக்ரட்டரி என்ற அந்நஸ்து இருந்தது. ஒரு நடிகனுக்குரிய உடம்பும் அழகும் எல்லோரையும் நின்று பார்க்க வைத்தது. நாப்பத்தஞ்சு வயசு என்றால் யாரும் நம்ப மாட்டார்கள் ஆச்சி போட்ட சாப்பாடு; தாத்தா சம்பாத்யத்தில் பாதி அப்பா உடம்புதான் அந்த உயரமும் கம்பீரமும் உரமும் பிள்ளைமார்களில் அபூர்வம் திருநெல்வேலிப் பிள்ளைமாருக்கான எல்லா கல்யாண குணங்களும் அப்பாவுக்கு உண்டுதான். ஆனால் அம்மா வீணாய்க் கற்பனை செய்கிறாள் அப்பா சிவாஜிகணேசன் மாதிரிதான் இருந்தார்கள் இவ்வளவு கஷ்டத்துக்கும் பிறகும் ஒரு வாட்டம் இல்லை ஜமீன் பழக்கத்தில் மான் கறி, மிளாக் கறி, முயல் கறியெல்லாம் சாப்பிட்டு சாப்பிட்டு விஸ்கியும் பிராந்தியும் மண்டை ராமையாத்தேவர் வடிசரக்கும் குடித்துக் குடித்து தேவமாராகவே ஆகி விட்டிருந்தார்கள், பேச்சு. பழக்கவழக்கம் எல்லாவற்றிலும் பெண்கள் ஆசைப்படத்தான் செய்வார்கள். (திரிபு. ப. 112)

சிறுகதைகளில் பாத்திரவர்ணனை அளவுக்கு அதிகமாக இடம்பெற்று இருப்பது ஒரு பலவீனம் என்றாலும் விக்ரமாதித்யன் கதைகளை ஒரு நாவல் என்று நோக்கும்போது நாவலில் இடம் பெறும் ஒரு பாத்திரம் பற்றிய சித்தரிப்பு முழுமையாக வெற்றி பெறுகிறது. அம்மா, அப்பா தவிர மதினிமார்கள், அக்காமார்கள் பற்றிய வர்ணனைகளும் நாவலில் இடம்பெறத்தக்க பாத்திர வர்ணனைகளாக இடம் பெறுகின்றன. இத்தகைய வர்ணனைகளும் சிறுகதைகளை நாவல் என்று எண்ணுவதற்கு இடமளிக்கின்றன.

குடும்ப உறவுகள்

சிறுகதைகள் அனைத்தும் ஏதேனும் ஓர் உறவைச் சுற்றியே அமைகின்றன. ஒரு கதையில் இடம்பெற்ற அதே உறவுக்காரர்கள் பிற கதைகளிலும் இடம்பெறுகின்றன. அம்மா கூடப் பிறந்தவளான பெரியம்மை, அவளது மகள் பிச்சம்மக்கா, மகன் ஆவுடையப்பன். அண்ணாச்சி, குழந்தையன்ணன், மதினிமார்கள், கமலாச்சித்தி. கடையில் வேலை பார்க்கும் அப்துல், பாண்டியன், அக்கா, தம்பி சேகர், அப்பா, அம்மா இத்தகைய குடும்ப உறவுகள் சிதைந்த விதம், சிதைவடையக் காரணமான வறுமை, நெருக்கடி போன்றவை எல்லாக் கதைகளிலும் இடம் பெற்று ஒரு முழுமையான 'குடும்ப நாவலாக' மாறக் கூடிய அளவில் உறவுகளின் சிக்கல்கள் பேசப்படுகின்றன.

'பெரியம்மா' என்ற உறவு எல்லாக் கதைகளிலும் ஒரு இணைப்பாக செயல்படுகிறது.

வால கருப்பய்யா அம்மா நல்லஇருக்காளால... அக்காதம்பிங்க எப்படி இருக்காங்க ...? சாப்பிடுதியால ... ஏன்இப்படிமுகம் கறுத்து வாடிப் போயிருக்கு''?...... என்று வறுமைக் கிடையிலும் வரவேற்று உபசரிக்கிறாள், தங்கை மகளுக்குத் திருமணம் செய்து வைக்கிறாள்.

பெரியம்மாவின் மகள் பிச்சம்மக்கா விடுதியிலிருந்து வரும் அவனை வயிறு வாடாமல் பார்த்துக் கொள்கிறாள். இருந்த போதும் வாராவாரம் சோற்றுக்காக விடுதியிலிருந்து வரும் அவனை பெரியம்மா கண்டிக்கின்றாள். 'எல கருப்பியா ... என்னடா இது .. இந்த மாரியாலே கொண்டான் கொடுத்தான் வீட்டுக்கு வந்துகிட்டு இருக்கது. என்னல நினைப்பாங்க நம்ம பத்தி .. யாருக்குல கேவலம் இது ... உங்க அம்ம எவ்வளவு வைராக்கியகாரி ... நீ இப்டி இருக்கியலே ... இனிமே இந்தமாதிரி சோறு திங்க வரக்கூடாதுல ... அக்காவும் ஏற்கனவே சொல்லி இருக்காளாய்ல அவ என்கிட்ட வந்து சொல்லுதா ... நீ சொன்னாத்தான் கேட்பாங்கா. அவளுக்குக் கஷ்டம் கொடுக்கலாமா ... புத்தியா பிழைச்சுக்கே''

என்னவோ தெரியவில்லை அப்புறம் அப்புறம் பிச்சம்மக்கா வீட்டுக்குப் போவதே அருகிப்போயிற்று, அம்மைக்கும் பெரிய அம்மைக்கும் கூட உறவு இற்று நைந்து போயிற்று.

(திரிபு - பக். 37,38)

பாமாவின் தலித்திய பெண்ணிய நிலைப்பாடுகள்

சு. பூங்கொடி

ம.கா.ப மதுரை

தலித் இலக்கியம், தலித் பண்பாடு, தலித் அரசியல் போன்ற கருத்தாக்கங்களின் அறிமுகம், விவாதங்கள், அமைப்பு, முயற்சிகள், எதிர்வினைகள் தலித்திய விமர்சனங்கள் என்பதாக முக்கியமான பங்கை வகிக்கின்றது. அவ்வகையில் தொண்ணூறு களின் தொடக்கத்தில் 'கருக்கு' என்ற தன் வரலாற்றுக் கதை மூலம் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமானவர் பாமா, இந்த முதல் நூலிலேயே மிகவும் கவனிப்பிற்குள்ளானவர். தலித் இலக்கிய உலகில் இவரது படைப்புச் செயற்பாட்டினை 'கருக்கு' என்ற நாவல் வழி ஆராய்வதன் மூலம் தலித்திய பெண்ணிய நிலைப் பாடுகள் குறித்த அவரது கருத்தாக்கங்களை வெளிக்கொணரு வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கருக்கு—தன் வரலாற்று நாவல்

இந்நாவலை சமூகத்தால் பாதிக்கப்பட்ட தலித் பெண் ஒருவரது வாழ்க்கை அனுபவங்களைத் துயரத்துடனும் ஆவேசத் துடனும், எழுதப்பட்ட ஒரு தன் வரலாற்று நாவல் எனலாம். ஒடுக்கப்பட்டோரின் தன் வரலாறு ஒரு சமூக அமைப்பின் விரிந்துரையாகவும் சித்திரிப்பின் நீட்சியுமாகும்என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். அவ்வகையில் இந்நாவல் இந்திய சமூக அமைப்பின் பின்முகத்தன்மைகளையும் அது போற்றி வளர்த்து வரும் சமூக பொருளியல் அநீதிகளையும் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

படைப்புச் செயற்பாடு

பாமாவின் 'கருக்கு' என்ற நாவலை மட்டும் வைத்துக் கொண்டோ, அப்படைப்புச் செயற்பாட்டின் தளங்களை பிரித்துக் கொண்டோ அவரது கருத்தாக்கங்களை வரையறை செய்வது முழுமையான ஆய்வாக அமையாது. எனினும் தலித் பெண்

எழுத்தாளர் என்றமுறையில் அவரது கருத்தாக்கங்களின் பதிவினை அறிவதற்கு நாவலின் தளங்களை ஆராய்வது அவசியமாகின்றது அத்தளங்கள் பின்வருமாறு.

1. தலித் மொழி வழியாக தலித் பண்பாட்டினை அதன் கலாச்சாரத்தினைப் பதிவு செய்தல்
2. நில ஆக்கிரமிப்பு எண்ணத்தாலும் தலித் மக்களின் முன்னேற்றத்தினாலும் பொறாமை கொண்ட உயர் சாதியினர் தலித் பண்பாட்டின் மீது நிகழ்த்தி வருகின்ற ஒடுக்குமுறைகளை மையப்படுத்தல்.
3. மதம் என்ற நிறுவனமே அடிமைத்தனத்தின் மூலாதாரம் என்பதனை உணர்ந்து நிறுவன எதிர்ப்பையே தலித்தின் கலகக் குரலாய் எதிரொலித்தல்.
4. மதத்தின் பெயரால் தோன்றிய சீர்த்திருத்த நிறுவனங் களிலும் கூட குழந்தைகளின் உழைப்புச் சுரண்டப் படுகிறது என்பதை மையப்படுத்துதல்.
5. பெண் சுதந்திரத்தை மையப்படுத்துதல்.

இந்நாவல் முழுமையும் படைப்பாளியின் நேரடி அனுபவம் சார்ந்ததும் அனுபவத்தின் விளைவாகத் தான் பெற்ற சமூகப் புரிதலின் வெளிப்பாடுமேயாகும்,

தலித் நிலைப்பாடுகள்

1. ஒரு சமுதாயத்தின் அடிப்படையிலிருந்து எழும் எந்த ஒரு பிரச்சனையை விவாதிக்கும் போதும் சில தகவல்கள் மிகவும் அவசியமாகின்றது. அவற்றில் சமூகவியலும், மனோவியலும் தவிர்க்க இயலாது. எனவே சமூக அமைப்பில் ஒருவனுக்கு அல்லது ஒரு பிரிவினருக்குச் சமூகம் கொடுத்துள்ள பங்கு நிலை, அவைகளின் அந்தஸ்து மற்றும் அதிகாரம் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தியே இந்நிலைப்பாட்டை அறிய இயலும்.

அவ்வகையில் ஊர் வர்ணனை, வாழ்க்கை முறை, விவரங்கள், பெயர்களில் உள்ள அரசியல், கல்வி நிலையங்கள், கிறிஸ்தவ மதத்தின் சாதியத்தன்மை, கிறித்துவ மடத்தின்

வாசியாக இருந்து கண்ட உண்மைகள் என பல வகைகளில் தலித் வாழ்க்கையை காட்டுகிறது, கருக்கு.

2. மசாலி, முருகன் சொனப்பின்னி, காக்கா, டேப்ப டூமு என்ற பட்டப்பெயர்களால் அறியப்படும் மக்களது சுயமரியாதையை முளையிலே கிள்ளி விடும் சம்பவங்கள் காட்டாக : நாயக்கருக்கு வடை வாங்கி வரும் பெரிய ஆளு கயிறைப் பிடித்துப் பொட்டலத்தை தூக்கி வந்தது தீண்டாமையால் எனப் புரிந்ததும் ''எனக்கு வந்த ஆத்திரத்துல வடயவே கையுட்ட தொட்டுப் போடணும் போல இருந்துச்சு'' (ப. 12) எனவரும் வேகம் இந்நூலின் மிகப்பெரும் பலம். மேலும் தலித் மக்களை மேல் சாதியினர் தங்களது ஒழுக்க மதிப்பீடுகளை மனத்தளவில் ஏற்றுக் கொள்ளும் வகையில் அதாவது உளப்பாங்கு ரீதியாகவும் ஒடுக்கு முறை மூலம் மேற்கொண்டுள்ளனர் என்பதையும் ஆசிரியர் விளக்குகின்றார். (ப. 13)

3. மதமும் அரசும் கைகோர்த்து இணைந்து தனது கருத்தாக்கங்களை 'நிறுவனங்களின்' வழி செயற்படுத்துவதை பாமா தான் சாரும் நிறுவனங்களின் வழி பெறும் அனுபவங்களின் வழி விளக்குகின்றார். இந்து சமயத்தில் வெறுப்படைந்து தலித் என்ற சமூக அடையாளத்தையே இழந்து எல்லோருடனும் சமம் எனப் பழக வேண்டும், வாழ்க்கை நடத்த வேண்டும் என்று கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய தலித்களின் நிலை அங்கும் அதே அடையாளத்தை இழக்காமல் கேவலப்படுகின்ற அவலநிலையும் அரசு அதிகாரத்தின் செயல்பாடுகள் சாதி, வர்க்க, ஒழுக்க மதிப்பீடுகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளமையும் விரிவாக விளக்கப் பட்டுள்ளது. இக்கருத்தாக்கங்கள் உளப்பாங்கு ரீதியாகக் தலித் மக்கள் ஏற்றுக் கொள்ளும்வகையில் தயார்படுத்தப்படும் நிலைகளும் இந்நாவலில் (பக். 19-21) சுட்டப்படுகிறது. கிறிஸ்துவ மடங்களில் நடக்கும் அநீதிகளை அறிந்த பின்னரும் கன்னியாஸ்திரியாக சேரவேண்டும் என்ற ஆசிரியரின் ஆவல் 'கருக்கு' நூலில் வெளிப்பட்டிருக்கும் தன்மை இரண்டு நிலைகளில் உள்ளதை கூறலாம்.

1. ஒரு மத ரீதியான கருத்தாடலாகக் கொண்டால் 'கடவுள் அமைப்பு' என்ற பூடகத்தன்மை பெற்று விடும்.

2. சமூக சேவை என்ற உந்துதல்-சமூக ரீதிக்கான சட்டமாக இதைத்நேர்ந்தெடுத்தல் என்று கொண்டால் அதை மதநிறுவனங்கள் பற்றி பாமா வைக்கும் விமர்சனங்கள் புறந்தள்ளி விடுகின்றன

. தலித் களின் உழைப்பு மேல்சாதியினரால் சுரண்டப்படுவதால் தலித்களின் பொருளாதார நிலை பின்தங்கியே இருக்கிறது என்பதை மடங்களின் சட்டதிட்டங்கள் மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் தலித் குழந்தைகளின் நிலை ஆகியவற்றின் மூலம் (பக். 45, 84) பதிவு செய்துள்ளார்.

4. 'பெண் சுதந்திரத்தை மையப்படுத்துகையில் பெண்களின் சிக்கல்கள் 'சாதி, மதம்' ரீதியாக ஒடுக்கப்படுவதைக் கூறும் பாமா வெளிப்படுத்தாத அம்சம் என்னவென்றால் பால் கூறுகளை (Sexual) பற்றிய வெளிப்பாட்டுச் சூழல்களில் அவற்றைத் தவிர்க்கும் தன்மையைச் சுட்டலாம். காட்டாக, சினிமா பார்க்க பறையர் பெண்கள் அனுமதிக்கப்படாதது பற்றிய குறிப்பு (ப 48)

பொம்பளப்புள்ளகள 'பலசாதிக்காரப் பெயலுக கையைப் பிடிச்சு இழுத்தால்' வரும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக என்ற வாதம், பாமாவின் எதிர்வினைகள் (பிரதிபலிப்பு) ஏதுமின்றி சொல்லப்படுகிறது ''பிடிக்காத பெண்ணைக் கட்டி வைத்தால் போட்டு அடிக்கிறானாம்'' என்ற கூற்றும் இன்னுமொரு இடத்தில் வருகிறது. எனவே மதம், சாதி சார்ந்த அடக்குமுறைகளைப் பற்றிய தனது ஆதாரங்களைத் திட்டவட்டமாக பதிவு செய்யும் பாமா, இந்நூலின் ஓர் இடத்திலும் பால் அம்சங்களை மறந்தும் வெளியிடவில்லை ஆனால் தலித் ஆக உள்ளதால் பெற்ற அனுபவங்கள் பதிவாகி உள்ளன. அத்துடன் அதற்குரிய எதிர் வினைகளும் கூறப்பட்டுள்ளன : அவையாவன.

(1) தலித் மக்கள் கல்வியறிவு பெறுதல் வேண்டும்.

(2) தலித் மக்களின் ஒருமித்த குரலாக புரட்சி இருத்தல் வேண்டும். அதற்கு முதலில் மனத்தளவில் விடுதலையைபெற வேண்டும்.

(3) மனித நேயத்தை நோக்கிய 'புரட்சி' அமைதல் வேண்டும்

(4) தலித் என்ற அடையாளத்தை இழக்க வேண்டுமாயின் ஆதிக்க நிறுவனங்களின் மதிப்பீடுகளை உதறி வெளியேற வேண்டும். அதன் மூலம் சுதந்திரத்தை வரையறை செய்கிறார்.

மதிப்பீடு

பாமா தனது சாதி ஒழுக்கங்களை எந்த விதத்திலும் குறைவானது இல்லை என்பதை எதிர் கலாச்சார ஒழுக்க மதிப்பீடாக பதிவு செய்துள்ளார். தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ்வதற்கு தலித்களுக்கு வழி சொல்லும் பாமா அவ்வாறு இருப்பது மேலாதிக்க சமுதாயத்தில் முடியாதா என மன உளச்சலுக்கு ஆட்பட்டுத் தடுமாறும்போது 'தலித்' என்ற சொல்லாட்சியை சாதி அடிப்படையில் அமைத்து தன் எல்லையைக் குறுக்கி விடுகின்றாரோ என்ற ஐயத்தை தோற்று விக்கின்றது. இருப்பினும் சமூக மாற்றத்தில் நம்பிக்கை கொள்வது பாராட்டற்குரியது.

கல்வி, பொருளாதாரத்தில் தலித் உயர்ந்தால் தலித் அடையாளம் 'போய் விடும்' என்று ஒருபுறம் குரல் கொடுக்கும் பாமா அதே சமயம் எப்படி முன்னுக்கு வந்தாலும் தலித் தனது அடையாளத்தை இழக்க முடியாது என சோர்வு கொள்வது கலக தலித் இலக்கியப் போக்கிற்கு உதவாது.

தலித் பெண் எழுத்தாளர் என்ற வகையில் பால் அம்சங்களைப் பற்றிய வெளிப்பாட்டு மறுப்பு, அந்த உணர்வு வெளிப்பாட்டைத் தவிர்க்க வேண்டும் என்பதன் வெளிப்பாடாக அமைகிறது. இந்த மௌனம் ஒடுக்கப்பட்டோரின் கலகக்குரலில் பால் சார்ந்த குரல் இன்னமும் ஏங்கி ஒலிக்காததன் வெளிப்பாடாகவும் தலித் பண்பாட்டிய பெண்ணின் சிந்தனைகளை ஒருங்கிணைக்கும் அரசியல் உணர்வு உருவாகாததன் விளைவாகவும் இருப்பதை உணர முடிகிறது இருப்பினும் சாதி பண்பாடு, பொருளாதார அடிப்படையிலும் இட ஒதுக்கீடு அடிப்படையிலும் தங்களுக்குள் ஏற்படும் முரண் பாடுகளை அடையாளங்களை இனங்கண்டு பதிவு செய்திருப்பது 'தலித் இலக்கிய வரலாற்றில்' முக்கியத்துவம் பெறுவதாக அமைகின்றது.

சிற்றூர் வழக்கு மன்றங்களின் செயல் பாடுகள்

வே. முருகேஸ்வரி சீனிவாசன்

ம. கா. ப. மதுரை.

சிற்றூர்களில் வாழும் மக்களிடையே தோன்றும் சிக்கல் களை பஞ்சாயத்து அமைப்பு அலசிப்பார்த்து அதற்குத் தீர்ப்புக் கூறுகின்றது ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனிப் பஞ்சாயத்து அமைப்புக்கள் இருப்பதால் அவற்றின் செயல்பாடு களிலும் பல நிலைகள் இருக்கின்றன. பஞ்சாயத்தின், தன்மை களையும், வழக்குகளின் தொடக்கம், விசாரனை, முடிவு போன்ற செயல்பாடுகளைகாண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பஞ்சாயத்தின் தொடக்கம்

வாதி, பிரதிவாதி பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப் பினர்கள் ஆகியோர் அடங்கிய அமைப்பே பஞ்சாயத்து ஆகும். வாதி என்பவர் மற்றவரால் பாதிக்கப்பட்டவராக இருப்பார். இவர் பாதிப்பு எற்படுத்தியவர் மீது வழக்குத் தொடுப்பவர், குற்றம் சாட்டப் பட்டவர், பிரதி வாதி என அழைக்கப்படு கிறார். பொதுவாகப் பாதிக்கப்பட்டவர் பஞ்சாயத்தைக் கூட்டு மாறு முறையிடுவது மரமாக உள்ளது. பாதிக்கப்பட்டவர் பஞ் சாயத்துத் தலைவரிடம் சென்று எனக்கு இவ்வகையில் பாதிப்பு எற்பட்டுள்ளது என்றும் அதற்குக் காரணம் இவர் என்றும் பெயரைக் குறிப்பிட்டுத் தனக்கு ஏற்பட்ட இழிப்பையும், குறிப் பிட்டு தனக்கு நியாயம் வழங்கும்படி வேண்டுவார். உடனே பஞ்சாயத்துத் தலைவர் ஒடும்பிள்ளையை அழைத்து ஊர் சாட்டச் சொல்லுவார். பஞ்சாயத்திற்கு இப்படி ஒரு வழக்கு வந்துள் ளது. என்பதைக் தெரியப்படுத்துவதற்காக ஊர்சாட்டுவார் கள் ஒடும்பிள்ளை மாலை 6 மணிக்குமேல் தெருத்,தெருவாகச் சென்று தெருவின் முச்சந்திகளில் அல்லது நாற்சந்திகளில் நின்று கொண்டு வழக்கு யார்யாருக்கு நடைபெறுகின்றது என்பதைக் கூறி அனைவரும் கூட்டத்திற்கு வரும்படி வாயால் சத்தம் போட்டு அழைப்பார். கிராமங்களில் பகலில் பெரும்பான்மை யோர், விவசாயத் தொழிலுக்குச் சென்று டுவதால் 'கால அருமை கருதி இரவு 9 மணிக்கு மேல் பஞ்சாயத்தைக் கூட்டு வர். இக் கட்டுரைக்கு, களமாக அமைந்த வாலாங்கோட்டை,

குரும்பபட்டி, கொம்புக்காரன் பட்டி ஆகிய ஊர்களுக்குள்ள பொது வான சிக்கல்களைத் தீர்ப்பதற்காகப் பகல் நேரங்களில் பஞ் சாயத்து நடைபெறுவதுண்டு.

சிற்றூர் வழக்கு மன்றங்களின் வழக்குகளை முன் வைத்தல்

பஞ்சாயத்துத் தலைவர், உறுப்பினர், வாதி, பிரதிவாதி மற்றும் கலந்து கொள்ளும் பொது மக்கள் அனைவரும் பஞ் சாயத்து நடைபெறும் இடத்தில் ஓடும் பிள்ளையின் தகவல் வழிக் கூடுவர். வாதி ஒரு பக்கமும் பிரதிவாதி, மறுபக்கமும் நிற்பர். பொது மக்கள் தலைவர் உறுப்பினர்கள் அமர்ந்திருப்பார்கள், வாதியும், பிரதிவாதியும் ஆணாக இருப்பின் மேலாடை இன்றி தலைப்பாகையை அவிழ்த்து இடுப்பில் கட்டிய வண்ணம் கை களை முன்புறம் கட்டிக் கொண்டு நிற்க வேண்டும். பெண்ணாக இருப்பின் கைகட்டி நின்றால் மட்டும் போதும். தலைவர் பஞ் சாயத்து முறைப்படி தொடங்குகிறது என அறிவிப்பார். உடனே வாதி, பிரதிவாதி இருவரும் சபையை நோக்கி விழுந்து வணங்க வேண்டும். இவ்வாய்விற்குக் களமாக அமைந்த கொம்புக் காரன் பட்டி, குரும்பபட்டி, என்ற ஊர்களில் வாதி, பிரதி வாதி இரு வரும் ஒன்னேகால் ரூபாய், வெற்றிலைபாக்கு என்ற அளவில் இருவரும் சபைக்கு தனித்தனியே காணிக்கையாக வைக்கச் சொல்லுவார் பஞ்சாயத்துத் தலைவர். இந்த முறை சற்று மாறு பட்டு வாலாங்கோட்டையில் 5 ரூபாய் காணிக்கையாக வைக் கிறார்கள். வாதி, பிரதிவாதி இருவரும் காணிக்கை வைத்த பின்சபை எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுகிறேன் என்று உறுதி யளிப்பார்கள். பஞ்சாயத்து முடியும் வரை ஓடும்பிள்ளை கையில் கம்புடன் நின்ற வண்ணமே இருப்பார். இந்த முறை குரும்ப பட்டியில் பள்ளர், இனப் பஞ்சாயத்து அமைப்பிலும், வாலாங் கோட்டை பறையர் இனப் பஞ்சாயத்து அமைப்பிலும் இல்லை. கொம்புக்காரன்பட்டி பஞ்சாயத்து அமைப்பிலும், வாலாங் கோட்டை நாயக்கர் இனப்பஞ்சாயத்து அமைப்பிலும், குரும்ப பட்டியில் சாதி இந்துக்களான வெள்ளாளர், ஆசாரி, கன்னார். நாடார், மணியார், தேவர், வண்ணார், ஆகியோர் அடங்கிய பஞ்சாயத்து அமைப்பிலும் இம்முறை அமைந்துள்ளது,

விசாரணை

முறைப்படி பஞ்சாயத்து தொடங்கியவுடன் தலைவர் பஞ்சாயத்தைக் கூட்டச் சொன்னவரைப் பார்த்து என்ன காரணத்திற்காகப் பஞ்சாயத்தைக் கூட்டவைத்தீர்கள் என்ன? நடந்தது. என விளக்கமாகக் கூறும்படி கட்டளையிடுவார். வாதி நடந்தவற்றைக் கூறுவார் அப்பொழுது கூடியுள்ள அனைவரும் கவனித்துக் கொண்டிருப்பர். வாதி கூறி முடித்துச் சபையை வணங்கி ஓரமாக நிற்பார். பின் தலைவர் பிரதி வாதியைக் கூப்பிட்டு வாதி உன் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் உண்மையா? எனக் கேட்பார். வாதி கூறியது உண்மை எனப் பிரதி வாதி ஒத்துக் கொள்கிறேன் என்று கூறினால் தலைவர் பிரதி வாதியை அவருக்குரிய இடத்தில் இருக்கும்படி கூறுவார்.

பின் தலைவர் பஞ்சாயத்து உறுப்பினர்களை நோக்கி நடந்தவற்றை எல்லாம் இருவரும் கூறியதை வைத்துப் பார்த்தால் பிரதிவாதி தன் தவற்றை ஒத்துக்கொள்கிறார் நம் சாதி வழக்கப்படியான தீர்ப்பைக் கூறலாமா? எனக் கேட்பார். உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களைக் கூறத் தலைவர் வாய்ப்பளிப்பார். உறுப்பினர்களின் கருத்துக்களனைத்தையும் கேட்ட பின் தலைவர் தன் தீர்ப்பை பெரும்பான்மையும் ஏற்றுக் கொள்வர். பஞ்சாயத்து வழங்கும் சிறு தண்டனையைப் பிரதிவாதி ஏற்றுக் கொள்வார். பின்பு பஞ்சாயத்துத் தலைவர் இத்துடன் பஞ்சாயத்து கலைகிறது எனக் கூறுவார். பஞ்சாயத்திற்கு வந்த அனைவரும் கலைந்து செல்வர்

மறுப்பு

வாதியின் குற்றச்சாட்டுகளைப் பிரதி வாதி மறுப்பதும் உண்டு. வாதி தவறான பொய்யான தகவல்களைத் தருகிறார் அவ்வாறு நடைபெறவில்லை எனப் பிரதிவாதி தன் பக்கத்து நிலையை எடுத்துரைத்து. மறுக்கும் நிலையில் பஞ்சாயத்தார் சாட்சிகளை அழைப்பர்.

சாட்சிகள்

இரண்டு பக்கத்தினரும் தங்கள் சாட்சிகளின் பெயர்களையோ, அல்லது இருவருக்கும் பொதுவான சாட்சிகளையோ குறிப்பிடுவர். பஞ்சாயத்துத் தலைவர் ஒவ்வொரு சாட்சியாக

விசாரிப்பார். வாதி, பிரதிவாதி இருவரின் முறையீட்டையும், சாட்சிகளின் நிலையையும் கேட்டறிந்த பஞ்சாயத்தார் பிரச்சினைக்கு மூல காரணம் யார்? யார் என்ன கூறினர்? யார் மீது அடிப்படைக் குற்றம்? என்று தீரவிசாரிப்பார். தலைவரும் உறுப்பினர்களும் தங்களுக்குள் வழக்கின் நியாயங்களையும் தவறுகளையும் விவாதிப்பர்.

விவாதம்

கடுமையான விவாதங்கள் நடைபெறும் சமயங்களில் பஞ்சாயத்து உறுப்பினர்கள் காரசாரமான விவாதங்களில் ஈடுபடுவதுண்டு. பல பஞ்சாயத்துக்களில் எவ்வித முடிவு மின்றி, வெட்டுக்குத்து என்ற அளவில் சென்று பல வருடங்கள் கழித்து மீண்டும் கிராமப் பஞ்சாயத்து மூலமே தீர்வு காணப்பட்ட வழக்குகள் ஏராளம். பிரச்சினைக் குரிய வழக்குகள் பல பக்கத்துக் கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளின் மூலம் தீர்க்கப்படுவதுண்டு.

பஞ்சாயத்து செயல்படும் விதம்

கிராமப் பஞ்சாயத்து ஒரு வலுவான அமைப்பாகப் பல கிராமங்களில் இன்றும் நிலவுகிறது. நீதி மன்றங்களிலும் காவல் நிலையங்களிலும் தீர்க்கப்பாடத வழக்குகள் பல கிராமப் பஞ்சாயத்தின் தீர்க்கமான தீர்ப்புக்களாகும். தெய்வத்தின் முன் அமர்ந்து வாதி, பிரதிவாதி இருவரிடமும் சத்தியம் வாங்கிக் கொண்டு பஞ்சாயத்து நடைபெறுவதால், பொய் சொன்னால் தெய்வ நிந்தனைக்கு ஆட்டுபடுவோம் என்ற அச்சத்தின் காரணமாகப் பொல் சொல்லுவதைத் தவிப்பார்.

பஞ்சாயத்துக்குக் கட்டுப்படாதவர்களைக் கிராமம் ஒதுக்கி வைத்துவிடும். சிற்றூர் வழக்கு மன்றம் நிலைத்திருப்பதற்குக் காரணம் அதன் முடிவெடுக்கும் தன்மையேயாகும். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று சரியாக முடிவெடுப்பார்கள். மேலும் சிற்றூர் வழக்கு மன்றத்தின் முடிவே இறுதியானது என்பது கிராமத்தின் எழுதப்படாத சட்டம் ஆகும் அரசு நிறுவனமும் சிற்றூர் வழக்கு மன்றத்தின் மூலம் எடுக்கும் முடிவை இன்றும் ஏற்றுக் கொள்கிறது.

சாதிக்குள் நிகழும் வழக்குகளில் வாதி பிரதிவாதி இருவரும் ஒரே இனத்தைச் சார்ந்தவராகவும், உறவுக்காரர்களாகவும், இருப்பர். இந் நிலையில் உறவு என்பதை மறந்து, நீதி இறை

யாண்மை, கிராமப் பொது நலன் போன்றவற்றின் அடிப்படையிலேயே முடிவு எடுக்கப்படுகிறது. பல பஞ்சாயத்துத் தலைவர்கள் தன் முடிவை வழங்கும் திறமையில் ஒரு நிலையான நியாயத்தால் சிறப்பான பெயரைப் பெற்று இருப்பார். இது தலைமுறை, தலைமுறையாக நீடித்து அவரின் குடும்பமே பஞ்சாயத்தின தலைமைப் பொறுப்பை வகிக்கும் சூழலை உருவாக்கித் தருகிறது. வழக்கு முடிவுகள் கடந்த கால வழக்குகளை அடிப்படையாகக் கொண்டும் கிராம ஒற்றுமையை வழியுறுத்துவதாகவும் இருக்கும்.

தீர்ப்பு வழங்குதல்

வழக்கைச் சார்ந்த இருவர் பக்கத்து நிலைகளையும் நன்கு விசாரித்துச் சாட்சிகள் வாக்கு மூலங்களை ஆதாரமாகக் கொண்டு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டுத் தலைவர் தன் அனுபவத்தைக் கொண்டு தீர்ப்பு வழங்குவார். தீர்ப்புச் சாதாரண வழக்குகளுக்குக் கூடக் கடுமையானதாக இருக்கும். இதன் நோக்கம் தவறு செய்தவன் திருந்த வேண்டும் என்பதும் இது போன்ற தவறுகள் இக் கிராமத்தில் அல்லது சாதியில் இனியும் நிகழக் கூடாது என்பதுமாகும். தலைவரின் தீர்ப்பு பாதிக்கப் பட்டவரின் நலனைவிடச் சாதி, ஊர், நலனை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுதல்

பஞ்சாயத்தின் தீர்ப்பைச் சாதிக் கட்டுப்பாடு அல்லது ஊர்க்கட்டுப்பாடு கருதி பிரதிவாதி ஏற்றுக் கொள்ளுவார். தீர்ப்புக் கடுமையாக இருப்பின் தண்டனையின் அளவைக் குறைக்கும்படியும் வேண்டலாம். ''தாங்காது சாமி'' தாங்காதுங்க'' என்று எத்தனை முறை வேண்டுமானாலும் கேட்கலாம். தண்டனையின் அளவைக் குறைக்கும் படி வேண்டுதலே தண்டனையை ஏற்றுக் கொண்டதாகத் தான் பொருள்.

இக்கட்டுரையின் மூலம், மக்களிடையே தோன்றும் சிக்கல்களுக்கு தீர்வு பஞ்சாயத்தின் செயல்பாடுகள் வழியாக கிடைக்கிறது என்பதையும் சிற்றூர் வழக்குமன்றங்கள் எவ்விதம் செயல்படுகிறது என்பதையும் அறியமுடிகிறது.

தோட்டக்காரி நாவலில் பெண்ணியத் திறனாய்வு

மெ. செந்தாமரை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

தோட்டக்காரி என்ற நாவல் 1989 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. சமூக மேம்பாட்டையே குறிக்கோளாகக் கொண்டு திகழும் ராஜம் கிருஷ்ணனின் நாவல்களுல் தோட்டக்காரியும் ஒன்று ஆணின் அக்கிரமத்துக்கு விதியை துணைக்கு அழைத்துக் கொண்டு நில்லாது, இவ்விருபதாம் நூற்றாண்டில் புத்திபூர்வமாக, புது அர்த்தத்துடன் வாழ நினைக்கும் பெண்ணிற்கு, அவளது குடும்பம் உறவுகள் சார்பினால் ஏற்டும் நெருக்கடியை இந் நாவல் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்நெருக்கடியை பெண்ணியத் திறனாய்வு நோக்கில் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணியத் திறனாய்வு :

பெண்ணியம் என்பது ஆண்களுக்கு எதிரான இயக்கம் அன்று. காலம் காலமாக அடிமைப் பட்டு வாழும் பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டு, விழிப்புணர்வினை ஊட்டி சமூகத்தில் ஆணுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத்தருவது ஆகும். இம்மதிப்பினைப் பெற ஆண்கள் தடையாக இருக்கும் பொழுது மட்டுமே எதிரிகளாக ஆகின்றார்.

''பெண்ணியத்தைப் போற்றுவிரும்பும் பெண்களுக்கு அப் பெண்ணியம் பொறுத்துக் கொள்ள முடியாத அன்னியத்தை அளித்து விடுகிறது''-1 பெண் என்பவள் உடலுறவிற்கும்; குடும்பத்திற்கும் மட்டுமே ஏற்றவள் என்ற பழமைக் கொள்கையை எதிர்த்தனர். பெண்ணியத் திறனாய்வாளர்கள். கல்வியறிவும், வெளியுலக அனுபவமும் தான் பெண்களின் உணர்வுகளில் ஒரு விழிப்பினையும் கூர்மையினையும் உண்டாக்குகின்றன.

கதைச் சுருக்கம் :

சரயு என்ற கதைத் தலைவி மத்தியதரவர்க்கத்தைச் சார்ந்தவள். ஐம்பது வயதைத் தாண்டியவள் இரண்டு மகன்களும், ஒரு மகளையும் உடையவள், இப்பெண். சரயுவின் கணவர்

மனைவியின் எண்ணங்களையும் மனைவியையும் நேசிக்கவும் கற்றுக் கொண்டவர். ஆனால் தன் மகள் சுமதியின் திருமணம் மதத் கொண்டு அவள் சார்ந்த குடும்ப உறவுகளால் ஏற்படும் நெருக்கடிகளை வெளிக் கொணரத்துடிப்பவள். காலங்காலமாகப் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தனது கருத்து அரங்கு பேப்பரின் மூலம் வெளியிடுகிறாள். சரயுவிற்கு ஆதித்யா, கோதுபாய் போன்றோர்களின் நட்பு கிடைக்கிறது. அவர்களின் உதவியுடன் புனாவில் விமன்ஸ் ஸ்டடீஸில் ஆராய்ச்சி பண்ணச் செல்கிறாள். தன் கணவரின் விருப்பத்துடன் தான் செல்கிறாள். ஆனால் குடும்பத்தை விட்டுச் சென்றதால் தன் மகளாலும், மகளின் குடும்ப உறவுகளாலும் குதறப்படுகிறாள். ஸில்வியா என்ற இளம் ஆராய்ச்சி மாணவி சமூகத்தில் எதிர் நீச்சல் போட்டு வாழும் பெண் சுமதி என்பவள் புருஷன்ங்கற ஆணைக்குப் பயந்து தியாகம் பண்ணவே பிறந்தோம் என்றும் நினைக்கும் பெண், ஆனால் சாயு தன் மகளைப் போல் இல்லாது தன் மகளின் குழந்தைகளுக்கு சுதந்திரம் வெளிச்சம் வேணும் என்று குழந்தைகளை அழைத்து வரச் சொல்கிறாள்.

வரதட்சனை

ஆணாதிக்க சமுதாய அமைப்பில் மணம் பேசப்படும் பொழுது பெண் வீட்டாரிடமிருந்து வரதட்சணையாகப் பொருளாகவோ, பணமாகவோ வாங்கப் படுகின்றது. முற்காலத்தில் கல்யாணத்தின் போது பெற்றோர் உன் மகளுக்கு அன்பு காரணமாக பொருள் களைக் கொடுத்தனர். நாளடைவில் அதுவே வரதட்சனையாக வலுப்பெற்றது. இவ்வரதட்சனையே மத்தியதர வர்க்கத்தினருக் கும் பாதகமாக அமைந்தது. இந்நாவலிலும் சுமதியின் திருமணம் பணத்தாலும் நகையாலும் நிச்சயிக்கப்படுகின்றன. சுமதியும் படித்து பட்டம் பெற்று அரசுத்துறை அலுவலகமொன்றில் வேலை பார்ப்பவள். சுமதி கறுப்பாகப் பிறந்த காரணத்தினால் நகையும் பணமும் கூடுகின்றதே ஒழிய குறையவில்லை ''கல்யாணச் சந்தையில் கறுப்புப் பணத்திற்கு கிராக்கி இருந்ததே ஒழிய கறுப்புப் பெண்ணிற்கு மதிப்பில்லை'' ஐம்பது சவரனும் ஐந்து கிலோ வெள்ளியும் ரொக்கமாக இருபதாயிரம் ரூபாயும் மாமியாரால் கேட்கப்பட்டு, இறுதியில் முப்பது பவுனும், வெள்ளிப் பாத்திரங்கள் சிலவற்றுடன், செலவிற்கு ஐயாயிரம் என்று நான்கு

மாதங்கள் கழித்து திருமணம் நடந்தது. ஆண் என்பவன் சொத்திற்குரியவன். பெண் ஆணின் உடைமைப் பொருள் என்று காலங்காலமாகப் போற்றப் பட்டு வந்த மரபுகள் இதற்கு காரணங்களாகின்றன. ஆண் என்பவன் வீட்டிலும் வெளியிலும் ஆதிக்கம் செலுத்துபவனாக ஆக்கப்படுகின்றான். படித்து பொருளாதாரம் சார்ந்து உரிமை பெற்றாலும் நாம் பெண் எனும் இரண்டாம் தர நிலையிலேயே காணப்படுகின்றோம். இந்நிலை மாறினாலொழிய சமூகத்தில் நிலவும் இக்கொடிய தீமைகளைக் களைதல் இயலாது.

திருமணம்

நமது சமூகத்தில் திருமணம் என்பது வெறும் வியாபாரம் தான்! ஒரு சிறு கெட்டகுணம் கூட இல்லாத சீலமுள்ளவர்! சமூகத்தில் ஒரு பெரியபுள்ளி இதைவிட ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும் என்று நினைத்து தனது பெண்ணை வியாபாரப் பொருளாக்கி விடுகின்றனர் பெண்ணின் பெற்றோர்கள் இந் நாவலில் வரும் சுமதியின் திருமணமும் வியாபாரமாகத்தான் நடக்கிறது. அருணன் ஒரு கல்லூரி ஆசிரியன் டாக்டர் பட்டத் துக்கான ஆராய்ச்சியையும் முடித்திருக்கிறான். ''இந்திய அறிவியல் மற்றும் சமூக வரலாற்றுப் பொருளாதார ஆய்வுக் கழகத்தில் ஒரு முக்கியமான உறுப்பினர். இவருடைய நேரடித் தொடர்பு கிடைத்ததே வாழ்வின் பெரிய திருப்புமுனை எப்படியேனும் இந்தக் கல்யாணத்தை முடிக்கிறது தான் மேல்'' என்று கருதி வரதட்சணையுடன் திருமணம் செய்து வைக்கின்றனர் சுமதியின் பெற்றோர். தன் மகள் சந்தோசமாக வாழ்வாள் என்று நினைத்த சுமதியின் பெற்றோருக்கு அவளின் வாழ்வே ஒரு சுமையாக அமைந்து விடுகின்றது. சுமதியின் மென்மை, மனித உணர்வுகள் போன்றவற்றை அழித்து புருஷன் என்ற ஆணைக் பயந்து தியாகம் பண்ணுபவளாகக் காட்டப்படுகிறாள், இந்நிலை ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலையில் சமுதாயத்தில் மாற்றம் நிகழ்ந்தாலன்றி இது ஒழிக்கப்பட முடியாத தீமையாக மாறும்.

காதல் திருமணமும், கலப்புத் திருமணமும் திருமணத்திற்கு குறுக்கே நிற்கிற வரதட்சணை போன்ற தடைகளை நீக்கு கின்றனவே ஒழிய ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலையிலோ,

பெண்ணுக்கு நிறைவைத் தருவது திருமணம், குடும்பம் குழந்தைகள் என்ற அடிப்படைச்சிந்தனைகள் சமூகத்தில் எந்தவித மாற்றத்தினையும் ஏற்படுத்தவில்லை. இந்நாவலில் வரும் ரவிந்திரன் கலப்புத் திருமணம் செய்து கொண்டவன். பொருளாதாரப் பற்றாக் குறையினாலும், மாமனார் வீட்டில் எல்லாச் சீர்வரிசைகளும் செய்து பெண்ணைக் கொடுக்கவில்லை என்ற ஆற்றாமையினால் மனைவியைக் கடிந்து கொள்கிறான். இவற்றை நியாயப்படுத்துவதற்காக குடிக்கவும் செய்கின்றான். இந்நிலை ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலையையே சுட்டு கின்றது.

பொருளாதாரம்

பெண் வேலை செய்து பொருளீட்டி வரும் நிர்பந்தத்திற்கு ஆளாகிறாள். தொழில் புரிவது என்பது பொழுது போக்கிற்கு மட்டுமல்ல. சமூக பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாறு தல்கள் பெண்கள் பொருளீட்டவேண்டியதன் அவசியத்தை உண்டு பண்ணுகின்றன. இன்று அனைத்துத் துறையிலும் பெண் போட்டியாக வந்திருப்பதை ஆண் உணர்ந்திருக்கிறான். பெண் ணின் சம்பாத்யம் இல்லாமல் இன்று குடும்பம் நடந்த இயலாது என்பதையும் ஆண் உணர்ந்திருக்கிறான். இந்நாவலில் வரும் சுமதியும் பொருளாதாரப் பற்றாக்குறை காரணமாக அரசு அலு வலகம் ஒன்றில் வேலைக்குச் செல்கிறாள். ''சுமதியின் கணவன் அவளுடைய மாசச் சம்பளத்துக் காகத்தான் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறான். உள்ளூற மாமியார் செய்த சீரெல்லாம் போதாது என்று பிடுங்கல், வேலைக்குச் செல்லும் பெண்ணுக்கு ஒரு வசதி கிடையாது, வெளியிலும் உழைத்து வீட்டிலும் உழைக்க வேண்டும்''-ச் என்ற சரயுவின் பேச்சு பெண் கல்வி யறிவும், பொருளாதார சுதந்திரம் பெற்று இருந்தாலும் ஆணுக்குள்ளதான் பெண் அடக்கம் என்ற நிலையிலேதான் பெண்களின் மதிப்பு இருந்து வருகின்றது. இதனால் பெண்ணின் சுயமரியாதையும், ஆளுமைப் பண்பும் முற்றிலும் அழிக்கப்பட்டு வருகின்றது.

குடும்பத்தில் பெண்ணின் மதிப்பு

குடும்பத்திலும், சமூக அளவிலும் ஆண்கள் பெண்களின் மீது அதிக அளவில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். குடும்பம் என்ற அமைப்பில் ஆண் எந்தப் பொறுப்பினையும் ஏற்க மாட்டான். ஆனால் பெண்ணிற்கு குழந்தை வளர்ப்பும், சமையலறைப் பொறுப்பும் பெண்ணையே சார்ந்தது. ''பெண்ணின் சுதந்திரம் குடும்பத்தின் நலத்திற்கு ஒர் அறிய சக்தியாகத் திகழ முடியும்'' குடும்பத்தில் ''ஆணும், பெண்ணும் தனித்தனி அலகுகளாகக் கருதப்பட வேண்டும். இதுவே பெண்ணுக்குத் தரப்படும் உண்மையான மதிப்பு'' என்கிறார் ராஜம் கிருஷ்ணன், ''குடும்பத்தில் ஆணின் ஸ்தானத்தைப் பறிப்பது நோக்கமானது அதே ஸ்தானம் பெண்ணும் வரவேண்டும்'' என்கிறார், சிவசங்கரி. ''காலம் காலமாக பெண் என்பவள் தியாகம் செய்ய வேண்டியவள், சுமக்க வேண்டியவள் என்ற பண்பில் ஊறியிருக்கிறார். குடும்பம் என்பது ஒர் ஆணின் சுக வசதிகளுக்காக இயங்குவதாக நினைக்கிறார்கள்' என்ற சரயுவின் பேச்சு மூலம் குடும்பம் என்ற அமைப்பு பெண்ணிற்கு பாதகமாக அமைந்துள்ளது. என்பதை அரண் செய்கின்றது. இன்றைய பெண்கள் கல்வி கற்றும் பணி புரிந்தும் தங்களை மனிதப் பிறவியாக உணர முடியாத சார்பு நிலையில் இருப்பதையே இச்சமூக அமைப்பு வலியுறுத்துகிறது

பெண்ணுரிமைச் சிந்தனைகள்

குடும்ப சமூக அமைப்புக்களில் பெண்களுக்கு சம உரிமை மறுக்கப்படுவதும், தனித்துவம் மறுக்கப்படுவதும் இன்றையப் பெண்களின் பிரச்சினைகள் ஆகும். இக்குடும்ப சமூக அமைப்புக்களில் காணப்படும் பெண்ணடிமைக் தனத்தையும், ஆணாதிக்கத்தை எதிர்த்து சமஉரிமை பெறுவதையும், தனித்துவம் போற்றும் பாங்கும், பெண்களை இழிவு படுத்துதலை எதிர்த்துப் போராடி பெண்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது பெண்ணியவாதிகளின் வரிசையில் ராஜம் கிருஷ்ணனும் ஒருவர், அவர் தமது நாவலில் பெண்ணுரிமைச் சிந்தனைகள் கொண்ட பெண்ணாக சரயு, ஸில்வியா போன்ற பெண்களைப்படைத்துள்ளார்.

கரூர் வட்டாரத்தின் திருமணப் பாடல்கள்

அ. இளவரசி

அரசர்கல்லூரி - திருவையாறு.

திருமணச் சடங்குகள் காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம், குழுவுக்குக்குழு வேறுபடுவதுண்டு. திருமணம் என்பது ஒரு புனிதமான சடங்காக இன்றுவரை கருதப்பட்டு வருகிறது. அதாவது பெண்பருவமடைந்த போதே திருமணப்பாடல்கள் பாடும் வழக்கம் தொடங்கிவிடுகிறது. பூப்பெய்திய நிகழ்ச்சியைக் கொண்டாடும் போதே திருமணத்தைப் பற்றி பாடத்தொடங்கி விடுகின்றனர். ஒரு பெண் பருவமடைவது சமூக வாழ்வில் ஒரு பெரிய நிகழ்ச்சியாக நடத்தப்படுகிறது. பின்னரே அப்பெண்ணிற்கு கணவனைத் தேடவிழைகிறார்கள். அதாவது பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நிகழ்த்தப்படும் திருமணத்திலேயே திருமணப் பாடல்களை பாடுவர்.

கருர் வட்டாரத்தில் பாடிய பாடல்களில் பந்தலிட்டு அலங்காரம் செய்வதைப் பற்றியும், வெத்தலை பாக்கு வைத்தல் பற்றியும், பெண்ணுக்கு அளிக்கும் சீர்வரிசைகள் பற்றியும், மணமகன் மணமகள் இருவரையும் கேலி செய்தும் இப்பாடல் களை பாடியுள்ளார்கள்.

கள எல்லை

கருர் வட்டத்திலுள்ள வீரியப்பட்டி, லந்தக்கோட்டை, புதூர், திருமலைநாதன்பட்டி, செல்லாண்டிப்பட்டி போன்ற ஊர்களிலிருந்து ரெட்டியார் என்ற இனத்தவரிடமிருந்து மட்டுமே பாடல்கள் சேகரிக்கப்பட்டு அவர்களின் சமூதாய பழக்க வழக்கங்களை அறிய முடிந்தது.

பாக்கு வைத்தல்

திருமணம் உறுதி செய்த பின் அழைப்பிதழ்கள் அச்சிடப் பட்டு நெருங்கிய உறவினர்க்கும், நண்பர்க்கும் வெத்தலை

பாக்குடன் அலைப்பு விடுக்கப்படும் தாய்வழி மாமன்மார்க்கு பணத்துடன் பாக்கு வெத்தலைவைத்து அழைப்பர்.

''பெரிய மடிக்கோலி பூமியெங்கும் பாக்கு வைத்தார்
சின்ன மடிக்கோலி சீமையெங்கும் பாக்கு வைத்தார்
சீமையெங்கும் பாக்கு வைத்தார்.
பரமலோககாரர்க்கும் பக்கம் நின்று பாக்கு வைத்தார்
நம்முடைய சம்பந்திக்கு நவரத்தின பாக்கு வைத்தார்
நவரத்தின பாக்கு வைத்தார்.
வீரனார் கோயிலுக்கு விதவிதமா பாக்கு வைத்தார்
அய்யனார் கோயிலுக்கு அள்ளி அள்ளி பாக்கு வைத்தார்
புள்ளையார் கோயிலுக்கு புடிப்புடியா பாக்கு வைத்தார்
புடிப்புடியா பாக்கு வைத்தார்''

என்ற பாடல் திருமணத்திற்காக அனைவருக்கும் பாக்கு வைத்து வரவேற்ற முறை தெளிவாவதோடு மணமக்கள் வாழவேண்டி இறைவனுக்கு வேண்டுதல் செய்த முறையும் தெளிவாகத் தெரிகிறது.

இப்பாடல், மாற்றார் வீட்டார் ஒருவர் வந்து உங்க வீட்டுத் திருமணம் மிகச் சிறப்பா நடந்தது என்று பேசிக் கொண்டிருந்தார். அதனைக் கேட்ட இவர், நான் அனைவருக்கும் அன்புடன் பாக்கு வைத்து வந்ததால்தான் அனைவரின் வருகையுடன் திருமணம் சிறப்பாக முடிந்தது என்று பாடல் மூலமே பாடிக்காட்டியுள்ளார்.

பந்தல் அலங்கரித்தல்

பந்தல் அலங்காரங்களை எல்லாம் அவரவர் செல்வ வளத்திற்கும், தகுதிக்கும் ஏற்ப அமைந்திருக்கும்.

''மூங்கி மரம்பிளந்து முக்காதம் பந்தலிட்டார்
தேக்கு மரம்பிளந்து தெருவே பந்தலிட்டார்
இட்டார்கள் பந்தல்கள் ஏரநூத்தி காதவழி
தொட்டார்கள் பந்தலது தொண்ணூத்தி

என்ற பாடல் திருமணத்திற்காக பந்தல் அலங்கரித்த முறையினை உணர்த்தி நிற்கிறது. அவர்களது செல்வச் செழிப்பினையும் வெளிப்படுத்துகிறது. மேலும்,

''தண்ணூர் துறைக்கண்ட மட்டும் தங்கத்தால் கால் நிறுத்தி
வெண்ணீர் துறைக்கண்ட மட்டும் வெங்கலத்தால் கால் நிறுத்தி
மாரியம்மா கோயில் மட்டும் மல்லிகைப்பூ கால் நிறுத்தி
புள்ளையார் கோயில் மட்டும் புங்கப்பூ கால்நிறுத்தி
இட்டார் பந்தல்கள் எரநூத்து காதவழி
தொட்டார்கள் பந்தலது தொண்ணூத்தி காதவழி''3

இப்பாடல் எவ்வளவு தூரம் பந்தல் போட்டனர் என்பதை தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது.

இவை பந்தல் போட்டுக் கொண்டே இருக்கும் பொழுது பாடப்பட்டவை ஆகும். அதாவது அந்த ஊர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்று தெரிந்து கொள்ள முதலில் தெருவைப் பற்றியும், பின்னர் தண்ணீர் துறை, கோயில் போன்ற அனைத்து பகுதிகளையும் அலங்கரித்துள்ளோம். என்று தம் பாடல்கள் மூலம் வெளிக்காட்டியுள்ளார்கள்.

பெண்மகள் வீட்டார் பாடுவது

பெண்ணின் சகோதரிகள் மற்றும் சகோதரி உறவு உடையவர்களும் அக்காவைப் புகழ்ந்தும், மாப்பிள்ளையை பழித்தும் பாடுகிறார்கள். மணமகன் எத்தனை அழகாக இருந்தாலும் அவனை அழகில்லாதவன் என்று நையாண்டியாக பாடுவதும், கள்ளத்தனமானவன் என்று கேலி செய்வதும் திருமணப்பாடலில் இடம்பெற்றுள்ள கூறுகளாகும். மணமகனை பழித்தும், மணமகளை புகழ்ந்தும் பாடும் பாடல்.

''மண்ணோறி மண்மிதிச்சு மாங்கலிய சட்டி பண்ணி
சட்டி எண்ணி காசு வாங்கும் சாணர் மகன் நீர்தனையா
குண்ணோறி குண்மிதிச்சு குங்கலியச் சட்டி பண்ணி
சட்டி எண்ணி காசுவாங்கும் குயவர்மகன் நீர்தனையா
ஆளாச்சு அழகருன்னு சொன்னீங்களே பொண்டுகளா

முழியழகர் குந்திருக்கும் முட்டிக்காலை பாருங்கடி
முன்னூறு எலுமிச்சங்காய் முறுக்கிப் புழிஞ்சாலும
முழியழகன் தொந்திக்குதான் அத்தனையும் காணாதடி''

என்று அத்தனை ''சாப்பாட்டு ராமன்'' என்று கேலி செய்து பாடியுள்ளனர். இப்பாடல் நகைச்சுவை ஊட்டுவதாகவும் அமைந்திருக்கின்றன.

மேலும், மாப்பிளை விவசாய வேலைகளில் தான் சிறந்தவனாக இருகின்றான் என்றும், தண்ணீர்தான் பாய்ச்சத் தெரியும், எருமைகளைத்தான் மேய்க்கத் தெரியும் என்றும், எழுதப் படிக்கத் தெரியாது என்றும் கிண்டலாக பாடியுள்ளனர்.

''சோளத் தட்டை தூக்கி தூக்கி தோலுப்போன மாப்பிள்ளைக்கு
இந்த வருஷத்திலே ஏற்ற மணவறையா
கம்மத்தட்டை தூக்கி தூக்கி கைபிப்போன மாப்பிள்ளைக்கு
இந்த வருஷத்திலே ஏற்ற மணவறையா - அவர்க்கு
எட்டுக்கு மேலே கூட எண்ணத் தெரியாது
எழுத்தாணி பிடித்து கூட நாட்டத் தெரியாது
கச்சேரி கோர்ட்டுக்குத்தான் போகத் தெரியாது
கணக்கு வழக்குகளும் பார்க்கத் தெரியாது
பத்துக்கு மேலே கூட எண்ணத் தெரியாது
பாத்திக்கு தண்ணீர்தான் பாய்ச்சத் தெரியும் அவர்க்கு.
பாங்கான எருமைகள்தான் மேய்க்கத் தெரியும் அவர்க்கு''

இப்பாடல்களானது திருமணம் முடிந்த பின் முதன் முறையாக . மணமகனும், மணமகளும் சேர்ந்து மணமகள் இல்லத்திற்கு சென்றுள்ளார்கள்' அப்பொழுது மணமகனை கேலி செய்யும் நோக்குடன் அதாவது அத்தைப் பெண் என்ற உறவுடையவர்கள் மாப்பிள்ளையை மிகவும் நையாண்டியாகப் பாடும் வழக்கம் உண்டு.

மணமகன் வீட்டார் பாடுவது

மணமகனைப் பற்றி கேலிப்பாட்டு பாடிய. மணமகளது வீட்டார்க்கு பதிலளிக்கும் முறையில் மணமகனது தங்கை பாட்டு பாடுகிறாள்.

"பல்லாக்கு மேலே பறக்குதங்கே உன் கருப்பு
தண்டுக்கு மேலே தழும்பு தங்கே உன் கருப்பு
பாக்க வந்த சனங்களெல்லாம் பக்கம் கருப்பாச்சு
கொட்ட வந்த மேளக்காரன் கூட கருப்பாளான்"

இப்பாடலில் மணமகள் கருப்பாக இருக்கிறாள் என்று கேலி செய்து பாடியுள்ளனர். பல்லக்குக்கு மேலே பறப்பதாகவும், தண்டுக்கு மேலே தழும்புவதாகவும் கற்பனை செய்து பாடுகின்றான். அதோடு மட்டுமலலாமல் திருமணம் பார்க்க வந்த மக்களும், மேளக்காரர்களும் பெண்ணின் கருப்பு நிறத்தால் அவர்களும் கருப்பாக போய்விட்டார்கள் என்று வர்ணிக்கிறார்கள் இதனால பெண்ணின் நிறமும், அழகும் சமூகத்தில் உற்றுநோக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை அறிந்துணர முடிகிறது.

மேலும், மாப்பிள்ளை ஏழ்மையான குடும்பத்தில் இருந்தவன் என்று தெரிந்து கொண்டு மணமகள் உயர்ந்த குடும்பத்தை சேர்ந்தவளாக இருந்தாலும் அவள் நடந்துதானே வருகின்றாள் என்று பாடியுள்ளனர்.

"அரிசி பொறுக்கி மகன் ஆனைமேல் வருவதென்ன
அர்ச்சுனர் பெற்ற பெண்ணு கால்நடையா வருவதென்ன
தருணை பெறுக்கி மகன் குதிரை மேல் வருவதென்ன
கோவலர் பெற்ற பொன்னு கால்நடையா வருவதென்ன"

என்று பாடுகின்றான்.

மணமகனின் அழகை மிகுதிப்படுத்தியும் மணமகளின் அழகை குறைத்தும் பாடியுள்ளார்கள்.

"உசலம் மரம் ஏறாதீர்கள் - அண்ணா
இந்த ஊது மூஞ்சிப் பொண்ணை கட்டாதீர்கள் - அண்ணா
கருவம் மரம் ஏறாதீர்கள் - அண்ணா
இந்த கருத்த மூஞ்சி பொண்ணை கட்டாதீர்கள்".

என்றல்லாம் கேலியும், கிண்டலுமாக பாடியுள்ளனர்.

இவை பெண்வீட்டிலிருந்து மணமகனும் மணமகளும் சேர்ந்து மணமகன் (தாங்கள்) வீட்டிற்கு வந்துவிடுகின்றனர். பின்பு மாப்பிள்ளையை கிண்டல் செய்து பாடிய பாடலை மனதில் வைத்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை கேலி செய்து பெண்ணின் நிறங்களை பழித்தும் அவள் குண்டாக இருக்கிறாள் என்று உடலை கிண்டல் செய்துள்ளார்கள்

பாடையெழுப்புதல் சடங்கு செய்முறை விளக்கம்

சி பொன்னுத்தாய்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம

பாடையெழுப்புவதற்குரிய நல்ல நாளாக செவ்வாய்கிழமை இரவு நேரத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். அன்றையநாள் மாலை ஐந்து மணி அல்லது ஆறுமணிக்குப் நல்ல நேரத்தில் பாடையெழுப்புதல் சடங்கினை நிகழ்த்துவதற்குரிய பொருட்களைத் தயாரிக்கின்றனர். பாடையெழுப்புதல் சடங்கு நிகழ்த்தும் குடும்பத்தினர் தங்களுடைய குலதெய்வச் சாமியாடிகள், பூசாரிகள் பங்காளிகள், ஊர்ப்பெரியவர்கள் ஆகியோர்களை கொட்டு மேளத்தோடு தங்களுடைய வீட்டிற்கு அழைத்து வருவார்கள். இதன் பிறகு குலதெய்வச் சாமியாடி ஒருவர் சுட்ட புதுமண்குடம் நிறைய நீர் நிரப்புவார். அதன் வாய்ப்பகுதியிலிருந்து அடிப்பகுதிவரை வெள்ளை நிற நூலைச்சுற்றி குங்குமத்தைப் புள்ளிகளாக குடம் முழுவதும் வைப்பார். இறந்த ஆவியால் பாடையெழுப்புவதற்கென்று தேர்வு செய்யப்பட்டவருக்கு புது வெள்ளை சேலை அணிவித்து வெள்ளை நூலை மார்புப்பகுதியில் மாறிமாறி அணிவிப்பார்கள். நீர் நிறப்பிய மண்குடத்தை சாமியாடிகள் தூக்கி அவரது தலையில் வைப்பார்கள் அவர் குடத்தை இரு கைகளாலும் இறுக்கமாகப் பிடித்துக் கொள்வார். பிறகு, சாமியாடிகள் விபூதி வைப்பார்கள் ஆண் என்றால் வெள்ளை வேஷ்டி அணிந்து கொள்வர். பிறகு கொட்டு மேளக்காரர்கள் சூழ இறந்தவருடைய இருப்பிடத்திற்குச் செல்வார்கள் அருகில் இருந்தால் கால்நடையாகவும், தொலைதூரத்தில் இருந்தால் மாட்டு வண்டியில் செல்வார்கள். ஒரு கூடை எலும்பிச்சம்பழம் மற்றொரு கூடையில் தேங்காய், பத்தி, கற்பூரம், சாம்பிராணி சுமார் அரை மீட்டர் அளவுடைய புதிய வெள்ளைத் துணி சிறிது வெள்ளை நூல் ஐந்து அல்லது ஆறுமீட்டர் நீளமுடைய பச்சைப் பிரண்டைக் கொடி அறுவாள் ஆகிய பொருட்களையும் வைத்துச் செல்வார்கள் மண்கலயம் சுமப்பவர் மட்டும் விரதம் இருப்பர்.

இறந்தவருடைய இருப்பிடம் சென்றதும் சிறிதளவு இடத்தைத் தூய்மைப்படுத்தி அவ்விடத்தில் மண்குடத்தை நீர் தளும்பாமல் பலபேர் சேர்ந்து இறக்கி வைப்பார்கள். அதன்

பக்கத்தில் மற்ற பொருட்களை வைப்பார்கள். இதன் பிறகு குலதெய்வச்சாமியாடி வெள்ளைத் துணியின் ஒரு பகுதியைக் குடத்தின் வாயில் சுற்றப்பட்டுள்ள நூலிற்குள் இறுக்கமாக நுழைத்து வைப்பார். மறுபகுதியைப் பிரண்டைக் கொடியால் அவற்றைக் குடத்தின் வாய்ப் பகுதிக் கீழே தொய்வாக இருக்கும்படி செய்வார். பிரண்டைக் கொடியின் தொடர்ச்சியான இன்னொரு பகுதியைக் குடத்தைச் சுமந்தவருடைய இடுப்பில் கட்டிவைப்பார். அடுத்து இறந்தவருடைய இடத்தில் சிறிது துளையிட்டு, நூலின் மறுபகுதியில் தடித்த அருகம்புல்லைக்கட்டி குடத்து நீருக்குள் மூழ்கும்படி வைப்பார். தடித்த அருகம்புல்லை யானையருகு என்று கூறுவர். குடத்திற்கு எதிரில் சிறிது இடை வெளி விட்டு குடத்தோடு இணைக்கப்பட்டவரும் அவரைச் சுற்றி மற்றவர்களும் அமர்ந்திருப்பார்கள். குடமும், மற்ற பொருட்களும் எல்லோருக்கும் தெரியும்படியாக இருக்கும். இவ்வாறு செய்து முடித்தபின் குலதெய்வச் சாமியாடி, தேங்காய் உடைத்து, பழத்தைக் கண் திறந்து, எலும்பிச்சம் பழத்தைக் குங்குமத்தில் தோய்த்து நான்கு திசைகளுக்குள் காசு கொடுத்து பத்தி, சாம்பிராணி,, கற்பூரம் காட்டுவார். பிறகு மண்குடத் தோடு இணைக்கப்பட்டிருப்பவருக்கு அருள் வந்த நிலையில் காட்சியளிப்பார். லாந்தரி விளக்கு அல்லது அரிக்கேன் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். மேற்கூறிய வேலைகள் முடிந்ததும் யாரும் தூங்கிவிடக் கூடாது, உரத்த குரலில் பேசக்கூடாது என்று சாமியாடி கூறுவார். எல்லோரும் அமைதியாக இடத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

பாடையெழுப்புவதற்குரிய ஆவி நூலேணிவழியாகத் குடத்து நீருக்குள் விழுவதற்கு வரும் ஆனால் மற்ற ஆவிகள் அதை வரவிடாமல் தடுத்துவிடும் என்கிறார் தகவலாளர் முருகாயி.

அப்படித் தடுத்துவிடுவதும் அல்லாமல் குடத்தில் விழுவதைப் போன்று பாசாங்கு செய்யும். உடனே அளைவரும் ஆவி குடத் திற்குள் அடக்கம்ஆகப்போகிறது என்று ஆர்வமாக இருக்கும் நிலையில், விழாது ஏமாற்றிச் சென்றுவிடும் என்றும் கூறுகிறார். ஆவிகள் வந்து செல்வதை எவ்வாறு தெரிந்து கொள்வீர்கள் என்று வினவியபோது தகவலாளர் கூறும் கருத்து பாடையெழுப்பு

வதற்குரியஆவி பட்டும் நூலின் வழியாகக் குடத்தை நோக்கி வரும். அவ்வாறு வரும்போது நூல் நன்றாக அசையும் அதே சமயம் நூலை மூடிய மேல் மண்ணும் அசைவினால் பல கீரல்கள் விகுந்து காணப்படும். மற்ற ஆவிகளின் வருகை சிறிய பூச்சிகள் பறந்தால் அடியில் நிழல் தெரிவதைப்போல் அதாவது அள்ளித் தெளித்தாற்போல் காணப்படும்'' என்கிறார்.

இரவின் நடுயாமத்தில் அதிலும் தலைக்கோழி கூவுவதற்குள் (சுமார் 2 மணியிலிருந்து 3 மணிக்குள் இருக்கலாம் என்கிறார் தகவலாளர்) பாடை எழுப்புவதற்குரிய ஆவி 'வீட்டில் பூச்சி' வடிவில் வந்து குடத்திற்குள் விழும் அப்பொழுது 'டுமிள்' என்ற சத்தம் அனைவருக்கும் கேட்கும் என்கிறார் தகவலாளர். அதோடு மண்ணில் புதைக்கப்பட்ட நூலேணியும் (நூல்) குடத்திற்குள் விழுந்துவிடும். உடனே பிரண்டைக் கொடியால் பிணைக்கப் பட்டிருப்பவர். அக்கொடியில் கட்டிவைத்துள்ள வெள்ளைத் துணியை எடுத்துக் குடத்தின் வாய்ப்பகுதியை விரைவில் மூடி விடுவார். துணியைக் கையில் தொடக்கூடாது. இவற்றை மிகு விரைவில் செய்து முடிக்கின்றனர். இச்செயல்பாடுகளை ஆய் வாளரும் நேரில் பார்த்தார். இதன்பிறகு சாமியாடி குடம் இருக்கின்ற இடத்தில் ஒரு கைப்பிடியான மண்ணை எடுத்து வெள்ளைத் துணியில் வைத்து மூடி குடம் சுமப்பாருடைய தலையில் வைப்பார். அதன்மேல் குடத்தைப் தூக்கி வைப்பார் ஆனால் இவருடைய இடுப்பில் இணைக்கப்பட்ட பிரண்டைக் கொடியனை அறுத்துவிடாமல் தலையில் வைக்கப்பட்ட குடத்தில் இடுப்புப் பகுதிக்கும் தொடர்புடையதாக இருக்கும் குடம் வைத்திருந்த இடத்தில் ஒரு துண்டு பிரண்டைக் கொடியை வைத்து விட்டு, கொட்டு மேளத்தோடு குடம் வைத்திருப்பவதைச் சுற்றி ஆட்கள் சூழ்ந்து கொண்டு மிகவும் பாதுகாப்பது அவ் விடத்தை விட்டுத் திரும்பி விடுவார்கள். வந்து கொண்டிருக்கும் வழியிடையில் இடைக்காட்டும் பேய்கள் வழிமறிக்கும் அவை களை விரட்டுவதற்கு எலும்பிச்சம்பழத்தை அறுத்து நாற்றிசையும் இடைவிடாது எறிந்து கொண்டு வருவார்கள். இவ்வாறு வரு பவர்கள் விடிவதற்குரிய ஊர் வந்து சேரவேண்டும் விடிந்து விட்டால் ஆவி திரும்பிச் சென்றுவிடும் என்று கூறுகின்றனர்.

பாடையெழுப்பச் செல்வதற்கு மூன்று நாட்களுக்கு முன் வீட்டின் முற்றத்தின் ஒரு பகுதியில் வேப்பங்குச்சியை ஊன்றி வைத்திருப்பார்கள். வேப்பமரம் இருந்தால் இவ்வாறு செய்ய மாட்டார்கள். மரம் இல்லாதவர்கள் கட்டாயமாக வேப்பங் குச்சியை நட்டுவைக்க வேண்டும் என்கிறார் தகவலாளர்.

பாடையெழுப்பிவரும் கூட்டம் ஊருக்கு அருகில் நெருங்கிக் கொண்டிருக்கும்போது, இவர்களுள் இரண்டு பேர் வேகமாக வந்து ஊன்றிவைக்கப்பட்ட வேப்பங்குச்சி அல்லது வேப்பமரத்தின் அருகில் சுமார் ஒன்றரையடி ஆழத்திற்குள் குழி தோண்டு வார்கள். இதற்குள் கூட்டம் ஊருக்குள் நுழைந்து விடும். உடனே ஊர்மக்கள் அனைவரும் விழித்துக் கொள்வார்கள். ஆனால் யாரும் எதிர்ப்பட்டு நிற்கமாட்டார்கள். அவ்வாறு எதிர்ப்பட்டால் ஆவி அவரை அடித்து இறக்கவைத்துவிடும் என்கிறார் ராமன் என்ற தகவலாளர். கூட்டம் மரத்தின் அருகில் வந்ததும் சாமியாடிகள் சேர்ந்து இடுப்பில் பிணைக்கப்பட்ட பிரண் டைக் கொடியை அறுத்து விட்டுக் கலத்தை இறக்கிக் குழிக்குள் வைத்து மண்ணைப் போட்டு மூடிவிடுவார்கள். இறக்கி மூடும் வேலையை விரைவில் செய்கின்றனர். இதன்பிறகு காதோலை, கருகமணிப்பாசி ஆகியவற்றைக் குழியின் மீது வைத்து, தேங்காய், பழம் வைத்துப் பூஜை செய்வார்கள். பெண்களுக்கு மட்டும் தான் இப்பொருட்கள். ஆண்களுக்குக் கிடையாது. மண் குடம் சுமந்தவரும், சில சாமியாடிகளும் அவ்விடத்தில் இருப் பார்கள். மற்றவர்கள் அவரவர் வீட்டிற்குச் சென்றுவிடுவர். இதற்குள் வடிந்து விடும்.

அன்றைய காலையில் (புதன்கிழமை காலை, முட்டைக் கோழிஅறுத்துச்சமைக்கப்பட்ட உணவை வேப்பமரத்தடியில் நீண்ட தலைவாழை இலையில் மூன்று கூறாக வைப்பார்கள். 'இதைத் தலுகைச் சோறு'' என்று அழைப்பர் இதற்குள் மண்குடம் சுமந்தவர் குளித்து புத்தாடை அணிந்து நிற்பார். அவர் தலுகைச் சோற்றுக்கு நைவேத்தியம் செய்வார். பின்பு சோற்றின் ஒரு பகுதியை எடுத்து உண்பார். இன்னொரு பகுதியைக் குலதெய்வச் சாமிகளும், மூன்றாவது பகுதியைப் பங்காளிகளும், உண்பார்கள் (ஆண்கள் மட்டும்). வீட்டில் சமைக்கப்பட்ட மற்ற உணவை மற்றவர்கள் உண்பார்கள். இத்துடன் பாடையெழுப்புதல் சடங்கை

முடித்துக் சொல்வார்கள். இவ்வாறு வழிப்போக்கில் இறந்தவர்களை அவரது வீட்டார்கள், அவர்தம் வேண்டுதலின் பேரில் அவர் ஆவியை மீட்டுருவாக்கம் செய்து கொண்டு வீட்டில் வைத்து வீட்டுத் தெய்வமாக வழிபடுவதைப் பாடையெழுப்புதல் சடங்கு என்று அழைக்கின்றனர்.

பாடையெழுப்புதல் சடங்கிற்கும் ஆவியுலகிற்கும் உள்ள தொடர்பு

ஆதிமனிதன் தன்னுடைய கனவிலும், தூக்கத்திலும்: இறந்து போன உறவினர்களைக் கண்டான். இதன் விளைவாக மனிதன் இறந்தபின்னரும் அவனுடைய ஆவி சுற்றித்திரியும் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆவிகளைப் பற்றி ஆதிமனிதன் கொண்ட நம்பிக்கையிலேயே சமயங்கள் தோன்றின என்றும் இறப்பிற்குரிய பின் மனிதனுக்கும் ஆவிக்கும் பிரிக்க முடியாத அளவிற்கு நெருக்கமான தொடர்பு இருந்து வருகிறது என்றும் நம்பினர். இறந்து பட்ட மனிதனின் உயிர், ஆவியாக அலைந்து நன்மையும் தீமையும் செய்யும் என்றும், இந்நிலையில் நன்மை செய்யும் ஆவிகளைப் போற்றவும், தீமை செய்யும் ஆவிகளை அமைதிப்படுத்தவும் ஆவிவழிபாடுகளை மேற்கொண்டனர் என்பது டெய்லர் பி.எட்வர்டு (Tylor B. Edurard) என்பவரின் அனிமிசம் அல்லது ஆவியுலகக் கோட்பாடு (Animism) என்று தே. ஞான சேகரன் கூறியுள்ளார் (தே. ஞானசேகரன்: மக்களை வாழ்வில் மந்திரச் சடங்குகள் 1987 : 35-36). பாடையெழுப்புதல் சடங்கில் இறந்தவர் ஆவியுருவில் வந்து கனவில் கூறுவதும். வீட்டின் துன்பத்திற்கும் வறுமைக்கும் இறந்த முன்னோர் ஆவியே காரணம் என்று குடும்பத்தார், நம்பி, அவற்றை, திருப்திபடுத்த இச்சடங்கினை நடத்துகின்றனர் என்றும் தெரிகிறது.

பத்து வயதில் இறந்த பெண், இருபது வருடம் கழித்து முப்பது வயது நிரம்பியபின் வீட்டாருடைய கனவில் தோன்றி தனக்கு பாடையெழுப்பி வந்து வழிபட்டால் நன்மை செய்வேன் என்று கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து இறந்தோர் ஆவி அதற்கென்று இறைவனால் விதிக்கப்பட்ட காலம் வரை உலகில் உலவும் என்றும் தெரிகிறது.

சித்தரியம், சீக்கியம்–வேறுபாட்டுக் கூறுகள்

அ. நடராசன்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

சித்தரியமும் சீக்கியமும் இந்தியத் தத்துவச் சிந்தனை வரலாற்றின் இடைக்காலத்தவையாகும். சித்தரியம் என்பது தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர்களின் பாடல்களில் இருந்து பெறப்பட்டதாகும். சீக்கியம் வடக்கில் பஞ்சாபில் தோன்றிய தொரு மாற்றுச் சிந்தனை. சித்தரியத்திலும், சீக்கியத்திலும் பல ஒப்புமைக் கூறுகள் காணப்படுகின்றன. காட்டாக இரண்டும் வைதீகத்திற்கு மாற்றான கருத்தை வலியுறுத்தின எனலாம். பிராமண எதிர்ப்பு. சாதி எதிர்ப்பு போன்றவைகளில் இரண்டும் ஒத்த கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளன என்பதை அறிய முடிகிறது. சித்தர்களும், சீக்கியர்களும் வாழ்ந்த சமூக பண்பாட்டுச் சூழல் வேறுபட்டது எனலாம். சீக்கியர்கள் வைதீகத்திற்கு மாற்றாகத் திரண்டனர் என்றாலும் முகமதியர்களின் எதிர்ப்புக்கு உள்ளானார்கள். சித்தர்களின் காலத்தில் வைதீக சமயத்தையும், பிராமணர்களையும், உயர் சாதியினரையும் எதிர்த்துப் போராடும் நிலையில் இருந்தனர். சித்தரியத்திலும் சீக்கியத்திலும் காணப்படும் வேற்றுமைக் கூறுகள் இப்பகுதியில் விளக்கப்பட உள்ளன.

இறைவன் பற்றிய கருத்தாக்கம், இறைவனின் எண்ணிக்கை, உலகம் பற்றிய கருத்தாக்கம், மனிதன் பற்றிய கருத்தாக்கம், சமய வாழ்க்கையும் சமூகச் சிந்தனையும், நிறுவன அமைப்பு போன்றவற்றில் சித்தரியத்திற்கும், சீக்கியத்திற்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கட்டுரைச் சுருக்கம் கருதி இவற்றிலிருந்து சமயவாழ்க்கையும் சமூகச் சிந்தனையும் ஆகிய கருத்துக்கள் மட்டும் இங்கு ஆராயப்பட உள்ளன.

சமய வாழ்க்கையும் சமூகச் சிந்தனையும்

சமய வாழ்க்கையில் சித்தரியமும் சீக்கியமும் வேறுபடும் இடங்களும் ஒன்றுபடும் இடங்களும் உண்டு. மக்களின் வாழ்க்கை முறையோடு ஒன்றியசமயம் இருப்பதன் அவசியத்தைச்சீக்கியம்வலி

யுறுத்தும். சீக்கிய சமயக் குருமார்கள் அனைவரும் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையில் இருந்து கொண்டே சமயப் பணியில் ஈடுபட்டுள்ளனர் சமூக ஈடுபாட்டை வலியுறுத்த குரு நானக் மேற்கொண்ட நடவடிக்கையாக அவரது கருத்தியல் இல்லற வாழ்வினை மேன்மையாகப் பேசியது. அது பழ மரபுச் சமயங்களிலிருந்து பெரிதும் விலகியதாக இருந்தது. ''இதற்கு கருத்தின் வழி குருநானக் சுத்தமான பால் போன்ற சமய வாழ்வில் அமிலத்தை ஊற்றிக் கொடுக்கிறாரென்று நாதர் சம்பிரதாயத்தவர் அவரைக் குற்றம் சாட்டினர் (பாய்குருதாஸ, வார் 1 பௌரி 40). ''குருநானக்கின் கருத்துப்படி இல்லற வாழ்க்கையே சமய நடவடிக்கைகளில் முதன்மையான அமைப் பாக விளங்குகிறது. சமயச் சார்பற்ற சாதாரண மனித வாழ்விற்கு அளிக்கப்பட்ட சலுகை அல்ல. இது உண்மையில் இயல்பான வாழ்க்கை என்பது ஆன்மீகப் பயிற்சிக்கும் அதன் வெளிப்பாட்டிற் குமான ஊடகமாக மாறியது'' என்று தல்ஜித்சிங் (Daljee sing; sikhism, p. 260) குறிப்பிட்டுள்ளார். குருமார்கள் இல்லற வாழ்வினை ஒரு மாற்று வழியாகக் கொண்டது மட்டு மல்ல அதனை மனிதருக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றி னர். குரு அங்கதர், குரு அமர்தாஸ் ஆகியோர் சீக்கிய முறைபாடு களிலிருந்து விலகிய பிரமச்சரிய, துறவு வாழ்க்கை வாழ்ந்த உதா சிகளை சீக்கியத்திலிருந்து வெளியேற்றினர் என்று ஹரிராம் குப்தா குறிப்பிட்டுள்ளார் (ந. முத்துமோகன், சீக்கிய சமய இயக் கம் மொ. பெ, 19954 ப. 45-46).

துறவு வாழ்க்கையை சீக்கியம் அறவே வெறுத்து ஒதுக் கியது. என்பதற்கு மேற்கண்டவை சான்றாக உள்ளன. இல்வாழ் வில் இருந்து கொண்டே மனிதர்களுக்கும் சமூகத்திற்கும் தேவை யானவற்றைச் செய்தலே கடவுளுக்குச் செய்வதாகக் கருதியது. குருநானக் துறவைச் சாடிப் பல பாடல்கள் பாடியுள்ளார், இல்லற வாழ்வில் இருப்பவர்கள் ஆன்மீக வளர்ச்சி பெறமுடியாது என்ற கருத்து அக்காலத்தில் மேலோங்கி இருந்தது. வருணாசிரம- தர்மப்படி இளமையில் கல்விபயில வேண்டும். ஐம்பது வயதுக்கு மேல் இல்லறத்தைக் குறைத்துக் கொண்டு தவநெறியைக் கடைப் பிடிக்க வேண்டும். பிறகு துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று வைதீகர்களும் மற்றவர்களும் பரப்பி வந்தனர். இதைக்

கண்ட நானக் துறவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். இவர்கள் பூண்ட துறவு வேடம் உழைப்பின்றி வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாக அமைந்து உள்ளது. என்று உழைப்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். சீக்கியக் குருமார்கள் ஒவ்வொரு வரும் நேர்மையாக உழைப்பின் வழியே தங்கள் உணவைப் பெற வேண்டும் என்பதை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர் ''சம்பாதிக்க இயலாத மனிதனே இரந்துண்டு வாழ்பவனாகிறான். வீட்டுக்கு வீடு சென்று பிச்சையெடுத்து உண்பவன் தன்னைக் குருவென்றும் துறவி என்றும் அழைத்துக் கொள்கிறான். இது போன்ற மனிதர்களை ஒரு போதும் பார்க்கக் கூடாது. அவர் தம பாதங்களைத் தொடக் கூடாது. கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதிக்கவும், அதனைப் பிறருடன் பகிர்ந்துண்டு வாழவும் தெரிந்த மனிதனே சரியான வழியைத் தெரிந்தவன்'' என்று குருநானக் (குருகிரந்தம் ப. 1245) தெளிவாக்குகிறார். ஆகவே இல்லறத்தில் இருந்து கொண்டே உண்மையான, புனிதமான சிந்தனை செயல்களைப் புரிந்து மனிதன் ஆன்மீக உயர்வைப் பெறலாம் என முழக்கினார். மடாதிபதிகள் மக்களுக்கு தியாகம், பற்றில்லாமை குறித்து உபதேசிக்கிறார்கள். ஆனால் தாங்களே வசதிமிக்க மடங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அவதூத சன்னியாசிகளுமல்லர்; இல்வாழ்வோருமல்லர் என்று நானக் சாடுகிறார்.

துறவிகளைப் பற்றி குரு அர்ஜீனர் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்.

''அவன் மனித இனத்தைச் சேர்ந்தவனாக
இருந்தாலும் அவன் நடத்தை
விலங்கிற்கும் கீழானதாக உள்ளது.
அவன் மக்களை இரவும் பகலும்
ஏமாற்றுகிறான்
வெளியுலகிற்கு அவன் புனிதமானவனாக
தோற்றமளித்தாலும் அவனது உள்மனம்
ஆசைகளினால் நிறைந்துள்ளது.
இதனை என்னதான் முயன்றாலும்
அவனால் மறைக்க முடியவில்லை
புனிதத் தலங்களில் நீராடி மேதை போன்ற

பேச்சுக்காருடன் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறான்
ஆனால் உள் மனதிலோ பொறாமை நாய்
குரைத்துக் கொண்டே இருக்கிறது.

(Macauilisse vol I ! 379).

சித்தர்கள் இல்வாழ்க்கையில் இருந்து விட்டுப் பின்னர் துறவுமேற் கொண்டார்கள் என்பதையும் பல சித்தர்களின் பாடல் களில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. துறவு வாழ்க்கை சிறந்தது என்றும் இல்லத்தில் அல்லல்தான் இருக்கிறது என்றும் சில சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். துறவறம் மேற்கொள்வதின் மூலமே இறைவனை அடைய முடியும் என்று சித்தர்கள் நம்பி உள்ளனர். இடைக்காட்டுச் சித்தர் என்பவர்.

''இல்லறமே அல்லலாம் என்று ஆடுமயிலே-பத்தி
இல்லவர்க்கு முத்திசித்தி இல்லை மயிலே
நல்லறமே துறவறங் காணுமயிலே-சுத்த
நாதந்த வெட்டவெளி நாடுமயிலே''

(இடைக்காட்டுச் சித்தர் பா. 88 ப. 253)

என்று துறவறமே நல்ல அறம் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பட்டினத்தார் என்ற சித்தர் கீழ்க்கண்டவாறு இல்லறவாழ்வைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

''நாப்பிளக்க பொய் உரைத்து நவநிதியும் தேடி
நலன் ஒன்றும் அறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்; கைவிடவும் மாட்டீர்
கவர் பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்து விட்ட குரங்கதனைப் போல்
அகப்பட்டீர்; இடந்துழல அகப்பட்டீரே !''

(பட்டினத்தார் பா; 167 ப: 131).

அகப்பேய்ச் சித்ரும் துறவு தேவை என்பதை வலியுறுத்தி உள்ளார்.

எனவே சித்தர்கள் வைதீகச் சிந்தனையை ஏற்றுக் கொள் ளாதவர்கள் என்பதை வலியுறுத்தும் போது துறவுக் கொள்கையை ஏற்றுள்ளனர் என்பதையும் உணர முடிகியது. இதுபோன்ற சில

கருத்துக்களை மட்டுமே வைத்துக் கொண்டு ஒட்டு மொத்தமாக சித்தர்களை வைதிகர்களின் பக்கம் சேர்க்க நினைத்தவர்களும் உண்டு.

சிக்கியம் துறவு வாழ்க்கையை ஆதரிக்கவில்லை ஆனால் சித்தரியம் ஆதரித்துள்ளது என்பதை அறிய முடிகியது. சிக்கியம் நாட்டில் வாழ்கின்ற மனித உயிர்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை மறந்து விட்டு காடுகளில் சுற்றித்திரிந்து உபதேசம் செய்யும் துறவு வாழ்வை மறுக்கி து.

களத்து மேட்டிலிருந்து...

கு. முத்துவேல்

தியாகராசர் கல்லூரி, மதுரை.

சமூக விஞ்ஞானங்களில் (SOCIAL SCIENCES) பதிவு செய்தல் (DOCUMENTATION) என்பது ஒன்றைப் பற்றிய அல்லது ஒரு நிகழ்வு அல்லது ஒரு சம்பவம் பற்றிய செய்தி களைத் தொகுத்துத் தருவதாகும். இது எழுத்து வடிவமாகவும், ஒலியமாகவும் இருக்கும். வரலாற்றுப் பூர்வமான உண்மைகளைச் சான்றாதாரமாகக் கொள்வதற்கு, உண்மை நடப்புகளை நிறுவுவதற்குப் பதிவு செய்தல் என்பது பயன்படுகிறது.

ஒரு தொழில் குறித்த செய்திகளோடு, மரபுகள், நம்பிம்கைகள், கலைச் சொற்கள் ஆகியனவும் பதிவு செய்தலில் அடங்கும். அவற்றுள் கலைச் சொற்கள் (TECHNICAL TERMS) தனியிடம் பெறுவன. ஏனெனில் அவை பழகிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில் சமூகம் ஆக்கிய சொற்களாகும்.

இக்கட்டுரையில் மதுரை தெற்குத் தாலுகாவில் விவசாயத் தொழிலில் அறுவடைக் காலத்தில் களத்து மேட்டில் பயன் படுத்தப் பெறும் சில சொற்களைப் பற்றிய விளக்கங்கள் தொகுத்துத் தரப்படுகின்றன.

அறுவடைக் காலத்தில் களத்து மேட்டில் நெற்கதிர்களை அடித்துச் சுத்தம் செய்யும் போது அத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெற்கதிர் அறுவடைத் தொழிலாளர்கள் பல செற்களைப் பயன்படுத்துவார்கள். அவற்றைப் பற்றிய விளக்கமும், விரிவான செய்திகளும் இங்கே தரப்படுகின்றன.

பயன்படுத்தப் பெறும் சொற்கள்

பிள்ளையார், பொலி, பட்டறை, சூடு, மரக்கால், தெரணைவாய், வகுத்துவாய், சண்டுவாய், பெறக்கதிர், பிள்ளைக்கதிர், மேல்வாரம், குடிவாரம், சாணிப்பால், நாட் கதிர், சீந்தி வாய்க்கால், அரி, களம் பெருக்குதல்,

பிள்ளையார்

மாட்டுச் சாணத்தைக் குவியாக வைத்து அதில் நன்றாக விளைந்த நெற்கதிர் ஒன்றை வைத்து அதனைப் 'பிள்ளையார்" என்று அழைப்பார்கள். இப்பிள்ளையாரை, கதிர் அறுத்து அடித்துச் சுத்தமாக வைத்துள்ள ஒவ்வொரு நெற்குவியல் மேலே அளப்பதற்கு முன்பாக வைப்பார்ாள். நெற்குவியலை அளப்பதற்கு உரியவர்கள் பிள்ளையாரைக் கொண்டுவந்தது. நிலச்சுவான்தாரிடம் "ஐயா பிள்ளையாரை வைக்கட்டும." என்று கேட்டு, அதில் வைத்து விட்டுத்தான் பிறகு நெல்லை அளக்க ஆரம்பிப்பார்கள். இதன்மூலம் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய வேண்டும்' என்பதை அறியலாம்

பொலி

விளைந்த நெற்கதிர் அடித்துச் சுத்தம் செய்து குவியலாக வைக்கப்பட்டிருக்கும். இதற்குப் 'பொலி' என்று பெயர். நெல்லை அளக்க எண்ணிக்கை கொண்டு ஆரம்பிக்கும் பொழுது முதல் எண்ணிக்கையைப் "பொலி வளர" என்று சொல்லித் துவக்குவார்கள். அதனையடுத்து 2,3. ஒன்று எண்ணிட்டு அளப்பார்கள்.

பட்டறை

நெற்கதிர் அடித்துச் சுத்தம் செய்து அளந்து முடித்தபின் மீதி உள்ள நெற்பகுதியைப் 'பட்டறை' என்று கூறுவர். அளந்து முடிந்தபின் யாருக்காவது நெல்கொடுக்கும் போது பற்றாக்குறை ஏற்பட்டால். அளப்பவரிடம் நிலச்சுவான்தார் அந்தப் பட்டறையை விட்டுக்கொண்டு வாப்பா" என்று கூறுவர். இந்தச் சொல் பிறருக்கு நெல் கொடுக்கப்பயன்படும் போது உபயோகப் படுத்தப்படுகிறது.

சூடு, போரடிப்பும்

நெற்கதிர் அடித்து சில நெல்கள் உதிராமல் இருக்கும். அந்த வைக்கோலைக் கொண்டு பெரிய படப்பாக அமைப்பார்கள். இதற்குச் சூடு என்று பெயர். பிறகு கதிர் அடித்து முடித்த

மறுநாள் குட்டை இழுத்துப் போட்டு மாட்டைச் சுற்றிவரச் செய்து நெற்கதிரை உதிர வைப்பார்கள். இப்போது. டிராக்டர் பயன்படுத்தப்படுகிறது. இதனைத்தான் 'மாடு கட்டிப்போரடித் தால் மாளாது செந்நெல் என்று, யானை கட்டிப்போரடிக்கும் அழகான தென்மதுரை' என்று குறிப்பிடுவார்கள். வைக்கோல் சூட்டுக்குப் 'போர்' என்று இலக்கியத்தில் பெயர் குறிப்பிடப் பட்டு இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மரக்கால்

மரக்கால் என்பது நெல்லை அளக்கப் பயன்படும் சாதனம் ஆகும். இது பெரிய மரக்கல், சிறிய மரக்கால் என்று இரண்டு வகைப்படும். பெரிய மரக்காலின் அளவு 4½ படி நெல்லாகும். சிறிய மரக்காலின் அளவு 3 படி நெல்லாகும். மரக்கால் இரும்புத்தகடால் வட்டவடிவம் கொண்டு உயரமாகச் செய்யப் பெற்றிருக்கும், வெளிப்பகுதி பித்தளைத் தகடால் மெருகூட்டப் பட்டிருக்கும், களத்துபேட்டில் இதன் பயன்பாடு மிக அதிகமாகும். விளைந்த நெல்லை எவ்வளவு விளைந்தது என்று மதிப்பிடு வதற்கு மரக்கால் பயன்படுகிறது.

தெரணைவாய்

தெரணைவாய் என்பது நெற்குவியலை அளப்பவர்க்கும் நெற்குவியலுக்கும் இடையே போடப்பட்டிருக்கும் வைக்கோலால் செய்யப்பெற்ற பெரிய தடுப்பாகும் இதன்மேல் முன்காலை மண்டியிட்டு அமர்ந்து தான் அளப்பவர் அளக்க முற்படுவர். இது வைக்கோலால் மிக உறுதியாகக் கட்டப்பட்டிருக்கும்.

வகுத்துவாய்

நெற்கதிர் அடித்து முடித்து சூடு அடித்த பிறகு நெல்லைச் சுத்தம் செய்யும் போதது முறத்தால் அள்ளித்தூத்துவார்கள். அப்போது நல்ல நெல் ஒரு பக்கமாகவும் பதராத உள்ள நெல் தோல் ஒரு பக்கமாகவும் விழும். அப்போது நல்ல நெல் பக்கத்தை 'வகுத்துவாய்' என்று குறிப்பிட்டு பதரை ஒதுக்கச் சொல்வதற்காக ''வகுத்து வாயைக்கண்டி'' (அதாவது ஒழுங்கு படுத்து) என்று கூறுவார்கள்,

சண்டுவாய்

சூடு அடித்து நெல்லைத் தூற்றும் பொழுது நல்ல நெல் ஒரு பக்கமாகவும், பதராக உள்ள நெல் (சண்டு) ஒரு பக்கமாகவும் மேலிருந்து கீழ்நோக்கி விழும். அப்படிப் பதராக விழுந்த நெல்லைச் 'சண்டுவாய்' என்று அழைப்பார்கள். அதனை மீண்டும் தூற்றும்பொழுது நல்ல நெல் கொஞ்சம் இருக்கும். இந்நெல்லை நிலச்சுவான்தார்கள் தண்ணீர் பாய்ச்சும் தொழிலாளிக்குக் கொடுக்கும் வழக்கம் காணப் படுகிறது.

பெறக்கதிர்

வயலில் நெற்கதிர்களை அறுத்தவுடன் கீழேகிடக்கும் நெற்கதிர்களைத் தனியாகப் பொறுக்குவது உண்டு. அவ்வாறு பொறுக்குவதற்குக் கூலியாகத் தனியாக நெல் கொடுப்பது வழக்கமாகக் காணப்படுகிறது எனவே ''பொறுக்கு கதிர்'' தான் மருவி ''பெறக்கதிர்'' என்று அழைக்கப்படுகிறது.

பிள்ளைக்கதிர்

நெல் அறுவடையின் போது அறுப்பதற்கு வருகை தந்தக் கூலித்தொழிலாளி பெண்ணாக இருந்து அவருக்குக் கைக்குழந்தை இருக்குமானால் அக்குழந்தைக்கு நெற்கதிர் கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது, இக்கதிருக்குப் ''பிள்ளைக்கதிர்'' என்று கூறுவார்கள்.

மேல்வாரம், குடிவாரம்

வயலைக் குத்தகைக்கு எடுத்து உழுது விவசாயம் செய்தவர் விளைந்த நெல்லை எடுத்து மூன்றில் ஒரு பங்கு நிலச்சுவான்தாருக்குக் கொடுத்து விட வேண்டும். இதற்கு ''மேல்வாரம்'' என்று பெயர் மீதியுள்ள இரண்டு பங்கு நெல்லைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்தவர் எடுத்து விவசாயம் செய்தவர் எடுத்துக் கொள்வர் இதற்குக் ''குடிவாரம்'' என்று பெயர்.

சாணிப்பால்

விளைந்த நெல் குவியலாகக் குவித்து வைக்கப்பட்டு 'பொலி' யாகக் காட்சியளிக்கும். இரவு நேரங்களில் களத்து மேட்டில் நெல் திருட்டுப் போகாமல் தடுப்பதற்கு அதன் மேல் மாட்டுச் சாணத்தைத் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பார்கள். 'பொலி' யின் ஓரப்பகுதியில் நன்றாகத் தெளிப்பார்கள். இவ் வாறு தெளிக்கப்படுகின்ற பொருளுக்குச் 'சாணிப்பால்' என்று பெயர். இச்செயல் நெல்லைப் பாதுகாக்கும் நிலையில் செய்யப் படுகிறது.

நாட்கதிர்

விளைந்த நெற்கதிர்களை மொத்தமாக அறுப்பதற்கு முன் பாக நல்ல நாள் பார்த்து ஒரு கைப்பிடி அளவு நெற்கதிரை முதலில் அறுப்பார்கள். இதற்கு ''நாட்கதிர்'' என்று பெயர்.

சீந்திவாய்க்கால்

நெற்கதிர் நன்றாக முற்றி விளைந்த பிறகு வயலுக்குள் தண்ணீர் செல்லாமல் இருப்பதற்காக வரப்பு ஓரமாக உள்ள நெற் கதிர்களைப் பிடுங்கி சாற்றி வைப்பார்கள். தண்ணீர் வய லுக்குள் செல்லாமல் அந்தப் பகுதி வழியே செல்லும் இதற்குச் 'சீந்தி வாய்க்கால்' என்று பெயர். 'சேந்தி வாய்க்கால்' 'சீந்து வாய்க்கால்' என்றும் அழைக்கப்படுவதுண்டு.

அரி

ஒரு கைப்பிடி அளவு உள்ள வைக்கோல் தாளாலான நெற்கதிரை 'அரி' என்று கூறுவார்கள்.

களம் பெருக்குதல்

களத்தைச் சுத்தம் செய்வதற்குக் 'களம் பெருக்குதல், என்று பெயர். பெண்கள் தான் இவ்வேலையைச் செய்வார்கள். இதற்காகத் தனியாகக் கூலி கொடுக்கப்படுவதுண்டு.

களத்து மேட்டில் பேச்சு வழக்கில் உள்ள சொற்களின் பொருள் மேற் குறித்தவாறு பயன்படுத்தப்படுகிறது. மேலும் விவ சாயம் தொடர்பான பல சொற்களின் விளக்கம் பயன்பாடு, சூழல், ஆகியவற்றைப்பதிவு செய்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

வணிகச் செய்திகள்

பி. பார்வதி

ஸ்ரீ பராசக்தி கல்லூரி குற்றாலம்

செய்திப் பத்திரிக்கைகள் தங்கள் பத்திரிக்கைகளின் விற்பனையை அதிகரிக்க வேண்டும் எனும் நோக்கத்துடன் இணைப்பு மலர்களை வெளியிடுகின்றன தினத்தந்தியின் குடும்பமலர், தினமலரின் சிறுவர்மலர். தினமணியின் தினமணி கதிர் போன்றவை இணைப்பு மலர்கள் பொழுதுபோக்கினை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வெளியிடப்படுகின்றன. தினமணியின் தினமணிக் கதிரும் பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டு வெளிவருகிறது. ஆனால் தினமணி வெளியிடும் வணிகமணி பொழுதுபோக்கு அம்சம் சிறிதும் இல்லாத, வணகச் செய்திகளை முழுமையாகக் கொண்ட மலராகவே வெளிவருகிறது இவ்வணிகமணி வணிகச் செய்திகளை வெளியிட என்னென்ன இதழியல் உத்திகளைக் கையாண்டு உள்ளது. அச்செய்திகளைத் தரும்முறை ஆகியவற்றை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. 1995 அக்டோபர் மாதம் வெளிவந்த வணிகமணிகள் இக்கட்டுரைக்குரிய ஆய்வுக்களமாகும்.

வணிகவியல்

நுகர்வோரிடம் பண்டங்கள் சேரும்வரை நிகழும் பண்ட மாற்றுச் செயல்களும் அவைகளுக்குத் துணைபுரியும் செயல்களும் வணிகவியலாகும் - 1, வ்ணிகமணி பொருளைத் தயாரிப்பவர், அவர் தம் தொழில், அத்தொழிலுக்குத் தேவையான மூலதனத்தை பங்குச் சந்தை வாயிலாகப் பெறும் முறை, பங்குச் சந்தையின் செயல்பாடுகள் போன்ற பண்டமாற்றுச் செயல்பாடுகளுக்குத் துணைபுரியும் செயல்களை வெளியிட்டு வருகிறது எனலாம்

வணிகமணி

தினமணி இதழின் இணைப்பு மலராக திங்கள் தோறும் வெளிவரும் வணிகமணி நாட்டின் பொருளாதாரத்தை மேம் படுத்தும் செய்திகளைத் தாங்கி வெளி வருகிறது 24 பக்கங்களைக்

கொண்டு வெளிவரும் இவ்விணைப்பு மலரில் இடம்பெறும் விளம்பரங்கள் கூட வணிகம் சார்ந்தவையாகவே திகழ்கின்றன. இரண்டு அல்லது மூன்று விளம்பரங்களை மட்டுமே ஒரு வெளியீடு தருகிறது. ''முத்தான முந்திரி முதலீட்டு திட்டம்'' என்ற விளம்பரத்தைச் சான்றாகக் கூறலாம் - 2 வணிகத்திற்கு முக்கியத் துவமளிக்கும் இவ்விதழ் கட்டுரை, துணுக்கு, வாசகர் பங்கேற்பு எனும் மூன்று உத்திகளைக் கையாண்டு வணிகச் செய்திகளைத் தந்துள்ளது.

கட்டுரை

''ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய மிதமான அளவில் அமைந்த எழுத்தோவியம்'' என ஆக்ஸ்போர்டு அகராதி கட்டுரைக்கு விளக்கம் தருகிறது - 3, வணிகச் செய்திகளைக் கட்டுரை வடிவில் தரும் வணிகமணி அதனை முகப்புக்கட்டுரை, சிறப்புக் கட்டுரை, தொழில்சார் கட்டுரை, ஒருபக்கக் கட்டுரை, பங்குச் சந்தை எனும் ஐந்து பகுதிகளாகப் பிரித்து வெளியிடுகிறது.

முகப்புக் கட்டுரை

அட்டைப் படத்தில் வணிகம் தொடர்பான படங்களையும் அவற்றிற்கு விளக்கங்களைத் தரும் கட்டுரையை உள்ளேயும் தருகிறது. இவ்வகைக் கட்டுரை இடம்பெறும் பகுதியை 'முகப்புக் கட்டுரை' என குறிப்பிடுகின்றது. ''பணம் காய்க்கும் பனையை புறக்கணிக்கலாமா'' -4 என்ற தலைப்பினையும் பனை மரத்திலிருந்து செய்யப்படும் பொருட்களையும் அட்டைப்படமாகத் தந்துள்ள 9/10 வணிகமணி மத்திய பனைவெல்லம் மற்றும் பனைப் பொருட்கள் நிலையத்தின் செயல்பாடுகளை விளக்கும் வகையில் கட்டுரையைக் கொடுத்துள்ளது.

சிறப்புக் கட்டுரை

''செய்தியின் புதிய பரிமாணத்தை விளக்குவதே சிறப்புக் கட்டுரை'' – 5 என்கிறார் டி. எஸ். மேத்தா. வணிகமணியில் இடம்பெறும் சிறப்புக் கட்டுரை தொழில் நிறுவனங்களின் வெற்றிக்குக் காரணமாக மனிதனைப் பற்றி அல்லது வணிகச் சந்தையில் பொது மக்கள் எவ்வாறு விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூறுகிறது. ''பிர்லா சாம்ராஜ்ஜியத்தின்

அடுத்த வாரிசு குமார் பாபு'' - 6 என்ற கட்டுரை பிர்லாவின் பேரனும், ஆதித்ய பிர்லாவின் மகனுமான குமார் பாபுவின் திறமையையும், ஆளுமையும் பிர்லா தொழிற்சாலைகளை நிர்வகிக்கும் அவரது திறனையும் எடுத்துரைக்கும் வகையில் தரப்பட்டுள்ளது. ''விழிப்புணர்வே விடை - 7 என்ற தலைப்பில் அமைந்துள்ள சிறப்புக் கட்டுரை போலிச் சந்தைகளை ஒழிக்க நுகர்வோர் உறுதியுடன் செயல்பட வேண்டும் என்பதை உணர்த்துகிறது. ஆய்வுக்கு வணிகமணியில் இத்தகு சிறப்புக் கட்டுரைகள் 4 இடம்பெற்றுள்ளன.

பொதுக்கட்டுரை

அட்டைப் படக் கட்டுரையாகவோ சிறப்புக் கட்டுரை யாகவோ அமையாமல் ஒரு தொழிலைப் பற்றிய வணிகக் கருத்துக் களை விளக்கும் வகையிலும் வணிகமணி கட்டுரைகளைத் தந்துள்ளது. ஆய்வுக்கு உட்பட்ட வணிகமணியில் தொழில். சார்புடைய கட்டுரைகள் ஏழு இடம் பெற்றுள்ளன ஒரு பொருள் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது, அதன் வணிகநிலை யாது, அத் தொழிலை எவ்வாறு முன்னேற்றலாம் என்பது போன்ற கருத்துக்கள் இவ்வகைக் கட்டுரைகளில் இடம்பெறுகின்றன, 'விணைத் தொழில் விணாகலாமா', சூளை இல்லாமல் செங்கல்', 'விந்தையான விளம்பர உலகம்' என்ற தலைப்புகளில் அமைந் துள்ள கட்டுரைகளைப் பொதுக்கட்டுரைக்குச் சான்றுகளாக்கலாம் வீணை செய்வதின் கலைநுட்பத்தினையும், இக்கலை இன்று நலிவுற்று வருவதற்குரிய காரணங்களையும் 'வீணைத் தொழில் வீணாகலாமா?' என்ற கட்டுரைய வழி கூறும் எஸ். சிவக்குமார், ''அரசின் கவனம் இக்கலைஞர்கள் பக்கம் திரும்பினால் அவர்களும் வாழ்வார்கள் கலையும் நசித்துவிடாமல் காப்பாற்றப் படும் - 8 என இத்தொழில் நசிவுறாமல் இருப்பதற்குரிய வழி முறையையும் எடுத்துரைக்கிறார்.

ஒருபக்கக் கட்டுரை

வணிகமணியில் இடம்பெறும் கட்டுரைகளுள் வாசகர்களின் வகையில் அவர்களுக்கு அறிமுகமான திரைப்பட நாயகர்கள் விளையாட்டு வீரர்கள் ஆகியோர் எவ்வாறு பணம் சம்பாதிக்

கின்றனர் என்பதை ஒருபக்கக் கட்டுரையே எடுத்துரைக்கின்றன. ஒருபக்க அளவிலான கட்டுரையில் புகைப்படங்களும் இடம் பெறுகின்றன. சான்றாக 23/10 வணிகமணியின் பின் அட்டையில் இடம்பெற்றுள்ள 'ஆட்டம் கொண்டாட்டம்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையைக் கூறலாம். தொழில்முறை ஆட்டக்காரர்கள் என்ற நிலையில், உள்ள இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஓராண்டில் விளையாட்டின் மூலம் எவ்வளவு பணம் சம்பாதிக்கின்றனர் என்பதைக் கூறுவதோடு, ''கிரிக்கெட்டில் திட்டமிட்டு திறமையை வளர்த்துக் கொண்டால் புகழுக்குப் புகழ், பணத்துக்குப் பணம்'' 9 இதைத் தவிர வேறு என்ன வேண்டும்'' என்று வணிகமணி கேட்கிறது.

பங்குச் சந்தை

தொழில் நிறுவனம் பணத்தை எந்தவித இடையூறுமின்றி நீண்டகாலத்திற்கு உபயோகப்படுத்த நிலைத்த அல்லது நீண்ட கால மூலதனத்தைப் பெற வேண்டும். நிறுவனங்கள் இம் மூலதனத்தை பங்குகள் வாயிலாகப் பெறுகின்றன. இப்பங்குகளை விற்பதற்கும் வாங்குவதற்கும் துணை செய்வது பங்குச் சந்தையாகும். இப்பங்குச் சந்தையைப் பற்றியும், அதன் நடவடிக்கைகள் செயல்முறைகளைப் பற்றிய கருத்துக்களையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்க 'பங்குச் சந்தை' என்ற பகுதியை வணிகமணி வெளியிட்டு வருகிறது. வாரந்தோறும் இடம்பெறும் இப்பகுதி கட்டுரை வடிவில் அமைந்துள்ளது. 'ஆரோக்கியமான மாற்றத்தை ஆதரிக்கலாம்' என்ற கட்டுரை பங்கு பத்திர வைப்பகங்கள் (Depositories in Securities) அமைப்பது குறித்து அரசு பிறப்பித்த அவசர சட்டத்தையும், அதன் நன்மைகளையும் எடுத்துரைக்கிறது10, இதுபோன்ற பங்குச் சந்தை பற்றிய பல செய்திகளை இப்பகுதி வழி அறிய முடிகிறது.

துணுக்குகள்

''மக்களின் ஆவலைத் தூண்டுகின்ற நிகழ்ச்சிகளையும், பிரச்சினைகளையும் சமுதாயக் கண்ணோட்டத்துடன் இதழ்களை சுருங்கச் சொல்கின்றன. இவற்றைத் துணுக்குகள் என்கிறோம்11 இத்துணுக்குகள் வாசகர்களுக்கு மாறுபட்ட செய்திகளை அறிவித்தல் அறிவூட்டல் மகிழ்வித்தல் எனும் மூன்று நிலைகளில்

செயல்படலாம். வணிகமணியில் இடம்பெறும் துணுக்குகள் அறிவித்தல், அறிவூட்டல் எனும் இருநிலைகளிலே செயல்படு கின்றன எனலாம் இத்துணுக்குகளை தொகுப்புத் துணுக்குகள், உதிரித் துணுக்குகள் என இருவகைப்படுத்தலாம். தொகுப்புத் துணுக்குகள் 'செய்தி நாற்றங்கால் எனும் பகுதியில் இடம்பெறும் துணுக்குகள் அறிவிக்கின்றன. 30/10 வணிகமணி 'செய்தி நாற்றங்கால், எனும் பகுதியில் ஆறு செய்திகளைத் தந்துள்ளது அவற்றுள் ஒன்று ''மட்சுஷிடா'வின் புதிய திட்டம்'' -12 இத்துணுக்கின் வழி உலக அளவில் மின்னணு சாதனங்கள் உற்பத் தியில் முன்னணியில் விளங்கும் ஜப்பானின் 'மட்சுஷிடா' நிறுவனம் இந்தியாவில் தன் விற்பனை மையங்களை 1000 லிருந்து 2000 மாக உயர்த்தப் போவதையும், இந்தியாவில் தொழில் தொடங் கப் போவதையும் தெரிவிக்கிறது இது போன்ற செய்திகள் இரு பத்துமூன்றினை அக்டோபர் வெளியீடுகளில் வணிகமணி தந் துள்ளது.

அடிக்குறிப்புகள்

1 ஒ. இரா, கி, வணிகவியல், வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 9, ப. 200

2 வணிகமணி, 9/10/95, ப. 5

3 The Oxford Universal Dictionary, p, 2690

4 ஆதித் கம்யுனிகேஷன்ஸ், வணிகமணி, 9, 10, 95, ப, 6

5 D S. Metha. Mass Communication and Journalism in India, P. 85

6 ஜீவியத் சாரி, ''பிர்லா சாம்ராஜ்ஜியத்தின் அடுத்த வாரிசு குமார் பாபு'', வணிகமணி, 16, 10, 95, ப, 12-14

7 ராகவன். 'விழிப்புணர்வே விடை', வணிகமணி, 30, 10, 95

8 எஸ், சிவக்குமார், 'வீணைத் தொழில் வீணாகலாமா', 30, 10, 95, ப. 14

9 வணிகமணி, 9, 10, 95, ப 24

10 பத்மன், 'ஆரோக்கியமான மாற்றத்தை ஆதரிக்கலாம்', வணிகமணி, 23, 10, 95ப. 2

11 பி, பார்வதி, வார இதழ்களில் (1983) இதழியல் உத்தி கள், முனைவர் பட்ட ஆய்வேடு, ப.

12 செய்தி நாற்றங்கால், வணிகமணி, 30, 10, 95, ப, 2

வாடி வாசல் நாவலில் சல்லிக்கட்டுக் கூறுகள்

ஆ. இலக்கொழுந்து

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சல்லிக்கட்டு என்னும் வீர விளையாட்டு பழந்தமிழர்களிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ளது. இது குறித்துப் பல கட்டுரைகள் வந்துள்ளன படைப்பிலக்கியமாகத் தற்காலத்தில் வாடி வாசல்-என்ற நாவல் மட்டுமே வெளிவந்துள்ளது. இந் நாவலிலிருந்து நாவலின் சுருக்கம் காளையின் நிறங்கள், அறிவிப்புச் செய்தல், காளையின் பெருமை, பிடிபட்ட காளையின் நிலை ஆகியவற்றைக் இக்கட்டுரையில் எழுதப்பட்டுள்ளன.

நாவலின் சுருக்கம்

செல்லாயி அம்மாள் கோவில் சல்லிக்கட்டு விழாவிற்குப் பிச்சியும் மருதனும் காளைகளைப் பிடிப்பதற்குக் கிழக்கு சீமையிலிருந்து சென்றுள்ளனர் சல்லிகட்டுத் தொடங்கும் முன்னரே சல்லிக்கட்டுகாளைகளைக் காளையின் உரிமையாளர்கள் பாதை காட்டும் பொழுது காளைகளின் குணத்தை பிச்சியும் மருதனும் மாடுகள் குறைவாக வந்திருந்ததைக் கண்டு செல்லாயி சல்லிக்கட்டுச் சீமையிலே பேர்பெத்ததுன்னு சொன்னாங்களே வந்து பார்த்தாலே தெரியுது என்று சல்லிக்கட்டினை குறைத்து மதிப்பிட்டும் பேசிக் கொண்டனர் இதனைக்கேட்ட உள்ளூர்க்கிழவன் நீங்கள் கிழக்குச் சீமைக்காரனுங்களா என்று கேட்டு விட்டு ஐந்நூறு மாடுங்களுக்கு என்று குறைஞ்சா வாடியில் எச்சிலைத் துப்பிட்டுப் போங்க என்று கூறினார். பின்னர் பிச்சியும் மருதனும் கிழவனைச் சமாளித்து நண்பராக்கிக் கொண்டனர். கிழவன் பிச்சிக்கும் மருதனுக்கும் ஒவ்வொரு காளையின் குணங்களையும் சொல்லிக் கொடுத்தார் கிழவனின் நட்பால் 'பிச்சியும் மருதனும் ஒவ்வொரு காளையின் குணத்தையும் அறிந்து காளைகளைப் பிடித்து வெற்றி பெற்றுக்கொண்டு வந்தனர், பிச்சி செல்லாயி சல்லிக்கட்டிற்கு வந்ததன் நோக்கமே தன்தந்தையைத் தாக்கிய காரிகாளையைப் பிடித்து வெற்றிக் கொள்வதற்கு அதனையும்

பிடித்து வெற்றி கொண்டு சமீன்தாரிடம் பாராட்டுவதையும் பரிசினையும் பெற்றான்.

காளையின் நிறங்கள்

காளைகள் பொதுவாகப் பல நிறங்களில் உள்ளன இதில் சல்லிக்கட்டுக்குக் காளைவளர்ப்பவர்கள் பெரும்பாலும் மயிலை நிறக்காளையினை விரும்பி வளர்க்கின்றனர். காரி, மயிலை, கொரால், பில்லை, வெள்ளை, கரம்பை கரிசல் எனப்பல நிறங்களை உடைய காளைகளை வாடிவாசல் நாவலில் காண முடிகின்றது.

அறிவிப்புச் செய்தல்

சல்லிக்கட்டுக் காளை வாடிமிலிருந்து அவிழ்த்து விடப் படும் பொழுது காளையைப்பற்றியும் அதன் பெருமைப்பற்றியும் அறிவிப்புச் செய்துவிட்டு நடுவர் குழு காளைகளை அவிழ்த்து விடுவது வழக்கமாக இருந்து வருகின்றது. இதனைப் போன்றே வாடிவாசல் நாவலிலும் காணப்படுகின்றது. நாவலில் தமுக்கு என்றும் இசைக்கருவியினை அடித்து காளையில் பெருமையும் அதற்கு விதிக்கப்பட்டுள்ள பரிவுப் பொருள்களையும் அறிவிக்கப் படுகின்றன.

"ஈரேழு உலகம் அஷ்டதித்திக்குகளிலும் ஜயக்கொடி நாட்டிய தீரவிர பராக்கிரப் பெரியபட்டி ஜமீன்தார் எசமானுடைய இந்தக் காரிக்காளை கொம்புக்கு நடுவே நெத்தித்திட்டுலே ரெண்டு பவுலு தங்கமா நடுவே கோத்துத் தொங்கவிட்டு இருக்குது மாடு அணைகிறவன்னு சொல்லிக்கிட்டு இருக்கிற ஆம்புள மீசை முறுக்கிகள் பெண்சாதிகளை அனையராப்லே உந்தக் காரியை அணைஞ்சு அதை அவுத்துக்கிடலாம் அத்தோட புடிச்ச வீரனுக்கு சமீன்தாரு தன் கையாலே ஒரு சரிகைத் துப்பட்டாவும் இனமாகக் கொடுப்பாரு ஆம்புளையா இருந்தா புடுச்சிக்க, பொம்புளை இருந்தா ஓடிப்போ" - வாடிவால் எனத் தடுக்கு அடிப்பவன் கூறுகின்றான். இவ்வாறு அறிவுப்பச் செய்வதன் மூலம். இளைஞர்களின் ரோசம் தூண்டப்படுகின்றது. இதுவரை மாடு பிடிக்கும் எண்ணம் இல்லாத இளைஞர்கள் அறிவிப்புச் செய்தி யினால் மாடுபிடிக்க முன்வருவதற்கு வாய்ப்புள்ளது.

காளையின் பெருமை

பல சல்லிக்கட்டில் மாடு பிடி வீரனைத்தாக்கி வெற்றிய டைந்த மாடுகளைப் பெருமையாகப் பேசுவது சல்லிக் கட்டில் காணப்படுகின்றது. இப்பெருமையான பேச்சுக்கள் காளை வாடிக்குக் கொண்டு நிறுத்தும் பொழுது இடம் பெறுகிறது. இதனைப் போன்று வாடி வாசல் நாவலிலும் இடம் பெற்றுள்ளது.

''வாடிப்புரம் காளை
கருப்புப் பிசாசு
ராட்சசக் காரி'' -வாடிவாசல்- எனக் கூறுகின்றனர்.

இவ்வாறு கூறுவதனால் காரிக் காளைத் தன்னைப் பிடிக்க வரும் மாடுபிடி வீரனைத் தாக்குவதில் பிசாசைப் போன்றும் ராட்சதனைப் போன்றும் வல்லமையுடையது என்பது தெளிவாகின்றது.

மேலும் பில்லைக்காளை நல்லபாம்பு மாதிரி சீறும் என்று வாடிவாசல் கூறிவதில் இதன் தாக்குதல் நமக்குத் தெளிவாகின்றது. கொரால் நறிப்பிறவி என்று நாவல் கூறுகின்றன்றது இதிலிருந்து கொரால் மாடுபிடி வீரர்களை ஏமாற்றி விட்டு ஓடி விடும் என்பதும் தெளிவாகின்றது.

பிடிபட்ட காளையின் நிலை

சல்லிக் கட்டுக்களை வளர்ப்போர் தங்களின் காளையின் பெருமையை தன் சீமைக்குத் தெரியப்படுத்த வேண்டும். காளையின் பெருமையால் தன்னுடைய பெயரும் நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் காளையினை நன்றாகத் தயார் செய்து சல்லிக்கட்டில் புகழ் சேர்ப்பார்கள். இவ்வாறு புகழ் சேர்த்த காளையானது சல்லிக்கட்டில் மாடு பிடி வீரனால் பிடிக்கப் பட்டுவிட்டால் காளை வளர்ப்போர் தனக்கு அவமானமாகக் கருதி காளையை விற்றல், அல்லது உழவுத் தொழில் ஈடுபடுத்துவதுமான பழக்கத்தினைக் கையாண்டு வருகின்றனர். வாடிவாசல் நாவல் இவற்றை உள்ளடக்கியும் இதற்கு அப்பாற்பட்ட நிலையான காளையைக் கொன்றுவிடுதல் என்றும் செயலையும் தெரிவிக்கின்றது.

''கொராலு சாணி போட்டுக்கிட்டு போழுது பேரல்
உடையடிச்சு உளவுல கட்டுங்கடா
பொழிச்சலுக் கூட லாயக்கு இல்லே
கிழக்கத்தியான் இரண்டு பேர் பெத்த காலையை சிறைப் படுத்திட்டான் டோல்''--(வாடிவாசல்)

இவ்வாறு கூறுவதன் மூலம் சல்லிக்கட்டில் உழவுத் தொழில் ஈடுபடுத்துகின்றனர் என்பது புலனாகின்றது.

மேலும் காரிக்காளை பிடிபட்டவுடன் சல்லிக்கட்டுப் பார்த்தவர்களின் குரல்கள் ஆர்பரித்தவை:

''சாரிக்காளை மண்ணைக் கவ்விரிச்சு
சமீன் மாட்டை கிளக்கத்தியான் பிடிக்கிப் போட்டான்
பெயரியப்பட்டி சமீன் மாடு கலஞ்சிருச்சு வாடி வாசல்லே''
-(வாடிவாசல்)

இவற்றைக் கேட்ட சமீன்தார் அவமானம் தாங்காமல் கைத்துப் பாக்கியால் தன்னுடைய காரிக்காளையை சுட்டுக் கொன்று விட்டார்.

''காரிக்காளை செத்துப் போச்சு
சமீன்தார் சுட்டுக் கொன்னுட்டாரு''
(-வாடிவாசல்)

இவ்வழக்கம் இன்றைய மாடு வளர்ப்பவர்களிடம் இல்லை. இதனை சினிமாவில் காண முடிகின்றது.

1. காளைகள் பல நிறங்களில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஒரு குணங் கொண்டதாக இருக்காது. வெவ்வேறு குணங்கள் உடையதாக இருக்கின்றன. அறிவிப்பு செய்வதால் பிடிகாரர்களுக்கு ரோசத்தைத் தூண்டி விடுப்படுகின்றது. மாடு பிடி வீரனைத்தாக்கி வெற்றி பெற்ற காளைகளை சல்லிக்கட்டு வட்டாரத்தில் பெருமையாகப் பேசிக் கொள்கின்றனர். பெயர் பெற்ற காளை பிடிபட்டுவிட்டால் அவமானம் தாங்காமல், காளை வளர்ப்பவர்கள் காளையினை விற்றல், உழவில் பூட்டுதல், கொன்று விடுதல் ஆகிய செயல்களைச் செய்திருப்பதும் புலனாகின்றது.

கள்ளர் வெட்டுத் திருவிழாவின் சமூகப் பின்புலம்

மு. சுந்தரன்
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

மனித சமுதாயம் பலதரப்பட்ட நம்பிக்கைகளையும் பண்பாட்டு மரபுகளையும், தன்னகத்தே கொண்டு விளங்கினாலும் அதன் வரலாற்றை இலக்கியங்கள் வாயிலாகவோ, செப்பேடுகள், கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள் வாயிலாகவோ நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் இவற்றில் அடங்காத பல சமுதாய வரலாறுகளை எழுதப்படாத இலக்கியமாகத் திகழும் நாட்டுப்புறப் பாடல்கள் 'கதைகள்' வழிபாட்டு நிகழ்த்துகலைகள் ஆகியவைகள் நமக்கு மங்கிப்போன பண்பாட்டினையும் தொலைந்து போன வரலாறுகளையும் வெளிப்படுத்திக்காட்டும் களங்களாக விளங்குகின்றன என்பதை நாமறிவோம். அவ்வகையில் வ.உ. சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் தாலுகாவிற்குள் உள்ளடக்கமாக உள்ள தேரிக்குடியிருப்பில் அமைந்துள்ள கற்குவேல் அய்யனார் திருவிழாவில் இடம்பெறும் கள்ளர்வெட்டுத் திருவிழாவின் சமூகப் பின்புலத்தை வெளிப்படுத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்குவேல் அய்யனார் சுவாமிகளின் வழிபாடு

இத்தெய்வம் தேரிக்குடியிருப்பின் மேற்குத்திசையில் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு அய்யனார் முதன்மைத் தெய்வமாகவும் துணைத்தெய்வங்களாக (பெயர்தெரியாத நிலையில்) 21 தெய்வங்களும் காவல்தெய்வங்களாகத் துப்பாக்கிமாடன் பன்னீர்ச்சாமி, வன்னியசாமியும் விளங்குகின்றன. இத்தெய்வத்தினை வள்ளியூர், தேனி, செய்துங்கநல்லூர், வள்ளிவிளை ஆகிய நான்கு ஊர்களில் வாழும் கோனார் சாதியினரும் மறநாட்டைச்சேர்ந்த கள்ளர் சாதியினரும் தேரிக்குடியிருப்பு, காயாமொழி, நாதன்கிணறு, வள்ளிவிளை, கருப்பசாமிபுரம் ஆகிய ஐந்து ஊர்களில் வாழும் நாடார் சாதியினரும் கரிசான்விளை, தாயாமொழி ஆகிய ஊர்களில் வாழும் பறையர்சாதியினரும் இணைந்து வழிபட்டு விழா எடுத்துக்கொண்டாடுகின்றனர்.

இந்நான்கு சாதியினரும் முன்னொரு காலத்தில் தேரிக் குடியிருப்பிலேயே குடியிருந்திருக்கின்றனர். காலமாறுபாட்டின் காரணமாகப் பல்வேறு குடும்பங்களாகப் பிரிந்து இன்று பல ஊர்களிலும் வாழ்ந்து வருகின்றவர் என்பதனை தேரிக்குடி யிருப்பைச்சேர்ந்த மந்திரநாடார் என்பவரின் பேட்டிச்செய்தி யின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. இத்தெய்வத்திற்குரிய வழிபாடு ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தின் இறுதி நாளில் தொடங்கி மார்கழி மாதத்தின் முதல் இரண்டு நாட்கள் முடிய மொத்தம் மூன்று நாட்கள் நடைபெறுகின் றன. நான்கு சமூகத்தார் இணைந்து வணங்கும் சற்கு வேல் அய்யனார் திருவிழாவில் நாடார் சாதி யினர் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும் உண்மையான வழிபாடு என்பது கோனார் சாதியினருக்குரியதாகவே விளங்குகிறது என் பதனைக் கள ஆய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. எனைய மூன்று சாதியினரும் பெயரளவில் மட்டுமே கலந்து கொண்டாலும் நாடார் சாதியினர் தங்களுடைய மக்கள் தொகைப் பெருக்கம், பொருளாதார மேம்பாடு போன்ற காரணங்களால் கோவிலின் நிருவாகத்தைக் கைப்பற்றியுள்ளனர். ஆனால் மரு ளாடியாக இருப்பவர்கள், கோவிலின் முக்கிய நிகழ்ச்சிகளை நிகழ்த்துபவர்களாகக் கோனார் சாதியினரே விளங்குகின்றனர்.

மூன்று நாட்கள் இத்திருவிழாவின் முதல்நாளில் விளக்குப் பூசை மற்றும் பொங்கல் வைத்தல் நிகழ்ச்சியும் இரண்டாவது நாள் விழாவில் கள்ளர் வெட்டுத் திருவிழாவும் இடம் பெறுகிறது. கள்ளர் வெட்டுத் திருவிழாவில் சுற்குவேல் அய்யனார் மருளா டியை அருள் இறங்கிய நிலையில் ஊர்வலமாக அழைத்து வரு கிறார்கள். மருளாடியைத் தொடர்ந்து கள்ளர் போல் வேட மணிந்த (கோனார்) ஒருவரையும் ஊர்மக்கள் அழைத்து வரு கின்றனர் கள்ளராக வேடம் புனைந்து வருபவர் தன் தலையில் மட்டை உறிக்காத தேங்காய் (இளநீர்) ஒன்றைச் சுமந்து வரு கிறார். இத்துடன் அய்யனார் சுவாமியையும் அலங்கரித்து ஊர் வலமாக எடுத்து வருகின்றனர். ஊர்வலம் ஊரிலிருந்து கிளம்பிக் கோவிலைச் சென்றடைந்தவுடன் அய்யனார் சுவாமிக்குத் தீபா ராதனை செய்கின்றனர். அப்போது கள்ளர் வேடமணிந்து வருபவர் தேங்காயைத் தலையில் வைத்த வண்ணம் தரையில்

அமர்ந்து கொள்கிறார். இந்நிலையில் அய்யனார் மருளாடி கோவில் பூசாரிக்கு (வெள்ளாளர்) விபூதி வைத்துக் கள்ளனை வெட்டுவதற்கு அனுமதியளிக்கிறார் இந்நேரம் மேளநாளங்கள் இசைக்காமல் நிறுத்தப்படுகின்றன. மக்களும் சத்தமில்லாமல் நிற்க்கும் போது கள்ளனின் தலையிலுள்ள இளநீரைப் பெரிய அரிவாளாள் ஒரே வெட்டில் இரண்டாகப் பிளக்கச் செய்கிறார் பூசாரி. இதனையே கள்ளர் வெட்டுத் திருவிசா என்று அழைக்கின்றனர்.

வெட்டப்பட்ட இளநீரிலிருந்து சிந்திய நீர் தலையில் விழுந்து தரை ஈரமானவுடன் ஈரமண் அனைத்தையும் எடுத்துக் கோவில் பித்தளைத் தட்டில் கொண்டுபோய் ஆற்றில் போட்டு விடு கிறார் பூசாரி. இவ்வாறு மண் எடுப்பதனையே புனித மண் எடுத்தல் என்றழைக்கிறார்கள். பூசாரி மண் எடுத்துச் சென்றவுடன் திருவிழாக்காண வந்திருக்கும் பொதுமக்கள் அனைவரும் கள்ளர் வெட்டு நடந்த இடத்திலிருந்து மண்ணை எடுத்துக் கொண்டு தங்கள் விடுகளுக்குச் செல்கின்றனர். இம் மண்ணைத் தங்கள் வயல்களில் போட்டாலோ அல்லது வீடுகளில் வைத்திருந்தாலோ நன்மை கிடைக்கும் என்றும் நம்பிக்கை கொள்கின்றனர்.

மூன்றாவது நாள் திருவிழாவில் அதாவது இறுதி நாளான மார்கழி இரண்டாம் நாள் அதிகாலையில் விளக்குப் பூசையுடன் ஆடுவெட்டுத் திருவிழா ஆரம்பமாகிறது. கோவில் பணத்திலிருந்து வாங்கப்பட்ட பெரிய ஆட்டுக்கடாவை மாலையணிவித்துக் கோவி லுக்கு அழைத்து வருகிறார்கள். கோவிலுக்குள் வந்தவுடன் அய்யனார்சாமி மருளாடி கடா வெட்டுவதற்குரிய நபரைத் தேர்ந் தெடுத்து அவர் மேல் விபூதிவைத்து ஆட்டை வெட்டுவதற்கு அனுமதியளித்தவுடன், கடாவை மல்லாக்கப்படுக்கப் வைத்து அதன் நெஞ்சில் கத்தியைக் கொண்டு கை உள்ளே செல்லக் கூடிய அளவிற்குக் கிழித்து ஆட்டின் இதயத்தைக் கத்தியால் அறுத்து எடுத்து வாழை இலையில் வைத்துப் படையலாகப் படைக்கிறார்கள். இதயம் அறுத்தெடுக்கப்பட்ட ஆட்டின் நெஞ் சிற்நள் தோல் உறிக்கப்பட்ட வாழைப்பழத்தை வைத்து உயி ரோடு போட்டு விடுகிறார்கள். ஆடு இறந்தபின் அதனைக் கறி யாக்கி வரிக் கொடுத்தவர்கள் அனைவிருக்கும் பகிர்ந்தளிக்கிறார் கள். இதனையே ஆடுவெட்டுத் திருவிழா என்று குறிப்பிடு கிறார்கள். இதனைத் தொடர்ந்து மஞ்சள் நீராட்டுநடைபெறு

கிறது. இத்துடன் கற்குவேல் அய்யனார் கோவில் திருவிழா நிறைவடைகிறது.

கற்குவேல் அய்யனார் சுவாமியின் உருவாக்கம்

இத்தெய்வ உருவாக்கம் பற்றி அறிந்து கொள்ளும் பொருட்டுத் தேரிக்குடியிருப்பைச் சேர்ந்த முனியாண்டி நாடார் என்பவரிடம் பேட்டி கண்டபோது பின்வருமாறு கூறினார்.

ஒரு காலத்தில் தேரிக்குடியிருப்புப் பகுதியில் கள்ளர்கள் பயம் மிகவும் பயங்கரமாக இருந்திருக்கிறது. இங்குள்ள கோனார்கள் தங்களுடைய ஆடுமாடுகளைக் கள்ளர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காகப் பெரும்பாடுபட்டிருக்கிறார்கள். அப்போது ஒரு நாள் கோனார் ஒருவர் தன்னுடைய ஆடுகளைக் காட்டில் கொண்டு மேயவிட்டு விட்டு ஊருக்குத் திரும்பியிருக்கிறார். வரும்வழியில் இருந்த மரத்தின் வேர்வுன்று கோனாரின் காலைத் தட்டி விட்டதால் கோனார் கீழேவிழுந்து விட்டார். தன்னுடைய காலைத் தட்டிவிட்ட மரத்தின் வேரை மண்வெட்டியால் வெட்டி எடுக்க முற்பட்ட போது வேரிலிருந்து இரத்தம் பீறிட்டு அடித்திருக்கிறது. இரத்தத்தைப் பார்த்த கோனார் பயந்துபோய் வீட்டிற்கு வந்து கோடாங்கிக் காரனை வரவழைத்துக் குறிகேட்டிருக்கிறார். குறியில் "நான் தான் அய்யனார் சாமி, என்னை நீங்கள் வணங்கி வந்தால் உங்கள் குறையைப் போக்கிக் காலமெல்லாம் காத்து வருவேன்" என்று கூறியதால் அந்த இடத்தில் கோவில் கட்டிக் கும்பிட்டு வருவதாகக் குறிப்பிட்டார். இச்செய்தியே கற்கு வேல் அய்யனார் சுவாமியின் உருவாக்கம் குறித்த சான்றாக அமைகிறது.

கற்குவேல் அய்யனார் வழிபாட்டின் சமூகத்தாக்கங்கள்

தேரிக்குடியிருப்பைச் சேர்ந்த முனியாண்டி நாடார் என்பவர் கூறிய செய்தி நாட்டுப்புற மக்கள் தங்களின் தெய்வ உருவாக்கம் பற்றிக் கூறிக் கொள்ளும் ஓர் கதை வடிவமாகும். இக்கதையில் சமுதாயத் தாக்கம் பற்றிய குறிப்போ அல்லது செய்தியோ எதுவும் காணப்படாததால் கற்குவேல் அய்யனார் திருவிழாவில் சிறப்பான நிகழ்ச்சியாகக் கருதப்படும் கள்ளர் வெட்டுத்

திருவிழாவைப்பற்றி அறியும் பொருட்டு பேராசிரியர் ஆறுமுகக் கனி என்பவரிடம் பேட்டி கண்டபோது பின்வருமாறு கூறினார் கற்குவேல் அய்யனார் கோவில் அமைந்திருப்பது மணல் மேடு கள் நிறைந் தேரியப் பகுதியாகும். தொடக்கக் காலத்தில் மக் கள் அய்யனாரை வணங்க வந்த போது இம்மணல் மேடு களுக்குப் பின்னால் மறைந்திருந்து வழிப்பறி செய்திருக்கிறார் கள். கள்ளர்களின் வள்ப்பறித் தொல்லையால் மக்கள் கோவில் பக்கம் வரவே பயப்பட்டிருக்கிறார்கள். இச் சமயத்தில் கோவிலி லுள்ள பொருட்களைக் கள்ளர்கள் கொள்ளையடித்துச் சென்று விட்டார்கள். கள்ளர்களின் செயலைக் கண்டு கோபமடைந்த அய்யனார்சாமி கள்ளனைப் பிடித்து அவன் தலையை வெட்டிக் கொன்று விட்டது. அத்துடன் கள்ளனின் இதயத்தையும் எடுத் துப் படையலாக வைத்துக் கொண்டது. இது தான் கள்ளர் வெட்டுத் திருவிழாவின் பூர்வீகப்'' என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் ஆறுமுகக்கனி அவர்களின் கூற்று தொடக்கக் காலத்தில் நிகழ்ந்த போராட்டத்தின் சாரத்தை உள்ளடக்கிய செய்தி எனலாம். அதாவது கள்ளர்களின் வழிப்பறித் தொல்லை யால் அஞ்சிய மக்கள் இதற்கு ஒரு முடிவு கொண்டு வரும் பொருட்டுக் கோவில் திருடில கள்ளனைப் பிடித்து வெட்டிக் கொலை செய்து விட்டனர். தாங்கள் வெட்டிக் கொன்ற செய்தி வெளியில் தெரிந்தால் சாதியச் சண்டை நிகழலாம் என்ற அச் சத்தில் அய்யனாலே கள்ளனை வெட்டிக் கொன்றதாக மாற்றிக் கூறிவிட்டனர் எனலாம். அத்துடன் கள்ளனை வெட்டிக்கொன்ற இடத்தில் கிடந்த இரத்தம் தோய்ந்த மண்ணையும் அள்ளிக் கொண்டு போய் ஆற்றில் போட்டுள்ளனர் எனலாம். காரணம் இதனை எவரேனும் கண்டாலும் கூட பிரச்சனை உருவாகலாம் என்ற அச்சத்திலே மண்ணையும் அள்ளிக் கொண்டு போய் ஆற்றில் போட்டுள்ளனர் என்றே கூறத் தோன்றுகிறது எனலாம். தங்களின் செயலை மறைப்பதற்காகவும் அத்துடன் நியாயப் படுத்துவதற்காகவும் வேண்டியலே அய்யனார் திருவிழாவில் கள்ளர் போன்று வேடம்புனையைச் செய்து கள்ளர்வெட்டுத் திரு விழாவையும், புனிதமண் எடுத்தல் என்ற நிகழ்ச்சியையும் உரு வாக்கியுள்ளனர் எனலாம். மேலும் கடா வெட்டுத் திருவிழாவில் ஆட்டின் இதயத்தை மட்டும் கத்தியால் அறுத்தெடுத்து சாமிக்குப் படைத்தல் என்ற நிகழ்ச்சியும் தொன்மத்தின் வெளிப்படும் என லாம்.

விஜயநகர - நாயக்கர் காலச் சமயச்சார்பற்ற சிற்பங்கள்

எல். மணிவண்ணன்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

கோயில்கள் இறைவனுக்காகக் கட்டப்பட்டாலும் அவை அவ்வப்பகுதி மன்னர்களின் உள்ள உணர்வுகளையும், சமுதாய வாழ்க்கை முறைகளையும் எடுத்தியம்புகின்ற ஒரு கலைக் கூடமாகும். அதாவது சமுதாய வாழ்க்கைமுறை மற்றும் இலக்கியச் செய்திகள் ஆகியவற்றை சிற்பம், அல்லது ஓவியத்தின் வாயிலாகக் காட்சிப்படுத்தும் கலைக்கூடம் கோயில்கள் எனலாம். கோயில்களில் உள்ள மண்டபங்களை ஆராய்ந்தோமானால் அவை காட்சிக் கூடங்கள் போன்றும், நாடக அரங்குகள் போன்றும் தோன்றும். உதாரணமாக அழகர் கோயிலில் உள்ள கல்யாண மண்டபத்தில் ஒன்றோடொன்று தொடர்புடையதாக உள்ள சிற்ப அமைதிகளை நோக்கும் போது அம்மண்டபம் ஒரு நாடக அரங்கம் போல் அமைந்திருப்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இதுபோன்று இந்தியக் கோயில்களில், குறிப்பாகத் தமிழகக் கோயில்களில் அதிலும் சிறப்பாக விஜயநகர - நாயக்கர் காலக் கோயில்களில் அன்றைய சமுதாய வாழ்க்கை முறைகளை எடுத்துக் காட்டும் சிற்பங்களை ஏராளமாகக் காணலாம். இச்சிற்பங்களில் இராமாயணம், மகாபாரதம், பாகவதம், புராணங்கள் போன்றவற்றில் காணக்கிடக்கின்ற கதைத் தொகுப்புக்களைச் சிற்பங்களாக வடித்துள்ளனர். ஆனாலும் இவைசிற்ப சாஸ்திரங்களுக்கு உட்பட்டு அமைக்கப்பட்டவை ஆகும் மேலும் இவை சமயச்சார்புடையவை எனலாம் இவை தவிர சமயச் சார்பற்ற சிற்பங்கள் விஜய நகர-நாயக்கர் காலக் கோயில்களில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு சமயச்சார்பற்ற சிற்பங்களை அமைப்பதற்கு சாஸ்திரங்கள் கூடச்சிற்பிகளுக்குச் சுதந்திரம் அளித்துள்ளன.[1] இக்கட்டுரை பாண்டியநாட்டில் உள்ள விஜயநகர - நாயக்கர்களால் கட்டப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட கோயில்களில் உள்ள சமயச் சார்பற்ற சிற்பச் செய்திகளைப் பற்றி அமைகிறது.

சமயச்சார்பற்ற சிற்பங்கள் கோயில் மண்டபத் தூண்களிலும், கபோதப் பகுதிகளிலும் பெரும்பான்மையாகக் காணக்கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பாலும் குறவன் குறத்தி, நாடோடி, நாடோடிப்பெண், பாம்பாட்டி, குரங்காட்டி தப்பு அடிப்பவன், நடனமாது, விறலி, வேட்டுவன், முதலிய சிற்பங்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன.

குறவன், குறத்தி சிற்பங்கள் மதுரை, கிருஷ்ணாபுரம், திருக்குறுங்குடி, திருமெய்யம், இராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் ஒரேமாதிரி அமைப்புடையனவாக காணப்படுகின்றன குறவன், குறத்தி ஆகியோர் சங்க காலத்திலிருந்தே இருந்து வரும் இனத்தவராவர். தொல்காப்பியத்தில் கூட குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்களைக் கூறுமிடத்து, அந்நிலத்திற்குரிய மக்களாகக் குறவன், குறத்தி கூறப்பட்டுள்ளனர்.[2] விஜயநகர-நாயக்கர் காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களில் குறிப்பாக குறவஞ்சி இலக்கியத்தில் குறவன், குறத்தி பற்றிய குறிப்புக்கள் இடம்பெறுகின்றன இன்றளவும் சமுதாயத்தில் இடம் பெற்றிருக்கின்ற இனமாக குறவன் குறத்தி உள்ளனர். விஜய-நகர நாயக்கர் காலத்துச் சிற்பங்களில் குறவன் குறத்திக்கு அதிக இடமளித்துள்ளது அவர்களது காலத்தில் குறவன் குறத்தி சமுதாயத்தில் முக்கிய இடம்பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. திருக்குற்றாலக் குறவஞ்சியில் கதைத்தலைவிக்கு குறத்தி குறி சொல்வது பற்றிச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சிற்பங்களில் கூட குறத்தி குறி சொல்வது போன்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன. இத்தகைய சிற்பம் நாயக்கர் காலக் கலையின் உன்னத நிலையினைப் படம்பிடித்துக்காட்டும் கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயிலில் காணலாம். அடுத்ததாக குறத்தி ஒருவள் இடுப்பு மற்றும் தோளில் குழந்தைகளை வைத்துக்கொண்டு இடதுகையில் ஓலையினால் முடைந்தது போல் செதுக்கப்பட்ட கூடையைப் பிடித்துக்கொண்டும், வலது கையில் உணவுப் பாத்திரத்தை ஏந்திநிற்க, தோளில் உள்ள குழந்தை அவ்வுணவை எடுத்துத்தின்பது போல் காட்டப்பட்டிருப்பது குறவரது வாழ்வை சிற்பி படம்பிடித்துக் காட்டுவதாய் அமைகிறது. இத்தகு சிற்பம் திருக்குறுங்குடி திருமெய்யம் ஆகிய ஊர்களில் உள்ளன. இவற்றில் திருக்குறுங்குடி குறத்தி சிற்பம் மிகவும் தத்ருபமாக அமைக்கப்

பட்டுள்ளது. இராமேஸ்வரத்தில் உள்ள குறத்தி சிற்பத்தில் குறத்தியின் தோளில் குழந்தைக்குப் பதிலாக குரங்கு இடம் பெற்றுள்ளது. இவளது ஆடை நவீனமாக உள்ளது.

குறவன் சிற்பம் குறத்தி சிற்பத்தின் எதிரிலோ பக்க வாட்டுத்தூணிலோ இடம் பெறுகிறது. குறவன் தன் வலக் கையில் உள்ள ஈட்டியினால் புலி, அல்லது ஆமையைக் குத்துவது போலவும், தேன்சேகரிக்கும் கூட்டினை இடுக்கிக் கொண்டும் படைக்கப்பட்டுள்ளான். இவனது கொண்டை பக்கவாட்டில் இடம்பெறுகிறது இது அக்காலத்தில் ஆண்களும் கொண்டையிட்டுக் கொண்டனர் என்பதைக் காட்டு வதாய் அமைகிறது.

வேட்டுவனது சிற்பம் பொதுவாக முறுக்கிய மீசை, கையில் கத்தி ஆகியவற்றுடன் காட்டப்படுகிறது. ஸ்ரீவைகுண்டம் திருக்குறுங்குடி, மதுரை, திருநெய்யம் ஆகிய இடங்களில் இச் சிற்பம் இடம்பெறுகிறது. ஸ்ரீவைகுண்டத்தில் வேட்டுவனது சிற்பத்தில் காலுக்கடியில் பாம்பு இடம்பெறுகிறது. இது அவன் காட்டிற்குச் செல்வதைக் குறிப்பதாகக் கொள்ளலாம் மேலும் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு வேட்டுவனின் காலில் தைத்த முள்ளை ஒரு பெண் எடுப்பது போன்ற சிற்பமும் காட்டப்பட்டுள்ளது. இங்கு வேட்டுவனைக் குறிப்பதற்கு அவன் அருகே ஒரு வேட்டை நாயும், அவனது தோளில் வேட்டையாடி எடுத்துச் செல்லும் அழகிய மானும் மிகச் சிறப்பாகக் காட்டப் பட்டுள்ளன. முள்ளை எடுப்பதற்கு ஏற்றபடி நளினமாக தனது காலை இயற்கையாக மடித்துக் காட்டியிருப்பது பார்ப்பவரைப் பரவசமூட்டுகிறது அவனது உடலிலே காட்டப்பட்டுள்ள ஆடை, ஆபரணங்கள் நாயக்கர் காலத்து மக்களின் செல்வச் செழிப்பை நமக்கு, எடுத்துக்காட்டுகிறது

நாடோடிச்சிற்பங்களில், ஒரு நாடோடிப்பெண் இளவர சனைத் தோளில் தூக்கிச் செல்வதும், மற்றொரு நாடோடி

இளவரசியைத் தன் தோளில் தூக்கிச் செல்வதுபாக அமைக் கப்பட்டுள்ளது. இச் சிற்பங்களில் நாடோடி தன் மனைவியை யும், நாடோடிப் பெண் தன் கணவனையும் தூக்கிச் செல் கின்றனர் என்று கூறுவாரும் உண்டு[3] தன் மனைவியைத் தூக்கிச்செல்கின்ற நாடோடி தனது கையில் வாளேந்த வேண்டியதில்லை. மேலும் தோளில் அமர்ந்துள்ள பெண் விரைந்து செல் என்பது போல் கைகளால் சைகைகாட்ட வேண்டியதில்லை அப்பெண் தனது முகத்தை அனைவருக் கும் காட்டாது முக்காடிட்டு மறைந்துள்ளார்.

நாடோடியின் நெஞ்சிலே காயம்பட்டு இரத்தம் கசிகிறது, பக்கவாட்டில் அவனைக் குதிரை வீரர்கள் கைகளில் ஈட்டி யுடன் விரட்டி வருகின்றனர் இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாடோடி சுமந்து செல்வது அவனுடைய மனைவியல்ல இளவரசியே எனலாம் மேலும் நாடோடிப் பெண் சுமந்து வரும் ஆணின் தலையில் கிரீடம் இருப்பதால் இளவரசன் எனக் கொள்ளலாம். எனவே இவ்விருவரும் இளவரசி, மற்றும் இளவரசன் எனக்கொள்வதே பொருத்தமாக அமைகிறது. இச் சிற்பங்கள் படைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் மேலும் ஆய் வுக்குரியது.

மேற்கண்ட சிற்பங்கள் தவிர வீணை வாசிக்கும் விறளி யும் அவனுக்கு எதிரே நடமாடும் பெண் உருவமும் இடம் பெறுகின்றனர். இத்தகு சிற்பங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண் டாள் கோயிலிலும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும் (ஆயிரம் கால் மண்டபம்) காணப்படுகின்றன. இவைதவிர ஸ்ரீவில்லிபுத்தூரில் தப்பு அடிக்கும் சிற்பமும், ஸ்ரீவைகுண்டத் தில் பாம்பாட்டி சிற்பமும், திருக்குறுங்குடியில் குரங்காட்டி சிற்பமும் இடம்பெறுகின்றன. இவ்வாறு சமுதாயத்தில் இன்ற ளவும் நடந்து வருகின்ற நிகழ்ச்சிகளை சுமார் 400, 500

ஆண்டுகளுக்கு முன்பே சிற்பங்களில் வடித்துள்ள அக்காலக் கலைஞர்களின் திறனை நாம் காணமுடிகிறது. கோயில்கள் சமயச்சிற்பங்களைமட்டும் கண்டுகளிக்கும் இடமாக அமையாது மகிழ்ச்சிதரக்கூடிய, பொழுது போக்கு அம்சங் களைக் கொண்ட சிற்பங்களையும் கொண்டு விளங்குகிறது. எனவேதான் அன்றாட வாழ்க்கை முறையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைச் சித்தரித்துள்ளனர். விஜயநகர-நாயக்கர் காலச் சமயச் சார்பற்ற சிற்பங்கள் பற்றிய நுண்ணிய அதே சமயம் விரிவான ஆய்வு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

குறிப்புகள்

1. S.K Ramachandra Rao
   Art and Architecture of Indian temples Vol. I, P-8

2. மு. அருணாசலம்பிள்ளை
   தொல்காப்பியம், அகத்திணையியல் உரைவளம் ப 241

3. S.K. Ramachandra Rao
   மேலது, ப.18.

குழந்தைகளின் படைப்பு உருவாக்கம்

ஆ. பாப்பா

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

நாட்டுப்புற விளையாட்டுக்கள் குழந்தையிலிருந்து பெரியவர் வரை அனைவராலும் விளையாடப்படுகின்றன. இவற்றை அறிஞர்கள் பாலடிப்படையிலும், வயது மற்றும் இடம், காலம், திறன் ஆகியவற்றினடிப்படையிலும் பிரித்திருக்கின்றனர். இவ்வகைப்பாட்டில் வயதடிப்படையில் வருகின்ற சிறுவர். சிறுமியர் விளையாட்டுக்களும் ஒன்று. இவ்வகையினுள் தொடுதல், பிடித்து விளையாடுதல். கண்டு பிடித்தல், போட்டி போன்ற செயல்கள் அடங்கினாலும் அதிகமாகக் காணப்படுவது போலச்செய்தல் (Make believe) என்பதாகும்.

போலச்செய்தல் என்பது குழந்தைப் பருவத்திலேயே அதாவது குழந்தை பிறந்த இருபதாவது மாதத்திலிருந்தே தொடங்கி விடுகின்றன என்றும், இரண்டு வயதிலிருந்து ஏழுவயது வரையுள்ள பருவத்தில் அதிகமாகக் காணப்படும் உளவியலார் கூறுகின்றனர். இந்த போலச்செய்தல் அல்லது பாவனையை இரண்டு நிலைகளில் குழந்தைகள் விளையாட்டுக்களில் காணலாம். அதாவது குழந்தையின் இரண்டாவது வயது தொடங்குகிறபோது காணப்படுகின்ற பாவனைக்கும், சிறிது வளர்ந்தபிறகு காணப்படுகின்ற பாவனைக்கும் வேறுபாடு உண்டு.

ஆரம்பநிலையில் குழந்தையிடம் காணப்படும் பாவனை தற்சார்பற்றது. குழந்தை நிஜத்தில் காணும் நிகழ்வை எந்த விதமான மாற்றமுமின்றி அப்படியே பிரதிபலிக்கின்றது. தன்னுடன் இருப்பவர்கள் செய்துகாட்டுகின்ற. செய்யச் சொல்கின்ற செயலை அப்படியே செய்துகாட்டுகின்றது. அல்லது செய்ய முயற்சிக்கின்றது. சான்றாக – உதட்டைப் கார் ஓட்டுவது போன்று சத்தம் செய்தல், சாய்ந்தாடுதல், கைவிரல்களை (கீரிக்கீரி நண்டுபிடி எனும் பாடலுடன்) மூடித்திறத்தல், கைவிரல்களை இருபுறமும் ஆட்டுதல் (தாப்பூ

தாமரைப்பூ பெரியவர்களால் பாடல்கள் பாடப் ஆரம்பிக்கும் பொழுதே குழந்தைகள் அச்செயலை செய்ய ஆரம்பிக்கின்றனர். ஒருமுறை மட்டுமல்லாது மீண்டும் மீண்டும் செய்கின்ற பொழுது மகிழ்ச்சியடைகின்றனர் மற்றவர்களையும் மீண்டும் மீண்டும் செய்யச்சொல்கின்றனர். இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்வதன்மூலம் போலச்செய்தல் துவங்குகின்றது. மீண்டும் மீண்டும் செய்வதிலிருந்து தான் விளையாட்டு துவங்குவதாக உளவியலார் கூறுகின்றனர். இது உண்மையே, இப்பருவத்தில் குழந்தை எதையும் தான் உற்று செய்வதில்லை. அதனுடைய செயல்களைப் பார்க்கிறவர்களே அதனை விளையாட்டாகவும், செயல்களுக்குப் பொருந்தியவாறு கதைகளையும் கூறுகின்றனர் இப்பருத்தில் விளையாட்டையும், குழந்தையின் செயல்களையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது

இதற்கடுத்தநிலையிலும் குழந்தையிடம் பாவனை காணப்படுகின்றது ஆனால் இது கற்பனைகலந்தது. பாவனையுடன் தனது சொந்தக் கற்பனையையும் கலந்து புதியதான சில வற்றை உருவாக்குகின்றது. அவையே கற்பனைத்தோழர்கள், கற்பனைப் பொருள்கள் கலந்த கற்பனையான உலகமாகும். கற்பனையைக் கையாளுவதன் மூலம் சிறிய எண்ணங்களிலிருந்து பெரிய எண்ணங்களை குழந்தையால் அமைக்க முடிகின்றது கற்பனையானது அதன் கையிலுள்ள விளையாட்டுப் பொருள்களைச் சுற்றியே அமைகின்றது. இருக்கின்ற பொருள்களுக்கு இல்லாத பொருட்களின் வடிவத்தை குழந்தையால்தான் தரமுடியும் கையிலிருக்கும் சின்னக் குச்சியே குழந்தையாகவும் குதிரையாகவும், மோட்டார் வண்டியாகவும் மாற்றுகிறது

பெரியவர்கள் தேவையில்லை என்று ஒதுக்கிய பொருட்களே குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாக இருக்கும் என்று ஆலன் டண்டீஸ் கூறுகிறார் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்களிருக்கும் அறை அல்லது பெட்டியைப் பார்த்தால இது விளங்கும் இத்தகைய தேவையில்லாத பொருட்களை வைத்துக் கொண்டே குழந்தைகள் தங்கள் விளையாட்டை நடத்துகின்றனர். குழந்தைகளின்

விளையாட்டுப் பொருட்களை வைத்து அது புதிதாகப் படைத்தல், என்று புதியனத உருவாக்குவதை இரண்டு நிலைகளில் காணலாம்.

1. தன்னிடமுள்ள பொருட்களை மற்றொன்றாக பாவித்தல்.
2. தன்னிடமுள்ள பொருள்களிலிருந்து மற்றொன்றை உருவாக்குதல்.

முதல்நிலையை சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்களில் அதிகமாகக் காணமுடியும். அப்பா அம்மா விளையாட்டு, வியாபாரவிளையாட்டு போன்றவை சான்றுகளாகும். இதில் மணலை அரிசியாகவும், இலைகளைக் கீரையாகவும், களிமண் அல்லது ஈரமண்ணை இட்லி தோசையாகவும், தண்ணீரை எண்ணெய்யாகவும், அதே நீரில் செங்கல்பொடி அல்லது செங்கல்லைக் கலந்து அதனைக் குழம்பாகவும் என்று தனக்குள் எளிதாகக் கிடைக்கின்ற பொருட்களை வைத்து விளையாடுகின்றனர்.

மற்றொரு நிலை தன்னிடமுள்ள பொருட்களிலிருந்து மற்றொன்றை உருவாக்குதல் என்பதாகும். குழந்தைகளின் வியாபார விளையாட்டில் அவர்களால் உருவாக்கப்படும் 'தராசு' இதற்கு சான்றாகும். சோடபாட்டில் மூடி, தகரப்பா மூடி, தேங்காய் சிரட்டை ஆகியவற்றைக் கொண்டு 'தராசு' தயாரிக்கின்றனர். ஒவ்வொரு தராசும் ஒவ்வொரு பொருளை எடை பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. தேங்காய் சிரட்டையில் அரிசியும் (மணல்) தகரடப்பா மூடியில் கீரை (இலை) விறகு போன்றவையும், சோடபாட்டில் மூடியில் காய்கள் போன்றையும் நிறுத்துத் தரப்படுகின்றன.

மற்றொன்று தங்களிடமுள்ள தாளினால் (Paper) சில புதியவற்றைப் படைத்தலாகும். தாளின் மூலமாக விசிறி, ஒத்தக்குச்சி பாம்பு என்று பாம்பு போன்ற உருவத்தைச் செய்தல், கைவிரல்களில் மாட்டிக் கொள்வதற்காக நான்காக மடக்கி பூப்போன்று செய்து கைகளில் மாட்டி சுருக்கிவிரித்தல் போன்றவற்றைத் தயாரிக்கின்றனர் தாளில் பாம்பு போன்ற உருவத்தைச் செய்து அதைக் கைகளில் வைத்து ஆட்டிக் கொண்டே மற்றவர்களிடம் ஒத்திக் குச்சிப்பாம்பு என்று

பாடிக்கொண்டே சென்று அவர்களிடம் ஒரு குச்சி (எழுது கோல்) வாங்கிக் கொண்டு வருகின்றனர் அவ்வாறு குச்சு தாவிட்டால தராதவர்களிடம் இரவில் பாம்பு வந்து கொத்தும் என்று பயமுறுத்துவர். மற்றொரு செய்கையில பென்சில் அழிக்கும் இரப்பரை தலையில் தடவியிருக்கும் என்னை இரப்பரில் படுமாறு நான்கு தலையில் வைத்து தேய்த்து புத்தகங்களில் உள்ள படங்களில் எங்கேயாவது படுமாறு வைத்து அச்சிடுக்கின்றனர் இவ்விரண்டு செய்கைகளும் பள்ளிச்சிறுவர் சிறுமியரிடம், பள்ளிநேரங்களில் அதிகமாகக் காணப்படுவதாகும். இது விளையாட்டா/பொழுதுபோக்கா என்பது மேலும் ஆய்விற்குரியது. எனினும் சிறுவர் சிறுமியரின் படைப்புருவாக்கம் வளர்ச்சிபெறுவதில் இச்செய்கைகளின் பங்கும் இருப்பதால் இங்கு விளக்கப்படுகின்றது.

மற்றொரு நிலை தன்னிடமில்லாத பொருட்களை தன்னிடமிருக்கும் பொருட்களிடம் பார்க்கின்றதையடுத்து தானே மற்றவராக மாறுதல் என்பதாகும், கற்பனைத் தோழர்கள் கற்பனைப் பொருள்களுடன் விளையாடுவதையும், பேசுவதையும் அடுத்து தான் பார்ப்பவராக, தான் விரும்பு வராக தானே மாறிவிடுதல் என்பதாகும். இதுவே நடித்தல் ஆகும். குழந்தைகள் தங்கள் விளையாட்டில் தாங்களே அம்மா, அப்பா, ஆசிரியர்' டாக்டர், திருடன், போலீஸ், ஆகியோராகப் பாத்திரமேற்று நடிக்கின்றனர். இதில்தான் குழந்தைகளின் தன்வெளியிடு வெளிப்படையாகத் தெரிகிறது. தன்மனதிலுள்ள விருப்பு, வெறுப்புக்கள் வெளிப்படுததப் படுகின்றன. இதிலே ஒன்றிவிடலும் அதிகமாகக் காணப்படு கின்றது. அதாவது தானே அந்தப் பாத்திரமாக ஒன்றுதலாகும். இந்த நிலையில்தான் தலைமைப்பண்பு (leadership) ஆளுமை அதிகாரம், போன்றவை குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. அதிகாரமுடையவனாக ஒருவன் வளர்வதும். கட்டுப்படும் பண்புடையவனாக ஒருவன் வளர்வதும் இந்நிலையில்தான் பார்க்கமுடியும் நடித்தல் என்பதுடன் ஒருவனுடைய திறமை யும் வெளிப்படுகின்றன. வேகமாக ஓடக்கூடிய ஒருவன்தான் விளையாட்டில் திருடனாக இருக்கமுடியும். ஒவ்வொருநாளும் விளையாட்டில் அவனே திருடனாக இருக்கமுடியும் இவ் வாறு நடித்தல் என்பது தன்வெளியிடாகவும், அதே நேரத்தில் பிற்கால வாழ்க்கைக்குத் தேவையான சில பண்புகளைத்

தரக்கூடியதாகவும் அமைகின்றது. இந்த போலச் செய்தல் விளையாட்டுக்களில் நாடகத்தின் கூறுகள் அமைந்திருப்பதால் பிற்கால நாடகத்தின் தோற்றத்திற்கு இத்தகு விளையாட்டுக் களே வித்தாக அமைந்திருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

1. சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்களில் போலச் செய்தல் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவர்களின் புதிதான படைப்பு உருவாக்கத்திலும் இது அதிகப் பங்களிக் கின்றது.

2. பாவனை → கற்பனைகலந்த பாவனை → நடித்தல் என்று படைப்புருவாக்கம் வளர்ச்சி பெறுகிறது. அதாவது தன்னிடமுள்ள பொருட்களை மற்றொன்றாகப் பாவிப்ப திலிருந்து, தானே மற்றொன்றாக மாறுதல் என்கிற வளர்ச்சியைக் குழந்தைகள் பெறுகின்றனர்.

3. படைப்பு உருவாக்க வளர்ச்சியில் சிறுவர் விளையாட்டுக் களுடன் சிறுவர் பொழுதுபோக்குகளும் பங்களிக்கின்றன.

4 இக்கட்டுரை குழந்தைகளின் படைப்பு உருவாக்கப் எவ்வாறு வளர்ச்சி பெறுகிறது என்பதைப்பற்றி உள வியலடிப்படையில் அறிமுகத்துடனும். அதிகமான தரவு களையும் கொண்டதாக அமைந்திருக்கும் முழுமையடை யாத கட்டுரையாகும். உளவியலாளரால் பிறந்ததிலிருந்து 14 வரையுள்ள பருவம் குழந்தைப் பருவமாகக் கருதப்படு கிறது எனவே இத்தலைப்பு.

சண்முகம் சிவலிங்கம் கவிதைகளில் ஈழத் தமிழர் நிலை

மா கருணாகரன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

ஈழத்துத் தமிழிலக்கியம் 19 0 ஆம் ஆண்டிற்குப்பிறகு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் மிகப்பெரியமாறுதல்களைப் பெற்றிருக்கிறது. 1960களில் ஈழத்து இலக்கியம் முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டினை மையமிட்டிருந்தது. 1970களின பிற்பகுதி வரையில் தொடர்ந்து வந்த இப்போக்கு ஈழத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் தனது உள்ளடக்கத்தையும் உருவத்தையும் மாற்றிக்கொண்டு பரிசோதனை முயற்சியில் இறங்கி வெற்றியும் பெற்றது எனலாம் அதாவது சிங்கள பெருந்தேசியவாதத்தின் இனஒடுக்கல் மூலம் தூண்டப்பட்ட இனவெறியின் உச்சக்கட்டத்தின் பாதிப்பு ஈழத்தமிழ் இளைஞர்களிடையே வளர்ச்சியடைந்த தமிழ்த் தேசிய வாதத்தை முன்னிறுத்தி ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டது. இப்போராட்ட உணர்வு ஈழத்துப்படைப்பாளிகளின் இலக்கியங்களில் மேலோங்கிய பொருளானது அதிகமான இலக்கியவாதிகளையும் அறிமுகப் படுத்தியது. அப்போராட்ட உணர்வினை சண்முகம் சிவலிங் கம் தம் கவிதைகளில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்படுகிற இராணுவ அடக்குமுறையைக்கையாண்டுள்ள முறையை இக் கட்டுரை வழி அறியலாம்.

ஈழத்தமிழ்ப்பகுதிகளில் தினந்தோறும் நடைபெறும் கொடூரமான நிகழ்வு சிங்கள இராணுவத்தின் அடக்குமுறை யாகும். தமிழ்ப்பகுதிகளில் கொலை, கற்பழிப்பு, பிணம் இரத்தம் போன்ற சொற்கள் அன்றாட நிகழ்வுகளின் விளைவு களால் பழகிப்போன ஒவ்வொரு மனிதனது உணர்வுகளிலும் உறைந்துபோன வாழ்க்கையாக மாறிவிட்டது. கவிஞரது நினைவுகளில் இத்தகை நிகழ்ச்சிகள் படிமமாகப் படிந்து விட்டது. அவரது 'பாடாத பாடல்கள்' என்ற கவிதையில் இடம்பெறும்

"முட்டைக்குள் கோழிக்குஞ்சு
சிறகு ரோமங்களுடன் மரணித்துப்
போகின்றது
. — .. — .. — ... — ...
வெண்புறாக்கள்
தலைகெழிய வீழ்ந்து
சிறகொடியச் சுருண்டு கிடக்கின்றன"

என்ற வரிகள் மூலம் அறியலாம் கவிஞரது அகஉலகில் ஊறிப்போன சமூகப்பிரச்சினைகள், நிகழ்வுகளின் சாயலே அவரது படைப்புகளில் படிமமாக வெளிப்படுகின்றன எனலாம் இத்தகைய படிமப் பயன்பாடு பற்றிய லெனினின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அதாவது "மனிதனது உணர்வுகள் எண்ணங்கள் மனப்போக்குகள் ஆகிய அனைத்தும் புறஉலகின் சாயலாகவும் படிமமாகவும் (Image) காட்சி தருகின்றன. எனவே, மனித வாழ்க்கை என்கிற படிமம் புறஉலகப் பின்னணியில் இல்லாமல் தனித்து நின்று வாழ முடியாது" என்பதாகும். எனவே கலைப்படிமங்கள் என்பது ஒரு படைப்பாளியின் அகவுணர்வு என்னும் பிம்பத்தின் மூலம் பிரதிபலிக்கப்படும் புறஉலகின் சாயல் எனலாம். மேலும் சிங்கள இராணுவம் தமிழ் இளைஞர்களைப்பிடித்துத் தன் புறுத்தும் நிலையை சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்த இயேசுவின் நிலையோடு ஒப்பிட்டு அவரிடம் தாங்கள் படும் துயரங்களை ஒப்புநோக்குகிறார். கவிஞர் 'எமது பாடுகளின் நினைவாக' என்னும் கவிதையில்

"என் யேசுவே
... — .. — ...
உமது திருக்கைகளிலும்,
உமது திருப்பாதங்களிலும்,
ஆணியை அறைந்து சிலுவையில் ஏற்றினார்கள்
... — .. — ...
எனினும் எம் ஆண்டவரே,
உம்மை கண்ட துண்டமாய் வெட்டி
உமது இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தார்களா ?
உமது கண்களைப் பிடுங்கினார்களா ?
... – ... — ...
உம்மை நாய்போல் ஓடவிட்டு
துப்பாக்கியால் சுட்டார்களா ?

என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்பதன் மூலம் இளைஞர்கள் மீது நடத்தப்படும் சித்திரவதை முறைகளை வரிசைப்படுத்துகிறார். இறுதியில் இயேசுமீது நடவடிக்கை எடுத்த யூதர் எவ்வாறு அறியாமல் செய்தார்களோ அதே போல் சிங்கள இராணுவமும் அறியாமலே இத்தகைய கொடுமைகளைச் செய்கிறார்கள் அதாவது இம்சையும், கொடுமையும் தமிழர்களுக்கு விடுதலையை தரும் என்ற உண்மையை அறியாமல் செய்கிறார்கள் என்று கூறி உலக வரலாற்றில் மிகக்கொடுமான இனவெறி ஈழத்தில் நிகழ்கிறது என்பதைச்சுட்டுகிறார்.

சிங்களப்பெரும்பான்மை இராணுவத்திற்கு தமிழ் இளைஞர்கள் மட்டும் குறியல்ல தமிழ்க்குழந்தைகளையும் தங்களது இனவெறிப்பசிக்குத் தீர்த்துக்கொள்ளும் கொடிய நிகழ்வுகளும் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச்சியை 'பிள்ளைக்கறி' என்ற கவிதையில்.

"சாப்பிடக் குந்துகிறேன்
பிங்கான் நிறைய அவித்த ரத்தம்
... — . — ...
பாடசாலை வெண்புறாக்கள்
தெருவில் சடசடக்கும்
நிறை மதியம்./ சந்திக்கு சந்தி
காக்கிச்சட்டைகள் துப்பாக்கிகளுடன்,
... — ... — ...
திடீரென, படீச் — படீச் — படீச் ... எஸெம்ஜி,
சரிமுடிந்தது / கொக்கு நாரைகளுடன்
எத்தனை குருத்து வெண்புறாக்களோ ?
ரத்தப் பூக்களில்
இந்நேரம் ஈ மொய்த்திருக்கும்".

என்ற வரிகளின் மூலம் மனிதாபிமானமற்ற சிங்கள அரசின் அடக்குமுறையை வெளிப்படுத்துகிறார்.

இராணுவ அடக்குமுறை என்பது ஈழத்துத்தமிழர்கள் மீது அன்றாடம் அவிழ்த்து விடப்பட்ட ஒரு முறையென்றாலும் அது அவர்களது வாழ்வில் சாதாரண ஒரு நிகழ்வாகிவிட்டது. இதன் மூலம் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை என்பது என்றாவது சிங்களவர்களின் அந்நிய மிதிகளிலிருந்து மீட்கப் பட்ட தமிழ் மண்ணில் விடுதலை கிடைக்கும் என்பதாகும். இந்த நம்பிக்கை தமது மக்களுக்கு இலக்கியவாதி அணித்தர மாக ஊட்டுவதன் மூலம் தனது படைப்பில் வெற்றியும் பெறுகிறான். தனது சமுகத்தைத் தட்டியெழுப்புவதுடன் புதிய தோர் சிந்தனை உலகிற்கும் அழைத்துச்செல்கிறான். விடுதலை' என்ற இலட்சியமே தங்களது விமோசனம். தங்களது எதிர்பார்ப்பு. தங்களது வெற்றி என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி போராட்டத்தின் பிடியில் நசுக்கப்படு கிற மக்களை வீறுகொள்ளச்செய்கிறான். இக்கருத்தை கவிஞர் சண்முகம் சிவலிங்கம் 'எமது பாடுகளின் நினைவாக'' 'காவல் அரண்கள்', 'எல்லைகளில் ஒரு நள்ளிரவில்' என்ற கவிதைகளில் தோல்வியென்ற நிலை எம்மிடம் என்று மில்லை. எமது விடுதலை என்றாவது ஒருநாள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை வலியுறுத்துகிறார். இத்தகைய படைப்பு களைப்பற்றி திரு. ஜான்சாமுவேல் என்பார், தற்காலப் படைப்புக்களில் உயர்ந்தனவாகக் கருதப்படும் அனைத்து இலக்கியங்களும் புதிய உலகைப்பற்றி மனிதனின் உள்ளத் தில் எழுகின்ற அகக் காட்சியினையும், மனித சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சி நிலை கற்பனையினையும் அடிப்படை யாகக் கொண்டு அமைகின்றன இவற்றை விளக்குவதற்கும் புதியபுதிய தொன்மங்களைப் (Myths) படைத்துக்காட்டினால் மட்டுமே போதாது. மாறாக நிகழ்காலத்தின் உண்மைச் சூழல்களையும், போராட்டங்களின் மத்தியிலும் முரண்பாடு களின் மத்தியிலும் நிகழ்காலம் எவ்வாறு வளர்ச்சி பெறு கின்றது என்பதையும் தர்க்கரீதியாக ஆராய்ந்து அதை அடிப் படையாகக் கொண்டு எதிர்காலம் பற்றிய இலட்சியக் காட்சி களை அமைக்க வேண்டும்.'' என்பதாகும். இந்த எண்ணமே கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளில் எதார்த்தமாக அமைந்துள்ளது. சான்றாக 'காவல்' அரண்கள் என்ற கவிதையில்

"மீட்கப்பட்ட தமிழ் மண்ணில்
எனது சைக்கிள் உருண்டோடும்
. ...
முன்னிரவிலும் / பின்னர் ஓர்
நள்ளிரவிலும் நெருவிளக்கின் மதிலோரம்
எந்திய துப்பாக்கிகளும் / இரண்டு விழிகளும்
தெரியும்.
... ...
மீசைகறுக்காத / இளம் வைரங்களில்,
தமிழ் / ஆசைக் கனவெல்லாம் விழிக்கொள்ளும்

எனது சைக்கிள் / உருளும், / இன்னும் உருளும் என்று கூறுகிறார். சுதந்திரமான தங்களது மண்மீது நாங்கள் எவருக்கும் அஞ்சாது நடமாடுவோம் என நம்பிக்கை ஊட்டுகிறார். இத்தகைய சூழலைப் பாடும் கவிஞனைப் பற்றி எம்.ஏ. நுஃமானின் "இருத்தலும் இருத்தலுக்குப் பிரக்ஞையாய் இருந்தலும் என்ற நிலையில் கவிதை படைக்கிறார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குடுகுடுப்பை ஜோதிடம்

பீ. ஜோசப் தைர்ய ராஜ்

தூய சவேரியார் கல்லூரி பாளையங்கோட்டை.

திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்திருக்கும் நிலக்கோட்டை தாலுகாவில் இருக்கும் புதுப்பட்டி என்னும் கிராமத்தில் காட்டு நாயக்கர்கள் என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் குடுகுடுப்பை அடித்து ஜோதிடம் சொல்லும் முறையை தமது தொழிலாகக் கொண்டுள்ளனர். இம்முறையைப் பற்றிய விளக்கத்திலை இக்கட்டுரையில் காண்போம்.

காட்டு நாயக்கர்கள்

காட்டு நாயக்கர்கள், தமிழகத்தில் சில பகுதிகளில் தொட்டியான் என அழைக்கப்படுவதாக எட்கர்தர்ஸ்டன் கூறுகின்றார். காட்டு நாயக்கர்கள் கம்பளத்து நாயக்கர்கள் கம்பளத்து நாயக்கர் எனும் சமூகத்தின் ஒரு பிரிவினர் என்றும் கூறப்படுகின்றனர். இம்மக்களைப் பற்றி தொட்டியான் என்ற தலைப்பின் கீழ் எட்கர் தர்ஸ்டன் 'தென்னிந்திய சாதிகளும் பழங்குடிகளும்' என்ற தனது நூலில் விளக்கியுள் ளார். இதில் கம்பளத்தார் என்ற பெயர் வந்த காரணம் பற்றி விளக்குகின்றார். ஒரு குழு 'மக்கள் ஆலோசனைக் கூட்டம் நடத்தும்போது, கம்பளம் விரித்து, தண்ணீர் நிரப்பப்பட்ட கலசம் வைக்கப்பட்டு, பூக்களால் அலங்கரிக் கப்பட்டு அதில் அமர்ந்து பேசப்படும் வழக்கம் கொண்டிருந் தமையால், கம்பளத்தார் என்று அழைக்கப்பட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார். (Thurston 1987, 3: 93)

புதுப்பட்டி கிராமத்தில் வாழும் காட்டு நாயக்கர்கள் கம்பளத்தாரின் ஒரு பிரிவினர் என்று சொல்லிக் கொள் கின்றனர் இவர்கள் கருப்பு கம்பளியையும், கருப்பு வளையலும் வைத்து தமது மூல தெய்வத்தை வணங்குகின்றனர். ஜோதிடத் தொழிலுக்கு போகும்போது கம்பளத்தைத் தோளில்போட்டுக் கொண்டு செல்கின்றனர். இதனால் இவர்கள் கம்மளத்து நாயக்கர் என்றும் சொல்லப்படுகின்றனர்.

தஞ்சாவூர் பகுதியில் இருக்கும் கம்பளத்தார்கள் பன்றி வளர்ப்பு, பாம்பாட்டிவித்தை செய்தல், யாசித்தல் போன்றவற்றைத் தம் தொழிலாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர் (Thurston 1981, 7: 184) கம்பளத்தார்களில் வழிவந்தவர்களாகிய காட்டு நாயக்கர்கள் குறி சொல்லுதல், ஜோதிடம் சொல்லுதலைத் தம் தொழிலாகக் கொண்டு வாழ்கின்றனர்.

எஸ். பக்தவச்சலு குறிப்பிடும் கம்பளத்து நாயக்கர்கள் குறிசொல்லுதலையும் தமது பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். அறுவடை காலங்களில் கிராமங்களுக்குச் சென்று, சில சடங்குகளை மேற்கொண்டு, இயல் கடந்த நிலையை அடைந்தபடி, ஊருக்குள் வந்து விடு வீடாக குடுகுடுப்பையை அடித்து குறி சொல்லுவர்கள். இவர்களைப் பார்க்காது, அவர்கள் கூறுவதை மட்டும் மக்கள் கேட்பார்கள் இவர்கள் கூறுவதில் மக்கள் அதிகம் நம்பிக்கை கொண்டுள்ளனர். பகலில் வந்து மக்கள் தரும் தானியங்களை பெற்றுச்செல்வார்கள்.

மேற்கூறப்பட்ட கூறுகளில், துணிகளை தாழ்ந்த சாதியினரிடம் விற்பது, மழைக்காலங்களில் குடை பழுதுபார்த்தல் ஆகிய இரண்டையும் விடுத்து மற்ற அனைத்துக் கூறுகளும் புதுப்பட்டியில் வாழும் காட்டு நாயக்கர்களிடம் காணப்படுகிறது. ஆனால் புதுப்பட்டி காட்டு நாயக்கர்கள் அவரை-நாடோடி வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். ஆறுமாதம் மட்டும் தமது ஜோதிடத் தொழிலைச் செய்கின்றனர். வேட்டைத் தொழிலும் புரிகின்றனர். ஆறுமாதங்களில் எந்த வேலையும் செய்யாது தமது வீடுகளில் இருக்கின்றனர். இந்த வீட்டில் இருக்கும் காலத்துக்குத் தேவையான பொருட்களை தொழிலுக்குப்போகும் ஆறு மாத காலத்திலேயே சேர்த்து வைத்துக்கொள்கின்றனர் ''தொழிலுக்குப் போதல்'' என்பது ஜோதிடம், குறிசொல்ல வேறு இடங்களுக்குச் செல்லுகிற ஆறுமாத காலத்தைக் குறிக்கும் இதற்கு ''தங்கலுக்குப் போதல்'' என்ற வழக்கு இவர்களிடையே வழங்கப்பட்டு வருகின்றது.

ஜோதிடத் தொழில்

ஜோதிடம் பார்த்தல் என்பது இன்று நம் மக்களிடையே ஒரு முக்கிய கூறாக அமைந்திருக்கின்றது அதிலும் திருமணத்

திற்கு ஜாதகம் பார்த்து முடித்தல் என்பது மக்கள் மத்தியில் அதிகமாக காணப்படுகின்றது. நல்ல நாள் பார்த்தல், நல்ல நேரம்பார்த்தல், சகுனம் பார்த்தல் என்பது நடைமுறையில் இருக்கின்றது. இவ்வாறு ஜோதிடம் கூறுவதற்கு பல உத்திகளை ஜோதிட நிபுணர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

வருவதுரைத்தல் (Divination) என்பது ஒரு தனிமனிதனைப் பற்றிய செய்திகளைக் கொடுக்கும் அல்லது கூறும் ஒரு கலையாகும். அதுவும் வரக்கூடிய நிகழ்வுகள், இதற்கு முன் நடந்த நிகழ்வுகள், நடந்துகொண்டிருக்கும் நிகழ்வு குறித்து கூறும் கலை ஆகும். (Zuesse : 1987)

புதுப்பட்டி காட்டு நாயக்கர்கள் ஜோதிடத்தை தமது பிரதானத் தொழிலாகக் கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் மனிதனின் வருங்காலம்குறித்தும், நடந்துமுடிந்தது குறித்தும் கருத்துக்களைக் கூறுகின்றனர். ஏடுபோட்டு சொல்லுதல், வீணை அடித்துச்சொல்லுதல், நட்சத்திரம் பார்த்து சொல்லுதல், சோவிபோட்டுச்சொல்லுதல், குடுகுடுப்பை அடித்துச்சொல்லுதல் போன்ற உத்திகளைக் கையாளு கின்றனர். இதில் குடுகுடுப்பை அடித்து குறிசொல்லுதல் பற்றி விளக்கமாக காணபோம்.

குடுகுடுப்பை ஜோதிடம்

குடுகுடுப்பை என்னும் கருவியை பயன்படுத்தி அடித்து ஜோதிடம் சொல்லுதல் இதற்கு 'தக்கை' என்ற பெயர் இவர்களது வழக்கில் இருக்கின்றது. இந்த முறையானது இரவு நேரத்தில் ஊருக்குள் தக்கையை அடித்துக் கொண்டு வீடு வீடாக சொல்லிக் கொண்டு செல்லப்படுகின்றது. சாமத்தில் இவர்கள் வருவதால் இவர்கள் சாமக்கோடாங்கி என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் இரவு மயான பூஜை நடத்திய பின்னர்தான் ஊருக்குள் செல்வார்கள். மயான பூஜை என்பது, நடு இரவு, சுடுகாட்டில் வைக்கோல் போட்டு எரித்து வெளிச்சம் உண்டு பண்ணுவார்கள்.

பொட்டுக்கடலை, அவுல், அரிசி, பூ, பத்தி வைத்து ஜக்கமாவை வேண்டுவார்கள். ஜக்கம்மா தனக்குத் துணையாக வரனும், நல்ல வாக்கு அருளனும் என்று வேண்டுவார்கள்

இதற்குப்பின்னர் குடுகுடுப்பையை (தக்கை) அடித்துக் கொண்டு சில வார்த்தைகளில் கடவுளைப் பற்றி சொல்லிக் கொண்டு ஊருக்குள் செல்வார்கள். வீடுகளின் முன்பு நின்று கொண்டு, மனசுக்குப் பட்டதை, வாயில் வருவதைச் சொல்லுவர். பகலில் வந்து வீட்டில் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு போவர். இவ்வாறு பகலில் வரும் போது மக்கள் இரவு கூறியது குறித்து விளக்கம் கேட்பார்கள். விளக்கம் கூறி கொடுப்பதை பெற்றுக் கொண்டு செல்வார்கள். பெரும் பாலும் கண்டம் இருப்பதாகக் கூறுவர். குறைத் தீர்க்க ஐந்து அல்லது 10 ரூபாய் பரிகாரம் செய்ய பெற்றுக் கொள்ளுதலும் உண்டு.

சாமத்தில் சொல்லுவது உண்மையாக இருக்கும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். சாமத்தில் வரும் இவர் களது முகம் விவகாரமாக இருக்கும் என்று மக்கள் கருதி கின்றனர். அப்படி அல்ல. இவர்கள் இரவில் அணிந்திருக்கும் உடையையும், குடுகுடுப்பை சத்தமும், நாய்கள் குரைக்கும் சப்தம் கேட்டுக் கொண்டு பயப்படுவார்கள்.

இவ்வாறு இரவில் இவர்களைப் பார்த்து குரைக்கும் நாய்களை "வாயைக் கட்டி விடுவார்கள்". அதாவது குரைக் காமல் இருக்கச் செய்துவிடுவர். என்ற நம்பிக்கையும் மக்களிடம் உண்டு. இவர்களது முன்னோர்களிடம் இருந்ததது -தான், தற்போது அவர்களிடம் குறைந்து வருவதாகவும் கூறப்படுகின்றது. ஜக்கமமாவிடம் வேண்டி அவைகள் தங்களை நெருங்காமல் பார்த்துக் கொள்கின்றனர்.

இரவில் கருப்பு உடை அல்லது வித்தியாசமான முறையில் போர்வையைப் போர்த்திக் கொண்டு, தலையில் தலைப்பாகை ஒன்றைக் கட்டிக் கொண்டு, கையில் தடியும், குடுகுடுப்பையும் வைத்துக் கொண்டு கழுத்தில் பாசிகள், உத்திராட்சக் கொட்டையும், பையில் பொம்மக்காள், முருகன் பிள்ளையார் போன்ற கடவுள்களின் உருவங்களை வைத்துக் கொண்டு செல்வார்கள்.

குடுகுடுப்பையின் அமைப்பு

உடுக்கை போன்ற வடிவம் கொண்டு, உருவில் சிறிய யதாக இருக்கும் குடுகுடுப்பை. இது வெங்கலத்தில் அல்லது

மரத்தில் செய்யப்படுகின்றது வெங்கலத்தில், மேற்கே 'போடி'க்கு அருகில் "சின்னவைரத்துப்பட்டி" என்ற ஊரிலும் தெற்கே "சிலமலையிலும்" செய்யப்படும். மற்றபடி மரத்தில் இவர்களே செய்து கொள்வதும் உண்டு. நல்ல சாதி மரத்தில் செய்யப்படும். புளியம் வேரை தண்ணீரில் போட்டு வளைத்து வட்டமாகச் செய்து, ஏழு துவாரம் போடுவார்கள்.

Refrence

1. Bakthavatchalu S. 19g2 : Nomadism and Indigenous Civilization Some Conceptual problems

2. Turn Rull, Cdin M 1972 : Hunting and Gethering Contempory Society, Intema tiOnal Encylopedia of 'Social Sciences New York : Macmillar press

3 Thurston Edcar 1987 : Castes and Tribes of Southern India New Delhi : Asian Educational Services.

4. Zuesse Evan M. 1990 : Divination in Encylopedia of Religion Newyork : Macmillan press.

5. பக்தவச்சலாபாரதி சி. 1990 : பண்பாட்டு மானுடவியல் சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

குறிப்பு

அ. சீநிவாசன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மனிதன் ஒரு சிந்திக்கும் விலங்கு. மனிதனை விலங்கி லிருந்து வேறுபடுத்துவது மொழி. மனிதனைச் சிந்திக்கத் தூண்டுவது மொழி; மொழியில்லையேல் சிந்தனை இல்லை மனிதன் தன்னுடைய கருத்தைப் பிறருக்கு அறிவிக்கவும், பிறர் கருத்தை அறியவும் மொழி பெரிதும் பயன்படும். மொழி மனித சமுதாயத்தை இணைக்கக் கூடிய பாலமாகப் பயன் படுவதோடு மட்டுமல்லாமல், மொழி மனிதனை இனங்காட் டும் பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்குகிறது.

மனிதன் வாழ்வதற்கு மொழி இன்றியமையாததுதான். மொழி இல்லையேல் மனிதன் வாழமுடியாதா? குழந்தை வாழவில்லையா? விலங்கினங்கள் வாழவில்லையா? என்ற கேள்விகள் எழலாம். குழந்தை தன் சிரிப்பால் மகிழ்ச்சியை யும், அழுகையால் தன தேவையையும் அறிவிக்கத்தான் செய்கிறது. விலங்குகள் அல்லது பறவைகள் ஒலி எழுப்பித தங்கள் உணர்வுகளையும், தேவைகளையும், அபாயங்களை யும் தெரிவிக்கின்றன. இவ்வொலிகளை எல்லாம் மொழியாகக் கருதுவது இல்லை. மொழி என்பது வரையறுக்கப்பட்ட அல்லது முறையான வெளிப்பாடாகும். மொழி என்பது மனிதவினம் பேசுவதற்குரியது; பேசுவது.

மனிதன் மொழி தோன்றுவதற்கு முன் தன் உணர்வினை, செய்திகளை எப்படித் தெரிவித்திருப்பான்? மொழி ஆராய்ச்சி யாளர்கள் பழங்கால மனிதன் தன்னுடைய சத்தத்தாலும், சைகைகளாலும், அசைவுகளாலும், தன் உணர்வுகளையும் செய்திகளையும் தெரிவித்திருக்க வேண்டும் என்று கருதுகின் றனர்.[1] இயற்கையோடு வாழ்ந்த மனிதன் பெரும்பாலும் இயற்கையைப் பாவனை செய்திருக்க வேண்டும்[2] என்று கருதுகின்றனர்.

மனிதன் மொழியைப்பேசக் கற்றுக்கொண்ட பின், அவன் காணும் பொருட்களுக்கு வரிவடிவம் கொடுக்க முயற்சி செய்திருத்தல் வேண்டும். இக்காலக்கட்டத்தில் அவன்

பார்த்த பொருளை அப்படியே குறியாக--அடையாளமாக எழுதிக்காட்டும் நிலை உண்டாகிறது. இப்படக் குறியே பின்னர் அது தொடர்பான நுண் பொருளையும் விளக்கக் கூடியதாக மாறியிருத்தல் வேண்டும். சான்றாக, சூரியன் என்ற படக்குறி. முதல் நிலையில் சூரியனையும், பின்னர் ஒளி. பகல் போன்ற சொற்களுக்கும் வழங்கியிருத்தல் வேண்டும். இவ்வாறு படக்குறியே வார்த்தைக்குரிய குறியாகவும் இருந்திருத்தல் வேண்டும்[3]. பின்னர் ஒலிக்குறி கண்டு எழுதப்பட்டிருத்தல் வேண்டும் மொழி தோன்றிய காலத்தையும், வரிவடிவம் தோன்றிய காலத்தையும் பழமையான மொழிகளுக்குக் கண்டுபிடிக்க இயலுமா என்பது கேள்விக்குரிய ஒன்றுதான் என்றாலும் மொழிவரலாற்றை நாம் இவ்வாறுதான் சிந்திக்க வேண்டியுள்ளது.

மொழி ஒரு கருத்துப் பரிமாற்றத்திற்குரிய கருவி மொழியைப் பயன் கருதி வெவ்வேறு வகையில் பயன்படுத்துகிறோம். மொழியை எல்லா இடங்களிலும் இயல்பாகவோ, வெளிப்படையாகவோ பயன்படுத்துவதில்லை. சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு வகையில் பயன்படுத்துகிறோம். தொல்காப்பியத்திலும் மொழி பயன்படுத்தப்பட்ட சூழலின் அடிப்படையில் இயல்மொழி, ஒன்றியமொழி, எதிர்மொழி, அல்லகூற்றுமொழி, வணங்கியல்மொழி, மங்கலமொழி, அவையல்மொழி, புறமொழி, மறைமொழி, பொதுமொழி, தெரிந்தமொழி, செய்யுள்மொழி, பொய்ம்மொழி, நகைமொழி, குறிப்புமொழி என்று வகைப்படுத்தப்பட்டிருக்கக் காணலாம்[4]. இதிலிருந்து மொழியை ஒரே மாதிரிப் பயன்படுத்துவதில்லை என்பது புலனாகிறது.

குறி குறியீடு குறிப்பு

'குறி' என்ற சொல் மிகவும் பழமையானது. 'குறி' என்ற சொல்லாட்சிக்கு ஒலி, அடையாளம், கருத்து[5] என்ற பொருட்கள் உண்டு. மின்னலுடன் கூடிய இடியை மழைக்குரிய அறிகுறியாகவும்; ஆந்தை அலறுவதை தீங்குக்குரிய அறிகுறியாகவும்; காகம் கரைதலை விருந்துக்குரிய அறிகுறியாகவும் பல்லி இசைத்தலை நல்லதற்குரிய அறிகுறியாகவும்பழந்தமிழர் நம்பினர்; இன்று நாமும் நம்புகிறோம். இதை வெறும் நம்பிக்கை என்று கூறிவிடமுடியாது. இக்குறிகள் பின்வருவதை முன்னறிவிக்கக்கூடியவை. இங்குக் குறி முதல் நிலையில் ஒலியா

கவும், பின்னர் நிகழப்போவதை அறிவித்தல் என்ற நிலையில் அடையாளமாகவும் விளங்குகிறது. குறிபார்த்து பின்னர் நிகழப் போவதைக் கூறக் கூடியவரை குறி கூறுவோர் என்பர். சங்க இலக்கியத்தில் குறி கூறுவோர் அகவுநர், அறியுநர், முதுவாய்ப் பெண்டிர் என்று அழைக்கப்பட்டனர்.[6] வெறியாட்டின் போது தெய்வம் ஏறி வேலன் குறி கூறுவதும் உண்டு. இன்றும் நாட்டுப்புறங்களில் பூசாரி குறி கூறக் காணலாம். சிலம்பில் பின்னர் நிகழப் போவதை நிமித்தம் பார்த்துக் கூறியவன் நிமித்திகன்[7] என்ற அழைக்கப்பட்டான்.[8] தொல்காப்பியத்தில் காணப்படும் 'மன்னு நிமித்தம் மொழிப் பொருள் தெய்வம்' (932:3), நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்[9] (1037), ஆவொரு பட்ட நிமித்தம்[10] (1123) போன்ற நூற்பாத் தொடர்களைச் சிந்தித்தல் வேண்டும் குறிகளின் அடிப்படையில் பின்னிகழ்வுகளை தமிழன் சிந்தித்திருக்கிறான் என்பதற்கு இவை போதிய சான்றுகளாகும்.

குறி என்பது ஒலி; அதே நேரத்தில் பின்னர் நிகழப் போவதை அறிவிக்கக் கூடியஅடையாளம் என்று கண்டோம். இந்தக் குறி அல்லது ஒலிக்கு எழுத்து வடிவம் கொடுக்கும் பொழுது அதுவும் ஒரு அடையாளம் ஆகிவிடுகிறது. இலக்கியத்தில் குறி என்பது ஒரு பொருளை அடையாளப்படுத்தி. இன்னொரு பொருளை விளக்குவது வெள்ளைஒரு அடையாளம்; இது சமாதானத்தைக் குறிக்கும். கறுப்பு துக்கத்தை அடையாளப்படுத்தும். மஞ்சள் மகிழ்ச்சியை அடையாளப் படுத்தும்பச்சைபசுமை நிறத்தை அடையாளப்படுத்தும்.[11] இந்தஅடிப்படையில் இன்றைய அரசியல் கட்சிகள் பயன்படுத்தும் கொடிக்கும், தேர்தல் சின்னங்களும் காட்சிகளை அடையாளபடுத்தும் குறிகளாகும். பழங்காலத்தில் சேர, பாண்டியர், சோழ அரசர்களை அடையாளப்படுத்தக்கூடிய குறிகளாக வில் கயல், புலி விளங்கின.[12] அவர்களுடைய போர்க்காலக் குறிகளாக சின்னங்களாக போந்தை, வேம்பு, ஆர்[13] விளங்கின.

குறியிலிருந்து சற்று வேறுபட்டது குறியீடு அடிப்படையில் குறியீடு ஒரு குறியே. ஆனால் அது பொருள் உணர்த்தும் முறையில் குறியிலிருந்து வேறுபாடு உடையது. குறியீடு தன்னை விளக்குவதோடு மட்டுமல்லாமல் பிறிதொரு நுண் பொருளையும் விளக்கும். அவ்வாறு விளக்கும்போது குறி

யீட்டுக்கும் குறியீடு உணர்த்தும் பொருளுக்கும் ஒப்புமைத் தன்மை இருக்கும்[5] சான்றாக, குறிஞ்சி என்ற குறியீடு குறிஞ்சி மலரை விளக்குவதோடு மட்டுமல்லாமல் 'புணர்ச்சி' என்ற அகப்பொருளையும் விளக்குகிறது. குறிஞ்சி பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை பூக்கும் பெண் பன்னிரண்டாண்டில் பூப்பெய்தி வாழ்க்கைக்குரியவளாகிறாள்.

குறியீடு	பொருள்
குறிஞ்சி	புணர்ச்சி
முல்லை	இருத்தல்
மருதம்	ஊடல்
நெய்தல்	இரங்கல்
பாலை	பிரிதல்

இன்றைய கால கட்டத்தில் குறி அல்லது அடையாளம் என்பதற்கும், குறியீடு என்பதற்கும் எந்தவிதப் பொருள் வேறுபாடுமின்றி பயன்படுத்திக் காணலாம்.

குறி>குறிப்பு

குறி என்ற சொல்லில் இருந்து உருவாக்கம் பெற்றது குறிப்பு என்ற வினைச்சொல். குறி என்ற சொல்லுக்குக் கருத்து என்ற பொருள் உண்டு. குறிப்பு என்ற சொல்லுக்கும் கருத்து, உட்கருத்து (உள்மனம்), சொற்பொருளுக்குப் புறமாக உள்ள கருத்து[6] என அதன் பொருள் விரிவுபடுகிறது.

குறிப்பு என்பதை கவிதையில் இடம்பெறும் பொருள் அடிப்படையில் மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம்.

1. ஒரு பாடலில் அமைந்துள்ள பொருள்-குறிப்பு
2. ஒரு பாடலில் உள்ள உட்பொருள் -குறிப்பு
3. ஒரு பாடலில் உள்ள புறப்பொருள் -குறிப்பு

1 (குறிப்பு) ▷ குறிப்புக் கவிதை

2 குறி → குறிப்பு → சாதாரணக்கவிதை

3 குறிப்பு → உள்ளுறைக்கவிதை

குறிப்பு (உட்பொருள்) உடைய கவிதைச்சொல் நேரிடையாக அதன் உட்கருத்தைப் புலப்படுத்தும் பொழுது வாசகனுக்கு எவ்விதச்சிக்கல் இல்லை. ஆனால் அச்சொல் பிறிதொரு பொருளை புறப்பொருளை விளக்கும் பொழுது அச்சொல் மிகுந்த பொருள் உடையதாகிறது. இச்செய்திகளிலிருந்து 'குறிப்பு' என்ற சொல் கருத்து, உட்பொருள், புறப்பொருள் என்ற மூன்றையும் உள்ளடக்கியது என்பது தெளிவாகிறது.

குறிப்பு - உட்பொருள்

தொல்காப்பியத்தில் உள்ளுறை என்ற ஒருவகை இலக்கியக் கோட்பாட்டைக் காணலாம். இவ்வுள்ளுறை ஐந்து வகைப்படும். அவை உடனுறை, உவமம், சுட்டு, நகை சிறப்பு என்பனவாகும். இவற்றுள் உவமம், என்பது மொழிவழிக் கருத்துப் பரிமாற்றத்திற்கும்; உடனுறை, சுட்டு, நகை, சிறப்பு என்பன மொழி அல்வழிக் கருத்துப் பரிமாற்றத்திற்கும் உரியவையாகும்.

மொழிவழிக் கருத்துப் பரிமாற்றம்

உள்ளுறை என்றால் என்ன? உள்ளுறை என்பதற்கு உட்பொருள் என்று விளக்கம் தருவர். இதைப் பற்றி ஆராய்தல் வேண்டும் இவ்வாய்வுக்கு 'உள்ளுறை உவமம்' என்பதை எடுத்துக் கொள்ளலாம். 'உள்ளுறை உவமம்' என்ற இரு சொற்களைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்.

1. உவமம் உள்/உறை
2. உறை உவமம் உள்
3. உவமம் உள்/உறை

உள்ளுறை என்பது உள்உறை என்ற இரண்டு சொற்களின் கூட்டுச்சொல் ஆகும். 'உள்' என்பது எதைக் குறிக்கும்? உள் என்பது உவமத்தைக் குறிக்கும். உறை என்பது உவமத்தினுள் உறையும் கருத்துப் பொருளைக் குறிக்கும். உவமத்திற்கும் பொருளுக்கும் ஒப்புமைத் தன்மை இருக்குமாயின் அது உள்ளுறை உவமம் ஆகும்.

"உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து இறுவதே உள்ளுறை உவமம்."[16]

சான்று

"கான மஞ்ஞை யறையின் முட்டை
வெயிலொடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன்"[17]

மயில் தான் ஈன்ற முட்டையைப் பேணிக் காத்தல் வேண்டும் ஆனால் மயில் தன் முட்டையைக் காக்காததால் கானத்தில் உள்ள குரங்குக் குட்டி முட்டையை உருட்டி விளையாடுகிறது இப்பாடலில் கருப்பொருள் வழி நாம் தெரியக் கூடிய செய்தி இவ்வளவுதான். ஆனால் கவிஞனின் நோக்கம் இதுவாக

இருக்க முடியுமா? உறுதியாக இருக்கமுடியாது. இதன் உண்மைப் பொருளை அறிய வேண்டுமாயின் இப்பாடல் எழுந்த சூழலை அறிய வேண்டும். தலைவன் வரைவு நீட்டிக்கிறான்; தலைவியை ஊரார் அலர் தூற்றுகின்றனர். தலைவன் விரைவில் தலைவியைத் திருமணம் முடித்தல் வேண்டும் என்பதை இங்கு கவிஞன் கூறியுள்ளான். கவிஞன் தான் கூறக் கருதியதைப் புதை நிலையில் கூறியுள்ளான்.

மயில்	:	தலைவன்
முட்டை	:	தலைவி
முசுக்குருளை	:	ஊரார்

இவ்வாறு உவமைக்கும் பொருளுக்கும் ஒப்புமைத் தன்மை இருக்குமாறு அமைவது உள்ளுறை உவமம் ஆகும்.

உடனுறை

குறிக்கும் உடனுறைக்கும் வேறுபாடு இல்லை. உடனுறை எடுப்பது உள்ளுறையில் ஒன்று குறி ஒரு பொருளை உணர்த்துவதுபோல் உடனுறையும் ஒரு பொருளை அர்த்தப்படுத்தும். இதை ஒரு மொழி அவ்வழிக் கருத்துப் பரிமாற்றமாகக் (Non verbal Communication) கொள்ளலாம். சான்றாக, கறுப்பு அட்டை (Black Badge) அணிந்த மக்கள் கூட்டம் திரண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். கறுப்பு அட்டையுடன் உறைந்திருக்கக் கூடிய பொருள்யாது? என்பதை சூழலின் (Context) அடிப்படையில் தெரிந்து கொள்ளலாம், இத்தகைய 'உடனுறை' களை நுட்பமாகக் கவனித்தால்தான் அதன் பொருள் புலப்படும்.

அசைவழிக் கருத்துப் பரிமாற்றம்

தொல்காப்பியத்தில் காணப்படும் சுட்டு, நகை, சிறப்பு என்பன உடல் அசைவு வழிப் பிறிதொரு கருத்தைப் புலப்படுத்துவன. இவற்றை மொழி தோன்றுவதற்குமுன் மக்கள் வழக்கில் இருந்த எச்சங்களாகக் கருதலாம் ஒரு பொருளைச் சுட்டிக் காண்பிப்பதின் மூலம் உட்பொருளைப் புலப்படுத்த முடியும். இதே போன்று நகைப்புக்கும், சிறப்புக்கும் உட்பொருள் உண்டு. சுட்டு, நகை, சிறப்பு என்பவற்றிற்கு உட்பொருள் உண்டு என்பதைச் சூழல் அடிப்படையில் தான் நாம் தெரிந்து கொள்ள முடியும். இவற்றிற்கு இலக்கியச் சான்றுகளும்[12] ஓரளவு உள்ளன.

குறிப்புமொழி-புறப்பொருள்

தொல்காப்பியத்தில் 'குறிப்புமொழி' பற்றி ஒரு நூற்பா உள்ளது. அந்நூற்பா பின்வருமாறு

'எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகி
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழி''[13]

இந்நூற்பாவில் மூன்றுவகையான குறிப்புக்களைக் காணலாம்.

எழுத்தொடு புணராத குறிப்பு

தொல்காப்பியர் குறிப்பினை 'கூற்றிடை வைத்த குறிப்பு'[33] என்று கூறியிருப்பதைக் கவனித்தல் வேண்டும். கூற்றின் போது நேரிடையாகப் பேசுவது போல் இருந்தாலும், குறிப்பாக வேறு ஒரு பொருள் புலப்படுமாறு கூறுவது உண்டு. அதாவது நாம் பேச்சின் போது கொடுக்கக்கூடிய ஒலி அழுத்தத்தின் மூலம் வேறு பொருள் தோன்றிவிடும்

சான்று: 1 ஆட்டம் பிரமாதம்
2. இரு பாத்துக்கிறேன்
3 என்னையும் மதித்து அழைத்ததற்கு நன்றி.

'ஆட்டம் பிரமாதம்' என்று இயல்பாகக் கூறின் அது மனப் பூர்வமான பாராட்டாக இருக்கும் 'ஆட்டம் பிரமாதம்' என்று பிரமாதத்திற்கு ஒலி அழுத்தம் கொடுக்கும் பொழுது பொருள் சற்று வேறுபடக் காணலாம். 'ஆட்டம் பிர மாதம்' என்று எந்தச் சூழலில் கூறப்பட்டது என்பது தெரிந்து விடுமானால் இதன் பொருள் தெளிவாகி விடும். மாணவர்கள் கால்பந்தாட்டத்தில் தோல்வியுற்றனர். பயிற்சியாளர் மாணவர்களைப் பார்த்து 'ஆட்டம் பிர மாதம்' என்று பிரமாதத்திற்கு அழுத்தம் கொடுப்பாரானால் மாணவர்கள் நன்றாக விளையாடவில்லை என்பது பொருள். நாம் கொடுக்கும் ஒலி அழுத்தத்தால் வேறு பொருள் தரக் காணலாம்.

'இரு பாத்துக்கிறேன்' (இரு பார்த்துக் கொள்கிறேன்) என்று சண்டைக்காரன் இன்னொருவனிடம் கூறினால் இதன் பொருள் எதுவாக இருக்கும் என்பது அனைவரும் தெரிந்த ஒன்றே

சிவாஜியும் பழனியாண்டியும் அருகருகே அமர்ந்து ரகசியமாய்ப் பேசிக் கொண்டார்கள். தங்கள் ஒற்றுமையைக் காட்ட முயற்சி செய்தார்கள், ஆனால் இந்த முயற்சி வெகுநேரம் நீடிக்கவில்லை சிவாஜியைப் பேச அழைத்தபோது பேச்சில் பல இடங்களில் காங்கிரஸ் கட்சியில் அவருக்குள்ள வருத்தம் தொனித்தது. என்னையும் மதித்து அழைத்ததற்கு நன்றி என்று (குத்தலாக - குமுதம் ஆசிரியர்) சொன்ன போது அவருடைய பிள்ளைகள் புரிந்து கொண்டு கரகோஷம் செய்தார்கள்![34] சிவாஜி எந்தச் சூழலில் பேசினார்; இவ்வாறு பேசியதற்குரிய பின்புலம் யாது என்று தெரியின் 'மதித்து' என்பதன் பொருள் தெளிவாகும். இவ்வாறு ஒலி அழுத்தத்தால் பொருள் வேறுபடுவது மொழிகளுக்குரிய பொதுக்கூறு எனினும்,

பொருள் வேறுபாட்டைப் பேச்சின் போதுதான் கண்டு கொள்ள முடியும். இலக்கியத்தில் ஒலி அழுத்தத்தின் மூலம் வேறுபாடு காண்பது சற்றுக் கடினமான ஒன்றாகும்.

சொல்லொடு புணராதது :

தலைவனும் தலைவியும் பகற்பொழுதில் தாங்கள் குறிப் பிட்ட இடத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள். "இதோ! இந்தப் புன்னையை என் அன்னை பாலூட்டி வளர்த்தாள்; என் னுடன் பிறந்த தங்கையாகக் கருதினாள். தலைவி உன் னோடு இவ்விடத்தில் சிரித்துப் பழக நாணுகிறேன்" என்று தலைவி தலைவனிடம் கூறுகிறாள். இக்கூற்றின் மூலம் தங்கை இருக்கும் இடத்தில் காதல் வயப்படுவது பாராட்டுக்குரிய தன்று; மரபுமன்று என்று குறிப்பாகத் தலைவி தலைவனுக் குக் கூறிவிடுகிறாள்[22]

பொருளொடு புணராதது :

ஔவையாரைக் கண்ட தொண்டைமான் தன் படைக் கலக் கொட்டிலைப் புலவருக்குக் காண்பித்தான். தொண்டை மான் குறிப்பினை அறிந்த ஔவையார் அவனுடைய படைக் கலக் கொட்டிலைப் பார்வையிட்டு 'உன் போர்க்கருவிகள் நெய்பூசப்பெற்று, பீலி அணிந்து, மாலை சூடடி, நோன்காழ் திருத்தி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அதியமானுடைய போர்க்கருவிகளோ பகைவர்களைக் குத்தியதால் கோடு சிதைந்து கொல்லன் உலையில் உள்ளன'[23] என்று கூறுகிறார். அதியமான் சிறந்த வீரன். அவன் தொடர்ந்து போர்செய்து வருவதால் அவனுடைய படைக்கருவிகள் நுனி மழுங்கி விட்டன. அவனுடன் போர் செய்யக் கருதுவாயாயின் நீ போரில் தோற்பது உறுதி என்பதைக் குறிப்பாகக் கூறியுள் ளார். இக்குறிப்புத் தொண்டைமானுக்கும் தெரியும். புலவரு டைய குறிப்பு கவிதைப் பொருளொடு புணராது பொருளுக்கு அப்பாற்பட்ட நிலையில் பொருள் புலப்படுத்தி நிற்கக் காணலாம்.

கவிதையில் சொல்தரும் நேரிடைப் பொருளுக்குப் மேலாக ஒரு குறிப்பு எஞ்சி நிற்கும். இக்குறிப்பே கவிஞன் சொல்ல வந்த கருத்துப் பொருளாகும்; அணுக்கமாக கவனித்தல் மட்டுமே இக்குறிப்பு புலப்படும். கவிதையில் இடம் பெறும் இக்குறிப்பினைச் சங்க இலக்கியப் பாடல்களில் மிகுதியாகக் காணலாம். சிறப்பாக, 'அறத்தொடு நிற்றல்', 'பகற்குறியீடு', 'இரவுக்குறியீடு' பற்றிய பாடல்களில் 'குறிப்பு' மிகுதியாக உள்ளன. அறத்தொடு நிற்றற் பாடல்கள் தலைவியைத் தலைவனுக்கு மணம் முடித்துத் தர வேண்டும் என்ற குறிப்பை உடையதாக இருக்கும். 'பகற்குறியீடு" 'இரவுக்குறியீடு' பற்றிய பாடல்கள் தலைவன் வரைவை விரைவுபடுத்துமாறு அமையும்.

குறிப்புமொழி அகவிலக்கியத்துக்கு மட்டும் உரியதன்று; அகம், புறம் இரண்டுக்கும் உரியது 'குறிப்புமொழி' பற்றிய ஆராய்ச்சி இதுவரை நிகழ்வில்லை என்றே கூறலாம் 'குறிப்புமொழி' பற்றிய இந்நூற்பாவை அகத்திற்குரியதாக இளம்பூரணர் குறிப்பிட்ட காரணத்தால் இதுவரை அகத்தே குறிப்புமொழி என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது இளம்பூரணர் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது

கவிதையில் குறிப்பு என்பது கருத்து, உட்பொருள், புறப்பொருள் என்ற மூன்றையும் உள்ளடக்கியது. குறியை (Sign) அடிப்படையாகக் கொண்டு பிறிதொரு ஒப்புமைத்தன்மையுடைய உட்பொருளை (Innermeaning) விளக்கும் போது குறியீட்டுக் கவிதை (Symbolic poetry) என்றும்; நேரிடைப் பொருளுக்கு அப்பால் புறமாக மேலும் ஒரு பொருள்தந்து (Extra meaning) நிற்கும்போது குறிப்புக்கவிதை (Suggestive poetry) என்றும் கவிதையை நாம் பிரித்துப் பார்க்கலாம். கவிதையில் குறியீட்டுத் தன்மையும் குறிப்புத்தன்மையும் இல்லாமல் இருக்கலாம். இத்தன்மைகள் இல்லாத கவிதைகள் மிகச்சிறந்த கவிதைகளாகக் கருதப்படுவதில்லை

அடிக்குறிப்புகள்

1. The Story of Language. PP 23-35
2. On Language. P 16
3. The Story of Language. P 44
4. தொல் நூற்பா. 87,44, 50,105,143,240,270.467,497874,480 542,537,475 481
5. தொல். நூற்பா. 109,105
6. அகம். 152,208, அறியுநர். குறி.பாட்டு. 4 அகம், 22, 98
7. சிலம்பு
8. தொல் 932:2
9. தொல். 1037
10. தொல். 1123.
11. கல்கி. 5 8.84
12. சிலம்பு. 3:25:171
13. தொல். 1006,புறம் 45
14. தொல். நூ 994
15. தொல். 1435
16. தொல் 994
17. குறு. 38.
18. குறள். 1274
19. தொல். 1435
20. தொல் 1421
21. குமுதம் 15.12.85
22. 172
23. புறம் 95

MOBILISATION OF ETHNIC GROUP IN TAMILNADU

T. PARTHIBAN

Gandhigram Rural University

Introduction

The eruption of ethnic movements or mobilisation of people on ethnic identities in recent years has posed a serious challenge to nation-states. Contrary to the expectation of the scholars that modernization would dissolve the ethnic identities, an array of movements have been organised on ethnic lines. More so the ascendancy of ethnic loyalty among the collectivites in the developing societies due to modernization and industrialization draw the attention of the social scientists.

In contrast to the prediction that in developing countries like India modernization would displace tradition, one finds tradition getting modernised and modernity getting traditionalised. One such traditional entity which has adopted itself to modernization is caste. Caste is a classical example of ethnicity. Caste identity is the classical case for ethnic identity. The caste ethnicity in India is such a dynamic entity that has survived all assaults of modernization. Caste is not a static phenomenon but it is getting changed and transformed from one stage to another in the social hierarchy.

The desire to seek mobility is so strong when the caste is powerful and influential in other realms such as economic and political aspects. The presence of power in one realm seems incongruent in the eyes of the caste movement that wants to strike a balance between the presence of power and influence in one realm with other realms. This was achieved first through

sanskritisation By adapting the life styles of upper caste, a lower caste, instead of desiring for economic development seeks recognition from the immediate surrounding by becoming socially mobile.

The process of Sanskritisation was achieved by caste groups by forming caste associations, through which they laid their claim for improved social status by way of changing their derogatory social position.

This was the position of most of the caste groups before India got independence. But the change in the political system had an impact on the position of the caste group. After Independence, the formation of caste associations and the sanskritisation process started loosing importance. In other words the formation of caste association and sanskritisation process are no more relevant with the arrival of democratic politics in India.

The caste associations now strive not only to improve their social and cultural status but they have started fighting for the development of educational, occupational and economic aspects. This aspiration of the caste associations has induced them to establish contact with the political parties and to negotiate with them on these matters. These negotiations have created an understanding between the political parties and the caste associations that these caste associations will exercise their franchise in support of these political parties and in return, these political parties will have to fulfil the demands of these caste association.

These caste associations after sometime started demanding seats in the election. Thus the casts associa-tions were acting as the supporters to the political parties. Even this trend has also started changing. The

caste associations, which were the supporters of the parties are converted into political parties themselves. We have many examples of this type of changes. The caste associations which were earlier the supporter of a political parties have now turned out to be political parties and started contesting in the election.

The following paragraphs present the changes in the ideologies of a particular caste group in Tamilnadu. This caste group initially strived for its social status and now it has emerged into a political party.

A Case Examined

The Vanniyars are engaged primarily in agriculture. Most of them are agricultural labourers and many of them are living under abject poverty. These agricultural labourers are scattered all over Tamilnadu and other prominent cities of India, but their concentration is thicker in the districts of South Arcot, North Arcot, Salem. Dharmapuri and Chengleput. Earlier, these Vanniyar caste groups were called as 'Palli' which was considered to be of low caste group. This means, in those days, they were not treated equal with other caste groups. Hence, they started demanding equal social status (with the other communities) of the society. A record of 1833 shows that these Vanniyars have sent petitions for an official decree that they were not of low caste. They ware among the first to use tbe census for mobility claims, petitioning in 1871 to be listed as Kshatriyas. Then, they started their association in the year 1888. During the year 1891, one of the members of that community, who had got education produced a book to assert and document their merit and thus, by 1931, their earlier name no longer appeared in the official record.

After Independence, the government opened new opportunities for the improvement of different caste groups. The Vanniyar caste association, which was striving for their improved social status, started negotiations with political parties. This was as a result of their change in their ideology, i.e. from the need of improved social status to the need for economic and educational development. This was as a result of their change in their ideology i. e. from the need for social status to the need for economic and educational development. These Vanniyar caste association, started having compromises with the political parties that these caste people should exercise their votes to these parties which will help to improve their economic status This showed their interest in political involvement. The association pressed the Congress party for jobs and preferential treatment for Varniyars. When that party did not respond positively to their demands, they had decided to contest the elections as independents. They were most interested in elections to the district boards, not only because they could muster decisive voting strength in certain districts as subjects falling under the competence of district boards especially educational and medical facilities and road building were of the greatest local and political interest Vanniars generally did well as independent candidates. In 1951 a Vanniyar political party was formed which soon split into two political parties. Their leaders could mobilize Vanniar votes using the traditional panchayat network. In the 1952 elections they won 13 per cent of the seats in the Madras legislature. Vanniyars naturally voted for candidates of their name and grouping, who presumably understood their needs and shared their aspirations.

The two Vanniyar parties were later dissolved, their leaders joined other parties. After this, vanniyars

have not voted solidly for any one political party. Thus n the elections of 1962 in the South Arcot district, all three major political parties in Tamilnadu chose Vanniyar eaders. No one had the eagerness to strengthen the central caste association. The Vanniars contested on behalf of other different political parties, the Vanniyar votes got divided among themselves.

In 1980 "Vanniyar Sangam" was started by some eminent persons. It projected the uniqueness of she Vanniyar community. After 1987 Vanniyar Sangam conducted processions and meetings along with other castes and started a pollitical party nemely "Pattali Makkal Katchi" (PMK)

Conclusion

In this context, it is seen that the Vanniyars mobilization at the social level is to bring about a redical change among Vanniyars in order to gain better support and achieve higher standards of social, political and economic life. In terms of societal level, the Vanniars are claiming at better recognization in the eyes of social forces. In the political sphere, the Vanniyar movement seeks to hold power with the aim of empowerment of Vanniyars belonging to all sections irrespective of their present economic status and other disparities. In the economic front the mobilization of Vanniyars aims at quality in terms of distribution of economic assets and wealth to achieve over a period of time equality to all persons coming within the Vanniyar fold.

வாழ்த்துக்கள்

ஞாலத்தமிழ்ப் பண்பாட்டு
ஆய்வு மன்றம்

பல்கலை நகர், மதுரை - 625 021.

வாழ்த்துக்கள்

களம்

நாட்டுப்புறவியல் ஆய்வு மன்றம்

தஞ்சை - 613005

Aaivuchinthanaigal

Editors

A. Natarajan

M. Karunakaran

V. Alagirisamy

L. Manivannan

S. Kannan

Aynthamil Aaivalar Mandram
Madurai - 10
January 1996

Cover : Nandhu